விஜயகுமாரி
புதுமைக்கு ஓர் எடுத்துக்காட்டு
கலையுலகுக்கு ஒரு காணிக்கை
கற்பனைக்கு ஒரு சிறப்பு
நாட்டுக்கு ஒரு நல்லபடம்
டைரக்ஷன் ஏ.எஸ்.ஏ.சாமி
ஜுபிடர் தயாரிப்பு....
தமிழ்நாடெங்கும் நடைபெறுகிறது
ஸ்டுடியோ சென்ட்ரல்
1950

மாதவிடாய் :

சகோதரிகளே! எமது "சும்பகி—ரேசனி" என்ற மருந்தை உபயோகித்தால், மாத வெளியீட்டை ஒழுங்குபடுத்துவதுடன் எவ்வளவு நாட்பட்ட தொந்தரவாக இருப்பினும் நிவர்த்திசெய்யும். தீங்கற்றது. 100-க்கு 100 பலன் நிச்சயம்.

விலை ரூ. 5/- தபாற்செலவு ரூ. 0-14-0.

கர்ப்பத்தடை :

"தம்பதி—சகா" நீங்கள் விரும்புகிறபடி கர்ப்பத்தடைக்கு உதவுகிறது. தீமை கிடையாது. 30 வருடங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்படுகிறது. பலர் நன்மை அடைந்திருக்கின்றனர்.

பூரண கர்ப்பத் தடைக்கு ரூ. 4—4—0
6 மாத காலத் தடைக்கு ரூ. 2—0—0
(தபாற் செலவு ரூ. 0-14-0)

வீரியம், யௌவனம் :

உடல், மனம் இரண்டிற்கும் "மதன விலாஸ் ரஸாயனம்" சிறந்த டானிக். மயக்கம், சோர்வு, நரம்புத் தளர்ச்சி, மறதி, அஜீரணம் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து. சோர்வடைந்த மாணவர்கள், மூளை வேலையில் ஈடுபடும் கவிஞர்கள், மணவாழ்க்கை தொடங்கிய காதலர்கள் இவர்களுக்கு இந்த டானிக் ஓர் வரப் பிரஸாதம்.

விலை ரூ. 2—8—0

விரைவாதம் :

குடல் இறக்கம், யானைக்கால், கீல் வாதம், வீக்கம் வலியுடன் கூடியதாயினும், எத்தனை நாட்பட்டதாயினும் ஒரு வாரத்தில் நிச்சயம் குணமளிக்கும் எமது ஆயுர்வேத முறைப்படி தயார் செய்த "ஸம்ஸந்தி". ஓர் முறை உபயோகித்துப் பாருங்கள்!

விலை ரூ. 4-8-0 தபாற்செலவு ரூ. 0-14-0

KAVIRAJ M. KAVYATIRTHA (C.M.)
70, Cornwallis Street, CALCUTTA-6.

1950-ல்

என்ன நேர இருக்கிறது

புத்தாண்டாகிய 1950க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12-மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி, மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி. கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள் நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபாற்செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒருமுறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shri

Swami Satnarayan Jotish Ashram

(C. K.) HOSHIARPUR.

List Prize Winners in our Competition No. 22. (1) Veerabhadriah, Kollegal. (2) P. V. Lakshmi, Tatanagar. (3) H. K. Setty, Amurtur. (4) Begum S. Sahib, Calicut. (5) Raghavan, Bangalore. (6) Seetharam, Mysore. (7) Mukerjee, Ramachandraraopet. (8) K. S. Kanthi, Meerut. (9) A. Kutty Pillai, Calicut. (10) K.R. Chary, New Delhi. (11) Vaithilingam, Rajaputana. (12) P. K. Nair, Trivandrum. (13) M. S. Hassan, Moradabad. (14) Veeraiah, Cuddapah. (15) S. N. Devar, Tanjore. (16) T. Santhanam, N. Arcot. (17) Lakshmikantham Chetty Bangalore. (18) K. Bahadur, Gorakhpur. (19) R. A. Amuruddin, Bombay. (20) V.S. Maniam Dindigul. (21) K. Pillai, Travancore. (22) G. Nathan, Madras. (23) Sarojini, Coimbatore. (24 P. R. Pillai, Salem. (25) R. Khan, Chittoor. (26) Amiruabee, S. Kanara. (27) A. K. Pathar, Tanjore. (28) K. R. Swamy, Trichy. (29) D. M. Sam, Mettur Dam. (30) J. P. Mehtha, Saurastra. (31) A. C. Kandiyar, Tanjore. (32) N. A. Khan, Thuckalay. (33) S. Misra, Benares. (34) G. D. Naik, N. Canara. (35) J. Mohanty, Mayurbhanj.

8 - MAY 195

ரூபாய் 25,000 பரிசு

ரிஜிஸ்டர் நெ. 249 — *போட்டி நெ. 25*

M/S. Premier Bank of India Ltd..ல் சீல் செய்து வைக்கப்பட்டுள்ள சரியான விடைக்கு, எண்ணுக்கு-எண், கட்டத்திற்குக்-கட்டம், முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசைகள் சரியான விடைக்கு, இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000/-. முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1,000-ம் சரியாகப் பகிர்ந்து அளிக்கப்படும். எங்கள் சீல்வைத்தபடி விடைகள் இருக்கவேண்டும்.

174

முடிவு தேதி 27—4—50

விடை 12—5—50

பிரவேசக்கட்டணம் கூபன் 1-க்கு ரூ. 1/-

6 கூபன் கொண்ட ஸெட் 1க்கு ரூ. 5/-

RAINBOW COMPETITIONS

KEY S. NO. 22 *33 TO 48=162

33	47	46	36
44	38	39	41
40	42	43	37
45	35	34	48

We hereby certify that the above is the solution in original deposited with us by *Rainbow Competitions* No 22 on 1.2.50 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd

V. Ramanathan 14.3.50
Agent, Madras

விடை கண்டுபிடிக்கும் விதம்:- 36 முதல் 51 வரையுள்ள எண்களை, கொடுக்கப்பட்டு இருககும் கட்டங்களில், மேல் இருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 174 வரும்படியாக அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்கவேண்டும்.

விதிகள்:- தனி வெள்ளை காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூபன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். பிரவேசக்கட்டணத்தை மணியார்டர் மூலமாகவோ அல்லது கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதை கூபன்களுடன் சேர்த்து அனுப்பவேண்டும். வசூலுக்குத் தகுந்தாற்போல் பரிசு பகிர்ந்து, அளிக்கப்படும். இப்போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவு (சட்டபூர்வமாய் கட்டுப்படுவதுமாகும்). போட்டியின் முடிவு தெரிந்துகொள்ள RAINBOW இங்கிலீஷ் மாதமிருமுறை பத்திரிகையில் காணவும். கிடைக்காவிட்டால் அணா 4 ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும். பரிசுத் தொகையும மற்ற விதிகளும் மேலே குறிப்பிட்டபடி அளிக்கப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:-
THE RAINBOW COMPETITIONS No. 25, 306 (6), Mint Street, MADRAS-I

ரூபாய் 25,000 பரிசு

ரிஜிஸ்டர் நெ. 249 — *போட்டி நெ. 26*

178

சரியான விடை Premier Bank of India Ltd., Madras-ல் சீல் செய்து வைக்கப்பட்டிருக்கிறது (பரிசுகள் மேலே கூறப்பட்டது போல்) முடிவு தேதி: 15—5—50 — விடை: 29—5—50 பிரவேசக்கட்டணம்: கூபன் 1க்கு ரூ. 1/- 6 கூபன் கொண்ட ஸெட் 1க்கு ரூ. 5/- விடை கண்டுபிடிக்கும் விதம்: 37 முதல் 52 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எப்படிக் கூட்டினாலும் 178 வரும்படி அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்கவேண்டும். மற்ற விபரங்கள் விதிகள் மேற்கூறியதுபோல்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம்: The Rainbow Competitions No. 26, 306, (6) Mint St., Madras-1

12 YEARS' REPUTATION & SERVICE.

Here are some Quality Products!

1. FOUNTAINPEN INKS (For Fountainpens only)

Superfine quality — Costlier Process: in 3 attractive and popular brands: RAMAN INK, QUICKRITE FOUNTINK, and CLEARITE FOUNTINK.

2. PHENYLES (For every home)

In two qualities: NURSE BRAND & PREVENTO PHENYLE: Higher Carbolic Co-efficients — In popular packs of 24 oz., bottles and 1 gal. tins.

3. 100% PURE WAX CANDLES

HIND WAX CANDLES are guaranteed cent per cent pure wax, free from animal fats or other cheap adulterants and for *correct* weight and size.

4. IRIS ACTION TOYS (in technicolor)

Indian made aluminium & steel Toys: attractive colours — plentiful variety to choose, for your children's entertainment: viz: Jumping frogs, Humming tops, Aerofans, Whirls, Flutes and more to follow.

You can get them all from any high-class Trader in every Town. Prices to suit every pocket.

REGAL PRODUCTS Ltd.,
P. O. Box No. 663,
Royapettah, Madras-14.

Manufacturers & Agents.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - MAY 196
MADR

மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 5-0-0. பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 3-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.

(தபால் செலவு ரூ. 0-14-0)

விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி.எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0. (தபால் செலவு ரூ. 0-14-0)

வீரியம்

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்றால் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி, புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

கூஞ்சா தைலம்

வழுக்கை, மயிர் கொட்டுதல் போன்ற வியாதிகளை நிவர்த்திப்பதுடன் மயக்கத்தையும் போக்குகிறது. தலை மயிர் சம்பந்தமான எவ்வித நோயையும் கண்டிக்கவல்ல சிறந்த கேசவிருத்தி டானிக்.

ஒரு பாட்டில் ரூ. 2-0-0
தபாற் செலவு ரூ. 0-14-0
வேறு.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

KAVIRAJ R. N. CHAKRAVARTHI
Ayurvedha Sasthri (K. M.)
24, Debendra Ghose Road, Bhowanipore
CALCUTTA, 25
Stockists:
Messrs. APPAH & CO., 286, Netaji Subhas ChandraBose Road, Madras.

பொருளடக்கம்

விக்ருதி மலர் 9 | சித்திரை இதழ் 9

புது வருஷத்தில் தேர்தல் 3

லக்ஷிய இல்லக் கண்காட்சி 6
லீலா கோபாலன்

பிரமையும் கற்பனையும் 14
ஸ்ரீதரம் குருஸ்வாமி

பெரியவர் பெரியவர்தான் 18
சேஷ்டை

விலங்குலகக் காதல் 25
கா. கி. நாகராசன்

திலகர் கதை 30
எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

லக்ஷியக் கனவு (தொடர் கதை) 33
கே. சுந்தரம்மாள்

தடுமாற்றம் 51
கோமதி சுப்பிரமணியம்

பெண்களுக்குப் பிரத்தியேகமானது 56
ஷிபாலி சௌத்ரி — சாரி

நாம் ஒன்று நினைத்தால்! 59
கௌரி

அக்காலத்தில் நாடகம் 56
கலாதாஸன்

புண்ணியமும் பாவமும் 73
ஆர். எஸ்.

தீக்ஷிதரின் பிரவேசம் 81
கி. ஸந்தானம்

தெளிவு 89
கே. வி. கே.

குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

197316
சென்னை-600 008

மேன்மையின்

பெருமை அநேக வருஷ உழைப்பிற்குப் பின்னும் விளங்கும்



சைக்கிள்கள்

சைக்கிள் சாமான்கள்

பெராம்புலேட்டர்கள்

குழந்தை வண்டிகள்

இவைகளில்

உயரிய ரகத்திற்கு

நம்பி வாங்க

இங்கிலீஷ் சைக்கிள் & மோட்டார்

இம்போர்டிங் கம்பெனி லிமிடெட்

2/9 பிராட்வே :: :: மதராஸ்-1.

தந்தி :—''ஸைக்கிள்ஸ்'' போன்: 3168

காவேரி

விக்ருதி
மலர் 9

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்

சித்திரை
இதழ் 9

புது வருஷத்தில் தேர்தல்

வாசகர்களுக்கும் ஏனைய நண்பர்களுக்கும் எமது வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றோம். விக்ருதி வருஷம் சுபிக்ஷமுள்ளதாக இருக்கும் என்பதற்குப் பல அறிகுறிகள் காணப்படுகின்றன. இந்தியா — பாகிஸ்தான் ஒப்பந்தம் ஓர் சுப சூசகம். இவ்வருடம் புதிய அரசியல் திட்டப்படி தேர்தல் நடத்த மத்திய அரசாங்கத்தார் தீவிர நடவடிக்கை எடுத்து வருவது மற்றொன்று.

இந்தியா பாகிஸ்தான் உறவு

பாகிஸ்தான்—இந்தியா உறவுப் பிரச்னையைப் பொறுத்திருக்கிறது, எதிர்காலம் சுபிக்ஷமாக இருக்குமா அல்லது நெருக்கடியாக இருக்குமா என்பது. காஷ்மீர் பிரச்னை தீராதிருப்பதினால் நமது அரசாங்கத்தார் சுமார் ஒரு கோடி ரூபாய் தினம் செலவு செய்யவேண்டியிருக்கிறதாம். இது பழைய புள்ளி விவரம். இப்பொழுது கொஞ்சம் குறைந்திருக்கலாம். கிழக்கு வங்காள அகதிகளின் காரணமாக மத்திய சர்க்கார் லக்ஷக்கணக்கில் தினம் செலவிட வேண்டியிருக்கிறது. மக்கள் துயர் கொண்டு மன அமைதி இழந்து பரிதவிக்கிறார்கள் வங்காளத்தில். பாகிஸ்தானத்துடன் ஒப்பந்தம் நடைமுறையில் நடவாத காரியம் என்று அவர்கள் கருதுவதைக் கண்டு ஆத்திரமடையலாகாது.

முஸ்லிம் அல்லாதவர்களை அடிக்கடி "ஹிட்லருடைய பர்ஜ்" மாதிரி பலாத்காரத்தினால் வெளியேற்றி விடுகிறது பாகிஸ்தானம். லக்ஷக்கணக்கில் இப்படி வெளிச்சென்ற பின்னர் அதன் எதிரொலி இந்தியாவிலும் நடக்க ஆரம்பித்தவுடன், சமரஸம் பேச முன் வந்து நிலைமையைச் சமாளித்துக் கொண்டு, "இனி, சிறுபான்மையினரை வெளியேற்றக் கூடாது" என்ற வாய்வேதாந்தத்தைப் பரப்புகிறது அது.

இந்தியர்கள் எப்பொழுதுமே அமைதிப் பிரியர்கள். பிறருடைய நன்மதிப்பைப் பெறுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருப்பவர்கள். தம் மக்களுடைய நம்பிக்கை இருக்கவே இருக்கிறது என்று சங்கல்பம் செய்துகொண்டு, பிறரைத் திருப்தி செய்யப் படாதபாடு படுவது நமது தர்மமாகி விட்டது. இந்தப் பலவீனத்தை எதிராளிகள் நன்கு அறிந்துகொண்டு இருக்கிறார்கள். அதை நன்கு பயன்படுத்தியும் கொள்ளுகிறார்கள்.

அமைதி அவசியம்

நாட்டில் அமைதி அவசியமாதலால் ஒப்பந்தத்தை மக்கள் அரை மனதுடன் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். பாகிஸ்தானிகள் இதை நிறைவேற்றி வைப்பார்கள் என்று யாருக்கும் நம்பிக்கையில்லை. அரசியல் என்பது சொக்கட்டான் ஆட்டம். கொஞ்சம் அசந்தால் போய் விடும். சத்தியத்தைக் கடைப்பிடிக்கும் தர்மபுத்திரர் இந்த ஆட்டத்தில் வெற்றி கண்டாரா? ஆனால் அது பழைய புராணம். நேரு சர்க்கார் புதிய புராணம் எழுதுகிறார்கள். என்ன வெற்றி காண்கிறார்கள் என்று சற்றே பார்ப்போம். ஆயினும் தர்ம வெறியில் மக்களைப் பணயம் வைத்துவிடப் போகிறார்களே என்று அஞ்சுகிறார்கள். முன்பு ராஜ்யத்தைத் துண்டு போட ஒத்துக்கொண்டது அப்படித்தானே! பாகிஸ்தானம் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டால் நாட்டில் அமைதி என்று கனவு கண்டோம். இன்றும் அமைதி கிட்டவில்லை. மறுபடியும் சமாதானத்திற்குப் பாகிஸ்தானம் வந்துள்ளது. நமது தர்ம புத்திரத் தலைவர்கள் சளைக்கவில்லை. ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார்கள். இன்னும்

நாட்டிற்கு என்னென்ன சோதனைகள் காத்திருக்கின்றனவோ யார் கண்டார்கள்? புத்தாண்டு அமைதியாகக் கழிய வேண்டுமென்று இறைவனை வேண்டிக் கொள்வோமாக.

புதிய தேர்தல்

புதிய தேர்தலை முன்னிட்டு மத்திய அரசாங்கத்தார் சட்ட திட்டங்களைச் செப்பனிட்டு நாட்டைப் பகுதிகளாக வகுத்து ஏற்பாடு செய்து வருகிறார்கள். அநேகமாக இத் தமிழ் ஆண்டு இறுதிக்குள் தேர்தல் வைக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளின் நிலைமையைச் சற்று ஆராய்வோம். காங்கிரசைத் தவிர ஸோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட், ஹிந்து மகா சபா இக்கட்சிகள் உள்ளன. இரண்டு வருடங்களுக்கு முன்பு கம்யூனிஸ்டுகள் எதிர்காலத்தில் அரசியலைக் கைப்பற்றி விடுவார்கள் என்பது பொது ஜன வாக்காக இருந்தது. ஆனால் இன்றோ அவர்கள் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டார்கள்.

அவர்கள் கையாளும் பலாத்கார முறைகள் அஹிம்சையில் ஊறிப்போன இந்திய மக்களிடம் வெறுப்பை உண்டுபண்ணி விட்டது.

ருஷ்யாவில் கம்யூனிஸ்டுகள் முதலில் சிறுபான்மையினர்தாம். எனினும் குதபகாலத்தில் தந்திரத்தினாலும், சூழ்ச்சியினாலும் அதிகாரத்தைப் பலாத்காரத்தினால் கைப்பற்றிக்கொண்டனர். பிறகு அவர்கள் புரட்சிக்கோலை ஊன்றி, எதிர்ப்பவர்களைக் கொன்று குவித்தனர். ரத்தம் சிந்துவதில் அஞ்சவில்லை. அதிகாரத்தை வைத்துக்கொண்டு மக்களை அடிமைப்படுத்தும் ஆட்சியை ஸ்தாபித்துக் கொண்டார்கள். முதலாளிகளை ஒழித்து அவர்களுக்கு அடிமை என்பது கூடாது என்று கூறி அரசாங்கத்துக்கு எல்லா வகையிலும் மக்களை அடிமைப்படுத்தி விட்டார்கள்.

இதுதான் ருஷ்யாவின் வெற்றிக்குக் காரணம். பெரும்பாலான மக்களுக்கு வயிறு நிரம்பினால் போதும்; சாதாரண அன்றாடத் தேவைகள் பூர்த்தியானால் நிம்மதி ஏற்பட்டுவிடும். இந்தத் தந்திரத்தைப் புரிந்து கொண்டார்கள். உள்ளத்தை, மனதை அடிமைப்படுத்த இதுவே மூலமந்திரம் எனக் கண்டார்கள். வெற்றி கிட்டியது.

அதே முறையில் இந்திய கம்யூனிஸ்டுகள் தொழிலாளர்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டினார்கள். ஏழ்மைத் தேசத்தில் பசிப்பிணி ஒழிக்கும் பிரசாரம் எளிதில் வேரூன்றும் என்று கண்டு கொண்டார்கள். ஆனால் இந்திய மக்களின் பண்பாடு வேறு. வயிற்றைப் பட்டினி போட்டாவது உள்ளத்தை வளர்க்கக் கற்றுக் கொண்ட தேசமாகையால் பலாத்காரம் வெறுப்புணர்ச்சியை மூட்டியது. முதலில் கம்யூனிஸ்ட் தீ பசியுற்ற ஏழைப் பங்காளிகளின் மனதைக் கவர்ந்தாலும் பிறகு கம்யூனிஸ்ட்களின் நெறியற்ற வழிகள் அவர்கள் பண்பட்ட உள்ளத்தைப் புண்படுத்தியது. கம்யூனிஸ்டு கட்சி இனி தலை தூக்குவது நடவாத காரியம்.

ஸோஷலிஸ்ட் கட்சி கம்யூனிஸ்ட்டு கட்சியின் எதிரொலி போலத்தான் இருந்து வருகிறது. இன்னும் மக்களிடையே அதற்கு யாதொருவிதமான செல்வாக்கும் ஏற்படவில்லை. வரும் தேர்தலில் அது தலை கிளப்பும் என்று தோன்றவில்லை.

ஹிந்து மஹாசபை சில மாகாணங்களில் கொஞ்சம் வெற்றி காணலாம். ஆனால் அதன் மதப்பற்றுக் காரணமாக அதற்கு வெற்றி அவ்வளவாக இராது. எனினும் அதன் சார்பில் நிற்கும் அங்கத்தினர்களைக்காங்கிரஸ் சமாளிப்பது கடினமாக விருக்கும் என்பது திண்ணம்.

எஞ்சியுள்ள அரசியல் கட்சி காங்கிரஸ் ஒன்றுதான். ஆகவே அதற்கு எதிர்ப்பே யில்லாமல் வெற்றி எளிதில் கிடைத்துவிடும் என்று கூறமுடியாது.

காங்கிரஸிடம் மனக் கசப்பு

இன்று மக்களுக்குக் காங்கிரஸ்காரர்களிடம் மனக் கசப்பு அதிகம். இதற்கு அடிப்படைக் காரணம் காங்கிரஸ் நிர்வாக ஊழல்கள். யுத்தத்தின் காரணமாகக் கவர்மெண்டார் தலையீடு மக்கள் வாழ்க்கைக்கு அத்யாவசியமான பொருள்களில் ஏற்பட்டதல்லவா? அதைத் தொடர்ந்து பங்கீடு முறையும் கண்ட்ரோல் முறைகளும் ஏற்பட்டன. பற்றுக் குறையும் சேரவே அதிகார வர்க்கத்தின் தலையீடு தலைக்கேறி விட்டது. இதன் மத்தியில் காங்கிரஸ் கிளை ஸ்தாபனங்கள் பழுத்த காங்கிரஸ் வாதிகளின் கைகளினின்று நழுவி சமயோ

சித காங்கிரஸ்காரர்கள் கைக்கு மாறியது. பதவிக்கும் லாபத்திற்கும் ஆசைப்பட்டுப் பலர் அதில் அங்கம் வகித்தனர். நாட்டில் லஞ்சப் பேய் தலை விரிகோலமாகத் தாண்டவமாடி காங்கிரஸ்காரர்களையும் அதிகாரிகளையும் பற்றிக் கொண்டது. யுத்தம் நின்றும் பஞ்சம் ஓயவில்லை. பற்றாக்குறை அதிகரித்துக் கொண்டே வந்தது. அரசாங்க கண்ட்ரோல்களும் ஹனுமார் வாலைப்போல் நீண்டுகொண்டே வருகின்றன. காங்கிரஸ் பதவி ஏற்றதும் இவ்வூழல்கள் அங்கும் தலைதூக்கின. மக்கள் அவதிக்கு அளவே யில்லை. காங்கிரஸ்காரர்களிடம் உள்ள அபார மதிப்பு இன்று அபார வெறுப்பாக மாறியுள்ளது. இது மட்டுமல்ல, தகுதியற்றவர்கள், திறமையற்றவர்கள், இன உணர்ச்சியின் காரணமாகவும் சூழ்ச்சியின் பயனாகவும் அரசாங்க நிர்வாகத்தில் நிறைந்துள்ளார்கள். எனவே ஆட்சியில் ஊழல்களும் மலிந்து கிடக்கின்றன.

எதிர்க்கத் தகுதிவாய்ந்த கட்சி ஒன்றும் சரிவர இல்லாமையால் எப்படியானாலும் காங்கிரஸ் வெற்றி நிச்சயம் என்று பலர் கூறிக்கொண்டு வாளா இருக்கிறார்கள். சென்ற ஜில்லா போர்டு தேர்தல்களில் இம்மனப்பான்மைக்கு ஓர் சூடு கொடுக்கப்பட்டது.

சுயேச்சையாகத் தம்முடைய சக்தியினாலும் மக்களிடையே தமக்கு உள்ள நன்மதிப்பினாலும் காங்கிரஸை எதிர்த்து நிற்கும் தனி நபர்களுக்கு வெற்றி நிச்சயம். இவர்களின்மீது குற்றங் குறைகள் இல்லாமலிருந்தாலே காங்கிரஸ்மீது ஏற்பட்டுள்ள வெறுப்புணர்ச்சியின் காரணமாகத் தனி நபர்களை மக்கள் ஆதரிப்பார்கள். அதுதான் இன்றைய நிலை.

காங்கிரஸ்வாதிகள் இவற்றையெல்லாம் அதிகமாகச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் பழைய சலுகைகளை வைத்துக் கொண்டு, பழைய பேச்சுக்களையே பேசி, தியாகங்களை வற்புறுத்தி, வெற்றி காணலாம் என்கிற மனப்பான்மையில் இருக்கிறார்கள். காங்கிரஸ் நிர்வாகப் பொறுப்பு ஏற்காதவரை, பிற கட்சிகளின், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிர்வாகத் தவறுகளைப்பெருக்கிக்காட்டி ஏளனம் செய்து தங்கள் தியாகங்களையும் ஒப்பிட்டுக் காட்டி, தேர்தல்களில் அமோகமான வெற்றி அடைந்தார்கள். இனி அது பலிக்காது. மக்கள் மனதில், அவர்கள் கண் முன்னே நிற்பது காங்கிரஸ் ஆட்சியின் நிர்வாக ஊழல், லஞ்சப்பேயின் தாண்டவம். இவற்றோடு மக்கள் அகவிலை உயர்வினால் அல்லலுறும் குறைகளும் காங்கிரஸ் நிர்வாகத் திறமையை மதிப்பிழக்கச் செய்கிறது.

இதைச் சமாளித்துக் காங்கிரஸ் வெற்றி கொள்வதெப்படி? மக்கள் மனதை மறுபடியும் காங்கிரஸின்பால் இழுப்பதெப்படி? காந்திமஹான் இருந்திருப்பின் வழி கண்டுபிடித்துத் தருவார். ஆனால் இன்று இதைப்பற்றிச் சிந்திக்கக்கூடத் தலைவர்களுக்கு அவகாசம் இல்லை. இவ்வளவு ஊழல்களுக்கிடையேயும் காங்கிரஸ்மீது மக்கள் கொஞ்சம் பற்றுக் கொண்டிருப்பதற்குக் காரணம் பண்டித ஜவாஹரும், சர்தார் படேலும்தான். அவர்கள் தவறு செய்ய மாட்டார்கள் என்ற நம்பிக்கையினால் மக்கள் அடிபணிகிறார்கள். ஆயினும் இப் பலத்தைக்கொண்டு மட்டும் தேர்தலில் வெற்றி காணமுடியாது.

காங்கிரஸைச் சுத்தப் படுத்த ஓர் கண்யம் வாய்ந்த கமிட்டி அமைக்கப்பட வேண்டும். வரும் கால அரசியலில் தகுதி வாய்ந்தவர்களைப் பொறுக்கி அங்கத்தினர்களாகவும், நிர்வாகஸ்தர்களாகவும் எடுக்க ஓர் சர்வக் கட்சி ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டும். அதில் உள்ளவர்கள் பதவிகளை அபேக்ஷிக்கக் கூடாது. கட்சிப் பற்றையே முதன்மையாக வைத்துக் கொண்டு பார்லிமெண்டரி அங்கத்தினர்களைப் பொறுக்குவது இனி அபாயகரமாகும்.

நன்மதிப்பைப்பெற்ற பிரதிநிதிகள்

பார்லிமெண்டரி, சட்டசபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் படுபவர் பொது மக்களின் நன்மதிப்பைப் பெற்றவரா என்பதை முன்னதாகவே எல்லா மக்களிடையேயும் கலந்தறிந்து, பிறகு பொறுக்கித் தேர்தலுக்கு நிறுத்தப்பட வேண்டும். இவ்வகைகளில் எல்லாம் கவனம் செலுத்தி, தேர்தலுக்குத் தயார் செய்தாலன்றி, காங்கிரஸுக்குப் பெருவாரியாய் வெற்றி கிடைப்பது துர்லபம். சென்ற தேர்தலில் ஜெயிலுக்குப்போன தியாகிகளுக்குச் சலுகை காட்டப்பட்டது. இப்பொழுது திறமையும், நேர்மையும் கண்யமுமே குறிக்கோளாகக் கொண்டு, அவர்கள் காங்கிரஸில் இல்லாமற் போனாலுமே அவரைச் சேர்த்துத் தொகுதிகளில் நிறுத்தவேண்டும்.

காங்கிரஸ் தலைவர்கள் இதைக் கவனிப்பார்களா!

லக்ஷிய இல்லக் கண்காட்சி

லீலா கோபாலன்

லண்டனில் மார்ச் மாதம் 7-ஆம் தேதி முதல் மக்கள் மனதைக் கவர்ந்து ஆயிரக்கணக்கானவர்கள் புகழ்ந்து போற்றி வருவது ஐடியல் ஹோம் எக்ஸிபிஷன் (Ideal Home Exibition) என்ற கண்காட்சி. இந்தக் கண் காட்சி டெய்லி மெயில் என்ற பத்திரிகையால் ஏற்பாடு செய்யப்பட்டு நடக்கிறது. லண்டன் மத்திய பாகத்தில் இருக்கும் ஒலிம்பியா (Olympia) என்ற இடம் உலகப் பிரசித்திபெற்றது. இதில் சாதாரணமாக ஒருவர் நுழைந்து சுற்றிப்பார்த்து வெளி வருவதென்றாலே சுமார் 5, 6 மணி நேரம் பிடிக்கும். அதுவும் இந்தக் கண்காட்சிச் சமயத்தில் கேட்கவேண்டுமா?

கண்காட்சி என்று பிரமாதமாகப் புகழ்ந்து எழுதுவதற்கு என்ன இருக்கிறது? எல்லாத் தேசத்திலும் அந்தந்தக் காலத்திற்கு ஏற்றபடி தான் நடக்கிறது என்று நீங்கள் யோசிக்கலாம். ஆனால் இந்த ஐடியல் ஹோம் எக்ஸிபிஷனுக்குள் 3 ஷில்லிங் பணத்தைக் கொடுத்துவிட்டு நுழைந்தால், இந்தக்கலிகாலத்தில் உங்கள் வீடு எப்படி இருந்தால் வசதியாகவும், சந்தோஷ வாழ்க்கை நடத்தச் சௌகரியமாகவும் இருக்கும் என்றும் நன்றாகத் தெரியும். இந்த ஒலிம்பியாவிற்குப் போகும்முன் நான் பட்ட கஷ்டங்களையும் சொன்னால்தானே உங்களுக்கும் சுவாரஸ்யமாக இருக்கும். வீட்டருகே இருந்த பஸ் நிறுத்தும் இடத்திற்கு வந்து நின்று ½ மணி நேரம் ஆயிற்று. ஒவ்வொரு பஸ்ஸூம், ஜனங்கள் நிறைந்து வருவதால் கண்டக்டர் "ஸாரி மாடம்" (Sorry Madam) என்று சொல்லிக் கொண்டே போய்விட்டான். கடைசியில் ஒரு பஸ்ஸில் நிற்க இடம் கிடைத்தது. அப்பாடி என்று உள் நுழைந்ததும் அதனிற்கூடச் சரியான இடம் இல்லை. சாதாரணமாக இரண்டடுக்குப் பஸ்களில் நிற்பதற்குப் பிரயாணிகளை அனுமதிப்பதில்லை. ஆனால் கூட்டமாகவிருந்தால் விதிக்கு விலக்குத்தான். 6 நபர்கள் நிற்பதற்கு அனுமதி உண்டு. பஸ் ஓட்டி நிறுத்தப் ப்ரேக் போடும்போதெல்லாம் எதிரில் உள்ளவர்மேல் முட்டிக்கொண்டும் ஆடி ஆடி விழுந்துகொண்டும் கடைசியாக ஒலிம்பியா போய்ச் சேர்ந்தேன். மனதிற்குள் இவ்வளவு கஷ்டப்பட்டு, கால் வலிக்கக் கிளம்பிவந்துள்ளோமே ஏதாவது பிரயோஜனம் உண்டோ என்று குழம்பிக்கொண்டு உள்ளே நுழைந்ததும் கொஞ்சம் உற்சாகம் பிறந்தது.

உள் நுழைந்ததும் பிரம்மாண்டமான கொட்டகைக்குள் முதலில் கண்டது நெஸில்ஸ் குழந்தைகள் விளையாட்டு மைதானம் (Nestles Children's Play-land). வயது சென்றவளானாலும்கூட பொம்மைகளைப் பார்க்க ஆசை இருக்காதா, ஆகையால் உள்ளேபோக முயற்சித்தேன். ஆனால் காவலாளி ஒரு குழந்தை கூட இருந்தால்தான் உங்களுக்கு அனுமதி உண்டு என்று கூறிவிட்டான். வெளியிலிருந்து ஜன்னல் வழியாகப் பார்க்கலாமாம். அதற்கு க்யூவில் எனக்கு முன்னேயே 200 பெயர்கள். இங்கேதான் எதற்கும் க்யூ. அப்படி நின்றால் என் பாதிப் பொழுது வீணாகிவிடும் என்று தெரியும்.

குழந்தைகளுடன் உள்சென்று எல்லாவற்றையும் கண்டுகளித்த தாய்மார்கள் இந்தக் குழந்தை உலகத்தைப்பற்றிச் சொல்லியதை நானும் உங்களுக்கு எழுதுகிறேன். முதலில் அங்கே குழந்தையின் மனப்போக்குக்குத் தக்கவாறு விளையாட்டுகள் பல, சினிமாக்கள், புஸ்தகங்களில் விருப்பமிருப்போருக்குப் புஸ்தகங்கள், மின்சாரத்தில் இஷ்டமுள்ள பையன்களுக்கு விளையாட்டு மின்சார சாமான்கள் பல இருக்கின்றனவாம்.

சாதாரணமாக ஒரு சிறு வயதுப் பெண் அல்லது பிள்ளையை அதற்குள் விட்டு விட்டு, தாய்மார்கள் முழு இடத்தையும் சுற்றிப் பார்த்துவிட்டு, சாயங்காலம் வந்து கூப்பிட்டால்கூடக் குழந்தைகள் வீட்டுக்குத் திரும்ப மனம் வராமல் கஷ்டப்படுகின்றனவாம்.

ஆனால் எல்லா விளையாட்டுச் சாமான் களிலும் முக்யமாக என் கவனத்தை இழுத்தது சிறிய டெலிவிஷன் ஸெட் (Television set) தான். இதற்குள் தனி யாகக் கிடைக்கும் எலக்டிரிக் பாட்டரி களை வைத்திருப்பதால் ஒரு ஆணியைத் திருகினால் படங்கள் தானாகத் தோன்றி, குழந்தைகளை உற்சாகப் படுத்தும். இதன் விலை 13 ஷில்லிங் அதாவது 7 ரூ. வரை. இந்தக் கண் காட்சியில் முக்யம் என்ன வென்றால் நாம் வெளியில் ஏக விலை கொடுத்து வாங்கும் சாமான்களை அங்கே சரசமாக வாங்கலாம்.

நான் முக்யமாக ஒலிம்பியாவில் பார்க்கவேண்டும் என்று சென்றது கட்டப் பட்டுப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள வீடுகள். மொத்தம் அங்கு 10, 15 வீடுகள் கட்டப்பட்டிருந்தன. அவைகள் பல தேசங்களிலிருந்து, (உதாரணமாக நியூ ஜிலந்து, ஆஸ்டிரேலியா) பார்த்து அறிந்து வந்த நிபுணர்கள் மேற்பார்வை யில் கட்டப்பட்டிருக்கின்றன. எல்லா வீடுகளைப் பற்றியும் நான் உங்களுக் குச் சொல்ல முடியாது. ஆனால் ஒரு வீட்டைப்பற்றி விபரமாக எழுதமுடியும். நாங்களே 15 வீடுகளையும் வெளித் தோற்றத்தைப் பார்த்துவிட்டு ஒன் றைத்தான் தேர்ந்தெடுக்க முடிந்தது. வீட்டிற்குள் நுழைந்து பார்க்கத்தான் க்யூ வரிசையில் 100 பேருக்கு அப் பால் நிற்கவேண்டி இருந்ததே. வீட் டின் வெளிப்புறம் பார்க்க மிகவும் கம் பீரமாகவும் அழகாகவும் இருந்தது. பெரிய தோட்டம் வைக்கப் பூமி இல்லாத தால், இருக்கிற 15 அடி சுற்றுப்புறத் திற்குள் கண்ணைக் கவரும் பலவித பூக் கள். மாதக் கணக்காகப் பாடுபட்டுத் தோட்டத்தைப் பண்படுத்தி, சூரிய வெளிச்சத்திற்குப் பதில் சூடான வெந் நீர்க் குழாய்கள் மூலம் சூட்டை உண்டு பண்ணி, செடிகள் வளர்க்கப்பட்டிருப்ப தால்தான் நாம் சென்று பார்க்கும் போது டியூலிப்ஸ், வயலட்ஸ், டாபொடில்லிஸ் முதலிய கண்ணைப் பறிக்கும் பூக்களைக் காணமுடிகிறது. வீட்டின் பெரியஜன்னல் களின் வெளிப்புறம் மரத்தினால் நீளமான தொட்டிகள் கட்டப்பட்டு அதிலும் பல பூச்செடிகள் வளர்க்கப்பட்டிருக்கின்றன. தோட்டத்தின் ஒரு மூலையில் சூரிய வெளிச்சமும் காற்றும்பட உட்கார்ந்து கொள்வதற்குச் சௌகரியமாக நாற்காலி களும் பந்தல் போன்ற பெரிய துணிக் குடைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. நான் இதை எழுதும்பொழுது கிடைக்கும் கொஞ்ச சூரிய வெளிச்சம் இங்கிலாந் தில் எவ்வளவு சந்தோஷத்துடன் வர வேற்கப்பட்டு உபயோகப் படுத்தப்படு கிறது என்று உங்களுக்கு நன்றாய்த் தெரியவரும்.

வீட்டிற்குள் நுழையும் முன்பே வெளியில் மாடிப் படி இருக்கிறது. மாடியை விட்டுவிட்டு உள் நுழைந் தேன், முதலில் உட்காரும் லௌஞ் அல்லது டிராயிங் ரூம் எனப்படும் அறை. அதில் ஒருபுறம் சாப்பாட்டு அறையாகத் தடுக்கப்பட்டு மேஜை நாற்காலிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. அதன் பக்கத்தில் ஒரு பக்கமேஜை அல்லது செஸ்ட்என்றுவழங்கப்படும் பக்கமேஜை. ஒருபுறம் சாப்பிடும் தட்டு, கோப்பை வகைகள், மறுபுறம் ஒயின் வகைகள், சாப்பிடும் டம்ளர்களும், கண்ணாடிகளும் இருக்கின்றன. இங்கிலாந்தில், ஏன் மேல்நாடுகளில்தான், காக்டெயில் செஸ்ட் அதாவது குடிவகைகள் கொடுப்பதற்கு உள்ள பலவிதமான கண்ணாடிகள், இருக்கும் பெட்டி ஒவ் வொரு வீட்டின் ஆபரணம் ஆயிற்றே! இதில் எனக்கு என்ன ஆச்சரியம் என் றால் குடிதான் வேண்டி இருக்கிறதே, அதற்கு ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு மாதிரி கண்ணாடி எதற்கு என்பதுதான். ஷெர்ரி க்ளாஸ், ஜின் க்ளாஸ், ஷாம்பேன் க்ளாஸ், ஒயின் க்ளாஸ் — என்று பல வகை இருக்கின்றன. இதை நிறுத்தி விட்டு வீட்டிற்குள் மேலே போவோம்.

டிராயிங் ரூமில் முக்யமாகப் போடப் பட்டிருந்த மரச் சாமான்கள்—ஒரு நல்ல ஸோபா ஸெட். இது உட்கார எவ்வளவு வசதியாக இருக்கிறது என்று பார்க்க அனேகம் பேர். குளிர் காய்வதற்குக் கணப்புப் போடும் இடம். பார்வைக்குப் பெரிய கரிகளினால் போடப்பட்டிருப்பது போல் கட்டிக் கரிகள் கணகண வென்று மின்னும். ஆனால் காஸ் அல்லது மின்சா

ரத்தினால் இயங்கி, சூடு உண்டாக்கும்படி இருக்கிறது. குடும்பப் பெண்ணுக்குக் கரியைப்போட்டு மரத் துண்டுகளைக் கொண்டு உஸ் உஸ் என்று ஊதி, முகத்திலும் மூக்கிலும் கரியைப் பூசிக்கொண்டு திண்டாடாமல் இருப்பதற்கு மின்சாரம் அல்லது காஸ் (Gas) உதவிபுரிகிறது. ஆனால் தோற்றத்திற்குக் கரியினால்போடப்பட்ட கணப்புத்தான் அழகு. ஆகையால் கற்களை இசைத்துப் பாய் மாதிரி தொடுத்து அதனை மின்சாரத்தினால் சூடு பண்ண ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த, பயர் ப்ளேஸ் (Fire Place) மேல் அழகான சிங்காரங்கள். அதனைத் தாண்டி உள் சென்றதும் படுக்கை அறை.

நம் தேசத்தில் அதிக உஷ்ணமாக இருப்பதால் என்ன நாகரிகமாக இருந்தால் கூட ஜில்லென்ற தரையில் ஜமக்காளமோ பாயோ உதறிப் போட்டுப் படுப்பதின் ஆனந்தம் எதற்கும் ஈடில்லை. இங்கிலாந்தில் ஒரு கஷ்டம் என்னவென்றால் கட்டத் துணியின்றி, சாப்பிட ஒன்றும் இல்லாவிட்டால்கூடப் படுக்க ஒரு ஓட்டைக் கட்டிலாவது வேண்டும். அநேக சிறிய பிளாட்டுகளாகத் தடுக்கப்பட்டிருக்கும் சிறிய இடங்களில் தரை மரத்தாலானது. அதன்மேல் அந்தஸ்து உள்ளவர்தான் கம்பளம் அல்லது பெல்ட் என்ற கம்பளித் துணியால் மூடி வைத்து, காலுக்கு ஜில்லிப்பு ஏறாமல் பார்த்துக் கொள்ள முடியும். காலில் செருப்பு இல்லாமல் வீட்டில்நடக்க முடியாது. இதெல்லாம் எதற்கு எழுதுகிறேன் என்றால் தரை படுக்க எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்பதற்குத்தான்.

முதலில் நான் இந்த வீட்டில் பார்த்த படுக்கை அறையைப்பற்றி எழுதுகிறேன். ஒரு பெரிய இரட்டைக் கட்டில். அதன் மேல் அழகான ஸ்பிரிங் வைத்த மெத்தை. மெத்தை மேல் முதலில் போடுவதற்கு இரண்டு கம்பளி. கம்பளி மேல் ஒரு வெள்ளை லினன் ஷீட். இது மேலே படுப்பதற்கு. படுத்ததும் மேல் போர்த்திக் கொள்ள ஒரு வெள்ளை ஷீட். அதற்குமேல் இரட்டைக் கம்பளிகள் போட்டு எல்லாவற்றையும் நன்றாகச் சுற்றி மெத்தைக்கு அடியில் சொருகிவிடவேண்டும். அதற்கு மேல் க்வில்ட் அல்லது ரசாய் என்று சொல்லப்படும் சிறிய மெத்தை. இதைப் பகலில் மூடிவைப்பதற்குப் பூப்போட்ட கலர் ஷீட்டுகள். இதுதான் படுப்பதற்கு அதிக வசதி. இதேமாதிரிதான் ஒவ்வொருவரும் உபயோகிக்க வேண்டும். ஏழை மக்களுக்கும் தனவான்களுக்கும் என்ன வித்தியாசமென்றால், பணக்காரர் ஷீட் கம்பளி எல்லாம் உயர்ந்த ரகமாக வாங்குவர். ஏழைகள் எங்கு எது மலிவாக மொத்த விலையில் கிடைக்கும் என்று பார்ப்பார்கள். மற்றொரு முக்கிய விஷயம் என்னவென்றால் இங்கு யாராவது வேலைக்கு வந்தால் முக்கியமாக அவர்களைக் கேட்பது, "உனக்குப் படுக்கை சரியாகத் தட்டிப் போடத் தெரியுமா? (Do you know how to make the beds properly) என்பதுதான்.

படுக்கை அறையில் அழகான ஒரு டிரஸ்ஸிங் மேஜை. அதன் மேல் உள்ள சிங்காரங்கள்தான் சொல்லி முடியாது. வஸ்திராலயம் (ward robe) ஒன்று. ஒரு பக்கம் அதில் மனைவிக்கு; மற்றொரு பக்கம் புருஷனுக்கு. இதைக் கடந்து பக்கவாட்டில் சென்றதும் சிசு போஷண சாலை (Nursery). எந்த வீட்டிலும் குழந்தைகளுக்கென்று தனி அறை இருப்பது நல்லதுதான். அதுவும் இந்தத் தேசத்தில் குழந்தைகளை வெளியில் எங்கும் அதிகம் கொண்டு போக முடியாததால் அதற்கென்று தனி அறை இருப்பது எவ்வளவு நல்லது! சிறிய கட்டில், உட்கார்ந்து சாப்பிட அதிலேயே பலகையும் முடுக்கி உள்ள நாற்காலி, சிறிய மேஜை, எண்ணற்ற விளையாட்டுச் சாமான்கள், 5 விதமாக வெளிச்சத்தை அடக்கியும் பிரகாசமாயும் கொடுக்கும் விளக்கு—இவைகளையும் கொண்டு பலவித படங்களாலும் சித்திரிக்கப்பட்ட அறை சிசு போஷண சாலை (Nursery.)

அடுத்தாற்போல் அமைந்தது குளிக்கும் அறை. இதில் சுவரெல்லாம் மஞ்சள்நிற சலவைக்கல், மஞ்சள்நிறத் தொட்டி, கை அலம்பும் கிண்ணம் கம்மோடு ஆகிய எல்லாம். அதற்குப்பின் பொழிவு (Shower) வேண்டுமென்றால் தொட்டிக்குள்ளேயே நின்று தண்ணீர் சுற்றிலும் இறைக்காமல் இருக்க, பிளாஸ்டிக் (Plastic) திரைச் சீலைகள் (Curtains). தரைதான் லினோலியம் (Linoleum) என்ற கெட்டி கான்வஸ் போன்ற துணியால் மூடப்பட்டிருக்கிறது. சோப் அல்லது சுத்தம் செய்யும் தூள்களைப் போட்டுத் துடைத்து விட்டால் பளிச் சென்று இருக்கும். அதனைத் தாண்டிச்

ஜெய் ஸோம்நாத்
கே.எம். முன்ஷியின்
தலைசிறந்த நாவல்
பிரக்யாதிபெற்ற
ஸோமநாதர்
ஆலயத்தைப் பற்றிய
சரித்திரச் சித்திரம்
● 'ஜெய் ஸோம்நாத்' - கோஷத்தின் மந்திர சக்தி
● கஜினி மகம்மதின் - மகத்தான தாக்குதல்
● மதவெறி கொண்ட - சன்யாசியின் துரோகம்
● தாஸிச்சிறுமி சௌளா - பீமதேவன் தெய்வக்காதல்
மயிர்க்கூச்சலிடும் சம்பவங்கள்
மற்றும் ஏனைய மனதைக் - கவரும் நிகழ்ச்சிகள்
நிறைந்த தொடர் நாவல்
காவேரி
வைகாசி இதழில்
ஆரம்பமாகிறது.

ஹிந்தி சந்திரலேகா - சென்னை வெலிங்டனில்

கூடிய சீக்கிரம் வெளிவருகிறது.

சென்றதும்தான் நம் கவனத்தை அதிகம் இழுக்கும் சமையலறை.

சமையலறை என்றால் நம் நாட்டில் பெரிய இடம். ஒரு புறத்தில் அடுப்புப் போட்டு மேடைகட்டி, கையலம்பும் தொட்டி முற்றமும்தான் நமக்குத் தெரியும். ஆனால் இங்கே சமையலறை ஒரு சிறிய 20 அடி நீளமுள்ள இடம் என்றால் நம்புவீர்களா? சுற்றிலும் ஏக அலமாரிகள். சாமான்கள் அள்ளிவைக்கும் பாட்டில்கள் முதற்கொண்டு சிறிய அறைகளாகத் தடுக்கப்பட்ட அலமாரிக்குள் ஒவ்வொன்றும் அடுக்கப்பட்டிருக்கின்றன. கையலம்பும் தொட்டி, நல்ல வாயு (Gas) அடுப்பு, எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா? அதைவிட்டு வெளியில் வந்ததும் முன் சொன்னபடி மாடிப்படி.

மாடியில் இரண்டு தனிப் படுக்கை அறைகளும் ஒரு வேலைக்காரன் அறையும் தான் இருக்கின்றன. அங்கும் மரச் சாமான்கள் அழகாக ஒழுங்கு செய்யப் பட்டிருக்கின்றன. மற்றொருபுறம் இறங்குவதற்குப் படிக்கட்டும் உண்டு. இந்தச் சிறிய வீட்டை விட்டு வெளியே வந்ததும் கொஞ்ச இடத்தில் அழகாகக் கட்டப் பட்டிருக்கும் இந்த மாதிரியான ஒரு வீடு எனக்குப் போதும் பகவானே என்று எண்ணிக்கொண்டு அப்பால் சென்றேன். நமக்குத்தான் எதையும் பார்த்தால் வேண்டுமென்று தோன்றுவது சகஜமாச்சே!

வீட்டைப்பற்றி எழுதி ஆய்விட்டதே அடுத்தது என்ன என்று கேட்கிறீர்களா? அதுதான் மாடர்ன் லாண்டரி. லாண்டரி கூலிகளும் செலவுகளும் இங்கு அதிகம் என்றும், குடும்பப் பெண்ணின் நித்ய அலுவல்களில் ஒன்று லாண்டரி வேலையும்தான் என்றும் முன்பே உங்களுக்குச் சொல்லி இருக்கிறேன். இந்த மாடர்ன் லாண்டரியில் என்ன அதிசயம் என்று சற்றே பார்ப்போம். முதலில் துணிகளைக் கலர் கலர்களாகவும், வெள்ளை தனியாகவும் பிரித்து வைத்துக்கொள்ள வேண்டும். மின்சாரத்தினால் சுத்தம் செய்யும் கருவி (Electric washing Machine) தான் முன் நிற்கிறதே. இதில் லக்ஸ் (Lux), ட்ரெப்ட் (Dreft), ஆக்ஸிடால் (Oxydol) என்று பல பெயர்களில் வீற்று[illegible] சோப் தூள்களைப் போட்டு, துணியையும் போட்டு ஸ்விட்ச்சைத் தட்டி விட்டால் கசக்கித் துவைத்து 5 நிமிஷத்தில் துணி தயாராகி விடும். எலக்டிரிக் ரிங்கர் (Electric Wringer) என்ற மிஷின் அலசிய துணிகளைப் பிழிந்து கொடுக்கும். உஷ்ணமான காற்றுள்ள அறை (Hot aired room) என்ற சிறிய அறைகள் இருக்கின்றன. அவைகள் வெந்நீர் குழாய்கள் மூலம் கணகண வென்று சூடாக்கப் பட்டிருப்பதால் துணிகள் எல்லாம் ஒரு பத்து நிமிஷத்தில் உலர்ந்துவிடும். இஸ்திரி பண்ணவும் லாண்டரிகளில் பெரிய மிஷின்கள் இருக்கின்றன. இவையெல்லாம் பெரிய லாண்டரிக்கல்லவா என்று நீங்கள் கேட்கும் முன்பே சிறிய குடும்பத்திற்கு என்ன இருக்கிறது என்று சொல்கிறேன். பணமிருந்தால் 30 பவுன் செலவிட்டு, சலவை செய்யும் கருவி வாங்கி வைத்துக்கொள்ளலாம். அதில் துவைத்து இருக்கும் துணியைக் குளிக்கும் அறையிலோ அல்லது சிறிய இடத்திலோ காயவைத்து இஸ்திரிசெய்து கொள்ளலாம். பணமும் வசதியும் இல்லாவிடில் குளிக்கும் தொட்டி அல்லது கையலம்பும் கிண்ணம் இவைகளில் தோய்ப்பது இருக்கவே இருக்கிறது.

துணிகளை இஸ்திரி செய்வது என்பது பற்றிச் சொல்லும்போது புதிதாக வந்துள்ள மின்சார இஸ்திரிப் பெட்டியைப் பற்றிச் சொல்கிறேன். இதில் சாதாரண பட்டு, துணி, கம்பளி, இவைகளின் சூட்டுக்குத் தக்கவாறு மாற்றிக்கொள்ள வசதி இருப்பதுடன், பட்டு முதலியவைகளைச் சற்று ஈரமாக்கி, பெட்டி போடுவதற்கும் வழி இருக்கிறது. ஈர நனைப்புடன் வேண்டும்பொழுது இப்படி உபயோகிக்கலாம். மற்றப் பொழுது சாதாரணமாகவும் உபயோகிக்கலாம். தண்ணீரைக் கொஞ்சம் நிரப்பிவிட்டால் நீராவி தானாகவே உண்டாகி ஈரத்தைக் கொடுக்கிறது. அதுவும் நம் பட்டுப் புடவைகளை இஸ்திரி செய்ய மிகவும் உபயோகப்படும்.

மற்றப்படி முக்யமாக நான் அங்கே பார்த்தது எங்கும் உள்ளதுபோல் வாசனைத் திரவியங்கள், உதட்டுச் சாயம், நகச் சாயம், பௌடர் வகைகள் எல்லாம்தான். சாப்பாட்டுப் பகுதி என்றொருபுறத்தில் எல்லாச் சாமான்களும் வைக்கப்பட்டு, சில சமைக்கும் முறைகளும் காட்டப்பட்

டன. தையல் வேலையில் விருப்பமுள்ளோருக்கு ஒரு பகுதி. தலை அலங்காரம் செய்யப்படும் இடத்தில் கும்பல் சொல்லி முடியாது.

சமைக்கும்பொழுது பருப்பு, கிழங்கு வகை இவைகளை அதி சீக்கிரமாக வேக வைப்பதற்குப் புதிதாக வந்துள்ளது பிரஷர் குக்கர் (Pressure Cooker). இந்தப் பாத்திரத்தைச் சாதாரணமாகத் தேய்த்து நன்ருக உபயோகிக்கலாம். நம் சமையலுக்கும் அதிகவசதி. இதில் பருப்பு, அதற்கு வேண்டிய அளவு தண்ணீர், மஞ்சள் பொடி எல்லாம் போட்டு மூடி அடுப்பில் வைத்தால் 5 நிமிஷத்தில் மாவாகக் கரைந்து விடும். பொங்கல் முதலியவை செய்வதற்கு 5 நிமிஷம்தான். விலை 4 பவுன். அதாவது 50 ரூபாய். ஆனல் நாம் எவ்வளவு நாள் வேண்டுமானலும் உபயோகிக்கலாம். கரி விறகு அடுப்பில்கூட வைத்துச் சமைக்கலாம்.

இதை எழுதி முடிக்கும் முன் அங்கே சிற்சில சமையலறை சாமான்கள் விற்றவன் அவைகளை எப்படி உபயோகப் படுத்துவது என்று காட்டிவிட்டு வேடிக்கையாகச் சொன்னதையும் எழுதுகிறேன். அவன் விற்றது பெரிய மண்டை போன்ற உருளைக் கிழங்குகளைக் கட்டம் கட்டமாக வெட்டவும், நடுவில் துவாரம் கொண்ட வில்லைகளாக நறுக்கவும் சிறிய சிறிய உருண்டைகளாகத் தோண்டி எடுக்கவும் தோலைச் சீவவும் உபயோகப்படும் கருவிகள், சிறிய எஃகு தகட்டினுல் செய்யப்பட்டவை. அவன் சொன்னது—லண்டனில் குளிர் காலத்தில் உருளைக் கிழங்கு ஒன்றுதான் கிடைக்கும். அதுவும் அதையே சமைத்து அலுத்துப் போகும் உங்களையும் உங்கள் புருஷன் குழந்தைகளையும் உற்சாகப்படுத்த ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக நறுக்கிச் சமைத்தால் ஒவ்வொருவரும் சந்தோஷமாகச் சாப்பிடுவார்கள்-என்று அடுக்கினுன்.

Sastry & Sastry

JEWELLERS

33, EAST MADA STREET,

MYLAPORE P. O. MADRAS-4

நான் பிரஸிடெண்ட் வெஜி
டெபிள் ஹேர் ஆயிலை
உபயோகித்திருக்கிறேன்.
அது கேசத்திற்கு ஆரோக்
கியம் அளிக்கும் ஒரு சிறந்த
கூந்தல் தைலம். நல்ல கூந்தல்
வளர்ச்சிக்கு அது உதவுவது
டன் தேகத்திற்குக் குளுமை
யையும் அளிக்கிறது.

T. R. Rajakumari

PRESIDENT VEGETABLE HAIR OIL

RATHOD TRADING Co
SOWCARPET — MADRAS. I

**விக்ருதி வருஷத்தில்
உங்கள்
நலம் பெருக**

இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

விசேஷ காலத்தையும்
கல்யாண காலத்தையும்
முன்னிட்டு

பட்டு & நூல்ஜவுளிகள்

எங்களிடம் கொள்ளேகாலம் பட்டினால் தயார்செய்த பட்டுச் சேலைகளும், பலவூர் நூல் சேலை, வேஷ்டி, துப்பட்டா ரகங்களும் சாயம் காரண்டியாகவும், விலை நயமாகவும் கிடைக்கும்

தேவைகளுக்கு உடனே முந்துங்கள்.

ம. நடேச ஐயர் & Co.

பட்டு ஜவுளி வியாபாரம்
9, வடக்கு மாடவீதி
மயிலாப்பூர் - மதராஸ்

N. B:— ஆர்டர்கள் குறிப்பிட்ட டயத்துக்குள் கொடுக்கப்படும்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - MAY 1950
MADR

பிரமையும் கற்பனையும்

ஸ்ரீதரம் குருஸ்வாமி



அதைக் கற்பனைக்கண் கொண்டு பார்க்க வேண்டும். அப்பொழுது பின்னங்கள் மறைந்து பூரணம் நமக்குப் புலனாகும்.

உதவியினால் பெற முடியாத ஆறுதலை நாம் அனுதாபத்தினால் பெறுவதுண்டு. உதவி செய்ய ஆற்றல் உள்ளவர்களுக்கு உதவி செய்ய விருப்பம் இராது; நம் நிலையைக் கண்டு இரங்கி ஏங்குபவர்களுக்கு உதவி செய்யும் ஆற்றல் இல்லாமல் போனால் என்ன? அவர்களுடைய நல்லெண்ணம் நமக்கு விலை மதிக்கமுடியாத ஒரு பொக்கிஷம்.

கற்பனைத்திறன் இல்லாதவர்களுக்கு அரைகுறை நிகழ்ச்சிகளைக் கண்டால் ஆத்திரம் பொங்கும். கற்பனைத் திறன் இருந்தும், நிகழ்ச்சியிலுள்ள குறைபாடுகளையே ஆராய்ந்தாலும், ஆத்திரம் வளரும். பொறுமை, நகைச் சுவை, தராதர உணர்ச்சி — இவை கற்பனைக்கு உதவியாக அமைய வேண்டும்.

நண்பரின் தாயார் காப்பி கொண்டுவந்தார். மேஜையின்மேல் அதை வைக்கும்பொழுது அவர் கை சற்றே தவறியது. காப்பி என் உடைமீது கொட்டிவிட்டது. நண்பருக்கு அடக்கமுடியாத கோபம். வேண்டுமென்றா செய்தார்? அதைப் பாராட்டாமலிருக்கப் பொறுமை வேண்டும். அந்த அம்மாளின் நல்லுணர்ச்சி தானே முக்கியம்!

கல்யாண வீடு; முக்கியமான பண்டம் ஏதோ ஒன்றை மறந்துவிட்டார்கள். தலைக்கு ஒருவராக வாய்க்குவந்தபடி இரைகிறார்கள். வந்த விருந்தினருக்கு அது ரஸக்குறைவாகப்படுகிறது. நடைமுறையில் காணும் குறையை ஈடுசெய்ய,

ஆல்டஸ் ஹக்ஸ்லி என்னும் அறிஞர் உலகயாத்திரை செய்கிறார். பம்பாய் நகரத்தில் ஒரு பொதுக்கூட்டம். அது நடைபெறும் மண்டபம் ஒரு சோலை நடுவில் இருந்தது. அஸ்தமன வேளை. காகங்கள் பல்லாயிரக்கணக்கில் கரைகின்றன. பாண்டு வாத்தியம் வேறு. கூட்டத்திலுள்ளவர்கள் சளசளவென்று பேசுகிறார்கள். சிறுவர்கள் பாடும் பாட்டுக் காதில் விழவில்லை. உபசாரப் பத்திரம் படித்து,

அது வைத்திருக்கும் பேழையை எடுத்து வழங்குவதிலும்கூடச் சின்னஞ்சிறு தவறுகள். இதைக்கூடச் சரிவரச் செய்ய முடியவில்லையே இந்த இந்தியர்களாலே என்று ஹக்ஸிலி இடித்துக் கூறுகிறார்.

இங்கிலாந்தில் இதையெல்லாம் எவ்வளவு கண்ணியமாக நடத்திமுடிப்பார்கள்! ஒவ்வொரு அம்சத்தையும் நுணுக்கமாக முன் கூட்டியே கவனிப்பதுமட்டுமல்ல. கூட்டநேரத்திலும் எவ்வளவு அமரிக்கையாகவும் பொருத்தமாகவும் இருக்கும் அவர்கள் நடத்தை! அந்தத் தோரணையே ஒரு அழகு!

இத்தாலி நாட்டினர், ஆனால், இந்தியரைப்போலத்தான். மன்னன் ஊர்வலம் அங்கே தாறுமாறாக நடக்கும். தேவாலய உற்சவங்களோ இன்னும் அலங்கோலம். பிரார்த்தனை நடந்துகொண்டிருக்கும். ஒருவர் முழந்தாள் மண்டியிட்டுப் பிரார்த்தனையில் கலந்துகொள்வார். அவர் கண் சற்று அப்பாலுள்ள ஒரு இள நங்கையை ரஸித்துக்கொண்டிருக்கும். அல்லது அடுத்துள்ளவரோடு ஷேர் மார்க்கட் நிலவரத்தைப் பற்றி அவர் விவாதிப்பார். எந்த அலுவலில் ஈடுபட்டிருக்கிறோமோ அதற்கு ஒத்தாற்போல் அது முடியும் மட்டும் நாம் நடந்துகொள்ளவேண்டாமா?

இப்படி நேரில் தாம் பார்த்தவற்றை வர்ணிப்பதோடு ஹக்ஸ்லி திருப்தியடையவில்லை; அதற்குக் காரணத்தை ஆராய்கிறார்; நிலைமை சீர்திருந்த உபாயத்தையும் எடுத்துக்காட்டுகிறார்.

இத்தாலியர் அழகுணர்ச்சி உள்ளவர்கள். வீட்டின் வெளி முகப்பைச் சல வைக்கல் கொண்டு வெகுநேர்த்தியாக அவர்கள் கட்டி முடிப்பார்கள். வீட்டின் உட்புறத்தையும் செவ்வையாக அமைக்க அவர்களிடம் பணம் இராது. அவர்களும் அதைப்பொருட் படுத்தமாட்டார்கள்; அது எவ்வளவு அழகற்றதானாலும் சரியே. முகப்பின் அழகு ஒன்றே அவர்களுக்குப் போதும். ஆங்கிலேயருக்கு வீட்டின் ஒவ்வொரு பகுதியும் ஒன்றிற்கொன்று பொருத்தமாய், பழுதற்றதாய் இருக்கவேண்டும்.

உணர்ச்சி யனுபவத்திலும் ஒரு வேற்றுமை. ஆங்கிலேயர் ஒரு மன நிலையில் கருத்து ஊன்றிவிட்டார்களானால் மணிக்கணக்கில் அதிலிருந்து மாறமாட்டார்கள். அவயவங்களும் கண்ணும் காதும் கட்டுப்பட்டு நின்றுவிடும் அவர்களுக்கு. இத்தாலியரோ இந்த நிமிஷம் உள்ள நிலையில் அடுத்த நிமிஷம் இருப்பது அபூர்வம். பக்தி, ஹாஸ்யம், சிருங்காரம் போன்ற நவரஸங்களும் மாறிமாறி அவர்கள் கருத்தைக் கவரும். அவர்களுடைய சித்தம் சலனம் நிறைந்தது. ஒவ்வொன்றையும் அதததற்கேற்ற மனப்பான்மையோடு ரஸிப்பார்கள்; அடுத்தடுத்துப் புதுமை அனுபவம் அவர்களுக்கு வேண்டும். அவ்விதம் ரஸிக்கத் தெரியாதவர்களை மந்த புத்தி என்றுகூட அவர்கள் ஏளனம் செய்யப் பின்வாங்கமாட்டார்கள்.

இந்தியர்கள் தங்கள் பொது அலுவல்களை விதரணையாக நடத்துவதில்லைஎன்பதற்கு ஹக்ஸ்லி கூறும்

காரணம் வேறு. இத்தாலியரின் அழகுணர்ச்சி இந்தியருக்குக் கிடையாது. க்ஷணத்திற்குக்ஷணம் மாறித் திகழும் ரஸானுபவ சக்தியும் இந்தியருக்கு இல்லை. ஆகவே இவர்களிடையே மலிந்துள்ள திறமைக் குறைவுக்கு இவர்கள் அசிரத்தைதான் காரணம். இந்தியர்கள் எல்லோரும் வேதாந்திகள்; இந்த உலகத்தில் அவர்களுக்குப் பற்றுதல் இல்லை; இந்த உலகத்துச் சின்னங்களை அவர்கள் மதிப்பதில்லை. சின்னங்களுக்கு அப்பாற்பட்ட தத்துவம் ஒன்றில்தான் அவர்கள் நாட்டமெல்லாம். உலக விஷயங்களை அவர்கள் புறக்கணித்து ஒதுக்குவதால், உலக சுகபோகங்களும் மேன்மைகளும் பதிலுக்கு அவர்களைப் புறக்கணித்து ஒதுக்கிவிடுகின்றன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக கோடிக்கணக்கான இந்தியர் மிருகங்களுக்கும் கீழான நிலையில் மனமொப்பி வாழ்ந்து வருவதற்கு இதுவே காரணம்.

ஆல்டஸ் ஹக்ஸ்லி, இந்தியரின் இந்நிலை மாறி அவர்கள் மேம்பாடு அடைய, வழி சொல்கிருர். இந்த உலக வாழ்க்கையை வெறுப்பது தவறு. உலக ஸம்பிரமங்களில் நாம் மேலும் ஈடுபடவேண்டும். பல நாடுகளையும் சுற்றிப் பார்க்கவேண்டும். அப்பொழுது பிறருடன் பழகுவோம். பல உண்மைகளை உணருவோம். வாழ்க்கை செம்மைபடையும். பிரயாணம் மலிந்து எளிதாகி உள்ள இக்காலத்தில் இந்த ஸந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டால் ஜனங்களுக்கு லௌகிக விஷயங்களில் பற்று ஏற்படும். வாழ்க்கை மேன்மையுறும் — என்பது ஹக்ஸ்லியின் முடிவு.

அவர் சொல்வதில் சிறிதும் பிழை இல்லை; எல்லாம் பொருத்தமானதே, என்று முதலில் நமக்குத் தோன்றுகிறது. வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் மன்னன் மகளுக்குத் திருமணம் என்ருல் முன் கூட்டியே ஒத்திகை நடக்கிறது. ஊர்வலமாக வரும் மார்க்கமும், திருமணச் சடங்கின் ஒவ்வொரு அம்சமும், கணக்கிடப்படுகிறது. விநாடி கூடத் தவறுதல் இல்லாமல் யார் யார் எவ்விதம் நிற்கவேண்டும், எப்படிச் சடங்கில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும், என்றெல்லாம் போதனை நடக்கிறது, திருமணத்தன்று நடைபெறுவது பலமுறை ஒத்திகை பார்த்த நாடகம்தான். மணமகன், மணமகள், உள்ளிட்ட எல்லோரும் முடுக்கப்பட்ட இயந்திரங்கள்போல் தவறின்றி நடிக்கிருர்கள். அந்த அமைதியையும் ஒழுங்கையும் கண்டு ஜனங்கள் பிரமித்து நிற்கிருர்கள். எந்த உணர்ச்சியை விவாக தினத்தன்று ஜனங்களுக்கு ஊட்டவினைத்தார்களோ, பழுதில்லாமல் அந்த உணர்ச்சி அவர்கள் உள்ளத்தில் நிரம்புகிறது.

முடிசூட்டு வைபவங்களும் இவ்விதம் தான். அந்த நேரத்தில் பார்த்துக் கொள்வோம் என்று எதையும் தற்செயலாக நடந்தேற அவர்கள் விடுவதில்லை.

ஆங்கிலேயர் புறநாடுகளில் வசிக்க நேரும்போது உணவருந்தும் முறைகளிலுள்ள ஆடம்பரத்தைக்கூட இம்மியும் அவர்கள் விட்டுக்கொடுப்பதில்லை. ஒழுங்கும் வெளிப்பார்வைக்கான மேம்பாடும் அவர்கள் கலாசாரத்தின் உயிர் நாடி.

ஷேக்ஸ்பியர் நாடகத்தில் கிராமிய ஜனங்கள் மன்னன் முன்னிலையில் நாடகம் ஒன்று நடிக்கிருர்கள். அதிலுள்ள அபத்தங்களை ஸஹிக்கமுடியாமல் முள்ளின்மேல் இருப்பதுபோல் ராணி தவிக்கிருள். பாமர ஜனங்களின் நல்லுணர்ச்சியை அங்கீகாரம் செய்யவேண்டும், அவர்கள் முயற்சியிலுள்ள குறைபாடுகளை நம்முடைய கற்பனையைக்கொண்டு இட்டு நிரப்பவேண்டும், அப்போது எதுவும் அழகாகிவிடும், என்று மன்னன் ராணிக்கு உபதேசம் செய்கிருன். அவனுடைய பெருந்தன்மையைக் கண்டு நாம் வியக்கிருேம். கற்பனை, பெருந்தன்மை, இரண்டும் நிறைந்தவனே மாந்தர்களுக்குள் மன்னன்.

வேதாந்திகளான இந்தியர்கள் வெளிப்படைச் சின்னங்களை அதிகம் பொருட்படுத்தாததால் இழப்பது என்ன? இவ்வுலக வாழ்கையில் வசதிக்கான பொருள்களைப் பெருக்கமுற்பட்ட மேலை நாட்டார் அவற்ருல் அடைந்த லாபம் என்ன?

மாணவனுகப் பாடம் கற்கும் நிலையில் சிறுவன் பல வீடுகளில் சென்று பிச்சையெடுத்து வயிறு வளார்க்கிருன். பணக்காரர்வீட்டுப் பிள்ளையாக இருந்தபோதிலும் குருகுலவாஸம் நடத்திய காலத்தில்

ஹமாம் உண்மையிலேயே
இந்திய மக்களின்
மனதிற்கிசைந்த ஸோப்பே! ★
குறைக்கப் பட்டுள்ள விலைகளில் கிடைக்கும்
குறைந்த விலைக்கு பெரிய ஸோப்
ஹமாம் தேய்த்துக் குளிப்பதென்றால் குழந்தைகளுக்கு குஷியே, அது அவர்களுடைய மெல்லியசருமத்திற்கு எரிச்சல் கொடுக்காது. அலாதி தென்பும் சௌகரியமும் அளிக்கிறது,
HAMAM
அதன் அற்புதமான ஏராள நுரை அழகு மங்கையரின் கோமள மேனியை மழமழப்பாக்கி நறுமணங்கமழ விளங்கச் செய்கிறது.
செம்மையாக சுத்தம்செய்வதும், குளுமையும் உற்சாகமும் ஊட்டுவதுமான ஒரு ஸோப்பையே புருஷர்கள் கோருகின்றனர். எனவே அவர்களில் அநேகர் ஹமாமையே விரும்புவதில் ஆச்சரியமென்ன?
★ ஹமாம் வாங்குவோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்தே வருகிறதென்பதை அசல் விற்பனை புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்!
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்

தி யுனைடெட்
கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

கல்கத்தா

அதிகாரம் பெற்ற மூலதனம்	....	ரூ. 8,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	....	ரூ. 4,00,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	....	ரூ. 2,00,00,000
ரிஸர்வ் நிதி	....	ரூ. 52,50,000

●

டைரக்டர்கள்
G. D. பிர்லா—சேர்மன்

ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா
(வைஸ்-சேர்மன்)

ரமண்லால் ஜி. ஸரையா
(வைஸ்-சேர்மன்)

ஆநந்த சரண் லா
பைஜ்நாத் ஜலான்
கோவிந்த்லால் பங்கூர்
மதன்மோகன் R. ரூயியா
மஹாதேவ் L. தஹானுகார்

மோஹன்லால் L. ஷா
மோதிலால் தபூரியா
நவீன் சந்த்ர மபட்லால்
P. D. ஹிமத்சிங்கா
R. L. நோபனி

ஜெனரல் மானேஜர்
B. T. தாகூர்

●

இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள முக்கிய நகரங்களில்
70 பிராஞ்சுகளுக்கு மேலும், உலகெங்கும் சேவை செய்யத்
திறமை மிக்க ஏஜன்ஸி வசதிகளும் உள்ளன.

ஏற்பட்ட நியமம் இது. கிரஹஸ்தனுக ஆகி ஏராளமான செல்வத்தைத் தினந் தோறும் கையாளும்போது கனிகிழங்கு கள், பிக்ஷான்னம், இவற்றைக்கொண்டு காலந்தள்ளும் வானப்ரஸ்தம், ஸந்யா ஸம், முதலிய நிலேகளே அவன் மனதில் லக்ஷியங்களாகப் பதிகின்றன. இரு புற மும் செல்வம் நிலேயாமையை உணர்த் தும் வாழ்க்கைப்படிகள் உண்டு. ஆகவே போகங்களைத் துய்க்கும்போதும் அவற் றைத் தாமரையிலே நீர்போல் பட்டும் படாமலும், ஒட்டியும் ஒட்டாமலும் அனு பவிக்கும் மனப்பான்மை அவனுக்கு ஏற் பட இடம் உண்டு. செல்வத்தால் சுகம் வராது, செல்வத்தைப் பயன்படுத்திப் பின்பற்றும் தர்மத்தால் சுகம் ஏற்படும் என்பது இவன் மனதில் பதியும். எந்நிலே யிலும் அவன் மனதில் ஆசைக்கு ஒரு வரம்பு உண்டு. தேடிய செல்வத்தின் பயன் ஈதல் என்பதைப் பயிற்சிமூலம் அவன் அறிவான்.

மேலே நாட்டிலோ? வாழ்க்கையும் வாழ்க்கைக்கான பண்டங்களும் நிலேயற் றவை என்ற உணர்ச்சி ஏற்பட அந்தப் பண்பாடு இடம் தரவில்லே.

தனி மனிதர்களுக்குள்ள தன்மை மனித சமூகங்களுக்கும் தொற்றிக்கொள் கிறது. தனி மனிதன் வாழ்க்கையில் போட்டி, போராட்டம். மனித சமூகங் களிடையிலும் போட்டி, போராட்டம். நீதியும் தர்மமும் அற்ற போராட்டம்.

வாழ்க்கையிலுள்ள குறைகளே ஓரளவு பொறுத்துக்கொள்ள நாம் பழகவேண் டும். "உலகில் கிடைப்பது உடைந்த, சிதறிய துண்டு; விண்ணில் கிடைப்பது பூரண வட்டம்" கற்பனையைக்கொண்டு பூரணத்தை ஊஹிக்கவேண்டும். நல் லுணர்ச்சியைக் கொண்டு மனமகிழ வேண்டும். அத்தகைய வாழ்வில் போட்டி ஏது, போராட்டம் ஏது?

பிரயாண வசதிகள் வளர்ந்தால் தோழமை வளரும் என்று எதிர்பார்ப்பது வீண். ரெயில் வண்டிகள் வர ஆரம் பித்தகாலத்தில் அந்த நம்பிக்கை பலமாக இருந்தது; ஆனுல், முன்னிலும் கடுமை யான போர்களே மூண்டன என்பதை லிண்ட் என்னும் அறிஞர் வெகு அழகாக எடுத்துச் சொல்கிருர். இப்போதோ, ஆகாய விமானம் நிலேபெற்றுவிட்டது. இருபோர்களுக்கு இடையில் குழப்பம் நிறைந்துள்ள ஒரு காலப்பிரிவைச் சமா தான காலம் என்று சொல்லும் நிலேக்கு அதனுல் நாம் வந்துவிட்டோம்.

பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்ற நல்லுணர்ச்சி ஒருபுறமும், அந்த உணர்ச்சி செயலளவில் வெளிப்படும் போது அதிலுள்ள குறைகளேயும் அன் போடு அங்கீகரித்துப் பாராட்டும் பெருந் தன்மை நிறைந்த கற்பனேத்திறன் மற் றெருபுறமுமாக அமைந்தது தான் இந்நாட் டின் தொன்றுதொட்ட பண்பாடு. அதை வளர்ப்பதற்குப் பதிலாக வெளிப்பார் வைக்குப் பகட்டாகத் தோன்றும் மேலே நாட்டுக் கலாசாரத்தைக்கண்டு மயங் கினேமானுல், அந்நாட்டினருக்கு வரும் சோதனேகள் நமக்கும் வரும். ஆனுல் அவற்றை எதிர்க்க அவர்களுக்கு உள்ள உறுதி மாத்திரம் பிறகு நமக்கு என்றும் வாராது.

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள் நாடு ரூ.	அ.	பை.	மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், "காவேரி,"
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

பெரியவர் பெரியவர்தான்

சேஷ்டை

[பெரிய ராஜ வீதியில், பெயர் பெற்ற நர்த்தகி சுஜாதாவின் மாளிகை. அரசன் கூவிக்கொண்டே வருகிறான்.]

அரசன் : சுமனா, சுமனா......

சுஜாதா : (கை கூப்பிக்கொண்டு) வாருங்கள் அரசே! ஏழைக்கு ஒரு அனுமதி வேண்டும்......

அரசன் : அன்பின் குரலுக்குத் தடையுத்தரவு ஏது?

சுஜா : அடியாள் பெயர் சுஜாதா...சுமனா அல்ல......

அரசன் : பெயர் தானாக வைத்துக் கொள்வது அல்ல. நாம் நமக்குப் பிடித்த பொருளை நமக்கு இஷ்டப் பட்ட பெயர் தந்துதான் அழைப்போம். காதலன் கண்ணில் படாத வரை கன்னி கன்னி. பட்டுவிட்டால்......?

சுஜா ; காதலி......!

அரச : மணந்து கொண்டுவிட்டால்......?

சுஜா : மனைவி — அதுபோல......

அரச ; என் இன்பத்தின் இனிய ஜோதி உருவே! அதைப்போல் என் கண்ணில் பட்ட பிறகு, என் உள்ளத்தில் ஏறிய உருவுக்கு, என் அன்பு வீணையிலே சுண்டி எழுந்த இந்த ராகத்துக்கு நான் கொடுத்த பெயர்தான்.

சுஜா : மலரை முகர்வதற்கும் ஒரு எல்லை வேண்டும்......! மெலிந்த உடையில் சரிகை பின்னும்போதும் ஜாக்ரதை......

அரச : அன்பு சுயநலம் மறந்தால் அது ஏமாற்றமாகிவிடும்......

சுஜா : என்றாலும் காற்று விளக்கை அணைத்தே விடக் கூடாதல்லவா!

அரசன் ; அது சரி, இன்று என்ன உனக்கு என் காதுகளிடத்தில் மட்டும் அவ்வளவு பாரபக்ஷம்!

சுஜா ; இல்லையே! இதோ பாருங்கள், என் கைகளாலேயே.........

அரச : உன் கைகளாலேயோ...... ஊம்.

சுஜா : உங்களுக்கென்று தயாரித்த ஒரு பொருள். இதோ கொண்டு வருகிறேன். போகட்டுமா? விடையுண்டா?

அரச : போகலாம். ஆனால் போகுமுன் காதுகளுக்கும் உதடுகளுக்கும் ஏற்பட்ட பொறாமையைத் தீர்த்துவிட்டுப் போகவேண்டும்.

சுஜா : உதடுகளுக்கு விருந்தளித்தால், பிறகு கைகள் சும்மா இருக்குமா.....அதனால்

அரச : அதனால்......

சுஜா ; சற்றே சும்மா இருக்கணும்! (அரசன் பிடிக்க ஓடுகிறான்; அவள் ஓடிவிடுகிறாள்.)

அரசன் அமர்கிறான்; ஒரு வேலையாள் வருகிறான்.

அரசன் : யாரடா அது? இங்கே நாம் யாரையும் பார்க்க முடியாது.

வே : அரசே, குருநாதன் வந்திருக்கிறார்.

அரச : "குருநாதனா? ஆ..." எதிர்கொண்டு செல்கிறான்.

அரச ; குருநாதா! தாங்கள் இங்கே வரலாமா?

குரு : அரசகுமாரா! கடமை இடத்திற்கும் காலத்துக்கும் பயப்படாதே!

அரச : கட்டளையிட்டால்......

குரு : அல்ல. நான் தரவந்த உபதேசத்தைத் தர இதுதான் தகுந்த இடம்.

அரச : இதோ தயார்.

குரு : கேட்க நேரமிருக்கிறதா?

அரச : தங்கள் உபதேசத்தைக் கேட்க நேரமா? விளையாட்டில் சேய் மயங்கி தாயின் குரலைக் கேட்காதிருக்குமா? கேளிக்கை கடமையின் குரலைத் தட்டுமா? வேலையிலே ஈடுபட்ட தந்தையும் குழந்தையைப்பற்றிய நினைவை மறப்பதுண்டா? குருநாதா, தங்களுக்கு ஏன் இந்தச் சந்தேகம்—உபதேசங்களைக் கேட்கத் தயாராயிருக்கிறேன்.

குரு : அரசகுமாரா! உன் தந்தை இறந்து நீ பட்டம் ஏற்றுக்கொண்டு அதிக நாட்கள்

ஆகவில்லை. எதிர்த்துக்கிளம்பியிருக்கும் சிற்றரசர்களை வெற்றிகொள்ளவேண்டும். தவிர திக்விஜயம் செய்யவேண்டும்.

அரச: அதை எல்லாம்பற்றிய கவலை எனக்கு இல்லை. தங்களைக் குருநாதனைப் பெறப் பாக்கியம் செய்த என்னை வெற்றி முன்னேறி வாகை சூடமாட்டாளா? இங்கு உலக முழுவதிலும் குருநாதன் அறிவுக்குரல் சூழ்ந்து ஒலிக்காதா?

குரு: அதற்கு முன்னேற்பாடாக நான் இதுவரை செய்துவந்த உபதேசங்களில் மிகவும் முக்கியமான உபதேசத்தை இன்று செய்யப் போகிறேன்.

அரசன் வணங்கி நிற்கிறான்.

குரு: ஞாபகம் வைத்துக்கொள். ஒன்று—பெண் மனிதனின் முதல் பலவீனம்.

அரசன்: தெரிந்து கொண்டேன்.

குரு: இரண்டாவது வெற்றித் தேவதைக்கும் பெண்ணுக்கும் என்றுமே விரோதம். மூன்றாவதை யும் சொல்லட்டுமா?

அரசன்: வணக்கம்......!

குரு: உலகை வெல்ல விரும்புபவன் பெண்கள் உலகத்தைத் தவிர்க்க வேண்டும்.

அரசன்: குருநாதா! தங்கள் உபதேசத் தைத் தலையால் ஏற்றுக் கொண்டேன். உப தேசப்படி நடக்கிறேன்.

குரு: சரி, நான் வருகிறேன்.
(போகிறார்.)

சுஜாதா தான் தொடுத்த மாலை ஒன்றை எடுத்துக்கொண்டு பாடிக்கொண்டே வருகி றாள்.

சுஜா: என் உயிரே! பார்த்தீர்களா என் கையின் திறமையை?

அரச: ஏ பெண்ணே! நாம் இதோ கிளம் புகிறோம். முக்கியமான வேலை யிருக்கிறது.

சுஜா: (சற்று முகம் சுளித்து, யோசனை செய்து) ஓ்ஹோ...... அது சரி அரசே - இப் பொழுது இங்கு வந்து சென்றது யார்?

அரச: ஏன், தெரிந்து என்ன செய்வாய்?

சுஜா: தெரிந்து என்ன செய்வேன்? உங் கள் அன்பு குறைந்ததற்கும் சற்று முன் என் முகத்தில் இருந்த அழகு, குரலில் இருந்த இனிமை, ஸ்பரிசத்தில் இருந்த குளுமை, கை யிலே உள்ள மணம், பேச்சிலே இருந்த தேன் எல்லாம் வறளுவதற்குக் காரணம் என்ன என்று தெரிந்துகொள்ள முயலுவேன்.

அரச: சரிதான். அவர் என் குருநாதர்.

சுஜா: என்ன சொல்லிச் சென்றார்?

அரச: பெண்ணே! சொல்லி விடட்டுமா? மலர் உஷ்ணக் காற்றுப்பட்டு வாடாமல் இருக்குமா? தட்டிவிடப்பட்ட நீர் மண்ணில் சுவறாமல் இருக்குமா?

சுஜா: அல்ல பெண்மையைப் புத்தி சாலித்தனம் ஒன்றும் செய்ய இயலாது! வேதாந்தம், உள்ள ஈரத்தை உலர்த்தி என் றுமே வெற்றி கண்டதில்லை.

அரச: அப்படியானால் கேள்.........பெண் மைக்குத் தலை வணங்குவது ஆண்மையின் முதல் பலவீனம்......

சுஜா: யார் அந்த உலர்ந்த சடைக்காரன் சொன்னானே! பெண் ஆணின் சக்தி......

அரச: அவசரப்படாதே. இரண்டாவது வாக்கியம் பெண்மைக்கும் வெற்றிக்கும் என்றுமே விரோதம். ஒருவர் இருக்கும் இடத்தில் மற்றவர்......

சுஜா: மகா கெட்டிக்காரர் உங்கள் குரு நாதர்......அவர் கிடக்கிறார் நீங்கள் ஒன்று செய்யுங்கள்.

அரச: என்ன செய்யவேண்டும்?

சுஜா: இங்கே உட்காருங்கள், இதோ இந்த ஆசனத்தில். நான் உங்களுக்கு இந்த மாலையைச் சூட்டுகிறேன். அதன் மணத்தில் முதல் வாக்கியத்தைச் சிதறவிட்டுவிடுங்கள். பிறகு......

அரச: உன் அழகிலே மதியிழந்து இரண் டாவது வாக்யத்தையும் விழுங்கிவிடுங்கள்... ஏன் அதுதானே!

சுஜா: அல்ல! என் உதட்டிலே உதடு புதைந்து எழும் சங்கீதத்தில் அதை மறைத்துவிடுங்கள்.

அரச: பெண்ணே உன் துணிவை மெச்சி னேன். அவர் மூன்றாவதொன்றும் சொன்னார் சொல்லட்டுமா? உன் இதயம்......?

சுஜா: சொல்லுங்கள்; என் உள்ளம் இரும்பு. எந்த அடியையும் தாங்கும்.

அரச: உலகை வெற்றிகொள்ள விரும்புகி றவன் பெண் உலகத்தை வெறுக்கவேண்டும்.

சுஜா: (படபடப்புடன்) இவை எல்லாம் வறட்டு வேதாந்தம். பசை நீங்கிய உணர்வு. கானல் நீர். உண்மையைச் சொல்லட்டுமா?

பெண் ஆணின் சக்தி. உலகை வெற்றிகொள்ள விரும்பும் ஆண்மகன் பெண்ணையும் பக்கலிலே வைத்துக்கொண்டிருக்கவேண்டும். இதற்கெதிரி டையாகச் சொல்பவன் முட்டாள். உலகம் அறியாதவன்......கண்ணை மூடி உலகை மறைத்து ஏமாந்து பிறரையும் ஏமாற்றுகிற வன்.

அரச: பெண்ணே அடிபட்ட சோமக்கலம் போல் படபடக்காதே, என் குருநாதன்......!

சுஜா: போதுமே. குருநாதன் என்ன மனிதன்தானே?

அரச: மனிதனா? மனித உருவில் தேவன், அறிவின் மனித உரு

சுஜா: ஆகா! ஒருகாரியம் செய்கிறீர்களா?

அரச: என்ன?

சுஜா : நாளை வாருங்கள், குருதேவர் ஆசிரமத்திற்கு அருகேயுள்ள வனத்துக்கு; ஒரு விஷயம் காட்டுகிறேன். நீங்களே உங்களை நம்பமாட்டீர்கள்.

அரச; நீ எப்படி அங்கே போவாய்?

சுஜா : அதைப்பற்றி என்ன கவலை? அரச குமாரன் இதயத்தில் இடம்பெற்ற ஒருத்திக்கு இடம் கிடைக்காது என்ற இடமே கிடையாது... [மாலையை எடுத்துக்கொண்டு போய்விடுகிறாள்.]

அரச; சே! கோபித்துக் கொண்டுவிட்டாள். அதற்காக என்ன செய்வது? (போகிறான்.)

2

[தருநாதர் குடில்; அதைச்சுற்றி அடர்த்தியான வனம். அதைச்சுற்றி மதில். வாயிற்படியில் இரண்டு சிஷ்யர்கள் காவல்.

சிஷ்யன்—1: அடே, நமக்கு எவ்வளவு நாளானாலும்,

சி—2: எவ்வளவு நாளானாலும் இந்த மந்திரம் மட்டும் வராது அப்பா ......

சி—1: அதற்குச் சொல்லலலை அப்பா. உனக்கு எப்பொழுது பார்த்தாலும் மந்திரம் தான்!

சி—2: பின் என்னதான் சொல்லவந்தாய்?

சி—1: இந்த குரு சொல்றாரே–பொம்பளையைக் கண்டா கண்ணை மூடிக்கொள்ளு......

சி—2: அது மட்டும் வாரதன்கிறயா...... சரிதான்...... அது இருக்கட்டும், இந்த சுஜாதா யாரப்பா?

சி—1: அவளைத் தெரியாதா உனக்கு?

சி—2: உனக்கு மட்டும் தெரியுமோ......?

சி—1: ஊர் முழுவதும் அதே பேச்சுத் தானே.

சி—2: அதனாலே... எல்லாரும் கடவுளைப் பற்றிக்கூடத்தான் பேசிக்கொள்கிறார்கள். அவனைப் பார்க்கவோ காட்டவோ முடிகிறதா என்ன?

சி—1: அது போகட்டும்டா. மணி 5 ஆயிடுத்து. கோழி கூவிவிட்டது. நாம் போய் காலைக்கடனை முடித்துக் கொள்ளலாம். [போகக் கிளம்புகிறார்கள்.]

எதிரே சுஜாதா வருகிறாள்.

சி—1: கண்ணை மூடிக் கொண்டு... அடே கண்ணை மூடிக்கோடா, யாரோ பெண் வருகிறாளடா!

சி—2: ஆமாண்டா. (இருவரும் கண்ணை மூடிக்கொண்டே போகிறார்கள். சுஜாதா உள்ளே புகுகிறாள்.)

தொலைவிலிருந்து :- போடா அசடே. கண்ணை மூடிக் கொண்டு காரியம் கெட்டுப் போச்சுடா......

போனால் போகட்டும். நமக்கு என்னடா கஷ்டம். குருநாதர் கேட்டால் நீங்க சொன்னப்பலே செஞ்சோம்கிறது...... என்ன செய்வார்?

அட அசடே! உனக்கு மந்திரம் உருப்போட்டு உருப்போட்டு மூளை மழுங்கி விட்டதுடா. அவளைப் பார்க்கக் கூட இல்லையேடா. அவளே சுஜாதாவோ என்னவோ......

குரல் மங்கி விடுகிறது.

3

தருநாதர் எழுந்திருக்கும் நேரம். பூவைப் பறித்துக்கொண்டே சுஜாதா வருகிறாள்.

குரு: (அருகே வந்து) யார் என் கடவுள் பூஜைக்குரிய பூக்களைக் கொய்து என் தோட்டத்தை நாசமாக்குவது?

சுஜா: நான்தான் சுஜாதா (பயந்தவாறே)

குரு: சுஜாதாவா...! சற்றுநேரம் உற்றுப் பார்க்கிறார். பெண் தலை குனிகிறாள்.

சுஜா: ஆம், தோட்டத்தைப் பாழாக்கியிருந்தால் நான் மன்னிப்புக் கோருகிறேன்.

குரு: அட அசடே! நீ தோட்டத்தைப் பாழ் எங்கே ஆக்கினாய்? பார்! நீ வந்த பிறகல்லவா பூக்கள் நன்கு மலர்ந்திருக்கின்றன! அவைகள் மணம் பன்மடங்கு பெருகியிருக்கிறதே. காற்றே தனி மணங் கொண்டல்லவா வீசுகிறான்.

சுஜா: நீங்கள் என்னைப் பரிகாசம் செய்கிறீர்கள்...... (கடைக் கண்ணால் பார்க்கிறாள்.)

குரு: அட அசடே! உன்னைப் பரிகாசமா செய்கிறேன். அன்பின் மடியிலே அமர்ந்து இளமை இன்னிசை பாடினால் அதைப் பரிகாசம் செய்ய யாருக்காவது மனசு வருமா? இளமை காணும் கனவைப் பரிகாசம் செய்

வாரும் உண்டா? பூவின் காதுகளில் ஒலிக்கும் வசந்தகாலக் கற்பனை அல்லவா நீ? இன்பம் பெண்ணுருவாகி, மலருடை தாங்கி கண்கள்கொண்டு நடனத்தின் போக்கை நடையிலே ஏந்தி இன்னிசையின் கண்டத்தில் அல்லவவா என் எதிரே வந்திருக்கிறது. நானா பரிகாசம் செய்கிறேன்—உன்னையா?

சுஜா : நான் போகிறேன்.

குரு : அட தெள்ளமுதமே, போகாதே நீ. நீ போனால் என் நிலை என்ன ஆகும் தெரியுமா......? கேட்கிறாயா?

சுஜா : கேட்கிறேன்.

குரு : நானும் ஒரு சமயம் இளமையிலிருந்தேன். என் உள்ளமும் இளமையின் உலகமாயிருந்ததுண்டு· அந்தச் சமயத்தில் இலையுதிர்ந்த மரத்தின் வசந்தம்போல், காய்ந்த நதியின் புது வெள்ளம்போல், ஒரு பெண் வந்தாள். அவள் போனாள். என் இளமை தலை நரைத்தது. முகம் கோடுவிழுந்தது...

சுஜா : என்ன இளமைகூடக் கிழத்தனமடையுமா?

குரு; ஆகா... கிழத்தனம்கூட இளமையடையும்......பார் நான் அதே நிலையை யடைந்திருக்கிறேன். ஒன்று கேட்கிறேன் பெண்ணே! நீ என்னிடம் அன்பு கொள்வாயா?

சுஜா : [கண்களில் குறும்பு, உதட்டிலே ஏளனம்] உதட்டைப் பிதுக்குகிறாள்.

குரு; இரண்டாம் முறையும் நான் தோற்றேன். நீ எல்லோரையும்போல் முகத்தைப்பார்க்கிறாய்; உள்ளத்தைப் பார்க்காதவர்கள் உண்மையைப் பார்க்கிறதில்லை. (போகிறார்) சுஜாதா மறைக்கிறாள்.

குரு : அன்பு தராத நீ வழியையும் தடுக்க என்ன காரணம்?

சுஜா : என் அன்புக்கு விலை தர முடியுமா?

குரு : அசா...

சுஜா: [காதுக்குள் என்னவோ சொல்கிருள்]

குரு: [திடுக்கிட்டு] பெண்ணே! நீ அசடா, அல்லது எனக்கு அசட்டுப்பட்டம் கட்டப் பார்க்கிருயா?

சுஜா: இஷ்டமில்லை என்ருல் வேண்டாம். நான் போகிறேன். காதல் இளமைக்கு விலை கேட்டது; மலிவாயிருந்தும் அதை மறுத்தது விவேகம். காதல் ஏமாந்து நின்றது.

குரு: [திரும்பி] அதனுல் உனக்கென்ன கிடைக்கும்—சரி வா நீ.

சுஜா: (குனிந்த குருநாதன் வாயில் கயிற்றைக் கடிவாளம்போலக் கொடுத்து முதுகில் உட்கார்ந்து) ஹை, ஹை, போ போ என் குதிரை...ஜோரான குதிரையல்லவா. இளம் குதிரையல்லவா?

அவர் குதிரைபோல் நடக்கிருர். சுஜாதா கடிவாளத்தை இழுத்து இழுத்துப் பாடுகிருள். சற்றுநேரம் சென்று அவள் கைதட்ட அரசகுமாரன் எதிரே வருகிருன்.

அரச: (கோபத்துடன்) சுஜாதா! இறங்கு கீழே. இது என்ன அனியாயம்? குருநாதா! நீங்கள்....தாங்கள்....மன்னிக்கவேண்டும்.....

குரு. (நீட்டி நிமிர்ந்து) அரசகுமாரா! கோபிக்காதே. நான்தான் பிசகுசெய்தேன்.

அரச: நான் அவளுக்குத் தண்டனை......

குரு: வேண்டாம்......ஆனுல் ஒரு விஷயம்

அரச: சொல்லுங்கள்.

குரு: பெண்மை என் போன்ற கிழவனையே இவ்விதம் செய்யும் என்ருல் உன் போன்ற இளைஞர்கள் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதை நீயே உணர்ந்துகொள்.........

குருதேவர் போய்விடுகிருர். இருவரும் பார்த்துக்கொண்டே நிற்கின்றனர்.

அரச: "ஆகா! பெரியவர் பெரியவர்தான்."

சுஜா: தோற்றேன் நான். அரசே!

அரச: சுஜாதா, பயப்படாதே. நான் என்னவோ என் உள்ளத்தை உன்னிடம்தான் பறிகொடுத்துவிட்டேன். நான் திக்விஜயம் செய்து திரும்பிவருமட்டும் காத்திரு. நான் வந்து உன்னை அழைத்துக்கொள்கிறேன். போகிறேன்.

சுஜா: சை! எவ்வளவு திட்டமிட்டு, கஷ்டப்பட்டுத் தொடுத்த மாலை! ஒரு மூலையைத் தொட்டு உலுக்கிவிட்டாரே அவர்! பெரியவர் பெரியவர்தான்.........பெருமூச்சு விடுகிருள்.

(தழுவல்)

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

LIVER CURE Branch Office,
Parekh Mansion, Sandhurst Road (West),
BOMBAY 4.

(MADRAS), LTD.

Retail Branches **285, China Bazaar 71, Pondy Bazaar T. Nagar,**
Agencies: **Luz, Mylapore. No. 2, Neeli Veerasami Chetty Street, Triplicane,**
MADRAS.

தமிழ்நாடு ... சென்னை 600 008

சென்னை 600 008

விலங்குலகக் காதல்

நா. கி. நாகராசன்

வசந்த காலம் வந்துவிட்டது. "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற பழமொழி கலியாண 'ஸீஸன்' துவங்குவதைக் குறிப்பிடுகிறது. மானிடனது காதலைமட்டும் வசந்தத்தின் வருகை துவக்கிவைப்பதில்லை. சோலையிற்பாடும் குயில், வண்ண வனப்புடன் பறக்கும் பட்டுப்பூச்சி, காட்டிலே திரியும் விலங்கு போன்ற எல்லா உயிரினங்களுக்கும் வசந்த ருது காதற்பருவமாக விளங்குகிறது. மானிடனது காதல் எப்போதும் கவிகளின் கற்பனைத் திறனுக்கு வற்றாத ஊற்றுப்போல் இருந்துவந்துளது. வழி வழியாய் அவர்கள் இதுபற்றிப்பாடி வந்திருக்கிறார்கள். ஆனால் மற்ற உயிரினங்களின் வாழ்க்கை வழிகளைக் கவனித்துப் பார்த்தால் கற்பனைக்கு நல்விருந்தாகும் பல அதிசய உண்மைகளை இவர்கள் அறியலாம்.

உயிரினங்களின் நடத்தைக்கே அடிப்படையான உணர்ச்சிகள் இரண்டுதான். அவை தற்காப்பு உணர்ச்சியும், இனப்பெருக்க உணர்ச்சியுமாகும். மற்றெல்லா உணர்ச்சிகளும் இவ்விரண்டில் ஒன்றைச் சார்ந்தவைகளாகவே இருக்கும். இவற்றுள் இனப்பெருக்க உணர்ச்சியின் வழிவந்த காதல் முறைகள் ஒவ்வோர் உயிரினத்திற்கும் உண்டு. ஒரு பாலைச் சேர்ந்த ஓர் உயிர் அதற்கு எதிரான பாலின் உயிரின் இடத்தே காதல் உணர்வைத் தூண்டி அது இனப்பெருக்கத்திற்கு உதவ இணங்கச் செய்வதே விலங்கு உலகக் காதலின் பெரு நோக்கமாகும். மானிடனைப் பொறுத்தவரை ஆண்பெண்களின் சேர்கைக்கு முன்னர் நிகழ்வது தான் காதல் விளையாட்டு என்று கருதப்படுகிறது. மணமே காதலுக்கு வைக்கப்பெறும் முற்றுப்புள்ளி எனக்கூறும் குதர்க்கவாதிகளும்கூட உண்டு! ஆனால் மற்ற உயிரினங்களிலோ ஆணும் பெண்ணும் பரஸ்பரம் ஒன்றையொன்று தேர்ந்தெடுத்த பின்னரே காதல் துவங்குகிறது.

வெளியுலக நிகழ்ச்சிகளை அறிவிக்கும் நரம்பு அமைப்பு இல்லாத கீழ்த்தர உயிரினங்களில் காதல் இருக்க இடமில்லை. அவ்வினங்களில் பால்களின் சேர்க்கை தற்செயலாகவே நடைபெறுகிறது. தோட்டத்தில் திரியும் சிலவகைப் புழுக்களில்தான் நாம் முதலாவதாகக் காதல் உணர்ச்சிகளின் அறிகுறிகளைக் காண்கிறோம்.

ஆனால் பூச்சிகள் இவ்வாறல்ல. சில பட்டுப் பூச்சி வகைகளில் காதற் பருவத்தே ஆண் பூச்சியின் கால்களின் கடைசி இரண்டும் சிறு தூரிகைகள் (Brushes) போல் மாறுகின்றன. இவை அப்பூச்சியின் உடலிலிருக்கும் இரு பைகளுக்குள் சொருகப் பட்டிருக்கும். இப்பைகளில் வாசனைப் பொருளொன்று நிரம்பி யிருக்கும். ஆண் பூச்சியின் அருகே பெண்ணொன்று வந்தால் அது தனது பைகளிலிருந்து கால்களை வெளியே இழுத்து வாசனையைப் பெண்ணின்மேல் தெளித்து அதற்குக் காதல் உணர்ச்சியைத் தோற்றுவித்து அதனுடன் கூடும். மணவறையில் தெளிக்கப்படும் பன்னீரின் தோற்றம் இதுதானோ?

இன்னிசையைக் காதலில் ஈடுபடுத்தும் பல உயிரினங்களில் ஈ வகைகளும் ஒன்று. இவை தமது சிறகைச் சிறப்பான ஒரு வகையில் அடித்துக் காதற் கீதம் பாடித் தமது வாழ்க்கைத் துணைவியரிடம் காதல் உணர்ச்சியைத் தோற்றுவிக்கின்றன. இரவு நேரத்தில் அடுக்களையில் மறைந்திருந்து உரக்கக் கீச்சிட்டு அமைதியைக் கலைக்கும் பிள்ளைப்பூச்சிக்கு அரம் போன்ற ஓர் உறுப்பு உண்டு. இதைக் காலால் வருடி அவ்வோசையை உண்டாக்குகிறது. இதனால் பெண்பூச்சி அதன் இருப்பிடத்தை அறிந்து அதைத் தேடி வருகிறது. கர்ணகடூரமான இவ்வொலி பெண் பூச்சிக்குக் காதல் நோயை உண்டாக்குகிறது. இதனால் பெண் ஆணைத் தேடி வந்ததும் ஆண்பூச்சி தனது முதுகிலுள்ள ஒரு பையிலிருக்கும் இனிய நீர் ஒன்றை அதற்குப் பரிசாக அளித்து அதன் அன்பைப் பெறுகிறது.

காதல் நடனம் புரிவது மானிடனது தனி இயல்பு என்றிருக்க வேண்டாம். பல பூச்சி வகைகளும், பறவை இனங்களும் இம்முறையில் காதல் புரிவதுண்டு, சிலந்திகளும் அவற்றின் தாயாதிகளான தேள்களும் சேர்க்கைக்குமுன் மிக விரிவான நடனங்களைப் புரிகின்றன. இரு தேள்கள் கொடுக்குகளைச் சேர்த்துக்கொண்டு முன்னும் பின்னும் ஆடிவருவது மேனாட்டு நடனமொன்றை நினைவூட்டும். இவ்வினங்களில் ஆண்களுக்கு இதுவே ஊழி நடனமுமாகும். ஏனெனில் சேர்க்கை முடிந்த பின்னர் பெண்பூச்சி ஆணை விழுங்கி ஏப்பம் விட்டுவிடுவது இவற்றில் மிகப் பொதுவான நிகழ்ச்சி.

கல்லூரி மாணவர்கள் தம்மை நன்றாக அலங்கரித்துக்கொண்டு பெண்களின் கவனத்தைக் கவருவதில் ஈடுபடுகிறார்கள் என்று ஒரு தலைவர் குறை கூறினார். மற்ற உயிரினங்கள் சிலவற்றிலும் இவ்வழக்கம் உள்ளது என்பதை அவர் அறியார் போலும். நண்டு வகைகளுள் ஒன்றில், காதற் காலத்தில் ஆணின் கொடுக்குகளில் ஒன்று மிகப் பெரியதாய்ப் பருத்து அழகிய நிறங்களோடு விளங்கும். ஆண் நண்டின் அருகே ஒரு பெண் சென்றால் அது எழும்பி நின்றுகொண்டு தனது கொடுக்கைக் காட்டிப் பெண்ணின் கவனத்தைக் கவரும். உடலைவிடப் பெரிதான இக் கொடுக்கு நம் கண்களுக்கு விகாரமாகப் படலாம். ஆனால் அதுவே பெண் நண்டின் காதலைத் தூண்டுகிறதாம். சில பட்டுப்பூச்சிகளின் இறக்கைகள் காதற்பருவத்தில் வனப்புள்ள வண்ணங்களைக்கொண்டு திகழ்வதற்கும் காரணம் இதுவே.

பரிணாமப் பாதையில் பூச்சிகளுக்கு அடுத்தபடியாக உள்ள மீன்களிலும் தவளைகளிலும் காதல் விளையாட்டு உண்டு. இரவு நேரங்களில் வயற்புறத்தே நூற்றுக் கணக்கான தவளைகள் ஒருங்கேபாடும் 'கோரஸ்' (Chorus) நாம் அறிந்ததுதான். "நுணலும் தன் வாயால் கெடும்" என்பது நாம் வழங்கும் பழமொழி. ஆனால் தவளை தனது வாயினால் தன் காதல் இச்சையைப் பூர்த்தி செய்துகொள்கிறது. ஆண் தவளையின் இடைவிடாத 'கொடர் கொடர்' என்ற ஓசை பெண் தவளையை அதனிடத்தே கொண்டு சேர்க்கிறது. 'நியூட்' (Newt) என்ற வேறொருவகைத் தவளையினத்தில் பருவகாலத்தில் ஆணின் உடல் பலவகை நிறங்களைப் பெற்றுவிளங்கும். இது பெண்ணைச் சுற்றிவந்து தன் உடல் வனப்பைக் காட்டி நடனமாடுகிறது. இவ்வாடலைக்கண்டு மகிழும் பெண் ஆணை அடைகிறது.

மீன் இனங்களில் ஒன்றான கத்திவாலிகளின் காதல் விளையாட்டு மிக ரம்மியமானது. இவற்றில், பெண் மீன்கள் குழுமியுள்ள இடத்தைச் சுற்றி ஆண்கள் வட்டமிட்டு வந்து ஆரவாரம் செய்கின்றன. அவ்வாறு சுற்றி வருகையில் இவை தமது நீண்ட வாலினால் அவ்வப்போது பெண்களை லேசாக ஒரு தட்டுத் தட்டி அவற்றிற்குக் காதல் உணர்வை ஊட்டுகின்றன. கொடிய சுறா வகைகளில் ஒன்றில் காதலியின் அன்பைப் பெற

ஆண்களிடையே பெரும் போர் மூளும். போரில் வென்ற ஆணையே பெண் மீன் கணவனாக வரிக்கும்.

ஆனால் விலங்குலகக் காதலின் எல்லா அம்சங்களையும் நாம் பறவை இனங்களில் தான் காண முடியும். பறவைகளில் காதல் இன்றிக் கூடும் இனங்களே இல்லை எனலாம். சேவற் கோழியின் காதலை அனைவரும் பார்த்திருக்கலாம். இது தனது கொண்டையை அழகுற நிமிர்த்தி இறக்கைகளை அடித்துக்கொண்டு ஒரே ஆரவாரத்துடன் பெட்டையைக் கடந்து பாய்ந்து செல்லும் காட்சியால் கவரப் படாதவர் யார்? பெட்டையின் அருகே வரும்போது மட்டும் அது தன் தலையைத் தாழ்த்தி வாலை உயர்ததிக் கம்பீரமாகச் செல்வது இன்னொரு மேனாட்டு நடனத்தைப் போலவே இருக்கும். இத்தகைய காதல் நடனம் பல பறவைகளில் உண்டு. 'மாக்கிடிஸ்' (Machetes) என்றதொரு பறவை இனம் சிறு மணற் குன்றுகளில் வாழ்கிறது. காதற் பருவத்தின்போது ஆண் பறவைகள் அனைத்தும் ஒருங்கே கூடிப் பெருத்த ஓசை விளைத்துக் கூத்தும் பாட்டுமாகக் காலங்கழிக்கும். இந்த அரவத்தாற் கவரப்பட்ட பெண் பறவை ஒன்று அங்கு வந்தால் ஆண்கள் அனைத்தும் தமது ஆட்டத்தை நிறுத்தி அசைவற்று இருந்த இடத்தில் சிறகை விரித்துக்கொண்டு படுத்துவிடும். பெண் பறவை அங்கு வந்து ஒவ்வொரு ஆணாகக் கூர்ந்து பார்த்துக்கொண்டே சென்று தனக்குப் பிடித்தமான ஜோடியைத் தேர்ந்தெடுக்கும். இக் காதல் நாடகம் தமயந்தியின் சுயம்வரக் காட்சியைக்கூடத் தூக்கி அடிப்பதுபோல் இல்லையா? சுயம்வரத்தில் வெற்றி பெறவே ஆண்கள் காதற்பருவத்தில் விசேஷ வனப்பைப் பெறுகின்றன.



வசந்த காலக் குயிலின் இசையை வியந்து காளிதாசன் முதல் தற்காலப் பத்திரிகைக் கவிஞர் வரை அனைவரும் பாடித் தீர்த்துவிட்டனர். வசந்தத்தில் பறவைகளின் இசை முழக்கம் உச்ச நிலையை அடைகிறது. குயிலின் இசை காதற் கீதமும் அபாய அறிவிப்பும் சேர்ந்ததாகும். ஆண் குயில் முதலில் தகுந்த மரத்தைத் தேடி அங்கே கூண்டை அமைத்துக் கொள்கிறது. அதன் பின்னர் அது தன் இசையைத் தொடங்கும்.

அக் கூண்டு தனது ராஜ்ஜியம் என்றும் மற்ற ஆண்கள் அங்குவர உரிமையில்லை என்றும் அறிவிக்கும் எச்சரிக்கை இப் பாட்டில் உள்ளது. அதே சமயத்தில் தான் ஜோடியை நாடித் தவிப்பதையும், தனக்கு இருப்பிடம் ஒன்று உண்டு என்பதையும் அது பெண் பறவைகளுக்கு அறிவிக்கிறது. இவ் விசையால் கவரப்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட பெண்கள் அங்கு வந்து அடைந்தால் அவற்றினிடையே 'சக்களத்திப் போராட்டம்' மூளுகிறது. இதில் வெற்றி கண்ட வனிதையே ஆணை அடைய முடியும். ஆண்கள் பெண்ணுக்காகச் சண்டையிடுவதே நாம் மனித வரலாற்றில் பன்முறை காணும் நிகழ்ச்சி. ஆனால் இவ்வகையில் "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோமிந்த நாட்டிலே" எனப்பறவைகள் பாடுகின்றன!

மணங் கமழும் பூவையும், கருத்தைக் கவரும், ஆடையையும், அழகு நிறைந்த



அணிகளையும் கையுறையாகக்கொடுத்துக் காதலைப் பெறும் முயற்சி மனிதனைத் தவிர மற்ற உயிர்களிலும்உண்டு. துருவ நாடுகளில் வாழும் பெங்குவின் (Penguin) என்ற பறவை கூண்டு கட்டத் தேவையான பொருள்களையும், அவை கிடைக்காவிடின்சிறுகூழாங் கற்கள், சிப்பிகள் போன்ற வேறு பொருள்களையும் பெண்ணுக்குப் பரிசாக அளிக்கிறது. பாடும் இனத்தைச் சேர்ந்தஆஸ்திரேலியப் பறவையொன்று நேர்த்தியான பந்தரைப் போன்ற கூண்டை அமைக்கிறது. கூண்டு கட்டி முடிந்தவுடன் ஆண்பறவை அதில் பளபளப்பான மணிகள், கற்கள், கண்ணுடித் துண்டுகள் முதலியவற்றைச் சேகரித்து வைக்கும். பிறகு இது பெண்ணை அழைத்து வந்து அதற்குக் கூண்டையும் அதிலுள்ள பொருள்களையும் காட்டி அதை மயக்கி அதை ஜோடியாக அடைகிறது. (எனக்கு மணமான பின் சென்னையில் நான் வீடு தேடப் பட்ட கஷ்டத்தை நினைத்துப் பார்த்தால் இப்பறவைகள் மானிடரைவிட எவ்வளவோ புத்திசாலிகள் என நினைக்க வேண்டியிருக்கிறது!) சில ஈ வகைகளிலும் கையுறை அளிக்கும் வழக்கம் உண்டு. இவற்றிற்கு உணவாகும் சிறு புழுக்களை இவை அரும்பாடு பட்டுத் தேடிக்கொணர்ந்து பெண்ணுக்கு அளிக்கின்றன. புழுக்கள் கிடைக்காவிட்டால் அழகிய பூவிதழ்களையும், இலைகளையும் இவை பரிசளிப்பதுண்டு. சில சமயங்களில் இவை தம் உமிழ்நீரால் பெரிய குமிழியை உண்டாக்கி அதற்குள் பரிசுப் பொருளை வைத்து அதைக் காதலிக்குக் கொடுக்கின்றன. அழகிய பேழையில் அவைகளை வைத்துக் காதற் பரிசளிக்கும் வழக்கத்தை நாம் ஈக்களிடமிருந்துதான் கற்ருேம் போலும்.

குட்டி போட்டுப் பால் கொடுக்கும் விலங்குகளின் காதல் பொதுவாய் இவ்வளவு விரிவாய் இராது, பல ஆண்கள் ஒரு பெண்ணுக்காகச் சண்டையிடுவது தான் காட்டு விலங்குகளின் பொதுவான காதல் முறை. கடற் சிங்கங்கள், நீர்யானைகள் முதலிய இனங்களில் ஓர் ஆண் பல பெண்களை அடிமையாக்கிப் பெரிய அந்தப்புரத்தையே அமைத்துவிடுகிறது. தனது மனைவியர் தன்னை விட்டு வெளியேருது அது காவல் புரிந்து நிற்கும். அப்படியும் சில சமயங்களில் பெண்கள் இதற்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு வேற்று விலங்குகளிடம் கூடுவது உண்டாம். விபசாரம் என்பது மனித குலத்தின் தனியுரிமை யல்ல!

விலங்குகளின் காதல் வழக்கங்கள் நமது வாழ்க்கைச் சம்பவங்கள் பல வற்றை நினைவூட்டுகின்றன. இது தற்செயலாக நிகழ்வதல்ல. உயிரினங்களின் தொடர்பையும், பொதுவான ஆதியையும் இவை காட்டி நின்று பரிணுமக் கொள்கைக்கு நல்ல சான்ருக அமைந்துள்ளன. ''காதல் இன்றேல் சாதல்'' என்ற கவியின் வாக்கு எல்லா உயிரினங்களுக்கும் பொருந்தும். காதலைக் குறைகூறி ஏளனம் செய்வோர் இதை நினைவுறுத்திக்கொள்ளட்டும். ●



மந்திரக்கோலின் முனையாலே
மத யானையை மயக்கினான்
மனம்போலே . . . .
மந்திர சக்திபோல் விரலை
அசைத்த மாத்திரத்தில்
ஜலப்பிரவாகத்தை
அளிக்கும்
மயர்ஸ்
ஆடோமாடிக்
வாட்டர்
ஸிஸ்டம்கள்
MYERS WATER SYSTEM
MYERS
வாட்டர் சப்ளை ஸ்பெஷலிஸ்ட்ஸ் லிமிடெட்
செகண்டு லைன் பீச் . . . . சென்னை 1

திலகர் கதை

எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

"சுயராஜ்யம் எனது பிறப்புரிமை! மலை புரண்டுவந்தாலும் சரி, மகாதேவன் குறுக்கிட்டாலும்சரி, மயங்கமாட்டேன்! அதனை அடைந்தே தீருவேன்" என்று கர்ஜித்தவர் பால கங்காதர திலகர். அவரது பெயரை முன் வைத்தே முதன் முதலாகச் சுயராஜ்ய நிதி திரட்டினார் மகாத்மா காந்தி.

"அமிருதபஜார் பத்திரிகை"யின் தற்கால அதிபர் துஷார்காந்திகோஷ் என்பர். இவருக்குமுன் அதிபரும் ஆசிரியருமாக இருந்தவர் மோத்திலால் கோஷ் எனப்படுவார். பெயருக்கு ஏற்ப, மோத்திலாலின் எழுத்துக்கள் முத்து முத்தாக இருக்கும். நையாண்டி பண்ணுவதில் மோத்திலால் மிக வல்லவர்.

அதிகாரவர்க்கத்தை அம்மோத்திலால் நையாண்டி செய்தல் ஓர் அலாதி விசேஷம். மானமுள்ள அதிகாரி அதனை வாசித்தால், திக்குமுக்காடுவான்; குத்திக்கொண்டு சாகலாமா என்றும் கருதுவான். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோலிருக்கும் அவரது குத்தலான பேச்சு.

பால கங்காதர திலகரும் மோத்திலால்கோஷும் மனமொத்த நண்பர். ராஜ்யத்தில் இருவரும் தீவிரவாதிகள். ஆங்கிலேயரிடம் கையேந்திநிற்கும் மிதவாதிகளைக் கண்டால், அவர்களுக்குப் பிடிக்காது. அடிமடியில் கையைப்போடுவதுபோல் ஆண்மையுடன் ராஜீயப் போர்புரிய வேண்டும் என்பதே அவர்களின் கருத்து.

சூரத் நகரிலே 1907-ஆம் வருஷம் காங்கிரஸ் மகாசபை முறிந்த பின்பு, நெடுநாள் வரையில் அவ்விருவரும் காங்கிரசுக்குப் போகவில்லை. ஆனாலும், காங்கிரசுக்குப் புத்துயிர் ஊட்டவும், தேச மக்களைத் தட்டி யெழுப்பவும், வெளியிலிருந்து கொண்டே இருவரும் பெருமுயற்சி செய்து வந்தனர்.

இருவரும் அடிக்கடி சந்திப்பது வழக்கம். உள்ளமும் உயிருங் கலந்த காதலரின் கூட்டம் போன்றது அவர்களின் சந்திப்பு! தேச நலத்தைக் குறித்தே இருவரும் நெடு நேரம் பேசியிருப்பர்: மிதவாதிகளின் மனப்பான்மை கண்டு உள்ளம் உடைவர்; உயரிய வகை துறைகளை ஆராய்வர்.

ஒரு சமயம் இருவரும் கல்கத்தாவிலே அமிருதபஜார் பத்திரிகையின் காரியாலயத்தில் கூடிப் பேசியிருந்தனர். அப்போது மிதவாதிகளைப் பற்றிய பேச்சு எழுந்தது. மிதவாதிகளை நாய்கள் என்றார் திலகர். அது கேட்டதும் மோத்திலால் திடுக்கிட்டார். எப்போதும் அளந்தே பேசக் கூடியவர் இப்படிப் பேசுகிறாரே, என்பதே கோஷின் திகைப்புக்குக் காரணம்.

"அன்ப! அவமரியாதையாகப் பேசிவிட்டேன் என்று ஆச்சரியம் அடைகிறீர்கள் போலும். நிதானம் தவறிப் பேசுதல் எனக்கு வழக்கமன்று. சிலேடையாகவே பேசினேன் வேறில்லை. நாய்க்குணம் அவர்களிடம் நிரம்பியுளது என்பதைக் குறித்துப் பெரிதும் வருந்துகிறேன்" என்றார் திலகர்.

கற்றாரைக் கற்றாரே காமுறுவர் அல்லவா? அங்ஙனமே திலகரின் சொல்லமுதம் பருகவே மோத்திலால் ஆசை கொண்டார். அதுபற்றியே ஆச்சரியம் அடைந்தவர் போல் காட்டிக் கொண்டார்; நாய்க்குணத்தை விளங்கச் சொல்ல வேண்டுமே என்றும் வேண்டிக் கொண்டார். உடனே திலகரும் சொல்லத் தொடங்கினார்.

"நாய்க்கு ஒரொரு சமயம் நல்லறிவு பிறக்கும். பூர்வ ஜன்ம வாசனையும் வரும். இனி, எச்சில் இலையைக் கண்டு இச்சைப் படலாகாது; பிச்சுருணையைக் கண்டு பேதுறக் கூடாது என்று அது சங்கல்பம் கொள்ளும். ஆயினும் என்ன? எச்சில் இலையைக் கண்டதும், வாலைக் குழைத்துக் கொண்டு, தாவியோடும் நாவில் ஜலம் சொட்ட.

"நமது மிதவாத நண்பர்களும், இனி அதிகார வர்க்கத்தினிடம் இச்சகம் பேசி நிற்றலாகாது; தலை நிமிர்ந்து நின்று, ராஜீய உரிமைகளுக்காகப் போராட

வேண்டும், என்று எண்ணங் கொள்வர். ஹைகோர்ட் ஜட்ஜி பதவியோ, நிர்வாக சபைப் பதவியோ வீசப்படுவதைக் கண்டதும், எனக்கு உனக்கு என்று கூறி மண்டியிட்டுக் கிடப்பர்.

"எச்சில் இலையைக் கண்டதும், நாய்கள் ஒன்றை ஒன்று சீறும், ஒன்றின்மீ தொன்று தாவிக்கடிக்கும், தான்மட்டுமே எச்சிலைத் தின்ன நச்சி நிற்கும். இன அபிமானம் என்பதை மறந்துவிடும். பட்டம் பதவிகளுக்கு அண்ணுந்து நின்று காலம் விளக்கும் மிதவாதிகளிடம் நாய்க்குணம் மிகுதி என்பது ஏற்காதோ? ரூபம் சுட்டால் மாறும், குணமோ செத்தாலும் மாறுது என்பர். நீதிக்கதையொன்று பாருங்கள்.

"மனிதருக்கென்ன மமதை! ஒருவனை இழித்துரைக்கையில், 'நாயே' என்று பேசுகின்றனர். இது நமது இனத்தையே அவமதிப்பதாகும். ஆதலின் அந்த இழிவுரையை மாற்றிக்கொள்ள வேண்டும், என்று நாயொன்று நினைத்தது; பெரிதும் வருத்தம் கொண்டது. முடிவில் நான்முகனிடஞ் சென்று விண்ணப்பம் செய்து கொண்டது. அதன் விவரம் இது;

"உயிர்கள் அனைத்தையும் படைக்கும் உத்தமனே! சமூகத்தில் கோரிக்கையொன்று ஈடேறவேண்டும். இதற்குத் தங்களது கடைக்கண் நோக்கு மிகவும் அவசியம். யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்; எறிந்தவேல் உடம்பில் தைத்திருக்க, வாலைக் குழைத்து நிற்கும் நாய். எனவே நாயனையாரின் நட்பை நாடிக்கொளல்வேண்டும் என்பர் பெரியோர்.

"நன்றியறிவிலே எங்கள் இனத்தாருக்கு ஈடுசோடு உண்டோ? எங்களை அதுபற்றிப் புகழாதார் யார்? தேவரீருக்குத் தெரியாதது எது? ஒரு சிறிதாயினும் உணவிட்டோரை நாங்கள் உயிருள்ளளவும் மறவோம். உப்பிட்டவரை உயிருள்ள அளவும் நினைக்க வேண்டும் என்னும் பழமொழிக்கு எங்கள் இனத்தாரே உதாரண புருஷர்.

"எங்களது இயற்கைக் குண விசேஷம் கூறப்போமோ? கிடைத்த உணவைக் களிப்புடன் புசித்தல், கண்டதுகொண்டு சந்தோஷப் படுதல், சதா சுறுசுறுப்பாயிருத்தல், தூக்கமின்றித் துருதுருப்புக் கொள்ளுதல், எஜமானன் சொத்தைப் பாதுகாத்தல், சூரத் தன்மை கொண்டு திரிதல் ஆகிய ஆறும் எங்களது பிறவி விசேஷங்கள் அல்லவா?

"பலர்க்கும் உபகாரமா யிருக்கவே, நாங்கள் அம்மானிடரின் வீட்டு வாசலில் வாழ்ந்து வருகின்றோம்; சிற்சிலர் எங்களை வளர்த்து வருகின்றனர். அதற்கு வந்தனம் செலுத்துகின்றோம். மேலும் நல் வேட்டையாடி நரர்க்குநலம் பல பயக்கின்றோம். நாங்களாகவே சூல் கொள்கின்றோம். எங்களுக்கு மருத்துவம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

"ஆயினும் நாங்களோ தெண்டித் தெண்டித் தின்ன வேண்டும். வளர்த்து வரும் பூனையையோ மாந்தர் தம் பக்கத்தில் வைத்துக்கொண்டு. சோறுபோட்டுக் கொஞ்சுகின்றனர். எஜமானன் புசிக்கும்போது, நாங்கள் உள்ளே சென்றால், 'சீ நாயே ஓடு' என்று வெருட்டுகின்றனர். என்ன வேற்றுமை இது! ஆண்டவனுக்கு அடுக்குமா?

"பூனையின் துரோக சிந்தனை பிரசித்தமாயிற்றே. தான் கண்ணை மூடிக்கொண்டால், தன்னை வளர்க்கும் எஜமானனுக்கும் கண் தெரியாதென அது எண்ணிக் கொள்ளும். எஜமானனுக்கு வைத்திருக்கும் பாலை எல்லாம் அந்த நினைப்பிலேயே அது குடித்துவிடும். கண்டாலும் சரி, அதன் குரலைக் கேட்டாலும்சரி, கெட்ட சகுனம் என்பார்கள்.

"அத்தகைய பூனையைத் தடவிக் கொடுத்து வளர்க்கின்றனர். அதன் வாலை ஒருமுறை தொட்டால், கையில் நரம்புத் தளர்ச்சி உண்டாகும் என்பது மெய்யன்றோ? திருடரும் முரடரும் வீட்டினுள்ளே புகாவண்ணம் நாங்கள் காவல் புரிகின்றோம். அவ்விதம் ஏதேனும் பூனையானது மானிடருக்கு உதவி புரிகின்றதா? இல்லையே.

"எங்கள் கதியை இன்னும் பாருங்கள். சிறிய குழந்தைகளும் எங்களைக் கண்டால், கம்பை எடுத்துச் சாடுகின்றனர்; இன்றேல் கல்லையெடுத்து வீசுகின்றனர். உள்ளன்புடன் எங்களுக்கு உணவுப் பொருள் அளிக்கின்றனரா? தெருவில் எறியும் எச்சிலிலையில் மிச்சமாயிருப்பதை நாங்கள் இச்சித்துத்தின்ன வேண்டியிருக்கிறது. இது தர்மம் ஆகுமா? நீதி தான் ஆகுமா?

"இல்வாழ்க்கைக்கு உரிய ஒழுக்கநூல் எழுதிய ஆசுவலாயன முனிவர் யாது கூறி யிருக்கிருர்? வீட்டுக்கு வெளியே நிற்கக் கூடிய விருந்தாளிகளாகிய சுவானம், பதிதன், காகம் ஆகிய இவர்களுக்குப் பலி யிட வேண்டும் என்று கூறியிருக்க வில்லையா? அம்முனிவர் ரிக்வேத ஆசாரியர் அல்லவா? முதலில் எங்களைத்தானே சொல்லி யிருக்கிருர்?

"அவ்வாறு செய்தால் சாஸ்திரப்படி நடந்தனர் என்று மானிடருக்குப் பெயர் கிட்டுமே. அந்த உணவுகளில் திங்கேது மிருப்பின், நாங்கள் முதலில் உண்டு தெரிவிப்போம். மிகவும் புராதன காலத்தில் கூட, உணவு விஷயத்தில் எங்களுக்குத்தானே முதல் ஸ்தானம்! அதனை அநாகரிக காலம் என்பர். நவநாகரிக காலத்திலோ, மனிதர் உண்ட மிச்சமான எச்சில் இலையே எங்களுக்குப் பிராப்தி.

"உணவு விஷயத்தில்தான் இப்படி என்ருல், எங்களுக்கு உரிமை ஏதேனும் உண்டா? உரிமையும் வேண்டாம் எச்சில் இலையும் வேண்டாம். உதாசீனமாவது இல்லாமல் இருக்கக் கூடாதா? சீ நாயே ஓடு என்று எங்களை இகழ வேண்டுமா? ஓட்டி வெருட்ட வேண்டுமா? உயிர்த் தொகுதிகளைப் படைக்கும் ஒப்பற்ற கடவுளே! இந்த இழிவை மாத்திரம் மாற்றியமையுங்கள்"

அவ்விதமெல்லாம் நாய் கூறிவந்ததைப் பிரம்மதேவன் காதுகொடுத்துக் கேட்டான்; கருணையும் கொண்டான்; கோரியபடி வரமளிக்க உடன்பட்டான்; அதற்குமுன், நிபந்தனை யொன்று விதித்தான். அது யாதெனில்:—

"சுவானமே! நீ கோரும் வரம் உன்னை மட்டும் சார்ந்ததன்று; உன் குலத்தார் அனைவரையுமே சார்ந்ததாம். ஆதலின் அவர்களின் கருத்தையும் நான் அறிதல் வேண்டும். எனவே முடியுமானல், உன் குலத்தார் எல்லோரையும் கூட்டிவா. இயலாதாயின், ஒவ்வொரு பகுதிக்கும் ஒரொருவரையாவது இட்டுவா! உங்கள் இனத்தின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வேன்."

அவ்வாறு நாமகள் கொழுநன் கூறியதும், நாயானது அதுகேட்டுக் களிப்பு மிகுந்தது; நான்முகன் நல்லருள்பாலித்துவிட்டான் என்று பரவசம் கொண்டது; உடனே பூமியை நோக்கிவந்து ஒரு நகரைக் குறுகியது.

அந்நகரின் நடுவே ஒரு கலியாணவீடு. நாய்கள் பலவந்து அவ் வீட்டுவாசலில் குவிந்துகிடந்தன. இனத்தார் ஒன்றுகூடி யிருப்பதைக் கண்டதும், அது உள்ளம் உவந்து, "என் இனத்தாரே! தெய்வலோகம் போய்வந்தேன், இனி நம் மானம் காற்றில் பறக்காது, நல்ல வழி பிறக்கும். நான் சொல்வதைக் கேளுங்கள்" என்று கூறி வருகையில், ஒரு கூடை நிரம்ப எச்சில் இலையைக் கொணர்ந்து பொத்தென்று கொட்டினுன் வேலைக்காரன். அவ்வளவுதான் தாமதம். நாய்கள் ஒன்றின்மேலொன்று விழுந்து கடித்து, வள், வள் என்று குலைத்து, எச்சில் இலையைத் தின்னத் தொடங்கின.

நமது இனத்தாரின் குணத்தையறிந்தே பிரம்ம தேவன் அவ்வாறு சொன்னுன் போலும் என்று அந்நாய் வருந்தியது; இரக்கமும் மிகுந்தது. இதற்கிடையில் ஏனைய நாய்கள் நாக்கை நீட்டி நீட்டி எச்சில் இலையை நக்கிக் கொண்டிருந்தன. அக்காட்சியைக் கண்டதும், அந் நாய்க்கும் பசி எடுத்தது.

பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும் அல்லவா? அந் நாயும் தன் இனத்துடன் சேர்ந்து, எச்சில் இலையைப் பங்குபோட்டுக் கொள்ள முயலலாயிற்று.

என்று பாலகங்காதர திலகர் கதையை முடித்தார். கருத்துடன் கேட்டுவந்த மோத்திலால் வயிறு வெடிக்க நகைத்து, பலே பலே என்ருர். ராஜீய வாதிகளை அந் நாய்க் குணம் எப்போது விட்டகலுமோ அப்போதுதான், பாரத பூமிக்கு உண்மையில் கதிமோட்சம் உண்டு என்ருர் அவ் வுத்தம புருஷர். அதிலென்ன தடை என்ருர் கோஷும்.

வெள்ளைக்காரன் போய்விட்டான்; சுயவரசு எய்திவிட்டோம், குடியரசும் கொண்டுவிட்டோம். இப்போதும் ராஜீயவாதிகள் இருக்கின்றனர். திலகர் கூறிய கதையை அவர்களும் சிந்தித்துப் பார்க்கலாம்.

என்றும் நின்று பயனளிக்கும் கதை இது! என்பது மோதிலால் கோஷின் வாக்கு!

தொடர் கதை

லக்ஷியக் கனவு

கே. சுந்தரம்மாள்

அத்தியாயம் 10

"ஐயோ! லீலா! லீலா!" என்று ஏக காலத்தில் காதம்பரியும் சங்கரும் கத்தினார்கள். காதம்பரி ஒன்றுமே தோன்றாமல் மரம்போல் அசைவற்று நின்றுவிட்டாள். சட்டெனக் குழந்தைபோலத் தூக்கிக் கட்டிலில் படுக்கவைத்தான் சங்கர்.

"குண்டு எவ்விடம் பாய்ந்திருக்கிறது என்றுபார் காதம்பரி" என்று தலையை இரு கைகளாலும் பிடித்தவண்ணம் நாற்காலியில் உட்கார்ந்தான்.

பத்து நிமிஷம் நன்றாகப் பார்த்துவிட்டு, "அம்மாடி, குண்டு அவள்மீது படவில்லை" என்றாள் லீலாவின் நெற்றியைத் தடவிய வண்ணம்.

"என்ன? நிஜமாகவா? நன்றாகப் பார்த்தாயா? பின் ஏன் மயக்கமாக இருக்கிறாள்?" என்று சொல்லிக்கொண்டே காதம்பரியின் அருகில் வந்துநின்றான்.

"வெடித்த அதிர்ச்சியில் மூர்ச்சையாக இருக்கிறாள். குண்டு கட்டில் கால்மீதுதான் பட்டிருக்கவேண்டும். அந்தக் கூஜாவிலிருக்கும் ஜலத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு, பிளாஸ்கில் பால் இருக்கிறதா பாருங்கள்" என்றவள் கூஜாவைக் கையில் வாங்கி ஜலத்தை எடுத்து, லீலாவின் முகத்தில் இரண்டுமூன்று கை வாரி அடித்தாள். திடுக்கிட்டவள்போல் சட்டெனக் கண்ணை விழித்தாள் லீலா. பிளாஸ்கிலுள்ள பாலைப் புகட்டினாள்.

"அக்கா" என்று எழுந்து உட்கார்ந்தாள்.

"லீலா! எங்கள் வயிற்றில் பால் வார்த்தனையே; குண்டு ஓரிடமும் படவில்லையே?" என்றாள் அவள்பக்கத்தில் உட்கார்ந்து அவளை அணைத்தவண்ணம் காதம்பரி.

"குண்டு பட்டிருந்தால் கண்ணை விழிக்க முடியுமா?"

"பின் எப்படி மூர்ச்சையானாய்?"

"அது வெடித்ததும் என் மார்பின்மீது தான் பாயப்போகிறது என்ற உணர்ச்சி தோன்றவே இந்த இடமெல்லாம் ஒரே சுற்றாகச் சுற்றினது. என்னையறியாமலேயே அம்மாவென்று அலறிவிட்டேன். பிறகு ஒன்றுமே தெரியவில்லை, ஜலம் முகத்தில் பட்டதும் உணர்ச்சி ஏற்பட்டது. ஓரிடத்திலும் வலியுமில்லை, ரத்தமுமில்லை என்று அறிந்தேன். பிறகுதான் உங்களைக் கூப்பிட்டேன்."

"போகட்டும். பகவானுக்கு நன்றி செலுத்துவோம். நீங்கள் ஏன் கால்கடுக்க நிற்க வேண்டும்? உட்கார்ந்துகொள்ளுங்கள்" என்றாள் சங்கரைநோக்கி, காதம்பரி.

"வேண்டாம் நான் போகிறேன்" என்று திரும்பினான்.

"அக்கா! எனக்கு ஒன்றுமில்லை. விடிந்த பிறகு நாம் பேசிக்கொள்ளுவோம். உங்கள் கணவருடன் செல்லுங்கள். அவர் மனம் சாந்தியடையும் வழியைத் தேடுங்கள்" என்றாள் லீலா.

"அவர் மனம் சாந்தியடையும் வழியை இவ்விடத்திலேயே வகுக்கவேண்டும். இப்பொழுதே நாம் பேசவேண்டும். இனி விஷயங்கள் ஒழுங்குபெறும்வரை உன்னைத் தனியேவிட்டுப் போகமாட்டேன். உட்காருங்கள் சங்கர்" என்றாள் காதம்பரி. சங்கர் மறுக்க மனமின்றி உட்கார்ந்துகொண்டான்.

"லீலா! சங்கர்! விதியின் விசித்திர முகட்டில் மனிதர்கள் வர்ணஜாலங்களாக மின்னுகிறார்கள். பழுத்த இலையைக் கண்டு பழுக்கப் போகும் இலை சிரிப்பது போன்றது உலகம். லக்ஷியம் என்ற பொருளானது சில பேர்களுக்கு, சத்வகுண ஆஹாரங்களை உட்கொண்டு தேகதிட மனோதிடத்துடன், பகுத்

தறிவுடன் விஷயங்களைச் செய்ய உபயோகப் படுகிறது. சில பேர்களுக்குப் போதை வஸ் துக்களுடன் கூடிய ஆஹாரங்களை உட் கொண்டு அந்த மயக்கத்தில் ஆராயும் சக்தி யற்று நினைத்ததைச் செய்து முடிக்க உபயோ கப்படுகிறது. நன்மையையோ தீமையையோ அனுபவிக்கத் தவற முடியாமல் போய்விடுகி றது. தற்சமயம் நம் நிலைமையும்.........'' என்று முடிக்கு முன்,

"ஏன் தயங்குகிறாய்? முன்னது லீலாவை யும் உன்னையும், பின்னது என்னையும் குறிப் பிடுகிறது. ஆம், உண்மை யென்பதை நான் மறுக்கப் போவதில்லை.''

"அவசரப்பட வேண்டாம் சங்கர்! உங் களைத் தூஷிக்க வேண்டுமென்ற எண்ணத்து டன் பேசவில்லை. நடக்கவேண்டிய விஷயங் களுக்கு முன் உதாரணமாக எடுத்துச் சொல் லுகிறேன். மன்னியுங்கள். நான் இந்தத் தடவை உங்கள் ஊருக்குச் செல்லும் உத்தே சத்துடன் இவ்விடம் விட்டுப் புறப்பட வில்லை. ஆனால் விதி அதனுடைய தூண்டு தலினால் போகும்படி நேர்ந்தது. போன இடத்தில் உங்கள் தாயாரைக் காணச் சென் றேன், லீலாவின் போஷகர் என்ற உரிமை யால். ஆனால் பத்திரிகையில் வெளியான நமது கல்யாணப் போட்டோவைப் பார்த்து விஷயம் தெரிந்துகொண்ட உங்கள் பெற் றோர் என்னைத் தூஷித்ததில் ஆச்சரியமில்லை யல்லவா? நானே ஒருவிதத் தீர்மானம் செய்து கொண்டுதான் இவ்விடம் இவ்வளவு சீக்கிர மாக வந்தேன். லீலா! உனது கள்ளமில்லா அன்பை நினைந்து நினைந்து பரவசமடைந்து வந்தேன். லக்ஷியம் என்ற சொல்லுக்கு உன் வாழ்க்கையை எவ்விதத் தியாகம் செய்து பயன் படுத்தியிருக்கிறாய்? என் நன்மை ஒன்றே உனது லக்ஷியமாக அமைந்தது. இவ் விடம் உங்கள் சம்பாஷணையின் ஆரம்பத்தி லேயே வந்துவிட்டேன். முழுவதும் மறைந்து நின்றபடி கேட்டேன். அக்ஷரத்திற்கு அக்ஷ ரம் உண்மை யொளி ஜ்வலித்தது. இனி நமது வாழ்க்கைப் பாதையை வகுப்பதற்கே இவ்விடம் உங்களை இருக்கும்படி கேட்டுக் கொண்டேன்.

"உலகில் எல்லாவித நன்மை தீமைகளை யும் அனுபவித்து அறிந்துவிட வேண்டும் என்ற அவாவினால் சங்கரை மணக்க இசைந் தேன். ஆரம்ப காலத்தில் சுதர்மனின் உண் மையன்பில் ஒன்றிய மனம் சூழ்நிலையைப் பற்றிய சிந்தனையே யின்றி, குதூகலத்தில் மிதந்தது ஒருகாலம். அண்ணாவின் லக்ஷியப் பெண்ணாகப் பகவத்யான-த்திலும், பொதுப் பணியிலும் ஈடுபட்டுத் தன்னை மறந்து, தியாக இன்பத்தில் ஒன்றித் திரிந்தது ஒருகாலம். இருதயம் அறியா உலகத்தின் வசைச் சொல் லைக் கேட்டு மனம் முறிந்து சாந்தி பெற வழி தேடியது ஒருகாலம். சங்கரினால் சாந்தி யடைந்துவிட்டோம் என்ற மனப்பான்மை யில் சென்றது சிறுகாலம். என்றாலும் நான் தேடிய சாந்தி கிடைக்கவில்லை. சற்றுமுன் சங்கர் சொன்னதுபோல் எனது தாம்பத்ய வாழ்க்கை சிறு குழந்தை விளையாட்டைப் போல, இல்லாத ஒன்றை இருப்பதாகப் பாவித்துத்தான் நடந்து வந்தது. அவருக்குத் திருப்திகரமாக இருக்கும்பொழுது நமது உணர்வற்ற தன்மையைக் காண்பித்துக் கொள்ளக் கூடாது என்று நானும், அவள் திருப்திகரமாக இருக்கும்பொழுது, நமது உணர்ச்சியற்ற நிலைமை நமக்குள்ளே அடங்க வேண்டுமென்று சங்கரும், உள்ளொன்று வைத்துப் புறமொரு மெருகுடன் தாம்பத்ய வாழ்க்கை நடத்தி வந்தோமென்பதைச் சற்று முன் தான் வெளியிட நேர்ந்தது விதியின் விசித்திரம். லீலாவின் சங்கர் இவர்தானென் பதைச் சந்தேக நிலைமையில் அறிந்திருந்தால் கூட இந்தத் தவறுதல் நடக்கும்படி நேர்ந் திருக்காது. உலகில் மாந்தர் தவறுவது சக ஜம். ஆனால் தவறைத் திருத்தி நடந்துகொள் ளுவது புத்திசாலித்தனமாகுமே தவிர, தவறி னது தவறுதான், திருத்த முயற்சிப்பது வீண் என்ற மனப்பான்மையில் காலத்தைச் செலவிடுவது தவறுதல். அதனால் தற்சமயம் நமது வாழ்க்கைப்படகை எதிர் காற்றில்லாத பாதையில் செலுத்த வேண்டும். நான் சொல்லப் போவதை...'' என்று முடிக்குமுன்,

"அக்கா! நீங்கள் சொல்லப் போவது தெரியும். அதன்படி நடக்க நான் ஒப்புக் கொள்ள முடியாமைபற்றி வருந்துகிறேன்.''

"பொறு லீலா! நான் சொல்லுவதைக் கேட்டுவிட்டுப் பிறகு உன் அபிப்பிராயத் தைத் தெரிவி. என்னுடன் வாழ்வைப் பங்கிடு செய்துகொள்ளும்படி உன்னைக் கேட்க வில்லை. எனக்கு இத் தாம்பத்ய வாழ்க்கை வெறுப்பை அதிகமாக்கிக்கொண்டே வருகி றது. 'பணி செய்து கிடப்பதே என்கடன்' அப்பொழுதுதான் என் மனம் சாந்தியைக் காணும் என்ற நம்பிக்கை தோன்றுகிறது. அதனால் தாம்பத்ய வாழ்க்கையினின்றும் நான் நிரந்தர விடுதலை பெற்றுக் கொள்கி றேன். நீ சங்கரை மணந்து நீடூழி காலம் இன்பவாரிதியில் மிதந்து, தேசப் பணிக்கு உகந்த வீரப்புதல்வனை, சங்கர் அடையும்படி செய்வாயாக. சுதர்மன் உயிருடனிருக்கும் செய்தி உன் வாயினால் கேட்கும்பொழுது என் மனதில் ஆனந்தத்திற்கு எல்லையே காண முடியவில்லை. இனி அவருடன் உடன்பிறந்த சோதரி போன்று, அவருக்குப் பணிவிடை

செய்து காலம் கழிப்பதே எனது ஜீவியத்தின் லக்ஷியம். சங்கர்! உங்கள் மீது எனக்குக் கடுகளவுகூட வருத்தமில்லை, தாங்கள் லீலாவிடம் நடந்து கொண்டதுபற்றி. எனது வாழ்க்கைப் பிரயாணத்தில், சமுதாயத்தின் கொடுமை வெயில் தாங்காமல் தத்தளிக்கும் சமயம், குளிர்ந்த மரங்களுள்ள சோலையும் சுனை நீரும் உள்ள மண்டபத்தில் தங்கச் செய்து, இளநீர் அருந்தக் கொடுத்து, மீண்டும் பிரயாணத்தைத் தொடங்கச் சுதர்மனை வழித்துணையாகச் சேர்த்து விட்டதற்கு அளவற்ற நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்."

"அதே வாக்யத்தை உன்னிடம் திருப்பிச் சொல்ல நானும் கடமைப்பட்டவனே. உன் சொற்படி நான் நடக்க வேண்டுமானால் என் வேண்டுகோளையும் நீ ஏற்கவேண்டும்" என்றான் குனிந்த தலை நிமிராமல்.

"என்னவோ?"

"நீ, சுதர்மனுடன் எங்களோடேயே இருக்க வேண்டும். உங்கள் சுக சௌக்யத்திற்குப் பங்கம் ஏற்படாமல் காப்பது என் பொறுப்பு, என் கடமை. என்னை நன்றியற்றவனாகச் செய்யாமலிருப்பது உங்கள் கடமை. இந்தச் சமயத்தில் என் கண்ணிற்குத் தேவதைபோல் காட்சியளிக்கிறாய்? என் மனமானது புயலடித்து ஓய்ந்த மரக்கலத்தின் நிலைமையை அடைந்திருக்கிறது. தற்சமயம் நான் லீலாவினிடம் நடந்துகொண்டது வடிகட்டின முட்டாள்தனமென்று இப்பொழுது தோன்றுகிறது? லீலாவின் உறுதியும், உனது அமைதியான சொற்களும் என் மடமையை நன்கு தெளிவுபடுத்தி விட்டன. காதம்பரி! நீ என்றும் என்னுடன் தங்கியிருக்கவேண்டுமென்று எனது அந்தரங்க அன்பான வேண்டுகோள். 'தாம்பத்யம்' என்பதில் ஏதோ உணர்ச்சியற்ற தன்மை தோன்றினது உண்மை என்பதை மறுக்கவில்லை. ஆனால் உன்னிடம் என்னையறியாது ஏற்பட்டபாசமானது எப்படி என்பதைச் சொல்லப் பதம் கிடைக்கவில்லை, ஓர் குழந்தையைத் தாயானவள் எவ்விதம் கண்ணும்கருத்துமாகக் கவனிப்பாளோ அவ்விதம் எனது சுகசௌக்யங்களில் நீ கவனம் செலுத்தி வந்தாயென்பதை என் அந்தராத்மாவும் ஈசனும் அறியாமலிருக்க முடியாது. விஷயம் இவ்வளவு விரசமானபிறகு, நாம் தாம்பத்ய முறையில் வாழலாமென்று நான் உன்னைக் கேட்பது பகுத்தறிவுடன் பேசுவதாகாது. உன் நன்மையை நான் என்றும் நாடுபவன். உனக்குக் கடமைப்பட்டவன். லீலா உன்விஷயத்தில் எவ்விதம் நடந்து கொள்ளுவாளென்பதை நான் சொல்லுவது அனாவசியம்."

"சங்கர்! உங்கள் உதவியை ஏற்க என்றும் எவ்விடமிருந்தாலும் நான் தயாராக இருப்பேன். நான் அண்ணாவுடன் கலந்தாலோசனை செய்து ஒரு திட்டத்துடனே இவ்விடம் வந்தேன். ஆனால் அதில் சுதர்மனின் பிரச்னையே எழும்பவில்லை. தற்சமயம் அவர் எங்களுடன் இருப்பார். அது ஒன்றுதான் மாறுதல். மற்றப்படி என் திட்டங்களினின்றும் நான் மாற முடியாமைக்கு வருந்துகிறேன். லீலா! பெண்தான் பெண் உள்ளம் அறியமுடியும். நான் சொல்வது சரிதானே?" நீ ஆமோதிக்கிறாயல்லவா?"

"அக்கா! உங்கள் வார்த்தையை ஆமோதிக்குமுன் என்னுடைய சிறிய கேள்விக்கு விடையளிக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்"

"ஓ, தாராளமாகப் பயமில்லாமல் கேள்"

"தாங்கள் எங்கள் ஊருக்குச் சென்றதில் என்ன நடந்தது, தாங்கள் வகுத்த திட்டத்தின் விவரம்—இவைகளை எனக்கு விளங்கச் சொல்லவேண்டும்.

"நான் மாதர் மஹாநாட்டிற்குச் சென்றவிடத்தில் உங்கள் ஊர் பெண்பள்ளிக்கூடத்து எட்மிஸ்டர்ஸ் ஸ்ரீமதி விமலா, என்னுடைய அன்பான தோழியைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவளது அன்பான அழைப்பிற்கிணங்கி, அவர்கள் பள்ளியின் வருஷாந்தரக் கொண்டாட்டத்திற்குத் தலைமை வகிக்கச் சென்றேன். கொண்டாட்டம் முடிந்தது. உன்னுடைய போஷகரைக் கண்டு உன்னுடைய தற்கால உன்னத நிலைமையைத் தெரிவிக்க வேண்டுமென்ற அவாவுடன் சென்றேன். வரவேற்பு ஒரு மாதிரியாக இருந்தது."

"அது தான் எப்படியென்று கேட்கிறேன்" என்று இடைமறித்தாள் லீலா.

"வாருங்கள்" என்று சொல்லிவிட்டுப் பேசாமல் உட்கார்ந்து கொண்டார்கள். சற்றுநேரம் ஒரே மௌனம். எனக்கு ஒன்றும் புரியவில்லை. வீட்டில் ஏதாவது அசந்தர்ப்பமோ என்று நினைத்து "யாவரும் சுகந்தானே" என்றேன்.

"சுகத்திற்கு என்ன குறைவு?" என்றார் சங்கரின் தாயார்.

"நானும் விடாமல் உன்னுடைய புகழ் எல்லாம் எடுத்துச் சொன்னேன். கடைசியில் உங்களிடம் அவளை உன்னதமான நிலைமைக்குக் கொண்டுவந்து விடுவேனென்று சொல்லிச் சென்றேன். அதன்படியே இன்று அவள் ஓர் சுதந்திரப் பறவை. லக்ஷியப் பெண்மணி. ஆதர்ச வீராங்கனை யென்றேன். அவ்வள

வுதான் பெண்புலியெனச் சீறியெழுந்தார் சங்கரின் தாயார்.

"அவள் வீராங்கனையா? அவள் வாழ்க்கையைப் பாழ்படுத்திய நீ வீராங்கனையா?" என்ருர்.

"என்ன? அவள் வாழ்வைப் பாடுபடுத்தியவள் நானு?" என்றேன்.

"ஐயோ! ஒன்றுமே அறியாதவள்போல் பாசாங்கு செய்கிருயோ?"

"அம்மா. கோபப்படாமல் சாந்தமாக விஷயத்தைச் விளக்கிச் சொல்லுங்கள்." என்றேன்.

"விளக்கவேண்டியதுதான் பாத்திரங்களை. உன்னிலும் இளையவனுன என் பிள்ளையைக் கல்யாணம் —கல்யாணமா அது ஒரு கேலிக் கூத்து-செய்து கொண்டு லீலாவிற்கு இந்தப் பேருதவி செய்துவிட்டாயாக்கும், நீ கல்யாணம் செய்து கொள்வது பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம். ஆனல் ஏதோ உனக்குச் சமவயதாகவேனும், இரண்டாவது தாரக்காரனுவோ அல்லது முதல் தாரமாகவோ செய்து கொண்டிருந்தால் நன்ருக இருந்திருக்கும். பத்து வயது இளையவன், எனது அருமருந்தன்ன பிள்ளை, லீலாவின் கணவன் நான் தான் என்று சொல்லிக் கொண்டிருந்தவனைக் கல்யாணம் செய்துகொண்டதில் லீலாவிற்கு இந்தவிதமான நன்மையாவது செய்ய வேண்டாமா? அவள் லக்ஷியத்தை நிறைவேற்றிய பெருமை உன்னைச் சேர்ந்தது. லீலாவின் வாழ்வு உங்கள் லக்ஷியத்திற்குப் பலி. உத்தமி என்ருல் அவள்தான். உங்கள் கல்யாணம் ஆனபின்பு இவ்விடம் வந்தால் ஏதாவது கேள்வி ஏற்படும், அது உன் காது வரை எட்டிவிடும் என்பதற்காக இந்தப் பக்கமே வராமலிருக்கிருள் லீலா. மாதம் ஓர் முறை எங்கள் கேள்விகளுக்கு ஒரு மாதிரியாகப் பதில் 'நான் சுகமே; என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்.' என்று எழுதி விடுகிருள். இந்த விஷயம் கேட்டு எவ்வளவு எழுதியும் பதிலே கிடையாது. இதுபற்றிக்கேட்டதற்கு, 'அவர் லக்ஷியம் கைகூடி விட்டது. அதுவே எனக்கு மிக்க மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம். அதிலும் நான் தெய்வமாகப் போற்றி வரும் காதம்பரிதேவியே அதற்குப் பாத்ரவதி என்பதில் என் ஆனந்தம் பன்மடங்கு பெருகுகிறது, தாங்கள் இவைகளைப் பற்றி யாதொன்றும் பேசாமல், என்னுடைய விருந்தினராக மூன்று நாள் தங்கிவிட்டுச் செல்லுங்கள்' என்ருளாம் என் சின்னப் பிள்ளையிடம். அதன் பிறகே ஒரேயடியாக மாறிப் போய், சித்த சுவாதீன மற்றவள்போல் நடந்துவருகிறேன். போதுமா விளக்கம்?" என்ருர்.

"அப்பொழுது என் தலையில் ஆயிரம் சம்மட்டிகள் கொண்டு அடித்தது போலிருந்தது. என்னையறியாமலே விலக்க முடியாத தீவினைக்குள் அகப்பட்டுக் கொண்டது எதனல், விதியா? சதியா? என்ற எண்ணம் எழும்பொழுது சங்கரின் மீது எனக்குக் கோபமே முன்னின்றது. தான் விரும்பியிருந்த பெண்ணைப்பற்றி விவரமாகச் சொல்லியிருந்தால் நான் இத்தவறுதல் செய்திருக்க முடியாதல்லவா? எனத் தோன்றினது. உடனேயே சென்றதை நினைத்து வருந்துவதில் காலத்தைச் செலவிடுவதைவிடத் தவறைத் திருத்துவதற்கு வழி ஏற்படுமா என்று ஆராய்வதில் செலவிடுவதே உத்தமம் என்ற சிந்தனையும் ஓடிற்று. சட்டென எழுந்திருந்து அவர் காலில் விழுந்து வணங்கி, 'அம்மா! நான் உண்மையறியாமல் இத்தவறுதலைச் செய்து விட்டேன். லீலாதான் சங்கரின் காதலி என்றும், சங்கர் உங்கள் புதல்வன் என்பதும் தெரிந்திருந்தால் கண்டிப்பாக நான் தடுத்திருப்பேன். இந்த விஷயத்தில் லீலா சங்கர் இருவருமே என்னை ஏமாற்றி விட்டார்கள். அதனல் தவறு என்மீது மட்டுமல்ல. ஆனலும் நிலைமை நேர்மையான பாதைக்கு வரும்படி செய்ய என்னல் முடியும். இன்னும் முப்பது நாளைக்குள் லீலா - சங்கர் மணக்கோலத்தைத் தாங்கள் கட்டாயம் கண்டு களிப்பீர்கள்" என்றேன்.

"உண்மையாக யாரென்று அறியாமலா கல்யாணம் செய்து கொண்டாய்?" என்ருரவர்.

"இது சாதாரணத் திருமணமல்லவே. சீர்திருத்தத் திருமணமானதனல் பெற்ருேரைக் கூடத் தெரிந்துகொள்ளாமல் செய்வதில் வியப்பொன்றுமில்லை." என்றேன்.

"ரிஜிஸ்டர் செய்து கொண்டிருக்கிருயே? எப்படி விடுதலை பெறமுடியும் அவன்?" என்ருர்.

"அந்தக் கவலைகளெல்லாம் உங்களுக்கு வேண்டாம். என்னை மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள். அதுவே எனது ஜன்ம சாபல்யம். பிறகு விஷயங்கள் எவ்வளவு நேர்மையாக நடைபெறுகின்றன பாருங்கள்" என்றேன்.

"காதம்பரீ உன் குணம் போற்றத் தகுந்தது என்று எண்ணி அகமகிழ்ந்து இருந்தேன். அப்படிப்பட்ட நீயே தவறு செய்தாய் என்பதைக் கேட்கும்பொழுது எனக்கு எப்படியோ இருந்தது. ஏதோ மனதிலுள்ள வேதனையினல் கடுமையாகப் பேசி விட்டேன். நான்தான் உன் மன்னிப்பிற்குரியவள் என்ருலும் உன் விருப்பத்திற்காக உன்னை மன்னித்தேன் என்று சொல்லுகிறேன். எப்படியாவது அனதையான லீலாவின் வாழ்க்கைப் பாதையைச் செம்மைப் படுத்திவிட்டாயானல் என் ஆத்மா சாந்தியடையும். என் அந்திய காலமும் சாந்தியுடன் முடிவடையும்" என்ருர்.

"பேரனே பேத்தியோ மடியில் வைத்துக் கொஞ்சிய பிறகே உங்கள் அந்திம காலம் எட்டிப் பார்க்க முடியும். நான் சத்தியமே ஜயமென்று நடந்துவருவது சத்யமானல்,

மறந்தும் பிறருக்குக் கெடுதி செய்தேனென் பது இல்லை யென்பது சத்யமானால் என் முயற்சியும் உங்கள் மனோபீஷ்டமும் நிச்சய மாக நிறைவேறும்" என்று சொல்லிவிட்டு, சாதாரணமாகச் சற்றுநேரம் பேசிக்கொண்டி ருந்தபின்பு சுமுகமான பரிவோடு விடை பெற்று வந்தேன்.

"என் அறையில் வந்து கதவைத் தாழிட்டுக் கொண்டு ஈஸிச்சேரில் சாய்ந்து கண்களை மூடி, என் சிந்தனை சக்ரத்தைச் சுழல விட்டேன். ஆஹா, வாழ்க்கைப் பாதையில் என்னைப் போன்று வழுக்கி விழுந்து எழுந்து மறுபடி யும் விழுந்து எழுந்திருப்பவர்கள் ஆயிரத் திலொருவர் இருப்பார்களா? என்னுடைய ஜன்ம விரோதிகளுக்குக்கூட இந்த நிலைமை ஏற்படவேண்டாம் என்றெல்லாம் சுழன்று நின்றது. கடைசியில் ஒருவித தீர்மானத் திற்கு வந்தவளாகி அன்றே இரவு புறப்பட்டு அண்ணாவிடம் சென்றேன்.

முன்னறிவிப்பில்லாத என் வரவைக்கண்ட அண்ணாவும் மதனியும் 'என்ன விசேஷம் காதம்பரி? யாவரும் சுகம்தானே. உன் கண வர் உன்னுடன் ஒற்றுமையாக இருக்கிறாரல் லவா?' என்று எடுத்த எடுப்பில் கேட்டு விட்டார்கள்.

"யாவரும் சுகம்தான். கணவர் ஒற்றுமை யுடன் இருக்கிறாரா? என்ற கேள்வி வரக் காரணம்?"

"உனது திடீர் வரவினாலும் உனது தோற் றம் மனதிற்கு ஒரு தடுமாற்றத்தைக் கொடுத்ததினாலுமே அந்தக் கேள்வி அவசிய மாயிற்று"

"அரவது ஒற்றுமைக்கு ஒருநாளும் குறை வில்லை. அவசியமான விஷயமாக இருந்த படியால் முன்னறிவிப்பில்லாமல் வந்தேன்."

சுருக்கமாக லீலாவின் விஷயத்தையும் சங் கரின் பெற்றோரைக்கண்டு பேசிய விஷயத் தையும் சொல்லி, காதம்பரி தொடர்ந்தாள்.

"தாம்பத்ய வாழ்க்கை விளையாடுவது போலிருக்கிறதே தவிர, உணர்ச்சியென்பது சிறிதுமில்லை. என்னுடைய கண்ணனும் முருகனும் சபிதாவின் மூலமாக என்னை வாவென்றழைக்கிறார்கள். அந்த நாளில் அவர்களை வழிபட்டதின் பலன் உங்கள் ரூப மாக வந்து என்னை உலகில் மிகவும் ஹீனஸ் திதியில் இருப்பவள் என்ற நிலைமையை மாற்றி, கலையின் அருளினால் சமூகத்தின் முன்னணியில் நிற்கும்படி செய்தார்கள். ஜன்மாந்தரத்தில் விட்ட குறை, தொட்ட குறை என்பார்களே அதுதானோ என்னவோ சங்கருடன் இல்லறம் நடத்தும் புத்தி தோன் றினது. அதிலும் என் மனம் நாடிய சாந்தி கிட்டவில்லை. லக்ஷியவாழ்க்கை நடத்துவதா கப் பேசி மணம் செய்துகொண்டு, அவரைத் திரிசங்கு சொர்க்கமாகச் செய்யக்கூடாதே என்றே கொஞ்ச காலம் வாழ்க்கை நடத்தி வந்தேன். திசை தெரியாமல் தவிக்கும் மரக் கலத்திற்கு எதிர்பாராமல் கரை தட்டுப்பட் டதுபோலாயிற்று எனது இந்தப் பிரயாணத் தில் சங்கரின் பெற்றோரைச் சந்தித்தது, அத னால் உங்களிடம் தகவல் சொல்லிவிட்டுப் போகவே வந்தேன். இங்கிருந்து சென்றதும் முதல் வேலையாக, சங்கர் லீலாவினிடம் நான் அறிந்த உண்மையை விளக்கி அவர்களைத் தம்பதிகளாக்கிவிட்டு வந்துவிடுகிறேன்" என் றேன்.

"அப்படியானால் நீ செய்திருக்கும் ஏற்பாடு தான் என்ன?" என்றாள் மன்னி.

"அதுதான் சொன்னேனே. பழையபடி சபிதாச்ரமத்தில் அண்ணா, நீங்கள், நான், அக்கா, சபிதாதேவி, யாவரும் இருந்து கொண்டு, ஆச்ரமத்திற்கும், கண்ணனுக்கும் முருகனுக்கும் பொதுநலத்திற்கும் சேவை செய்வதில் ஆனந்தமான வாழ்க்கை நடத்து வோம். முரளியும், சங்கரும், ரஜா நாட்களில் நம்முடன் வந்து தங்கிப் போகட்டும். அவர் களுக்கு ஓர் சமயம் நம் உதவி தேவை என் றால் அந்தச் சமயம் போய்வருவோம். நாம் முதன் முதலில் சேர்ந்து இருந்தோமே, அப் பொழுது வாழ்க்கையில் என்ன ருசிக் குறை வாக இருந்தது. அதுபோல் இனி நமது வாழ்நாள் முழுவதும் ஏன் இருக்கமுடியாது? ஆனால் ஓர் குறைவு. சுதர்மன் நம்முடன் இருக்கவில்லை. உயிருடன்தான் இருக்கிறாரோ இல்லையோ?"

"பாவம்! சுதர்மனின் பரதேசிக் கோலத் திற்கு நானே காரணமானேன். உதவி யளித்த நண்பனுக்கு நான்செய்த பிரதியுப காரம் நாடோடியாகத் திரியச் செய்தது. காதம்பரி! அன்றே உன்னை அவன் விருப்பப் படி விட்டிருந்தேனானால் அவனும் பரதேசி யாகியிருக்கமாட்டான். நீயும் இப்படிப் பல வித வாழ்க்கை நடத்தவேண்டியிருக்காது. கடைசியில் அவன் சொன்ன சாபம் பலித்தது. எனது எந்த லக்ஷியமும் கனவில்தான் கைகூடமுடியும் போலிருக்கிறது" என நீண்ட மூச்சு விட்டார்.

"அண்ணா நீங்கள் வருந்துவதுசரியல்ல. எல்லாம் விதியின்பயன். உங்கள் தியாகம் வீண்போகுமா? ஏதோ ஒருவிதமாக உங்கள் லக்ஷியத்தை நிறைவேற்றிவிட்டுத்தானே பின்வாங்கினேன்" என்றேன்.

"பிறகு உங்கள் தியாகத்தின் பயனாக வாழ்க்கைச்சக்கரம் மாறிச் சுழலவாரம்பிக்கி

றது. இனி மறுபடியும் லக்ஷியவாழ்க்கை நடத்தலாம். இந்தியாவிற்கு விடுதலை கிடைக்கும் பதினைந்தாம் தேதி, என்னுடைய சம்சார வாழ்க்கையிலிருந்து விடுதலைபெற்று, புது வாழ்வை மேற்கொண்டுவிடுவதாகத் தீர்மானம் செய்துவிட்டேன். ஆனாலும் சுதர்மனின் மறைவு மறக்கமுடியாத ஓர் துக்ககரமான சம்பவமே என்று அப்பொழுது வருந்தினேன். இப்பொழுது அந்த வருத்தமும் தீர்ந்துவிட்டது. லீலாவின் வாயிலாகச் சுதர்மன் இருக்கிறார், அதிலும் இவ்விடமேயென்று கேட்கும்பொழுது, எனது கண்ணனும் முருகனும் எந்தவிதமான நன்மையெல்லாம் செய்கிறார்களென்று மனம் அளவற்ற குதூகலத்தை அடைகின்றது."

"காதம்பரி! நீ இழந்த காதலை மீட்டுக் கொள்ள நான் தடையாக நிற்கமாட்டேன். அதற்காக நான் என்னசெய்யவேண்டுமென்று சொல்லுகிறாயோ அவ்விதம் செய்ய நான் சித்தமாக இருக்கிறேன்" என்று சங்கர் முடிக்குமுன் லீலா, காதம்பரி இருவரும் கடகடவெனச் சிரித்தார்கள்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று தடுமாறியவனாகக் கேட்டான்.

"சங்கர் உங்கள் அன்பிற்கு வந்தனம். காதல், அது உங்களுடன் சமாப்தியாகவேண்டிய விஷயம். எதையும் அனுபவித்துப் பார்த்துவிடவேண்டும் என்ற மனப்பான்மையில் உங்களுடைய அர்த்தாங்கியாக வந்தேன்.

இனி அந்தவிதமான சிந்தனையே ஏற்படாது. சுதர்மனுக்குக் குரு சிஷ்யை பாவமாகப் பணிவிடை செய்யவே, அவரது பலஹீனமான நிலைமையில் நான் விரும்புவதும் மனம் நாடுவதும். அவரும் அதைத்தான் எதிர்பார்ப்பார். அதனால் தாங்கள் எவ்விதமான சிரமமும் மேற்கொள்ள வேண்டியதில்லை. என்ன லீலா! உன் சித்தப்பாவின் அபிப்பிராயம் உனக்கும் தெரிந்திருக்கலாமே."

"ஈசனுக்கு அர்ப்பணம் செய்யும் புஷ்பத்தைத் தான் மோக்க விரும்புவானா பக்தன்? அதேபோன்ற மனப்பான்மையில் இருக்கிறார் சித்தப்பா" என்றாள் லீலா.

"அன்பிற்குரிய தெய்வத்திற்குப் பவித்திரமான பொருளை அர்ப்பணம் செய்யவே விரும்புவானே தவிர, உச்சிஷ்டத்தை அர்ப்பணம் செய்ய விரும்பமாட்டான் உண்மையான பக்தன். அப்படித்தானே லீலா" என்றாள் காதம்பரி புன்சிரிப்புடன்.

"அப்படியானால் என் அன்பிற்குரிய தெய்வத்திற்கு நான் அர்ப்பணம் செய்யப்போவது என்னவாம்? அப்படிப்பார்க்கப்போனால், நானும் சுதர்மன் போலவே வாழ்க்கை நடத்துவதுதான் முறையாகும், நமது லக்ஷியப்படி" என்றான் சங்கர்.

"ஆம். அதுதான் சமநீதியாகும்" என்றாள் லீலா.

"நீங்கள் சொல்பவை ஒத்துக்கொள்ள வேண்டிய விஷயங்கள்தான். ஆனால் எந்த விஷயத்தையும் காலதேச வர்த்தமானத்திற்குத் தகுந்தபடி கொள்கையையும் அமைத்துக்கொண்டால்தான் வாழ்க்கையில் தனக்கும், பிறருக்கும் நன்மை செய்துகொண்டதாகும். 'அன்பே தெய்வம்' என்ற உறுதி அந்த நாளில் கண்ணனையும், முருகனையும் துதித்துப் பாடி, என் கஷ்டத்தை மறக்கப் பிரயத்தனப்படும் பொழுதே ஏற்பட்டது. அன்றும் இன்றும் என்றும் நான் அந்த அன்பிற்கே அடிமை. அந்த அன்பின் தன்மையினாலேயே இந்தச்சமயம் இவ்விடம் வருவதற்குச் சாத்யமாயிற்று. எனக்கு அக்காவும், அண்ணாவிற்கு மதனியும் பாதுகாப்பாளராக இருந்தபடியினால்தான் அண்ணாவின் பெயரும் எனது பெயரும் காப்பாற்றப்பட்டன; நாங்கள் வசித்துவந்த இடங்களிலெல்லாம். எங்கள் ஊரில்மட்டும் பந்துக்கள் யாவரும் என்னையும் அண்ணாவையும் தூஷித்துப் பேசத்தவறவில்லை. அதைப்பற்றி நாங்கள் கவனிக்கவுமில்லை. அண்ணாவின் சுயநல மற்ற அன்பை அறியும் சக்தி அவர்களுக்கில்லை. அதைப்பற்றிய சிந்தனை இப்பொழுது ஏன் வந்தது என்றால்? அன்பின் சொரூபத்தை விளக்கவே சொன்னேன். அந்த அன்பிற்கு அடிமையாகியே உனது நலத்தை உடனே கவனிக்கவேண்டும் என்ற அவாவினால் முன்னறிவிப்பில்லாமல் வந்தேன். டாக்ஸியைக்கூடத்தெருக்கோடியில் நிறுத்தி இறங்கி, அனுப்பிவிட்டு வீட்டிற்கு வந்தேன். உங்களைக் காணவில்லை.

இவ்விடம் வந்தேன். மறைந்து நின்று உங்கள் சம்பாஷணை முழுவதும் கேட்டேன். சங்கர்! தாங்கள் சற்றுமுன் நான் சொன்னதற்குச் சவால் விடுவதுபோல் பேசினீர்களே, அது ஹ்ருதய பூர்வமாக வந்தவை என்று நெஞ்சைத்தொட்டுச் சொல்லுவீர்களா? லீலாவினிடம் மன்றாடினபொழுது உச்சிஷ்டம் என்பது நினைவில் தோன்றவில்லைபோலும்" என்றாள் காதம்பரி.

"நீ கேட்பது நியாயமான கேள்விதான். ஆனால் நானும் பதில் சமாதானம் சொல்லக் கடமைப்பட்டவனே. அப்பொழுதிருந்த மனநிலைக்கும் இப்பொழுதிருக்கும் மனநிலைமைக்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம். புயலடித்து ஓய்ந்த

நிலையை அடைந்திருக்கிறது என் சித்தம்; அதனாலேயே மாறுபாடான அபிப்பிராயம் கொண்டுவிட்டது. உறுதிகொண்ட லீலாவின் மனப்படி நடப்பதில்தானே இன்பம் காணமுடியும்?"

"லீலாவின் உறுதி என்னுடைய சுயநலம் கருதியிருந்தது. இப்பொழுது என்னுடைய உறுதி லீலாவின் சுயநலம் கருதுவதில் நிற்கிறது. லக்ஷியம், கொள்கை, என்பதற்கெல்லாம் அப்பாலுள்ளது அன்பு. அந்த அன்பின் பெயரால் நீங்கள் ஒன்றுகூடுவது அவசியமாகிறது."

"ஏன் அக்கா, இவ்வளவு பிரயாசைப்படுகிறீர்கள்? அவரவர் பாதையில் அவரவர் செல்லுவோமே. இப்பொழுது இருக்கும் வாழ்க்கைத் தரமே எனக்குச் சாலச் சிறந்தது. உங்கள் தாம்பத்யம் ரசிக்கவில்லை யென்றால் நீங்கள் உங்கள் இஷ்டப்படி சபிதாச்ரமம் சென்றுவிடுங்கள், அவர் இஷ்டப்படி அவர் செல்லட்டும். சித்தப்பா என்னிடமிருக்கப் பிரியப்பட்டால் இருக்கட்டும். உங்களுடன் வருவதானாலும் வரட்டும்" என்றாள் லீலா. "அப்படியெல்லாம் நடக்க முடியாது. அன்பின் பெயரால் நீ சங்கருடன் வாழ்க்கைப் பிணைப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். நமது இந்துமதக் கோட்பாட்டில், கன்னிகையானவள் இரண்டாவது தாரமாக வாழ்க்கைப் படுவது என்பது அநாதிகாலந்தொட்டு நடந்து வருகிற ஒரு பழமையான உண்மை. அதற்கு நீ விலக்காக மாட்டாய். சங்கரை ஏற்றுக் கொள்ள உன் அந்தராத்மா மறுக்கிறதா? சொல். அந்தப்பழமையைத் திருப்பி, புதுமைப் புரட்சியே நாம் செய்வது."

"இவையெல்லாம் ஏன் அக்கா? சமநீதியாக நடக்க வேண்டுவது நமது லக்ஷியம். அதனால் அவர் இஷ்டப்படி நடப்பதுதான் நன்மை தரும். அதனால் உங்கள் அவாவைப் பூர்த்தி செய்ய முடியாமைக்கு வருந்துகிறேன்."

"லீலா! சங்கர்! கடைசியில் இதுதானா உங்கள் முடிவான தீர்மானம்?

"அதுவே யாவருக்கும் நன்மை தரும், பாரபக்ஷமில்லாத தீர்மானம்" என்றான் சங்கர்.

"என்மீது அளவற்ற அன்பு கொண்டிருப்பதாகச் சொன்னது ஹ்ருதய பூர்வமான சொல்தானா?"

"அதில் சந்தேகம் ஏன்?" என்றார்கள் ஏககாலத்தில் இருவரும்.

"உங்கள் செய்கை சந்தேகம் ஏற்படச் செய்கிறது"

"இப்படி நீங்கள் நினைக்கும்படி ஏற்பட்டதே என்னை நரகத்திற்காளாக்கி விடும். தயவு செய்து காரணத்தை விளக்குங்கள்" என்றாள் லீலா.

"என்மீது உண்மையான அன்பிருக்குமானால் எனது மனோபீஷ்டத்தை நிறைவேற்றப் பின் வாங்குவீர்களா? ஏதோ அறியாமல் ஒரு பெரிய தப்பிதமான காரியத்தைச் செய்துவிட்டேன். அதைச் சீர்திருத்தி நன்மையான பாதையில் செல்ல வழி வகுக்க உதவி செய்யுங்கள் என வேண்டுகிறேன். உங்கள் அன்புக்குரியவள் ஓர் பவித்திரமான காரியத்தைச் செய்ய விரும்புகிறாள் என்றால், மஹா பாதகத்திற்குப் பிரயாச்சித்தம் செய்து கொள்ள விரும்புகிறாள் என்றால், அதை நிறைவேற்ற நீங்கள் எவ்வித தியாகமும் செய்யத் தயாராக வேண்டுமல்லவா?"

"அவசியம் செய்ய வேண்டும்"

"அப்படியானால் உங்கள் லக்ஷியத்தைத் தியாகம் செய்து மனோபீஷ்டத்தை நிறைவேற்ற மாட்டீர்களா? எனது நினைவு தெரிந்த நாள் முதலாக, சமூகத்திற்குப்புறம்பான பாதையிலேயே எனது வாழ்க்கைச் சக்கரம் உருண்டோடிக்கொண்டேயிருக்கிறது. எனது சந்தோஷமென்பது துன்பத்தின் சமாதியில் நட்ட புஷ்பச் செடி. நான் சற்றுவது நிம்மதி யடையலாமென்பது உங்கள் செய்கையைப் பொறுத்திருக்கிறது. லக்ஷியம் என்று நினைத்துச் செய்ததெல்லாம் பகற் கனவாக முடிந்தது. இந்த ஒரு கடமையை நிறைவேற்றிவிட்டு, தனி வாழ்க்கையில் சாந்தியடையப் போகிறேன். ஓர் அபலை; திக்கற்றவள்; வாழ்வில் தாழ்வுற்றவள் என்று இரக்கங்காட்டினால் ஏதோ மிகுந்த வாழ்க்கையை நிம்மதியுடன் கழிப்பேன். என்மனம் சாந்தியடைவது உங்கள் சொல்லிலிருக்கிறது. உங்கள் முடிவானதீர்மானமாக, எனது சந்தோஷத்திற்காக உங்கள் லக்ஷியத்தைத் தியாகம் செய்யவேண்டும். இதுவே என் வேண்டுகோள்" என்று சொல்லும்பொழுதே கண்களில் நீர் பளபளத்து நின்றது.

"காதம்பரீ! அன்று லீலாவைக் கைவிட்டவன் என் கண்முன்பு வந்தால் செருப்பினாலடிப்பேன் என்று சொன்னதை நிறைவேற்றிவிட்டாய்?" என்றான் சங்கர்.

"என்ன? என்ன சொல்லுகிறீர்கள்?" என்றாள் பதறியவளாகக் காதம்பரி.

"தவறு செய்துவிட்டேன். அதை உணர்ந்து திருந்தி நடக்கலாமென்று நினைக்கும் பொழுது, அன்பின் மீது ஆணையிட்டு வாழ்க்கையில் தவறு செய்தவனாகவே இருக்கும்படி கேட்கிறாய்?"

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

மதராஸ்

டைரக்டர்கள்

ஸர். A. ராமஸ்வாமி முதலியார், K. C. S. I., D. C. L. (Oxon)
(சேர்மன்)

ஸ்ரீ T. R. வெங்கட்ராம சாஸ்திரி, C. I. E.
,, S. N. N. சங்கரலிங்க அய்யர்
,, R. விசுவநாத அய்யர், B.A., B.L.
,, K. சிவஸ்வாமி அய்யர்
,, R. S. A. சங்கர அய்யர்
,, V. வெங்கட்ராம அய்யர், M.A., B.L.

எல்லாவித பாங்கு அலுவல்களும் நடத்தப்படும்



எமது முதல்தரமான சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான் களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன!

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண் டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும்!

கே. சுவாமிநாதன் & கம்பெனி

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

அதிக ருசியுள்ள மீன்களை

டால்டாவில் பொரியுங்கள்!

மீன் அதிக சத்துள்ள உணவு. எளிதில் ஜீரணமாவதுடன் இதில் உடல் வளர்ச்சிக்கு சாதகமான பொருள்களும் அடங்கியிருக்கின்றன. மீனை அதிக ருசியுள்ளதாகச்செய்ய, அரிசிமா, ½ தேக்கரண்டி டால்டா, உப்பு, மஞ்சள், மிளகாய்ப்பொடி, எலுமிச்சஞ்சார் இவைகளைகலந்து கெட்டியான மா தயாரிக்கவும். கலந்த மாவை மீன்மேல் தடவவும். வாணலியில் டால்டாவை தாராளமாகவிட்டு சூடாக்கவும். பிறகு மீனை இருபுறமும் பக்குவமாகும்வரை சிறு சூட்டில் பொரிக்கவும்.

டால்டா ஒரு சுத்தமான தாவரக்கொழுப்பாகையால் அது அதிக நேரம் சூட்டைத்தாங்குகிறது—எனவே, உணவுகள் ஒழுங்காக முழுவதும் பக்குவமாவதற்கு போதுமான சாவகாசம் அளிக்கிறது.

குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவும்
உணவுகள் எவை?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது
என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 181-172 TM

"நான் அப்படிக் கேட்கவில்லையே? யாவரும் தவறு செய்தோம்; யாவரும் திருந்துவோம் என்றுதான் கேட்கிறேன்."

"அப்படியானால் நீ சுதர்மனுடன் வாழ்க்கைப் பிணைப்பை ஏற்படுத்திக்கொள்; நான் விடுதலையளிப்பதை நீ ஏற்று நடக்கவேண்டும்."

"எங்கள் வாழ்வு இனி பிணைப்புத் தான். ஆனால் நீங்கள் கேட்கும்படியான தல்ல. குரு சிஷ்யை, சகோதரன் சகோதரி - இதுதான் மனதிற்கு நன்மையளிக்கும் காரியம். உங்கள் சொற்படி நடக்க இருவருக்கும் இளமை யாவது இருக்கிறதா? பரிபூர்ணமான எங்கள் அன்பு என்றும் மாரு இளமை பெற்றதே தவிர சரீரம் முதுமையை எட்டிவிட்டது. அதனால்சரீரத்தைப்பற்றியதொடர்பை விட்டுவிட்டு அன்பின் தொடர்பைத்தான் ஏற்றுக்கொள்ளமுடியும். இந்த விஷயத்தில் எனக்குச் சுதந்திரம் வேண்டும் சங்கர்! உங்கள் விடுதலையை ஏற்றுக்கொள்ளச் சித்தமாக இருக்கிறேன். என் விருப்பத்தை மட்டும் பூர்த்திசெய்யுங்கள்" என்றாள்.

சங்கரும் லீலாவும் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டுத் தலை குனிந்தபடி மௌனியானார்கள்.

சட்டென எழுந்து சென்று சங்கரின் வலது கையையும் லீலாவின் வலது கையையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு, "மௌனம் சம்மதத்திற்கறிகுறியல்லவா? நீங்கள் மனமொத்த தம்பதிகளாக நீடூழிகாலம் வாழ, தேவியையும், முருகனையும், கிருஷ்ணனையும் பிரார்த்தனை செய்து என் மனப்பூர்வமான ஆசியுடன் உங்கள் முதல் நிச்சயதாம்பூலமாக இதைச் செய்கிறேன்" என்றாள் காதம்பரி.

"அக்கா விதி என்பது வர்ண ஜாலமுள்ள வானவில் போலும். அதில் மயங்காத மானிடரே இருக்க முடியாது போலும். தியாகப் பாதையில் எனது வாழ்க்கைப் பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்தத் தீர்மானித்த என்னை, கடமையின் பெயரால், அன்பின் ஆணையில், சுயநலப் பாதையில் இன்பப் பிரயாணத்திற்குத் தயார் செய்துவிட்டீர்கள். உம், விதியின் கட்டளை. உங்கள் சித்தம் என் பாக்யம். ஒன்றுமட்டும் வேண்டிக்கொள்கிறேன். எனக்கும் கொஞ்சம் கடமையில் பங்குபெற வசதி செய்து தரவேண்டும்."

"அதற்கென்ன? வேண்டிய உதவி செய்கிறேன். சரி, சுதர்மன் எவ்விடமிருக்கிறார்? தூங்கினாலும் பரவாயில்லை. பேசவேண்டாம்; பார்த்தால் போதும்" என்றாள்.

"வாருங்கள் போகலாம்" என்று எழுந்தாள் லீலா.

"வேண்டாம் லீலா. நான் மட்டுமே போகிறேன். எந்த அறை என்பதை மட்டும் சொல்லு; போதும்."

"நாலாம் நம்பர் அறைதான் அவருக்கு வசதி என்று ஏற்பாடு செய்திருக்கிறேன்" என்றாள்.

"சரி, நான் வருகிறேன் சங்கர், லீலா" என்றாள் காதம்பரி.

அவளை நிமிர்ந்து நோக்கினான் சங்கர். அவள் முகத்தில், வேதனையின் சாயையையோ, சந்தோஷத்தின் மலர்ச்சியையோ அவன் காணவில்லை. போரில் ஜயம்பெற்றுத் திரும்பும் வீரனின் தேஜஸையே கண்டான். இன்னது செய்கிறோமென்பதை அறியாதவனாகவே இருகரங்களும் குவிந்தன.

அவளும் பதிலுக்குக் கைகுவித்துவிட்டுத் திரும்பிச் சென்றாள்.

அவள் சென்ற திக்கையே உற்றுக் கவனித்தவண்ணம் உட்கார்ந்திருந்த சங்கரின் கண்ணில் நீர் பளபளத்தது,

"ஆஹா! அக்கா அசாதாரணமான பிறவியென்பதில் ஐயமேயில்லை. என்ன குணம்?" லீலாவின் சொற்கள் அவன் கவனத்தைத் திருப்பின.

"சந்தேகமின்றி லக்ஷ்மணன் சொல்வது போல் அவள் தெய்வாம்சம் பெற்றவள்தான். எந்த விஷயத்திலும் அவளின் அபூர்வகுணம் யாவரையும் அடிமைகொண்டு விடுகிறது. நான் தோற்றேன், அவள் ஜயித்தாள். லீலா! நீ எனக்கு மன்னிப்பளிக்கவேண்டும்."

"யார் யாரை மன்னிப்பது? இருவரும் கடமையின்பேரில் வாதம் வளர்த்தோம். நீங்கள் செய்தது தவறு என்பதற்காக நான் அவ்வளவு போராடவில்லை. காதம்பரியின் நன்மைக்காகவே போராடினேன். தாங்கள் என் நன்மைக்காகப் போராடினீர்கள். நான் தங்கள் கண்ணில் தென்பட்டிருக்காவிட்டால் சாந்தியுடனேயோ, சாந்தி யில்லாமலோ, காதம்பரியுடன் வாழ்க்கை நடத்துவதை விடுவிக்க விரும்பியிருக்கமாட்டீர்கள். லக்ஷிய மணம் செய்துகொண்டாய்விட்டது, எவ்விதத்திலும் ஒத்துழைப்பதே மேன்மை என்ற பொறுப்பிலிருந்திருப்பீர்கள். என்னுடன் எங்கள் குலம் முடிவடைகிறது என்று எனது சிற்றப்பா தங்களிடம் மனவருத்தத்துடன் சொல்லவே நீறு பூத்திருந்திருந்த, அன்புத்தீ ஜ்வாலை விட்டெரிந்தது. அவ்வளவுதான். கடைசியில் நமது போராட்டத்தில் வெற்றி

தோல்வியின்றி, சமபலனுடன் முயற்சிசெய்த சமயம் விதி வேறு விதமாகக் காதம்பரி மூலமாக, சமாதான உடன்படிக்கைக்கு வரும்படி செய்துவிட்டது." என்ருள் அவன் கைக்குள் ளிருந்த தனது கையை விடுவித்தவாறு.

"இந்தமட்டும் கூறினையே சந்தோஷம் வருகிருயா, சுதர்மன் காதம்பரியின் வெகு நாளைய பிரிவின்பின் சந்திப்பதன் நிகழ்ச்சியைக் காண" என்று எழுந்திருந்தான்.

அவள் பின்னுலேயே தொடர்ந்து சென்ருன் சங்கர்.

திரையிடப்பட்ட ஜன்னலருகில் வந்து நின்ற லீலா திரையைச் சற்று விலக்கினுள். அவள் பின்னுல் வந்துநின்ற சங்கர் உள்ளே பார்வையைச் செலுத்தினுன்.

ஒரு சோபாவில் சாய்ந்தவண்ணம் தூங்குவது போலிருந்தார் சுதர்மன். பூமியைத் தொட்டுக்கொண்டிருந்த பாதத்தின் மீது பட்டதும் படாததுமாகத் தலையை வைத்தவண்ணம் மண்டிக்காலிட்டு உட்கார்ந்துகொண்டிருந்தாள் காதம்பரி.

ஐந்து நிமிஷங்கள் சென்றன. நிச்சப்தம்.

"அவருக்கு வழக்கமாக வரும் மயக்கம் வந்துவிட்டது, போலிருக்கிறது" என்று சங்கரின் காதில் சப்தமில்லாமல் மெதுவாகச் சொன்னுள் லீலா.

"ஏன்?" என்ருன் அவனும் மெதுவாக.

"வழக்கத்தை விளக்கினுள்."

அப்படி ஒருவர் மூச்சுக் காற்று மற்றவர் மீது படும்படி பேசினதில் நூதன இன்பமான உணர்ச்சி ஒன்றும் அவர்கள் மனதில் ஏற்படவில்லை. வெகு நாட்களாக வாழ்ந்துவரும் அந்யோந்யபாவமே தோன்றினது. அந்த நிலைமையை விளக்கிக்கொண்டிருந்த அவர்களின் கவனத்தைச் சுதர்மனின் இருமல் சப்தம் திரும்பச்செய்தது.

"யாரம்மா?" என்ருர் கண்ணை விழித்த சுதர்மன்.

"சுவாமி! என்னைத் தெரியவில்லையா?" என்று நிமிர்ந்து நோக்கினுள்.

"காமாக்ஷி! நீயா? ஊரிலிருந்து எப்பொழுது வந்தாய்? நீ வரும் தகவலை, லீலாவோ சங்கரோ ஒருவரும் சொல்லவில்லையே?" என்றவர் மேலேபேச முடியாமல் மார்பைக் கையால் அமுக்கிப் பிடித்துக் கொண்டார்.

"சுவாமி! தங்கள் உடம்பிற்கென்ன?" என்று எழுந்தாள் பதறியவளாக.

"ஒன்றுமில்லை. அதோ மேஜை மீதிருக்கும் கறுப்புப்பாட்டிலையும் கிளாஸையும் எடு. பிறகு மற்றவை சொல்லுகிறேன்."

மருந்தைச் சாப்பிட்டுவிட்டுச் சற்றுநேரம் கண்களை மூடியவண்ணமிருந்தார். பாட்டிலையும் கிளாஸையும் மறுபடி மேஜையின்மீது வைத்துவிட்டுத் திரும்பும்பொழுது கண்ணை விழித்துத் தன்னையே பார்ப்பதைக் கண்டதும் "சுவாமி, இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்ருள்.

"என்ன இன்று புதுமாதிரியாக, சித்தப்பா என்று கூப்பிடாமல் சுவாமி என்று அழைக்கிருய்?" என்ருர் சுதர்மன்.

"நீங்கள் ஏன் காதம்பரி என்றழைக்காமல் காமாக்ஷி என்று அழைத்தீர்கள்?"

"அப்படியா சொன்னேன்" என்று உதட்டைக் கடித்துகொண்டார்.

"சுவாமி! தங்களைக் காணும்தோறும், தங்கள் குரலைக் கேட்கும்பொழுதும் எங்கோ பார்த்ததுபோலவும், வெகுநாள் பழகியது போன்றதுமான உணர்ச்சி தோன்றும். தாங்கள் உயிருடன்தான் இருக்கிறீர்களோ? என்ற மனப்பான்மையில் தங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. என் நிலைமை அறிந்தேதான் சென்றீர்கள். மூன்று மாதத்திற்கொருதடவையாவது கடிதம் எழுதிக்கொண்டிருக்கக்கூடாதா? உங்கள் கடிதம் கிடைத்துக்கொண்டிருந்திருந்தால் நான் அநேக தவறுதல்களுக்கு ஆளாகாமல் தப்பியிருந்திருக்கலாம். இவ்வேழையை மறந்தேவிட்டீர்கள்போலும்." என்ருள் துக்கம் நெஞ்சையடைக்க.

"காமாக்ஷி! நின்றுகொண்டே பேசவேண்டாம். அந்த நாற்காலியிலாவது கட்டிலிலாவது உட்கார். சாவதானமாகப் பேசலாம். லீலா இப்பொழுது எப்படியிருக்கிருள்?" என்ருர்.

"அப்படியானுல்..........." என்று நிறுத்தினுள்.

"ஓ! எப்படி அறிந்தேன் என்று யோசிக்கிருயோ? சங்கர் லீலாவை வழிவிடுமாறுகேட்கும் சமயம் தற்செயலாகச் சற்றே காற்ருடலாமென்று நினைத்து என் அறையைவிட்டு வெளிவந்தேன்; பிறகு என்ன நடக்கிறது என்று அறிய ஆவல் கொண்டதில் வியப்பில்லையல்லவா? சட்டென அவள் அறையின் பின்புறத்து ஜன்னலருகில் சென்று நின்றுகொண்டு கவனித்தேன். ஆஹா! லீலாவின்

உறுதியையும், உன்னிடத்தில் வைத்திருக்கும் அன்பையும் கேட்கும் பொழுது என் மனம் என்ன பரவசமாயிற்றுத்தெரியுமா? கடைசிக் கட்டத்தில் நானே உள்ளே சென்று சமாதானம் செய்வது என்று தீர்மானித்த தருணம் நீ உள்ளே தோன்றினாய். லீலா 'ஐயோ' என்று விழுந்ததுமே எனது தலை சுற்றவாரம்பித்தது. உன்னைப் பார்த்ததும், எப்பொழுதும் வரும் மயக்கம் வந்துவிட்டது. (என்று அவளைப் பற்றிய நினைவு வரும்பொழுது ஏற்படும் மயக்கத்தைப் பற்றி விரிவாக எடுத்துரைத்து) எப்படியோ சமாளித்துக் கொண்டு என் அறைக்கு வந்து சோபாவில் சாய்ந்துகொண்டு விட்டேன். நான் வரும் பொழுதே லீலா எழுந்து உட்கார்ந்து விட்டாள். அதனால்தான் கேட்டேன்."

"இப்பொழுது ஒன்றுமில்லை. ஸௌக்யமாக இருக்கிறாள்" என்று சொல்லியவாறு அவர் காலின் கீழ் உட்கார்ந்து கொண்டாள்.

"ஏன் கீழே உட்காருகிறாய்? கட்டிலில் உட்கார்ந்துகொள்."

"இல்லை; இப்படி உட்காருவதே எனக்கு மிகவும் திருப்தியாக விருக்கிறது. இனி உங்கள் பாதசேவையாலேயே எனது ஜன்மம் சாபல்யமடைய வேண்டுமல்லவா?" என்றாள்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய் காமாக்ஷி! உனது சந்தோஷகரமான வாழ்க்கையைக் கண்டு என் மனம் அளவற்ற ஆனந்தமடைந்தது. நான் இன்னார் என்பதை நீ அறிந்து விட்டால் உன் மன நிம்மதிக்குப் பங்கமேற்பட்டு விடுமென்றே மறைந்து வாழத் தீர்மானம் செய்தேன். நமது அன்பு ஆழங் காண முடியாத அகழி போன்றது. மறப்பது என்பது அசாத்யம். எப்படியாவது லக்ஷ்மணனின் லக்ஷியம் சிதைந்தது. நீயும் சந்தோஷமாக இருக்கிறாய் என்ற திருப்தியுடன் உன் அருகிலேயே வாழ நினைத்தேன். நீ எந்த நிலையிலிருந்தாலும் என்றும் நீ என்னுடையவள் என்பதை நான் சொல்ல வேண்டுமா? காமாக்ஷி! நீ மேற்கொண்ட தர்மத்திற்கு உனது நன்மையே எனது லக்ஷியம். லீலாவையும் உன்னுடன் வாழ்க்கையில் பங்கு கொள்ளச் செய்ய வேண்டுமென்று விரும்பினேன். என் மகள் என்னையும் மிஞ்சி விட்டாள் உனது நன்மையின் லக்ஷியத்தைக் கைக்கொள்ளுவதில். சங்கர் உன்னைத் தேவியென்று போற்றுகிறான் என்று தோன்றுகிறது அவனது சொல்லால். என்விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டி லீலாவினிடம் அவ்விதம் மன்றாடினான் என்றே நினைக்கிறேன். அது சரி நீ எப்பொழுது வந்தாய்? அவர்கள் சம்பாஷணையை எவ்வளவிலிருந்து கேட்டாய்?" என்று எதையோ மறந்து விட்டதை நினைவு படுத்துவதுபோலக் கேட்டார்.

தான் ஊருக்குச் சென்றதிலிருந்து திரும்பி வரும் வரை நடந்த விஷயங்களையும், சங்கர் லீலா விவாதத்தின் ஆரம்பத்திலேயே வந்து விட்டதையும், பிறகு லீலா மயக்கம் தெளிந்த பின்பு நடந்த சம்பாஷணையின் முழு விவரத்தையும் சொல்லி முடித்தாள்.

"உம்" என்ற நீண்ட மூச்சிற்குப் பின், "காமாக்ஷி! உன் முன்னேற்றத்திற்கு லக்ஷ்மணன் தியாகியானான். அவன் லக்ஷியத்திற்கு நீ தியாகியானாய்? என்ன விசித்திரமான விளையாட்டு! உன் தியாகத்திற்கு நான் லக்ஷியவாதியாக இருக்கிறேன். உன்னை எந்த நிலையிலும் ஏற்றுக்கொள்ளத் தயார். உன் மீது எனக்கு யாதொரு வருத்தமும் கிடையாது. உன் விருப்பப்படி நான் நடக்கக் காத்திருக்கிறேன். உன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துவிடு."

"நான் என்ன சொல்லப் போகிறேன். தெய்வம் ஏற்கத் தயாராக இருந்தாலும், உண்மையான பக்தனானவன், தன் அன்பிற்குரிய தெய்வத்திற்கு உச்சிஷ்டத்தை அர்ப்பணம் செய்ய விரும்புவானா? என் ஆத்மா என்றும் தங்களுடையது. சரீரம் இந்த ஜன்மத்தில் தங்களுடையதாக என் மனம் இடமளிக்கவில்லை. பிறகு உங்கள் விருப்பப்படி நடக்கக் காத்திருக்கிறேன்."

"என் விருப்பம் என்பது தனியா? உன் விருப்பமே என் விருப்பம். எப்படியோ லீலாவைச் சம்மதிக்கச் செய்து விட்டாய். என்றாலும் உன் அன்பே அதற்கு மூலகாரணம். பின்னால் நடக்க வேண்டியவைகளுக்கு நிகழ்ச்சி நிரல் எப்படி தயார் செய்திருக்கிறாய்?"

"எனக்குத் தெரிந்த வரையில் திட்டம் வகுத்திருக்கிறேன். பிறகு மாறுதல் செய்ய வேண்டுவதை உங்கள் பிரியப்படி செய்கிறேன். அடுத்த மாதம் பதினைந்தாம் தேதி அன்னியர் ஆதிக்கத்திலிருந்து அன்னை விடுதலை பெறப் போகிறாள் அல்லவா? அதற்கு முதல் வாரம் கன்னி வாழ்விற்கு விடுதலையளிக்கப்பட்டு விடும்."

"எவ்விடம் எந்தப் பாணியில் மணம்?"

"சங்கரின் பெற்றோர் மனம் குளிர, அக்கிராமவாசிகள் உள்ளம் தெளிய, லீலாவின் பெற்றோர்களாக முன்னின்று, லீலாவின் சித்தப்பாவானவர், விதவிதமான சீதனங்களுடன் கன்னிகாதானம் செய்து கொடுக்க உதவி செய்வார்கள்."

"கன்னிகாதானம் செய்ய, கூடநிற்கச் சித்தியில்லையே?" என்று இடைமறித்தார் சுதர்மன்.

"இல்லாவிட்டால் பரவாயில்லை. சித்தப்பாவே இருவருமாகச் செய்யலாம். இல்லையென்றால், லக்ஷ்மணனும் லக்ஷ்மியும் செய்வதானல் எவ்வளவு மேன்மையுடையதாய்ப் பார்ப்பவர்களுக்கு ரம்மியமாக இருக்கும் என்பதில் ஆக்ஷேபணை?"

"சரி. பிறகு?"

"அந்த வைபவம் முடிந்ததும், சுதந்திரத் திருநாளன்று சபிதாச்ரமத்தின் திறப்பு விழா. பிறகு, நமது நிரந்தர வாசம் சபிதாச்ரமத்தில். முருகனும் கண்ணனும் நமது கானத்தை ஆனந்தமாக ரஸிப்பார்கள். பிறகு ஆயுள் முழுவதிலும் ஒரு மாறுதலும் ஏற்படாது என்பது எனது நம்பிக்கை. பிறகு விதியின் செயல்."

"இவ்வேற்பாடுகள் உன் அண்ணவிற்குச் சம்மதந்தானு?"

"சம்மதமில்லாமல் செய்வேனு?"

"நான் கூட இருப்பதைக்கூட ஒத்துக் கொள்வானு?"

"நீங்கள்கூட இப்படிப் பேசுவது காலத்தின் கொடுமைதான். அப்பொழுது தங்கள் விஷயத்தில் தாம் நடந்துகொண்டதுபற்றி, சதா நினைத்து வருந்துகிறர். உங்களிடத்தில் அளவற்ற அன்பு வைத்தவரே."

"அளவற்ற அன்பினல்தான் அறவே அகலும்படி செய்தான்."

"சுவாமி! அது அவர்மீது சுமத்தும் குற்றமல்ல. என் மீதுள்ள அளவற்ற பாசத்தினுல் அவரையுமறியாமல் செய்த தவறு."

"அப்படியல்ல. நடக்க முடியாத லக்ஷியத்திற்குக் காரணகர்த்தாவாகவேண்டும் என்ற ஆவலுக்கடிமை யானன் என்று சொல்லு."

"எப்படியானலும் எல்லாவித தவறுதல்களுக்கும் காரணகர்த்தா நான்தான் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது சுவாமி! சென்றதைப் பற்றிய சிந்தனையை விட்டு, இனி நடப்பதிலாவது, செய்த தவறுதல்களுக்குச் சற்றுப் பிரயாசித்தம் காணலாமோ என்று எண்ணுகிறேன். அதற்குத் தங்களுடைய ஆசி வேண்டும். எதையும் நான் வேண்டுமென்று செய்ததில்லை. என்னையறியாமலேயே விதிச் சுழலில் சிக்கிவிடுகிறேன் என்ற உண்மைக்குச் சான்றுகவே, பகவான் உங்களை மறுபடி எனக்களித்தார். நடுவில் நானகவே ஏற்படுத்திக் கொண்ட பந்தத்திற்கும் விடுதலை பெறும்படியான சந்தர்ப்பமும் அளித்தார். ஆனல் நீங்கள் கேட்கலாம், இப்பொழுது அண்ணவினிடம் உத்தரவு பெற்றது போல் அப்பொழுது பெறக் கூடாதா என்று. அண்ண என்னைக் கட்டாயப் படுத்தவில்லை. நிலைமையைத் தெளிவு படுத்தினர். மனம் தெளிந்தது அந்தச் சமயம். பிறகு அனுபவ முதிர்ச்சியினல் சாந்தி தேடப்போக வெறுப்பே கண்ட பலனுகியது. அந்த நிலைமையில் இந்த அசட்டுக் காரியத்தைச் செய்துவிட்டேன் சுவாமி. ஆனுலும் அதுவும் விதியின் விளையாட்டே. இயற்கை நியதியை மீறி, புரட்சி மணம் செய்வதை லக்ஷியமணம் என்று சொல்லிக் கொண்டு, என்னை ஏற்கவந்தாரே ஓர் லக்ஷியவாதி, அது எதனல்?"

"நானும் அதைப்பற்றியே ஆச்சரியம் கொண்டேன். உன்னிலும் இளையவன் உன்னிடம் காதல்கொண்ட ரகசியம் என்னவென்று? ஆளாவது பார்ப்பதற்கு வளர்த்தியில்லாமல் யௌவனப் பெண்மணிபோலிருக்கிருயா? உங்கள் இருவரையும் பார்த்தால் அக்காள் தம்பி, அல்லது அம்மா பிள்ளை என்றே சொல்லுவார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் உன்மீது மோகம் ஏற்பட்டது ஓர் புரியாத புதிர்போலிருக்கிறதேயென்று. புதிருக்கு விடை கிடைக்குமோ?

"அதைப்பற்றிய சிந்தனைக்குத் தற்சமயம் அவசியமில்லை என்றுலும் உங்கள் மனத் திருப்திக்காக விடுவிக்கிறேன். பெரியவர்கள் சில விஷயங்களை அநுபவத்தின் பேரிலேயே, இது நடக்கலாம், இது நடக்கக் கூடாது சாஸ்திரசம்மதம், என்ற பழக்கத்தை வழக்கில் கொண்டுவந்திருக்கிறர்கள். காலதேசவர்த்தமானங்களுக்கேற்ப வேண்டுமானல் சிலவற்றை மாற்றியமைத்துக் கொள்ளலாமேதவிர ஒரே அடியாகப் புரட்சி செய்து மாற்றி நடத்தினல் என்னபலன்? என்பதை ஆராயாமல், மடத்தனமாக ஏற்படுத்திய ஓர் சங்கத்தின் சபதமே காரணம். தவிரவும், மனிதர்களின் சக்தியை, மீறிய விஷயங்களுக்குப் பொறுப்பாளியாகிய விதியும் ஒரு காரணமாகலாமல்லவா?"

"ஆஹா! நல்லவிதி! மனிதரின் மதி கெட்ட செய்கைக்குக்கூடக் காரணம் விதியாகிவிடுகிறது என்று சமாதானம் அடையாவிட்டால், மனிதனின் மன ஆறுதலுக்கு வழியே கிடையாது போய்விடும்."

"சுவாமி, புத்தி கர்மாநுசாரம் என்ற பெரியோர் வாக்கிற்கு, பின் எப்படி மதிப்பு?"

"அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்" என்ற வாக்யமும் பொய்யாக முடியாதல்

லவா? உன் அன்பினுல் யாவரையும் உன் சொற்படி நடக்கும்படி செய்துவிடுகிருய். அதே அன்புதான் உங்கள் இருவரிடையிலும் ஐக்யபாவமான வாழ்க்கை நடத்த உதவிற்று. இயற்கைக்கு மாருன தாம்பத்யத்தை ரசிக்கும்படி செய்தது. லீலா உன் வாழ்வில் குறுக்கிடாவிட்டால், ரசிகத் தன்மையை வெளிக்காட்டிக்கொள்ளாமல் இருவருமே, வாழ்க்கைப் பிரயாணத்தைத் தொடர்ந்தே நடத்தியிருப்பீர்கள். என் சந்திப்பு ஏற்பட்



டால்கூட மாறுதல் ஏற்பட்டிருக்காது, அப்படித்தானே. நான் சொல்வதில் தவறுண்டா? உனக்கு வருத்தம் ஏற்படுகிறதா?"

"வருத்தம் ஏற்பட அவசியமேயில்லை. என் மனதிலுள்ளவைகளைப் படம்பிடித்ததுபோல் சொல்லத் தங்களையன்றி யாரால் முடியும்? 'முதல் கரைக்கும் புளியில்தான் சத்து உண்டு' என்று என்னுடைய சிறுவயதில், எங்கள்வீட்டில் வேலைபார்த்த தேவர் மரபினளான வேலைக்காரி சொல்லுவாள்.

"என் ஆயுளில் காதல் என்று சொல்லப்படும் பிரேமையானது தங்கள் ஒருவரிடத்தில் தான் நிலைத்திருக்கிறது. சங்கரிடம் ஓர்வித பாசம், அந்தப் பாசம் அண்ணா, லீலா, அக்கா, சங்கர் யாவரிடத்தும் ஒரே விதமாகவே ஏற்பட்டிருக்கிறது. சுவாமி, அதனால் என்றும் தங்கள் விஷயத்தில் மனம் ஒன்றுபோலவே தான் இருக்கும்."

"அப்படியானால் நான் கூறும் யோசனைக்குச் சம்மதம் கொடுப்பாயா?"

"ஏதோ நடக்கக்கூடியதானால்........."

"சபிதாச்மரத்தின் திறப்புவிழாவை நடத்திவிட்டு, அதன் பொறுப்பு முழுவதையும் உன் அண்ணாவினிடமே ஒப்படைத்து விட்டு, (நான் பதரிகாச்ரமத்திற்குப் பக்கத்தில், ஒரு அழகிய தோட்டத்திற்கு மத்தியில் ஓர் சிறுகுடில் அமைத்துக்கொண்டு, கொஞ்சகாலம் தங்கியிருந்தேன். ஒரு ஆளையும் வேலைக்கு வைத்துக்கொண்டேன். அவன் சகல விஷயங்களையும் மிகவும் ஸௌகரியமாகக் கவனித்துவந்தான், குடிலை அவன்வசம் ஒப்புவித்துவிட்டே வந்தேன்.) நாம் இருவரும் அவ்விடம் சென்று உலகத்தின் தொடர்பேயில்லாமல், மனதை ஒருவழிப்படுத்தும் கலை நம்மிடமிருக்கிறபடியினால், வானப்பிரஸ்தத்தை மேற்கொண்டு ஆனந்தமாக வாழ்க்கை நடத்தலாமென்பதில் தடை?"

"தடை அபவாதம்"

"என்ன அபவாதம்?"

"நாம் நடப்பது என்னவோ பரிசுத்தமான வாழ்க்கை, ஓர் புருஷனோடு குடித்தனம் செய்தாய்விட்டது. அது கசந்து மற்றவனுடன் சென்றுவிட்டாள் என்பது கேட்க எவ்வளவு அருவருப்பாக இருக்கிறது. உங்களுக்குத் தெரியாதல்ல. நீங்கள் கேட்கலாம். முதன் முதலாக அண்ணாவுடன் கிளம்பும்பொழுது இந்த அபவாதத்தைப் பற்றிச் சிந்தனை செய்யவில்லையே என்று. அப்பொழுது திசைகாணாது தவிக்கும் மரக்கலத்தின் நிலைமையிலிருந்த நான், திசைகாட்டியாக வந்த அண்ணாவை, அபவாதத்திற்குப் பயந்து பின்பற்றாமலிருந்தால் மரக்கலம் கடலில் அமிழ்வதுபோன்றதே என் நிலைமை. அதனால் அபவாதத்திற்குப் பயப்படவில்லை. தற்சமயம் கலைக்கோவிலில் கலாதேவியை ஆராதிக்கவே நமது வாழ்க்கை. அத்தேவியின் பெயரால் அபவாதம் வருவது என் மனதிற்குத் திருப்திகரமாகத் தோன்றவில்லை. பிறகு தங்கள் விருப்பம்போல் செய்யுங்கள். நான் என்றும் தங்கள் அடிமை." என்று சொல்லும்பொழுதே வார்த்தை வெளிவரவொட்டாமல் துக்கம் நெஞ்சையடைத்தது கண்ட சுதர்மன்,

"காமாக்ஷி! வருத்தப்படாதே. நீ என்ன சொல்லுவாய் என்பதை என் மனமறியாதா? இருந்தாலும் ஒருவார்த்தை கேட்டு வைப்போமே என்ற சபலத்தினால் கேட்டேன். உங்களையெல்லாம்போல் லக்ஷியம் என்று சொல்லிச்செய்யும் சக்தி என்னிடத்திலையாது என்றாலும், சூடின புஷ்பம் என்பதற்காக நான் அணிய மறுக்கவில்லை. கலா உபாசனை செய்யவேண்டுமென்பதை மறுக்கவுமில்லை. ஆனால் ஒரு விஷயம்மட்டும் முன்னதாகவே உன்னிடம் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் நினைத்தபொழுது, என் ஆச்ரமத்திற்குச் சென்று சிலநாள் தங்கிவிட்டு வருவேன். ஆனால் உன்னை வற்புறுத்த மாட்டேன். இதற்கு ஆக்ஷேபனையில்லாத பக்ஷத்தில் உன்கூட உன்பிரியப்படி நடப்பதில் எனக்குப் பரமானந்தமே.

"ஒன்றுபட்ட உள்ளங்கள் விருப்பம் செய்கையில் வேறாகமுடியுமா? சுவாமி! தங்கள் சித்தம் என் பாக்யம்."

"சங்கர் அவன் அறைக்குச் சென்றுவிட்டானா? அல்லது............"

"செல்லவில்லை. லீலாவுடன்தான் பேசிக்கொண்டிருப்பார்,"

"அப்படியானால் அவர்கள் இருவரையும் சற்று இவ்விடம் வந்துவிட்டுப் போகும்படி கூப்பிடுகிறாயா?"

"நான் நினைத்தேன். தாங்கள் சொல்லிவிட்டீர்கள். இதோ அழைத்துவருகிறேன்" என்று எழுந்திருந்தாள்.

காதம்பரி வந்து கூப்பிடும் சமயம் இருவரும் நல்லகுழந்தைகளாக, கட்டிலில் ஒருவரும், நாற்காலியில் ஒருவருமாக உட்கார்ந்து வெகு ஸ்வாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒட்டுக்கேட்ட பாவனையேயின்றி, காதம்பரி பின் தொடர அறைக்குள் நுழைந்த லீலாவும், சங்கரும் சுதர்மனுக்கு நமஸ்காரம் செய்தார்கள்.

"யாவும் நிறைவாக நீடுழி வாழ்வீர்களாக" என்று அன்புடன் வாழ்த்தினார் சுதர்மன்.

"மாமா! உங்களிடம் சொல்லியபடி செய்துவிட்டேன். சந்தோஷம் தானே!"

"பரமானந்தம்!"

(முற்றிற்று)*

Now For a LOVELY BATH
குழந்தைகள் விரும்புவது
இதன் சுகந்த மணமும், புத்துணர்ச்சியும் நாள் முழுவதும் நீடிக்கிறது. யெஷ்வந்த் சந்தன ஸோப்பைத் தினசரி உபயோகியுங்கள்.
Yeshvant SANDAL SOAP
SOLE DEALERS
A.R.CASIKAR & CO
39, THAMBU CHETTY STREET
MADRAS.1

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர்களை

உபயோகப்படுத்தி உணவைப் பெருக்குங்கள் !!!

Use Fordson MAJOR TRACTORS

நேரப் போக்கைச் சமாளிக்க உழைத்து வரும் இந்நெருக்கடியான வருடத்தில், வேலையைத் துரிதப்படுத்தவும் போதிய வேலையாட்களில்லாமையைச் சமாளிக்கவும் **போர்ட்ஸன் மேஜர் டிராக்டர்** விவசாயிகளுக்கு மிகவும் உதவியுள்ளது. சுலபமாகக் கையாளக்கூடிய இந்த மேஜர் சிக்கன முறையில் பெரிய அல்லது சிறிய நிலப்பரப்பை உழுவதற்கு உதவுவதோடு போரடிக்கும் கருவியை இழுக்கவும் போதிய சக்தி பெற்றிருக்கிறது. ஹைடிராலிக் முதலிய பிரத்தியேக சாதனங்களோடு கூடிய இந்த மேஜர் உழவுத்தொழிலுக்குத் தேவையாயுள்ள ஒவ்வொரு வேலைக்கும் விசையளிக்க வல்லது.

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202 - 203 மவுண்ட் ரோடு சென்னை—2

கிளைகள்: **பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி,**

ஹைதராபாத் (டெக்கான்)

டெப்போ:— **கோயம்புத்தூர்.**

தடுமாற்றம்

1993

கோமதி சுப்பிரமணியம்

பாட்டி விடுத்துச் சென்ற வார்த்தைகள் கணீரென்று ஒலித்துக் கொண்டிருந்தன அவள் செவிகளில். பாட்டி அவ்விடத்தை விட்டகன்று அரை மணிக்கு மேலாகி விட்டது. ஆனால் அவள் விட்டுச் சென்ற வார்த்தைகள் அவள் நெஞ்சில் ஆழமாகப் பதிந்து விட்டன. அதை நினைக்கும் தோறும் பயத்தினால் அவள் நெஞ்சம் திக் திக்கென்று அடித்துக் கொண்டது.

'மூன்றில் ஒன்றை அடித்துவிடும்...னு' இந்தப் பயங்கர எண்ணம் அவள் உள்ளத்தை புழுப் போல் குடைந்து கொண்டிருந்தது. ஜானகியின் உள்ளத்தில் பீதியை வேரூன்ற வைத்தது அம்புஜப் பாட்டியின் கைங்கரியம். அதன் பலனாய் அணு அணுவாய் உருகிக் கொண்டிருந்தாள் ஜானகி.

ஒரே வீட்டில் மூன்று குழந்தைகளும் படு படுக்கையாய்க் கிடக்கின்றன. என்ன நேரம் பெரிய பெண் படுக்கத் தொடங்கினாளோ! பின்னும் இரண்டு நாளில் அடுத்த பெண், அதைத் தொடர்ந்து நாலாம் நாள் கடைசிப் பையன். இப்படி ஒருவர் பின் ஒருவராகப் படுக்கத் தொடங்கி, கிட்டத்தட்ட ஒரு மாதமாகி விட்டது.

இந்த ஒரு மாத காலத்திற்குள் எத்தனையோ மருந்துகள், எத்தனையோ டானிக்குகள், டாக்டர்கள் மாற்றியாகி விட்டது. ஒன்றுக்கில்லா விட்டாலும் ஒன்றுக்காவது குணம் காண வேண்டுமே, இல்லவே யில்லை. நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக் கொண்டு வந்ததே தவிர, ஒன்றாவது தலை தூக்கும் நம்பிக்கை யில்லை. பகவான் பேரிலுள்ள நம்பிக்கையாலும், கலியுகக் கடவுளென நம்பும் டாக்டர் கூறிச் செல்லும் வார்த்தைக்குள்ள மதிப்பினாலும் இத்தனை நாள் எப்படியோ தனது வேதனையைப் பொறுமையுடன் சகித்து வந்தாள். செலுத்தும் மருந்துகளையெல்லாம் திரஸ்கரித்துவிட்டு வெற்றியுடன் முன்னேறிக் கொண்டிருக்கும் சுர வேகத்தைக் கண்டு அஞ்சியது அவள் தாய் மனம்.

குழந்தைகளின் விளையாட்டினாலும் சிரிப்பினாலும் கல கல வென்றிருக்கும் வீடு சோபையிழந்து காணப்பட்டது. சிரிப்புக்கும் கொம்மாளத்திற்கும் பதிலாக, துக்கமும் சோகமும் நிறைந்திருந்தன அந்த வீட்டில். எங்கே திரும்பினாலும் வியாதியின் முனகல், வேதனையின் பொருமல். இதைக் கேட்டுக் கேட்டு நைந்து போயிருந்தது அவள் உள்ளம்.

பெரிய பெண் இருமத் தொடங்கிவிட்டாள். 'கண், கண்' என்ற இருமல் சப்தம் அந்த வீடே எதிரொலித்தது. அதைத் தொடர்ந்து ஒரு இழுப்பு. கண் விழி பிதுங்கி முகம் சிவப்பேறி அவஸ்தைப்படும் குழந்தையைக் கண்டு அவள் உள்ளம் துடியாய்த் துடித்தது. இருமல் ஓய்ந்தால் அதன் சிரமத்தாலேற்பட்ட களைப்பில் ஆயாசத்துடன் சாய்ந்துவிடும் குழந்தை.

அப்படித்தான் அன்றைக்கும் ஆயாசம் கொண்ட குழந்தையை மடியில் கிடத்தி ஆசுவாசப் படுத்திக்கொண்டிருந்தாள் ஜானகி.

"குழந்தைகளுக்கு எப்படி இருக்கிறது" என்று கேட்டுக்கொண்டே வந்துசேர்ந்தாள் பாட்டி.

"வாங்கோ பாட்டி. எப்படி இருக்கு? இதோ இருக்கிறது பாருங்களேன் எல்லாம் ஒன்றுபோல."

"என்னமோ அம்மா! உன்பாடு பெரிய சோதனையாபோச்சு. பாவம், இப்படி மூணும் ஒண்ணுபோல சொல்லி வச்சாப்பலே படுத்துக் கிடக்குமா" என்று தன் அனுதாபத்தை வெளியிட்டாள் பாட்டி.

பாட்டிக்கு எப்பொழுதுமே ஜானகி யிடம் அலாதிப் பிரேமை. இப்பொழுது வியாதிக்கார குழந்தைகளோடு அவஸ் தைப்படும் ஜானகியைக் கண்டு, அந்தரங்க அனுதாபம் கொண்டு தவித் தாள்பாட்டி. இருந்தாலும் என்ன செய்ய முடியும்? அவள் அனுபவிக்க வேண்டி யதை அனுபவித்துதானே தீரவேண்டும்.



இருந்தாலும் அப்படிவந்து விசாரித்து, தன்னுலான ஒத்தாசையைச் செய்து, தன் மனதைத் திருப்திப் படுத்திக்கொள்வாள். என்னசெய்யுமோ என்ற கலக்கத்திஞல் ஏங்கிப்போய்விட்ட ஜானகிக்குத் தைரியம் கூறித் தேறுதல் செய்வாள்.

பாட்டி வந்து விட்டால் தன் மனப் பாரம் சற்றுக் குறைந்ததாகக் கருதும் ஜானகியும் பாட்டியை அடிக்கடி வந்து விசாரித்துக் கொள்ளச் சொல்லி யிருந்தாள்.

"நீயும் பார்க்காத வைத்தியமெல்லாம் பார்த்துட்டே. ஒன்றுக்கும் அசைந்து கொடுக்காமல் ஒரே நிலேயிலிருக்கிறதே குழந்தைகள் நிலே. இந்தப் பாழும் தெய்வம், உனக்காக இரங்கா விட்டாலும், அவதிப்படும் அந்தச் சிசுக்களுக்காகவாவது இரங்காதோ. இந்த ஒரு மாத காலத்துக்குள்ளே எப்படி நிலே குலேந்து கிடக்கிறது பாரு. நீயும்தான் உரு மாறிப் போனே. என்னவோ போ, மூன்றும் இருக்கிற நிலேயைப் பாத்தா ஏதாவது ஒன்றை அடிச்சாதான் மற்றது எழுந்திருக்குமோ, என்னவோ.........?"

இதைச் சொல்லிவிட்டு ஏன் சொன்னேம் என்று விழித்தாள் பாட்டி.

மூன்றில் ஒன்றை அடிக்க நேரிடும் என்று பாட்டி கூறியதைக் கேட்டபோது வானமே இடிந்து தலேயில் விழுந்தது போன்ற உணர்ச்சியுற்ருள் ஜானகி. எதை இழக்கத்தான் துணியும் அவள் மனம். கண்களில் எந்தக் கண்ணே இழந்தாலும் நஷ்டம் நஷ்டமே.

அந்த நஷ்டத்திற்கு அவள் மனம் ஒப்ப வில்லே. ஒப்பித்தான் ஆக வேண்டுமோ? ஒன்றை இழக்க வேண்டுமென்று பாட்டி சொல்கிருளே. அனுபவம் முதிர்ந்த பாட்டியின் வாக்குப் பொய்யாகவாபோய் விடும். ஐயோ...... நினேக்கவே நெஞ்சம் அஞ்சியது. தலே சுற்றுவது போலிருந்தது.

கண் விழித்துப் பார்த்தாள். வியாதிக் காரக் குழந்தைகளின் முக்கல், முனகல் சப்தத்தை தவிர, எவ்வித சந்தடியுமின்றி நிசப்தம் நிறைந்திருந்தது.

யமனுடன் போராடும் மூன்று குழந்தைகளிடையே அகப்பட்ட அவள் உள்ளம் வேதனேயால் தத்தளித்துக் கொண்டிருந்தது.

இதயத்தில் கொந்தளிக்கும் வேதனே யோடுகூடிய நீண்ட பெருமூச்சு அங்கு நிலவியிருந்த நிசப்தத்தைக் கலேத்தது.

மீண்டும் மீண்டும் அந்த ஒரே நினேவு அவள் இதயத்தை வட்டமிட்டது. மூன்றில் ஒன்றை இழக்கவேண்டும்...... ...எதை......அதைத்தான் அவளால் தீர்மானிக்க முடியவில்லே. மூன்றில் ஒன்றையும் இழக்க மனம் ஒப்பவில்லே. ஆனுலும் இழந்துதான் தீரவேண்டும் என்று நிர்ப்பந்தம் ஏற்படுமானுல் அதற்காக எதைத் தேர்ந்தெடுப்பது.

இந்த ஒரே எண்ணம்தான் அவள் மனதைப் பலமாக உறுத்திக்கொண்டிருந்தது. வெறி பிடித்தவள்போல் ஒவ்வொரு குழந்தையின் அருகிலும், சென்று தொட்டுத் தொட்டுப் பார்த்தாள்.

தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தையின் அருகில் சென்று பார்த்தாள். மாம்பழக் கதுப்பு என்று வர்ணிக்கும் கன்னங்கள் ஒட்டி உலர்ந்து போய்க் கிடந்தாலும், அக் குழந்தையின் கணீரென்ற சிரிப்பை நினேத்துக்கொண்ட போது, குழந்தையை மறந்தாலும் அதன் சிரிப்பை மறக்க முடியாதென்றுதான் பட்டது அவளுக்கு. ஆகவே அக் குழந்தையை இழக்க மனம் துணியாது.

அப்படியானுல் அடுத்த குழந்தை. வயது நாலுதான் என்ருலும் நாற்பது வயதுப்பாட்டி மாதிரியாகப் பேசும். அவள் பேச்சை மறக்க முடியுமா?

அப்படியானுல் அதையும் இழக்க மனம் துணியவில்லே. இனி அடுத்த குழந்தை.

எட்டு வயது சுசீலா தன் நினேவே தப்பி, கொடிபோல் துவண்டுகிடந்தாள். சற்று நேரம் அவளேயே உற்று நோக்கிக் கொண்டிருந்தவள், ஏதோ தீர்மானத்துக்கு வந்துவிட்டவள்போலச் சாவதானமாக மூச்சுவிட்டாள்.

அடபாவி, இதுவரை உன் குழந்தை போல் கண்ணுக்குக் கண்ணுகப்போற்றி வளர்த்த அந்தக் குழந்தையையா பலியிடத் துணிந்துவிட்டாய் என்று யாரோ இடித்துக் காட்டுவதுபோலிருந்தது.

அவளால் எப்படி அந்த முடிவுக்கு வர முடிந்தது. அந்தக் குழந்தை அவள் ரத்தத்தில் ஊறியதில்லை என்பதினால்தான்.

ரத்த பாசம் வளர்த்த பாசத்தை வென்று விட்டது. அப்படியானால் சுசீலா அவள் குழந்தை யில்லையா?

இல்லையென்று ஒருவருக்குமே தெரியாது. ஏன், அந்தக் குழந்தைக்கே தெரியாது. அப்படி வேற்றுமை யில்லாமல் வளர்த்துவிட்டு, சோதனையில் தோற்று விட்டாள்.

2

ஜானகிக்குக் கல்யாணமாகி, பல வருஷங்கள் வரை குழந்தையே பிறக்கவில்லை. அவளுக்குப்பிறகு பெரியவளாகி விவாகமான அவள் தங்கை ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்டாள். ஆனால் ஜானகிக்கோ அந்த அதிர்ஷ்டமில்லை.

குழந்தைப் பாக்கியத்தைக் கொடுத்தவுடன், விதி அதன் அனுபவ இன்பத்தை அளிக்க மறந்து விட்டது ஜானகியின் தங்கைக்கு. குழந்தை பிறந்த இரண்டு மாதத்தில் இந்த உலகை விட்டுப் புறப்பட்டு விட்டாள் அக் குழந்தையின் தாய்.

குழந்தைக்கு ஏங்கி இருக்கும் ஜானகி, தன் குழந்தையை நன்றாகப் பராமரிப்பாள் என்ற நம்பிக்கையில் அக்காவிடம் பொறுப்புக் கட்டிவிட்டு நிம்மதியாகக் கண்ணை மூடினாள் அவள் தங்கை.

இறக்கும் தறுவாயில் தங்கைக்குக் கொடுத்த வாக்குறுதியை மறக்காமல் நாளது வரை தன் குழந்தைக்கு அதிகமாகவே தங்கையின் குழந்தையைப் போற்றி வளர்த்து வந்து விட்டாள்.

அவள் குழந்தையிடம் அன்பு - செலுத்தும் விசித்திரத்தைக் கண்ட சிலர், எல்லாம் அவளுக்கென ஒன்று வரும் வரை அப்படித்தானிருப்பாள் என்று அவர்களாகவே தீர்மானித்துக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் தீர்மானம் தோற்கும் விதத்தில் நடந்து கொண்டாள் ஜானகி.

அவளுக்கென ஒன்றல்ல இரண்டு வந்தும் சுசீலாவிடம் காட்டும் அன்பில் எவ்வித மாறுதலுமின்றி அன்றுபோலவே என்றுமிருந்தாள். அந்தக் குழந்தை வந்த முகூர்த்தமே தனக்கெனக் குழந்தை பிறந்துவிட்டது என்கிற நம்பிக்கையில் சுசீலாவின்மீது கொண்டிருந்த அன்பு பன்மடங்காகப் பரந்து விரிந்தது. அவளைப் போலவே அவள் கணவனும் பாரபட்சமின்றி, இரு குழந்தைகளிடமும் அன்பு செலுத்தி வந்தான்.

இப்படியெல்லாம் ஊரார் அதிசயத்திற்குள்ளாகிய நாம்தானா க்ஷணத்தில் இப்படி மாறிவிட்டோம் என்று நினைத்துக் கொண்டபோது அவள் நெஞ்சம் திக்கென்றது. அதைத் தொடர்ந்து சிறு சம்பவம் ஒன்று அவள் நினைவுத் திரையில் ஓடி மறைந்தது.

மூன்று வருஷங்களுக்கு முன், அப்பொழுது ஜானகியின் முதல் குழந்தைக்கு ஒரு வயதிருக்கும்.

குழந்தையைக் குளிப்பாட்டி, தொட்டிலில் விட்டு உள்ளே ஏதோ காரியம் பார்த்துக் கொண்டிருந்தாள். தூங்கி எழுந்த குழந்தை தானாக இறங்கும் முயற்சியில் தொட்டிலிலிருந்து கீழே விழுந்து விட்டது.

"தடால்" என்ற சப்தம் கேட்டு ஓடி வந்த ஜானகி குழந்தை கீழே விழுந்து கிடப்பதைக் கண்டு பதறிப் போய்த் தூக்கினாள். சிறிது நேரம் மூச்சே வரவில்லை.

பயத்துடன் பக்கத்து வீட்டுப் பாட்டியை அழைத்துவர, சுசீலாவை அனுப்பினாள். நல்ல வேளை பாட்டி வருவதற்குள் குழந்தை தானாகவே கண் விழித்து விட்டது. ஆனாலும் விழிகள் மங்கி, மயக்கமாய்த் துவண்டு கிடந்தது. வந்து பார்த்த பாட்டி, விழுந்த அதிர்ச்சியினால் குழந்தை அப்படி இருக்கிறது, வேறு ஒன்றுமில்லை என்று சொல்லி, அந்த அதிர்ச்சிதீர, சில பரிகாரங்களைச் செய்து விட்டுப் போய் விட்டாள்.

குழந்தை தூங்கி எழுந்திருந்தால் அதிர்ச்சி அடங்கி விடும் என்று நினைத்து மறுபடியும் தூங்கப் பண்ணினாள்.

வெகு நேரமாகியும் குழந்தை எழுந்திருக்காமலே இருக்கவே போய்ப் பார்க்கத் தூண்டியது அவள் மனம். தொட்டுப் பார்த்தாள். குழந்தையின் உடல் தணலாய் எரிந்து கொண்டிருந்ததைக் கண்டு

உள்ளம் பதறி உடனே டாக்டருக்குச் சொல்லி அனுப்பினுள். டாக்டர் வந்து பார்த்து ஏதோ மருந்து கொடுத்திருந்தார்.

பல தினங்களாகியும் சுரம் அடிக்கவே டாக்டருக்கே சற்று அதைரியமாகி விட்டது. எத்தனையோ மருந்துகள் மாற்றிக் கொடுத்துப் பார்த்து விட்டார்.

ஜ்வர வேகம் தணியவே யில்லை. ஜானகியின் வேதனைக்கு எல்லையே இல்லை. காணுமல் கண்ட செல்வத்தை இழந்து விடுவோமோ என்ற ஏக்கமும் துயரமும் அவள் மனதை வருத்தின.

தான் குழந்தையின் நிலையை நிர்ணயிக்க வேண்டிய நாள் அன்று. டாக்டர் வந்து பார்த்துவிட்டு ஏதோ ஒரு இஞ்சக்ஷன் செய்தவர், இன்று சாயந்திரம் மூன்று மணி தாண்டினுல் குழந்தைக்குப் பயமில்லை என்று கூறிப் போய்விட்டார்.

"பகவானே, குழந்தைக்குப் பதில் என்னை வேண்டுமானுலும் எடுத்துக்கோயேன்" என்ற ஜானகியின் மனம் நொந்த பிரார்த்தனையைப் பகவான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தாரோ இல்லையோ.

சுவரில் தொங்கும் கடிகாரத்தையே திகிலுடன் நோக்கிக் கொண்டிருந்தாள் ஜானகி. அவள் குழந்தையின் ஜீவியம் அதன் கையில் அடங்கி யிருந்தது. மாலை மூன்று மணி என்று அறிவிப்பதைப் பயபக்தியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜானகி. நேரம் நெருங்க நெருங்க அவள் இருதயம் பட படவென்று அடிக்கத் தொடங்கியது. குழந்தை சிறிது புரண்டாலும், முடிவின் ஆக்ரோஷம் தொடங்கி விட்டதோ என்கிற பயம் சூழ்ந்து கொள்ளும். அப்படியே எத்தனை நேரம் மெய் மறந்திருந்தாளோ அவளுக்கே தெரியாது.

"பகவானே, எப்படியாவது என் தம்பிக்கு உடம்பு குணமாயிடணும். தம்பி சுரத்திலிருந்து அம்மா துடியா துடிக்கிரு. அவனுக்குப் பதிலா என்னை வேணுமானுலும் எடுத்துக்கோ" என்று பூஜையறையிலிருந்து வந்த குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து ஓடினுள் பூஜை அறைக்கு.

ஐந்து வயது சிறுமி சுசீலா, பகவான் படத்தின் முன் மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்த காட்சியை இப்பொழுது நினைத்தாலும் நெஞ்சம் உருகிக் கரையும்.

அப்படிப் பிரார்த்தித்த குழந்தையைத் தானு இன்று தன் குழந்தையின் நலனுக்காகப் பலியிடத் துணிந்தது மனம். சீ... இது என்ன அவல எண்ணம் என்று தன்னுடைய கொடுமையை எண்ணி உள்ளம் துடித்தாள் ஜானகி.

அன்று அப்படிப் பிரார்த்தனை செய்த குழந்தையை ஓடிப் போய் அணைத்துக் கொண்டு "சுசீலா, இது என்ன பைத்தியக்காரப் பிரார்த்தனை. உன்னைமட்டும் பகவான் எடுத்துக் கொண்டால் என் மனம் சம்மதிக்குமா? என் உள்ளம் தாங்குமா?" என்று கேட்டுக் கண் கலங்கினுள்.

அப்படிக் கேட்டவள் தானு இன்று, அந்தக் குழந்தை வேண்டுமானுல் போனுல் போகட்டும் என்று நினைத்தாள்.

நாம்தானு அப்படி நினைத்தோம் என்று தன்னையே ஒரு தரம் கேட்டுக் கொண்டாள்.

குழந்தையுள்ளத்தில் உதித்த அன்பு, பாசம், வயதான தனக்கு இல்லாமையைக் குறித்து உள்ளம் குன்றிப் போயிருந்த ஜானகி, வாசலில் யாரோ வரும் காலடியோசை கேட்டு, தலை நிமிர்ந்து பார்த்தாள்.

டாக்டர் சுந்தரம் வந்து கொண்டிருந்தார். தமது பெட்டியிலிருந்த இஞ்செக்ஷன் டியூப் ஒன்றைக் கையிலெடுத்தபடியே "இந்த மருந்தை இஞ்செக்ட் செய்தால் குழந்தைகளுக்குச் சௌகரியமேற்படும். ஆனுல் பாருங்கள், சோதனையாக ஊரில் ஒரு குழந்தைக்கான மருந்துதான் கிடைத்தது. எங்கே தேடியும் வேறு மருந்து இல்லையே. எங்கெல்லாமோ தேடியலைந்தும் கிடைக்கவே யில்லை யம்மா. இந்த மருந்தை எந்தக் குழந்தைக்கு உபயோகிக்கலா மென்று சட்டென்று சொல்லுங்கள்" என்று கேட்டபோது அவள் உள்ளம் நிலை கொள்ளாமல் தவித்தது, ஒரு கணம்.

மறுகணம், சற்றும் தயக்கமின்றி, சுசீலாவின் படுக்கையைச் சுட்டிக் காட்டி விட்டுப் பெருமிதத்துடன் தலை நிமிர்ந்தாள். தவறுக்கு ஈடு செய்துவிட்ட திருப்தி அவள் உள்ளத்தை நிறைத்து நின்றது.

* * *

பெண்களுக்குப் பிரத்தியேகமானது

ஷிபாலி செளத்ரி—சாரி

சுசீலாவின் தபால் பெட்டி

என் பற்கள் நன்ருகவே இருக்கின்றன. ஆயினும் அடிக்கடி எகிர் கொழுத்துக்கொண்டு வலி யுண்டாகிறது; அச் சமயம் பல்லும் சற்று அசைகிறது. டாக்டரிடம் போக எனக்குப் பிடிக்கவில்லை. ஏதாவது உபசாந்தி சொல்லேன். (ரகசியம். எனக்கு வயது 35.) சாரதா.

பதில்:—தலை மயிரைப் பாதுகாப்பது போலவே பற்களுக்கும். மொத்தமாய்த் தேகஆரோக்யம்குன்ருமல் இருந்தால் பற்கள் அசைவதும், தலை மயிர் உதிர்வதும் ஏற்படாது. மேல் நாட்டில் பெண்களைப் பொறுத்த வரையில், "ஒரு குழந்தை பிறந்தால், ஒரு பல் போயிற்று" என்கிற ஒரு

பழமொழி கூட வழங்கி வந்தது உண்டு. அதெல்லாம் அந்தக் காலம். மூப்பின் அடையாளங்கள் தோன்ருமல் தவிர்க்க இன்று நாம் எவ்வளவோ விஷயங்களைத் தெரிந்துகொண்டு இருக்கிறோம். ஆகையால் சாரதா, நீ உடனே ஒரு வைத்யரிடம் போகவேண்டும்; பிறகு பல் வைத்யரிடமும் செல்வது நல்லது.

உப்பும், சிறிது படிக்காரத்தூளும் சேர்த்துப் பல் துலக்குவதும், ஏதாவது மருந்துச் சொட்டுக்கள் சேர்ந்த வெந்நீரினல் பல் கொப்புளிப்பதும் தெரிந்த சிகிச்சைகள். இது தவிர ஒரு பழைய காலத்து வைத்யம் எனக்குத் தெரியும்; அதையும் சொல்கிறேன், செய்து பாரு:— ஒரு பிடித்தபிடி சவுக்கு இலையைக் கொணர்ந்து அரைப்படி ஜலத்தில் போட்டு வேகவிட்டு, அந்த ஜலத்தை எடுத்து வைத்துக்கொள்ளு; தேவையான போது சிறிதளவு எடுத்துச் சூடாக்கிக் கொப்புளிக்க உபயோகிக்கவும். இந்தக் கிஷாயத்தை இரண்டு நாள் வைத்து வைக்கலாம். உபத்ரவம் அதிகமாக இருக்கும்போது உபயோகித்துப் பாரு; உடனே குணம் தெரியும்.

சுசீலா அக்கா, வீட்டு எலெக்டிரிக் விளக்குக் கண்ணுடிகள், 'பல்ப்களை' எப்படி சுத்தம் செய்வது? பத்மா,



மாதம் ஒருமுறை ஒட்டடை நீக்கி, வீடு சுத்தம் செய்யும் போது விளக்கு ஷேடுகள், பல்புகளைக்கழற்றி அலம்புவதை வழக்கமாய் வைத்துக்கொள்ளு. இளஞ்

சூடான சோப் ஜலத்தில் முதலில் இவைகளைக் கழுவு. பிறகு குளிர்ந்த நீரில் ஒரு டேபிள் ஸ்பூன் வினிகர் சேர்த்து, 5 நிமிஷம் கண்ணாடிச் சாமான்களை அதில் நனைத்து வை. பிறகு எடுத்துத் துடைத்தால் பள பள வென்று இருக்கும்.

அக்கா, தோல் மெத்தை தைத்த என் நாற்காலிகள், பிசுக்குப் பிடித்துப் போய் விட்டன. வேறு தோல் தைத்துப் புதுப்பிக்க நான் இஷ்டப்படவில்லை; வேறு



'செட்' வாங்குவதும் சாத்தியமில்லை. இவைகளையே சுத்தம் செய்ய ஓர் உபாயம் சொல்லேன். சீதா.

பதில்:— இரண்டுபாகம் ஆளிவிதை எண்ணெய்க்கு (Lin-Seed oil) ஒரு பங்கு வினிகர் சேர்ந்த கலப்பினால், பிசுக்கு ஏறிப்போன தோல் மெத்தையைச் சுத்தமாக்க முடியும்; பிறகு நல்ல பர்னீச்சர் கிரீம் (Furniture Cream) போட்டு மெருகு ஏற்றி விடு. பழைய தோல் சுத்தமாகவும், பள பளப்பாகவும் மாறிவிடும்.

சமையல் பகுதி

கட்டிப்பால் சேர்த்த காரட் ஹல்வா:-

தேவை:—

$1\frac{1}{4}$ வீசை காரட்.

கட்டிப்பால். Condensed milk— 1 டின்,

சர்க்கரை. $\frac{1}{2}$ கப் (பெரிது)

நெய்.

ஏலப்பொடி.

திராக்ஷை- 1 பலம்

வாதாம்பருப்பு- சிறு துண்டங்கள்- 2. டேபிள் ஸ்பூன்.

கடவுளின்
கோவிலுக்கான
பரிசுத்தம்

தெய்வீகத்திற்குப் பரிசுத்தம் இன்றியமையாதது கோத்ரெஜ் ஸாண்டலில் நன்மை பயக்கக்கூடிய கலப்படமற்ற தாவர எண்ணெய்ச் சத்துக்களே ஏனைய
சேர்த்து உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது.
வெறுக்கத் தகுந்த மிருகக் கொழுப்புகள் யாதும் அவைகளில் கிடையாது. சுயமான மைசூர் சந்தனத் தைலம் ஏதேஷ்டமாய்க் கலக்கப்பட்ட கோத்ரெஜ் சந்தன சோப்பானது. இன்பமான குளிர்மை, இதம், கமழும் மணம இவைகளையுடைய நுரையையளிக்கும்.



கோத்ரெஜ் விம்டா — கிருமிகளைக் கொல்லவும் சொஸ்தமளிக்கவும் வல்ல வேப்பின் குணங்களையுடைய ஸோப்.

Godrej Sandal

கோத்ரெஜ் ஸாண்டல்
சாவி மார்க் (சந்தண)
டாய்லெட் (ஸ்நான) ஸோப்

இந்தக் குறைந்த விலையில் சிறந்த சந்தண சோப் வேறு எந்த சந்தண சோப் தயாரிப்பிலும் கிடையாது.

கோத்ரெஜ் சோப்ஸ் லிமிடெட்,
மதராஸ்: 164, பிராட்வே: கொச்சின்: 6/36, கல்வத்தி.

செய்யும் முறை:—திராக்ஷைப் பழத்தைச் சுத்தம் செய்து, வெந்நீரில் ஒருமணி நேரம் நனைத்து வைக்கவும்; காரட்டை முழுசாக வேகவைத்து, துருவிக்கொள்ளவும். கொஞ்சம் நெய் வைத்துக் காரட்டுத் துருவலைப் போட்டு, பச்சைமணம் போகும் வரையில் வதக்கிக்கொள்ள வேண்டும். அதன்மேல் கட்டிப்பாலையும் சர்க்கரையையும் சேர்த்து, திராக்ஷைப் பழங்களையும்போட்டு ஹல்வா பதத்திற்கு வரும் வரையில் கிளற வேண்டும். பிறகு ஒரு தாம்பாளத்தில் கொட்டி, ஏலப் பொடி தூவி, வாதாம்பருப்பு துண்டுகளையும் மேலாகப் போட்டு, ஆறியபின், துண்டங்களாகக் கீறி எடுக்கவும். அளவுகள் சுமாராகக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஹல்வாவிற்குக் காரட்டைப் பாலில்வேக வைப்பது வழக்கம். கட்டிப்பால் சேர்ப்பதால் மணம் அதிகரிக்கும். சர்க்கரையும் குறைத்துப் போட்டால் போதுமானது.

அவல் வடாம். உருட்டி வைக்கும் வடாம் ஒரு தினுசு. இது பிழியும் வடாம்; செய்து பாருங்கள். தயாரிப்பது மிக்க எளிது. $\frac{1}{2}$ படி அவலை முதல் நாள் இரவு $\frac{1}{8}$ படி மோரில் நனைத்து வைக்கவும். மறுநாள் 4 பச்சை மிளகாய், ஒரு சிறு துண்டு பெருங்காயம், தேவையான உப்புச் சேர்த்து, கல் உரலில் நன்றாக அரைத்து, நாழியில் போட்டுப் பிழிந்து, வெய்யிலில் வைக்கவும். உலர்ந்த பிறகு எண்ணெயில் பொரித்தால் ருசியாக இருக்கும்.

தையல் பகுதி

'நிட்டிங்' பை! உங்கள் தையல் வேலையைப் போட்டு வைப்பதற்கு ஒரு சௌகர்யமான பை இது; 'நிட்டிங்'கை இதில் வைத்துக்கொண்டால் அழுக்கு ஆகாமல் இருக்குமல்லவா?



36" அகலமுள்ள $\frac{1}{2}$ கஜம் லேசு மஞ்சள் வர்ண லாங்கிளாத்தும், கொஞ்சம் நீல நிற பயாஸ் பைண்டிங் (Bias Binding) இருந்தால் இதைத் தைத்து விடலாம்.

படம் (2)இல் கீழே குறித்துள்ள மாதிரி x துணியை வெட்டிக்கொண்டு, ஓரத்தை 'பைண்டிங்'கினால் தைத்து, பிறகு பை ஆக்கிக் கொள்ளவேண்டும்.

புஷ்பங்களை இரண்டுவித நீலத்திலும், அதன் மத்தியில் மஞ்சள் நிறத்திலும், தைக்கவும். இலைகளையும் ,காம்புகளை இரண்டுவித பச்சை (Shaded) நிறத்திலும் தையுங்கள்.

'நிட்டிங்' பைக்கு மாதிரி—



நாம் ஒன்று நினைத்தால்!

கௌரி

"அம்மா ; என்னடி செய்கிறே உள்ளே?"

"உலை நீர் வைத்திருக்கேன்."

"சித்தே இப்படி வந்துட்டுப் போயேன்."

"என்ன வேணும்?"

"என்ன சமைக்கப்போறே? கறி ஏதாவது ஆஞ்சு கொடுக்கட்டுமா? என்ன வாங்கிண்டு வந்தான்?"

"ஒண்ணுமில்லே. ரெண்டு முருங்கக்காய் தான் கிடக்கு. போட்டு ஒரு குழம்பு இடுகிறேன். சொன்னால் எதையாவது காதில் போட்டுக் கொண்டால் தானே?"

"அப்பா ; ராஜம்......"

"ஏம்மா?"

"இப்படி வா சித்தே"

"என்னம்மா அவ்வளவு அர்ஜெண்டு? கிட்டு எதோ பாடம் கேட்டான். சொல்லிக் கொடுத்துண்டு இருந்தேன்."

"ஆமாம். சமையலுக்கு ஒண்ணுமே இல்லையாமே. ரெண்டு காய்கறி ஏதாவது வாங்கிண்டு வந்து போடப்படாதா சொல்லு. குழந்தைகள் என்னத்தைச் சாப்பிடும்?"

"ஏம்மா நீயும் இப்படிப் பேசறே? தேதி என்ன என்று தெரியுமோ இல்லையோ?"

"அதை யெல்லாம் கேட்கிறதாடாப்பா பாழும் வயறு! வேணுமோ இல்லையோ ஏதானும். படி அளக்கிறான்களே மகா ராஜன்கள்! வாயில் வைக்க முடிகிறதா அரிசியை? எனக்கே வாய் கெட்டுப் போச்சு."

"அம்மா. ஒரு நாள் இரண்டு நாள் கஷ்டப்பட முடியாதா சொல்லு. நாளைக்கு வந்துவிடும் சம்பளம். வாய்க்கு என்ன வேணும் போவிருக்கு சொல்லு. வாங்கிண்டு வறேன்."

"பாழும் வயத்தை அறுக்க! எனக்காக வாடாப்பா சொன்னேன்? சின்னதும் செறுசுமா ஒட்ட ஒட்டக் கிடக்கிறது! எனக்கு என்ன கிடக்கு எல்லாத்தையும் விட்டு? ஏதோ இரண்டு வாய் எச்சில் பண்ணிட்டுப் போறே. ராத்திரி ஒன்பது மணிக்குத்தான் வருகிறே. இப்படி உழைத்து என்னதைக் கண்டது சொல்லு. இரண்டு ரூபாய் அதிகமா கொடுத்து விடருன புண்ணியவான்? வயத்தைக்கட்டி வாயைக்கட்டி என்னமோ வேலை-அம்மணி உடம்பைத்தான் பாரு-வர வரப் பாச்சைக் குஞ்சு மாதிரி போகிறுள்—

"என்னம்மா செய்கிறது அதுக்கு? நமக்கு வேணும் ஆயிரம் ரூபாய் மாசம். யார் கொடுக்கப் போறு சொல்லு. ஏதோ வருவதை வைத்துக் கொண்டு சந்தோஷமாய் இருக்கிறதா? எப்பொழுது பார்த்தாலும் மூக்கால் அழுகிறதா சொல்லு? நாம் செய்ததும் கொடுத்து வைத்ததும் அவ்வளவு தான்."

"அவன் இருக்கானே ரங்கு. உன்னோடே படித்தவன் தானே? ஒசத்தியாய் இல்லையா இன்னிக்கி? அவன் ஆம்படையான் நகையும் நாணயமும் அப்படி மினுக்கறு. நீயும் அந்த மாதிரி வேலை எதானும் பார்த்துக் கொள்ளப் படாதாடாப்பா?

"சரியாய் போச்சு போ. இனிமே ஊரில் ஒவ்வொருவராய்ப் பார்த்துக் கொண்டிருந்தால் அப்படியே உக்காந்துவிட வேண்டியது தான். ஏம்மா? எல்லாம் கிள்ளுக்கிரை என்று தான் பேசறே நீயும்? அவனுக்கு அப்படி ஒரு மாமனர் வந்துசேர்ந்தான், தூக்கி வைக்க. எனக்கும் வேட்டாம் இருக்கிறதே அதைச் சொல்லுமுன்னலே. என்னடா செய்வோம் என்று பறக்காமல் நூறு ரூபாய் கிடைக்கிறதே முப்பது தேதியானல். போறுதாம்மா? எதுக்குப் இப்படி எல்லாம் குறை படுகிருயோ எனக்குத் தெரியலே.

"குறைபடலேடாப்பா, படலே. வாண்டாங்கிறதும் எது விடுகிறது சொல்லு. பொண்கட்டை—பத்து பொறக்கப் போறது வயது காலை ஆவணிக்கு. ஒரு பொண்ணிருகு பேருக்கு இருக்காசொல்லு அது உடம்பிலே? ஒண்ணும் வேண்டாம். காது மூக்கு மூளி இல்லாமே ஒரு பொன் தட்டுப்போட வேண்டாமா சொல்லு. அவளா? உடம்பு கெறஞ்சு கட்டிக்க ரெண்டு புடவை கூட வாங்கிக்க முடியலே. எல்லாத்தையும் பார்க்கப் பார்க்கத் தோணுகிறதா இல்லையா சொல்லு. நீதான் என்ன செய்வே தேமேன்னு? ஆர அமரக் சாப்பிடக்கூட முடியவில்லை உத்தியோகம் பார்க்கிற லக்ஷணம்.

"அம்மா.— இப்படி எதையாவது சொல்லிக்கொண்டே இருக்காதே. கொஞ்சம்

பணம் வரவேண்டியது பாக்கி வந்ததும் நீ என்ன சொல்லுகிறுயோ செஞ்சுட்டு மறு வேலே; சரிதானு?''

''எப்படியோ செய்யுங்கோடாப்பா. எப்படியோ எல்லாரும் நன்னு இருக்கச்சே கண்ணே மூடிஞல் அது ஒண்ணே போரும் எனக்கு''

''மணி ஒன்பதாச்சு. போறேம்மா சாப்பிட்டுவிட்டு''

''இன்னிக்கும் நேத்துமாதிரி ஆகுமாடாப்பா?''

''இல்லே. இல்லே. சுருக்கவந்துடுறேன். அப்படி எட்டு மணிக்குள் வராவிட்டால் எனக்காக ஒருத்தரும் காத்துக்கொண்டிருக்கவேண்டாம். அம்மணியும் சாப்பிட்டு விடட்டும்''

''அது தானேடாப்பா மாட்டேங்கறு. வீணுய்ப்போறது உடம்பு''

''போயிட்டு வறேம்மா நாழியாச்சு''

''அம்மாடீ! கையிலே என்னடீம்மா கொடுத்தே?''

''தோசை.''

ரமணி சீக்கிரம் வந்து விடுவதாகச் சொல்லி விட்டுப் போனுனே ஒழிய அன்று மணி எட்டுக்கு மேலாகி விட்டது. வீட்டில் பாட்டி பேரன் பேத்திகள் எல்லாம் சாப்பிட்டாகி விட்டது. அம்மணிக்கு மட்டும் மனதில் ஏதோ எண்ணங்கள் அலே மோதிக் கொண்டிருந்தன. காலேயில் தாயும் பிள்ளேயும் பேசியதையும் தன் வாழ்க்கையையும், தன் பிறந்தகத்தைப் பற்றியும் நினேத்து நினேத்து மயங்கிக் கொண்டிருந்தாள். ரமணி தன் தகப்பஞரைப்பற்றிக் காலேயில் குறிப்பிட்ட பொழுது ஏனே அவள் உள்ளம் அதை ஏற்றுக் கொள்ள வில்லே. சமயத்தில் அதை ரமணி இடித்துக் காண்பிப்பது போலவே தோன்றியது. திண்ணேயில் உட்கார்ந்தபடி யோசனேயில் ஆழ்ந்திருந்தாள். ரமணியின் குரல் கேட்டதும்தான் தூக்கி வாரிப் போட்டது.

''இன்னும் சாப்பிடவில்லே நீ?''

''இல்லே''

''தெரியுமே எனக்கு. அம்மாவிடம் சொல்லிவிட்டுத்தானே போனேன். எனக்குத்தான் நாழியாகிறது. நீயும் பட்டினி கிடப்பானேன்?''

''எனக்கு மட்டும் என்ன சொகுசு?''

''சொகுசா? உடம்பு வீணுகக் கெடுகிறதோ இல்லேயோ?''

''ஆமாம்! ரொம்ப அக்கறையோன்னே?''

''என்ன அம்மணி! இப்படிச் சிடுசிடுங்கறே? இன்று யார் முகத்தில் விழித்தேனே தெரியலே. இதோ பார்!

''யார் முகத்திலே என்ன? நித்தியம் விழிக்கிற முகத்தில்தான். புதுசாய் மூளேத்ததோ முகம் வந்து?''

''அதெல்லாம் கிடக்கட்டும் கோபித்துக் கொள்ளாதே. இந்தா''

''என்னது?''

''திறந்துதான் பாரேன்.'' ரமணியின் முகத்தில் ஒரு புதிய மலர்ச்சி.

''மூன்று கோட்டுன்னு இருக்கு ஏது? ரங்கு வீட்டிற்குப் போனேளா?''

''ஒரு இடத்துக்கும் போகலே. இன்னிக்கு அவ்வளவு குறைபட்டுக் கொண்டாளே அம்மா. என்ன வேளேயில் கேட்டாளோ.''

''அம்மா!''

''ஏண்டாப்பா; சுருக்க வந்துடறேன்னயே?''

''காலமே கேட்டயே ரெண்டு ரூபாயாவது கொடுக்கறுனன்னு? உன் வாய்க்குச் சக்கரைதான் போடணும்.''

''என்னடாப்பா நடந்தது? பெரியவேலே போட்டுக் கொடுத்தானு மகராஜன்?''

''ஆசையே இல்லேயம்மா உனக்கு.''

''என்னடாப்பா வேறே? சொல்லேன்.''

''இந்த மாசம் நானூறு ரூபாய் சம்பளம் கொடுத்தான் போருமா?''

''அப்படீன்னு இனிமே அந்தச் சம்பளமா உனக்கு. நன்னு ஆயிரம் காலம் வாழணும் அவன் புள்ளேயும் குட்டியுமா.''

''கேட்டயா அம்மணி! அம்மா சொல்றதை?''

''அம்மாவுக்கு இருக்கறதுதானே பாவம்! இல்லேம்மா. ஆபீஸில் அதிக லாபமாம். எல்லோருக்கும் மூன்றுமாதச் சம்பளம் போனஸ்ஸாம். இவருக்குச் சம்பளம் நூறுன்னே? எல்லாம் சேர்ந்து நானூறு.''

''ஆனல் எல்லாருக்கும் அப்படிக்குடுத்தானுடாப்பா? நல்ல தாராளக்காரன்.'' எப்படியோ. என் கண்ணுலே ஒண்ணேயுமே பாக்கலே நான். எப்படியாவது நன்னு

சந்தோஷமா இருங்கோ. போய்ச் சாப்பிடுடாப்பா. காலமே ஒரு பிடி எச்சலாக்கினது.

"ஏம்மா, வெளியிலே ஒண்ணும் கிடைக்காது என்னு நினைக்கிறே? இன்னிக்குப் பெரிய விருந்தும்மா ஆபீசிலே"

ரமணியின் வீட்டில் ஒரு தனி உற்சாகம். பாட்டியிலிருந்து பேத்தி வரையில் முகத்தில் தனி மலர்ச்சியும் சந்தோஷமும் தோன்றின.

பாட்டியின் வாயிலிருந்து பழங்காலப் பாட்டுகள் பிளந்தன. ரமணி சிறிய குழந்தை போல் துள்ளி விளையாடினான். அம்மணி பெருமையோடு மலர்ந்த முகத்துடன் ரமணியிடம் கொஞ்சிப் பேசினாள். குழந்தைகள் வீட்டில் சடுகுடு ஆடி மகிழ்ந்து விளையாடினார்கள். பாட்டிக்கு வேண்டிய சமையல், பக்ஷணம் பாடி என்று எல்லோருடைய மசக்கையும் ஒவ்வொன்றாகத் தீர்ந்தது. வருவாரும் போவாருமாக வீடு ஜே, ஜே என்றிருந்தது. ஞாயிற்றுக் கிழமையானதால் ரமணியும் சாவகாசமாகத் தாயாருடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

"உம், கையில் இருந்தால் பணம் கரைந்து விடும் என்ன செய்யலாம் சொல்லும்மா" என்றான்.

"ஆமாண்டாப்பா. ஊரிலே விலைவாசி எல்லாம் இருக்கிறதைப் பார்த்தா இப்போ ஒண்ணுமே வாங்க வேண்டாம் போலிருக்கு. அப்படியே பாங்கிலே கட்டி வச்சுடு ரொக்கத்தை. எல்லாம் கொஞ்சம் மலிஞ்சா பார்த்துக்கலாம்."

"என்னம்மா இப்படிப் பேசறே? நமக்கு இருக்கிற முடையிலே அப்படியே இருக்குமாம்மா ரொக்கம்? பணம் வந்ததும் செலவழிக்க மனசு வரலையே உனக்கு?"

"மனசு வராமே இல்லேடாப்பா. இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பண்ணினால் இன்னும் கூடப் பண்ணலாமேன்னுதான்."



பாட்டிக்குப் பார்த்துக் கொண்டு செய்ய லாம். பணம் குட்டிபோடட்டும் என்பது. ரமணிக்கு வீணுகச் செலவழிந்துவிடப்போகி றதே என்பது. கடைசியில் பேசிப் பேசி ஒரு தீர்மானத்திற்குவர மாலை நேரமாகி விட்டது.

"சரி, உன் இஷ்டம். அந்தப் பொண்ணுக் குக் கழுத்துக்கு ஒரு சங்கிலியும் பளீச் சென்று காதுக்கு ஒரு தோடும் பண்ண வேண்டியது. அம்மணிக்கு என்னவேணுமோ புடவையோ எதுவோ கேட்டுச் செய்" என் ருள் பாட்டி.

சரி என்ருன் ரமணி, ஆனல் அவன் அம் மணியையும் கேட்காமல் தீர்மானத்திற்கு வந்துவிட முடியுமா அவனுல்?

இரவு சாப்பாடு நேரமாகிவிட்டது. ரமணி பத்திரிகை பார்த்துக்கொண்டு படுத்திருந் தான். அம்மணி தன் வேலைகளை எல்லாம் முடித்துக்கொண்டுவந்தாள். வெற்றிலையை வைத்துக்கொண்டு சாவகாசமாய் எதிரில் உட்கார்ந்தாள்.

தலையில் அழகிய கட்டும், கனகாம்பரமும், சந்திரன்போன்ற வட்டமான அழகிய முகத் தில் நெற்றிப் பொட்டும் பளீரென்று அழ காய் இருந்தாள் அம்மணி. வெற்றிலையை மடித்து ரமணியின் கையில் கொடுத்தாள். நறுக்கென்று அவள் கையைப் பிசைந்துவிட் டான் ரமணி. வலி பொறுக்கமாட்டாமல் கத்திவிட்டாள் அம்மணி.

"ஒண்ணும் புரியலே போலிருக்கிறது"

"அதுதான் பவுடர் பலமாய் இருக்காப் பலே இருக்கு"

"போங்கோன்ன"

"அதெல்லாம் கிடக்கு. இப்படிவா சொல் ரேன்" ரமணியின் கைபேபர் கீழே விழுந் தது.

"இரண்டு நாளாகக் கேட்கிறேன். ஒண் ணும் சொல்லாமே டபாய்க்கிறயே, என் னமோ. அம்மா சென்னதைக் கேட்டுண்டு தானே இருந்தே? உனக்கு என்ன வேணும் சொல்லு."

அம்மணியின் முகம் திடீரென்று மாறியது.

"எனக்கு ஒண்ணும் வேண்டாம்" என்ருள் தாங்கலுடன்.

"திடீரென்று என்ன அவ்வளவு கோபம் அம்மணி உனக்கு?"

"எனக்கென்ன கோபம்? ஒண்ணும் வாண் டாம் அவ்வளவுதானே?"

"என்ன அம்மணி இது?"

"என்ன?"

"எதுக்காக இப்படிப் பேசறே திடீர் என்று?"

"எப்படிப் பேசறேன்? பணக்காராளாத் துப் பொண்ணு இருந்தா எல்லாருக்கும் மதிப்பு இருக்கும். என்ன ஏதுன்னு ஒரு வார்த்தை கேட்டேளா முன்னுலே? எல்லாம் தீர்மானம் செய்துகொண்டு விட்டு என்னை என்ன கேழ்விங்கறேன். அம்மாவாச்சு, நீங் களாச்சு. எதை வேணும்னுலும் செஞ்சுண்டு போங்கோளேன். எனக்கு ஏதாவது பாத்தி யம் உண்டா என்ன?"

"சரியாய்ப் போச்சுப் போ. அம்மாவைக் கேட்டுட்டேன்னு இவ்வளவு? அதனுல் என்ன மோசம் இப்போ. உனக்கு வேண்டியதைச் சொல்லேன். செய்ய மாட்டேனு நான்?

"மாத்தவும் வேண்டாம். செய்யவும் வேண் டாம். உங்களை யார் என்ன கேட்டா இப்போ? இஷ்டப்படி செய்து கொண்டு போங்கோளேன்."

"நீ செய்கிறது நன்ருய் இல்லை அம்மணீ"

"என்னன்னு செஞ்சுப் புட்டேன் அப்படீ?"

"இவ்வளவு கோபித்துக் கொள்ளுகிறேயே, வீட்டில் பெரியவா என்னு இருந்தா ஒரு வார்த்தை சொல்லாமலா இருப்பா? உனக்கும் உன் குழந்தைக்கும் தானே செய்யச் சொல் ரு? தனக்காகவா கேக்கரு? இருந்தாலும் யோசனையே இல்லை போ"

"ஆமான்னு! எனக்குத் தான் யோசனை இல்லை. எல்லாம் என்னைத்தானே சொல்ல லாம். எனக்கு ஒரு வைர மூக்குப் பொட்டும் முத்தும் வேணும்னு எவ்வளவு தடவை கேட் டிருக்கேன் உங்களை? அதெல்லாம் தோன் றப் போகிறதா உங்களுக்கு? என்னேடு சண்டைக்குத்தான் வருவேள்."

"என்ன அம்மணீ இது? எவ்வளவு ஆகும் தெரியுமா?"

"சும்மா வந்துவிடும் என்று நானும் ஒண் ணும் சொல்ல வில்லை."

"ஆனல் பட்டுவுக்கு ஒண்ணும் வேண்டாம். உனக்கும் புடவை வேண்டாம். இல்லையா?"

"எனக்கு ஒண்ணும் வேண்டாம்! சரி தானே?"

"நாளைக்கு மூக்குப் பொட்டை வாங்கித் தொலைத்து விடுகிறேன். அவ்வளவுதானே?"

"தொலைக்க, கிலைக்க வாண்டாம்னு நீங்க"

"யார் எதை வாங்கிண்டா எனக்கென்ன? வந்த பணம் இருக்கப் படாது. கரியாயடிச் சுடணும்."

"எதையாவது பேசாதேங்கோன்னு! ஒரு தம்படி எனக்கு வேண்டாம்!"

"இல்லை. எனக்கு மட்டும் வேணும் தலையில் கட்டிக் கொண்டு போக!" ரமணியின் உதடுகள் கோபந்தால் துடித்தன. முகத்தைத் திருப்பிக் கொண்டு படுத்தான்.

"அப்பா......ராஜம்......"

யார்? அம்மாவா கூப்பிடுகிறுள்?

அம்மணி ஒன்றும் பேசவில்லை.

"ராஜம்.........தூங்கறயாடாப்பா? அம்மாடீ......அம்மணி."

ரமணி பேசவில்லை. அம்மணியால் பேசாமல் இருக்கமுடியவிலலை.

"இதோ வந்துட்டேம்மா" என்று சொல்லிக்கொண்டே எழுந்து கூடத்துப்பக்கம் வந்தாள்.

கூடத்தில் குழந்தைகள் தூங்கிக்கொண்டிருந்தார்கள். பாட்டி ஊஞ்சல்பலகையில் உட்கார்ந்தபடி என்னமோ சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள்.

"ஏம்மா?"

"கொஞ்சம் தூத்தம் குடுடீம்மா என்னமோ செய்கிறது."

ஓடிவந்தாள் அம்மணி.

"அம்மாடீ, படபடனு வறது. ராஜத்தைக் கூப்பிடேன் சித்தே"

"இங்கே வாங்கோளேன்னு! அம்மா என்னமோ சொல்ரு!"

"ஏம்மா? என்ன செய்கிறது? டாக்டரை அழைத்துக்கொண்டு வறேன்போய்"

"பாட்டி ரமணியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். அவன் முகத்தையே ஒரு கணம் பார்த்தாள்."

"அப்பா! ரெண்டு காசைக் கண்ணுலே கண்டே குழந்தே! அதுக்கு யமனுய் வந்துட்டேன் நான்! குழந்தைகளை ஒண்ணும் சொல்லாதே! ன்னு பார்த்துக்கோ"

"அம்மா! அம்மா! மயக்கமாய்ச்சாய்ந்துட்டாளே!"

நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கிறதே இப்படீ? டாக்டரை அழைத்து வறேளா போய்?

ரமணியின் உள்ளத்திலிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு வெளிவந்தது. * * *



துணிகள்
வெண்மையாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
துணிகள்
பிரகாசமாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
SUNLIGHT
SOAP
SUNLIGHT SOAP
ஸன்லைட்
சோப்பில்
தான்
துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும்
சலவை செய்கிறது!
S. 125-50 TM

அக்காலத்தில்

நாடகம்

கலாதாஸன்

இந்தக் காலத்து நாடக மேடைகளோடும் ஸினிமா ஸ்டுடியோக்களோடும் சாதாரணமாகப் பழகும் நமக்கு சுமார் 50, 60 வருஷங்களுக்குமுன் நமது நாடகங்களில் கையாளப்பட்டு வந்த முறைகளைக் கேட்டால் மிகவும் ஆச்சரியமாயிருக்கும். இந்தக்காலப் பரிஷ்காரத்திற்கும் இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் சௌகரியங்களுக்கு மேற்றவாறு புதுப்புது முறைகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. வேஷம் போடுவதிலோ, காட்சிகள் ஜோடனை பண்ணுவதிலோ, மின்சார விளக்குகளை உபயோகிப்பதிலோ இக் காலத்திலுள்ள சௌகரியமொன்றும் அக்காலத்தில் கிடையாது. 'அமெச்சூர்' நாடகங்களையெடுத்துக்கொண்டாலோ ஒன்றும் சொல்லவேண்டாம்.

அவர்கள் திண்டாடின திண்டாட்டம் பட்டவர்களுக்குத்தான் தெரியும். உண்மையில் அவர்கள் அனுபவித்த நாடகம் திரைக்குப் பின்தான். ஜனங்கள் பார்த்த நாடகம் அமெச்சூர் நடிகர்கள் திரைக்குப் பின் நடித்த நாடகத்தின் ஒரு நிழல் போல்தான்.

அக்காலத்தில் வேஷம் போடுதல் நிரம்ப சாதாரண முறையில்தானிருந்தது. சாயத்துண்டு (Paint stick), கிரீம்(cream)புருவம் தீட்டும் பென்ஸில் (eye-brow pencil), சாராயப் பசை (spirit gum), தனி மயிர்க்கொத்து (crepe hair) முதலிய ஸாதனங்கள் அந்தக் காலத்தில் அபூர்வம். எனக்கு நன்கு ஞாபகமிருக்கிறது, நான் முதன் முதலில் திருவனந்தபுரத்தில் இத்தகைய சௌகரியங்களைப் பற்றி எனது நண்பர்களிடத்தில் கூறின போது அவர்களுக்குண்டான ஆச்சரியம். நானிவைகளை உபயோகிக்கும் முறைகளை அனுஷ்டித்துக் காட்டினபோது நான் ஒரு ஜால வித்தைக்காரன் என்றே எண்ணினர்கள். அதற்குமுன் அவைகளை அவர்கள் கண்டதே இல்லை. சாதாரணமாக எல்லா நடிகர்களும் அரிதாரப் பொடியைத்தான் பூசிக்கொள்வது வழக்கம்; மேனிக்காக அப்ரக் (Mica) பொடியையும் லேசாகத் தூவிக்கொள்வார்கள். புருவம், மீசை முதலியவைகளைக் கரியைக் கொண்டுதான் தீட்டிக்கொள்வார்கள். நல்ல நிறமுள்ளவர்களாயிருந்தால் பௌடர்கூட அநேகமாக உபயோகிப்பதில்லை. அநேகமாக எல்லாருக்கும் குடுமிதானிருக்கும். அக்காலத்தில் "கிராப்"

பண்ணிக்கொள்வதோ முழுத் தலையைப் பெண்கள்போல் வளர்ப்பதோ அவ்வளவு நடமாட்டத்திற்கு வரவில்லை. ஆகையால்

பெண் வேஷக்காரர்கள் முன்குடுமையை மட்டும் மறைக்க 4 விரலகலம் மயிரைக் கொண்டோ, சவுரியைக் கொண்டோ ஒரு அரை டோபா (half wig) பின்னி வைத்துக்கொள்ளுவார்கள். நான் முதன் முதலில் சகுந்தலையாக வேஷம் போட்ட போது இப்படித்தான் செய்தேன். பிறகு தான் முழு டோபா (wig) உபயோகிக்க ஆரம்பித்தேன். நாடகத் தொழிலாளி களுக்குள்ள சௌகரியம் அமெச்சூர் களுக்கில்லாததால் பலவித கஷ்டங்கள் அவர்கள் அனுபவிக்கவேண்டி யிருந்தது.

அந்தக் காலத்தில் அநேகமாகப் புருஷர் கள்தான் ஸ்திரி வேஷம் போட்டுக் கொள்வது வழக்கம். காலம் சென்ற பாலாமணி ஒருத்திதான் நாடகமேடை யில் பெண் வேஷம் பெண்ணே போட்டு நடித்தது. ஆனால் அவளோடு ஆண் வேஷம் தரித்து நாயகனாக நடித்தது ஒரு ஸ்திரீதான்!

ஆண்களும் பெண்களும் நாடகமேடை யில் கலந்து நடிக்கத் தொடங்கினது கொஞ்ச காலத்திற்குப் பிறகுதான். இன் னும் அமெச்சூர் நாடக மேடைகளில் இது அபூர்வம்தான்.

கல்யாணராமய்யர், மஹாதேவ அய்யர் கோனேரிராவ், ராமுடு அய்யர், கோவிந் தசாமி பிள்ளை, ஸீதாராம பாகவதர் முதலியவர்கள் நாடகம் நடத்தின காலத் தில் இப்படித்தானிருந்தது. பிறகு பெண் வேஷம் தரிக்கும் நடிகர்கள் சௌகரியத் தை முன்னிட்டுப் பெண்களைப்போல் தலை மயிரை வளர்த்தார்கள். டோபாவின் அவசியமில்லாமலிருந்ததோடு பொருத்த மாகவும் இருந்தது. அது போலவே நகை கள் தரிப்பதில்கூட நாடகமேடையில் மட்டும்தான் நகைகள் தரிப்பது என் றில்லாமல் எப்போதுமே காதில் கம் மல், கையில் வளைகள் முதலியன தரித்து வந்தார்கள். அவர்களைப் பார்த் தவுடனேயே அவர்கள் நாடகத்தில் "ஸ்திரீ பார்ட்டு"க்காரரென்று சொல்ல முடியும்.

அமெச்சூர் நடிகர்களில் பெரும் பான்மையோர் காதுகுத்திக்கொண்டி ருந்தவர்களாயிருந்ததால் காதில் கம் மல் போடுவது அதிக சிரமமானதாக இல்லை. தலைக்கு மட்டும் தகுந்த டோபா (wig) தயார் பண்ணிக் கொண்டு தங்கள் வீட்டிலிருந்தே வேண் டிய ஆடையாபரணங்களை எடுத்து வந்து நாடகமேடையில் உபயோகிப் பது வழக்கம். சில சமயம் காது குத்திக்கொள்ளாதவர்களோ, அல்லது குத்தின காது தூர்ந்துபோனவர்களோ காதில் நகை யணியவேண்டி வந்தால் குரு நாகப் பட்டையில் தயார் பண்ணின கம் மல்களை ஒட்டிக்கொள்வது வழக்கம். ஸ்பிரிங் (spring) நகைகள் பிற்காலம் தான் உபயோகத்திற்கு வந்தன. அது போலவே மூக்குப் பொட்டுகளும் குரு நாகப் பட்டையில் செய்தவைகளாகத்தா னிருக்கும்.

எங்களுடைய நாடகசபையில் நடந்த ஒரு சம்பவம் எனக்கு ஞாபகத்துக்கு

வருகிறது. சுமார் 45 வருஷங்களுக்கு முன் நடந்த விஷயம். எங்கள் சங்கத்தில் ஒருவருக்குப் பரமசிவன் வேஷம் தரிக்க வேண்டிவந்தது. அதற்குக்காதில் பாம்புக் குண்டலங்கள் போடவேண்டியிருந்தது. அவருக்குக் காதில் துவாரம் இல்லை. காதில் பசைகொண்டு ஒட்டிவைக்கவும் சௌகரியமில்லை. எங்களுக்கு வேஷம் போடுபவர் (Green room director) காதில் துவாரமிருந்தால்தான் நன்றாயிருக்குமென்று அபிப்பிராயம் கொண்டிருந்தார். நடிகரோ நாடகத்திற்காகக் காது குத்திக்கொள்ளத் தயாராயில்லை. கடைசியில் எப்படியாவது ஒட்டவைப்பதாக டைரக்டர் சொன்னதின்பேரில் அதை

யணியச் சம்மதித்தார். வேஷம் போட்டு முடிந்தது. காதில் குண்டலம்போடுவது ஒன்றுதான் பாக்கி. ஒரு கம்பித்துண்டில் அந்தக் குண்டலத்தை இசைத்து வைத்து, நடிகருடைய காதண்டை கொண்டுபோய், காதில் அதை மாட்டும் சமயத்தில் அந்த டைரக்டர் திடீரென்று அந்தக் கம்பித் துண்டின் நுனியைக் கொண்டு காதைக் குத்திக் குண்டலத்தை மாட்டிவிட்டார்.

அப்போது அந்த நடிகருக்கு எப்படி இருந்திருக்கும் என்று நான் கூறவேண்டியதில்லை. செலவில்லாமல் காதுகுத்துக் கல்யாணம் நடந்தேறியது. நாங்கள் எல்லோரும் சிரித்தோம், அந்த நடிகரும் எங்களுடன் சேர்ந்து சிரித்தார்.

அக் காலத்தில் ராஜகுமாரர்களாக நடிப்பவர்கள் "ஜிம்கி ஸூட்" என்று சொல்லப்பட்ட ஜிகினா வேலை செய்த சட்டைகளணிவது வழக்கம். சில "ஜிம்கி" உடைகளில் பலவித வர்ணங்களில் சிறிய கண்ணாடிக் குழாய்களை உபயோகிப்பதுண்டு. அத்தகைய சட்டைகள் மிக்க கனமாயிருக்கும். வெளிச்சத்தில் இந்தக் கண்ணாடிக் குழாய்கள் மின்னும்போது கண்ணுக்குத் தடபுடலாயிருக்கும்.

எங்கள் சங்கத்திலொருவர் ஒரு ராஜகுமாரனாக நடிக்கும்போது மேற்கூறியபடி "ஜிம்கி ஸூட்" அணிந்துகொண்டிருந்தார். அவர் மூக்குப்பொடி போட்டுப் பழக்கமுள்ளவர், பொடி போட்டுக்கொண்ட பிறகு தமது இடது புஜத்தை மூக்கின்மீது இழுத்து மூக்கைத் துடைத்துக்கொள்வது வழக்கம். ராஜகுமாரன் உடை தரித்திருக்கும்போது அவர் பொடி போட்டார். வழக்கம்போல் இடது புஜம் மூக்கின்மீது ஒரு இழுப்பு இழுத்தது. புஜத்தின்மீது இருந்ததோ கண்ணாடித்துண்டு. கன்னத்தைச் சட்டை இழுத்தவுடன் இந்தக் கண்ணாடித் துண்டுகள் மூக்கு நுனிச் சதையில் உறைந்து அதைப் பிய்த்துக்கொண்டுவந்துவிட்டன. ரத்தம் கொட்டத் தொடங்கிற்று. இப்படிப்பட்ட பல உப நாடகங்கள் நிறைந்திருந்தது எங்கள் அமெச்சூர் நாடகங்கள்

நாடகக் கொட்டகைகள் அநேகமாக ஓலைக் கூரைகளால் மூடப்பட்டவைகளா கத்தானிருந்தன; ஒன்றிரண்டு தகரக் கொட்டகைகளுமுண்டு. நாடகமேடை யோ மண்ணும் செங்கலும் கலந்து கட்டப்பட்டவை, அதில் சில இடங்களில் பாதாளத்திலிருந்து பூதங்கள் கிளம்பு வதற்கும் மேடையிலிருந்து திடீரென்று மறைவதற்கும் சௌகரியமாயிருக்க, குழிகள் அமைக்கப்பட்டு, பலகையால் மூடப்பட்டிருக்கும். இந்தப் பலகை சரியாக மூடப்படாததால் சில சமயங்களில் அபாயமேற்படுவதுமுண்டு. ஜனங்கள் உட்காரும் இடம் மிகவும் அசௌகரியானது. தரையில் உட்காருகிறவர்கள் சாக்ஷாத் பூமிதேவியின் மீதுதான் அமர்வார்கள்.

கொட்டகைக்கு வெளிச்சம் மண்ணெண்ணெய் விளக்குகள் மூலம்தான் கிடைக்கும். மேடைக்கு வெளிச்சத்திற்காக முன்பாகமுள்ள இரண்டு தூண்களிலும், மேடையின் ஓரத்திலும் சில விளக்குகள் பிரகாசிக்கும். காஸ்லைட், பெட்ரோல் லைட், இவைகள் கொஞ்சகாலத்திற்குப் பிறகு உபயோகத்திற்கு வந்தன.

காட்சிகளோ (scenes) கேட்கவேண்டாம். பலவிதச் சாயங்களால் திட்டப்பட்ட திரைகள், படுதாக்கள், மிகவும் அநாகரிகமான ரீதியில் உபயோகப்படுத்தப்படும். வடக்கிந்தியாவிலிருந்து வந்த சில நாடகக் கம்பெனியாரின் (Parsee theatre) நாடகங்களைப் பார்த்தபிறகு சிற்சில பரிஷ்காரங்கள் நமது நாடக மேடைகளிலும் செய்யப்பட்டன.

அமெச்சூர் நாடகங்களுக்கு இந்த விஷயங்களில் எவ்வளவு இடையூறுகள் இருந்தன என்று விவரிக்க வேண்டிய அவசியமே இல்லை. சில சமயங்களில் தொழிலாளிகளுடைய மேடைகளையே உபயோகப்படுத்துவார்கள். ஆனால் சாதாரணமாகப் பெஞ்சுகளையோ, மேஜைகளையோ உபயோகப்படுத்தி மேடை தயார் பண்ணுவார்கள். அவைகள் அசையாமலிருப்பதற்குப் பலவித பந்தோபஸ்துக்கள் செய்வார்கள். ஸீன்கள் வாடகைக்கு எடுப்பது வழக்கம். அக்காலத்தில் சொந்தச் சாமான்கள் கைவசமுள்ள அமெச்சூர் நாடக சங்கங்கள் மிகவும் குறைவு. இப்படி அப்போதைக்கப்போது மேஜைகளைக்கொண்டு மேடை அமைப்பதிலேற்படுகிற கஷ்டம் சில சமயங்களில் அபாயகரமாகவும் நேர்வதுண்டு. ஒரு சமயம் எங்கள் சங்கம் சந்திரகாச நாடகம் நடித்தது. மேஜைகளைக்கொண்டு மேடை தயார் பண்ணப்பட்டது. கடைசி காட்சியில் மந்திரி குமாரன் மதனன் இறக்கிறான். அவன் உடலைச் சுற்றிப் பிசாசுகள் குதித்து ஆரவாரமிடுகின்றன. மேஜைகள் சரியாக சேர்த்துக் கட்டப்படாதபடியால் இடைகள் இருந்தன. மேஜைகளும் ஆடிக் கொண்டிருந்தன. இறந்துகிடந்த மதனனின் தொடைச் சதை இரண்டு மேஜைகளின் இடையில் அகப்பட்டுக்கொண்டது. பிசாசுகள் குதித்தாடினபோது, மேஜைகள் அங்குமிங்கும் அசையத் தொடங்கின. அப்போது மதனன் வேஷம் தரித்த நடிகருடைய நிலை எப்படியிருந்திருக்குமென்று நினைத்துப் பாருங்கள்! நல்ல வேளையாக அந்தக் காட்சி அதிகம் நீளவில்லை; நீண்டிருந்தால் இறந்த மதனன் துள்ளிக் குதித்து எழுந்து, பிசாசுகளை மனமாறப் புடைத்திருப்பான்!!

மேலும் ஹரிச்சந்திர நாடகம், ராம நாடகம், வள்ளி நாடகம், துரௌபதி வஸ்திராபஹரணம், பாரிஜாத புஷ்பஹரணம் முதலிய புராண சம்பந்தமான கதைகளைத்தான் சாதாரணமாக நடிப்பதற்கு எடுத்துக்கொள்வது வழக்கம்.

நாடகங்கள் ராத்திரிதான் நடக்கும்; சுமார் 9 அல்லது, 10 மணிக்கு ஆரம்பமாகி விடியற்காலை 3 மணி வரை கூட நடக்கும். சில சமயங்களில் இரவு முழுவதும்கூட நடக்கும். நான் கண்ட ஒரு நாடகம் முடிந்தபோது பொழுது விடிந்தே விட்டது.

இந்தக் காலத்தில்போல ஒரே நாடகத்தைத் திரும்பத் திரும்ப, சேர்ந்தாற்போல ஒரு மாஸம் இரண்டு மாஸம் போடுவதென்பது கிடையாது. தினம்தோறும் நாடகம் நடிப்பதும் அபூர்வம். அநேகமாக ஒரு வாரத்தில் மூன்றுநாள்தான் நாடகம் நடைபெறும். இரவு முழுவதும் நடிப்பதென்றால் தினம் நாடகம் போட முடியுமா? முடியாதுதான். சாயந்திர நாடகம் (matinee) என்பது அக்காலத்தில் அபூர்வத்திலும் அபூர்வம். அமெச்சூர்கள்தான் சில சந்தர்ப்பங்களில் மாலை வேளை நாடகம் தொடங்குவார்கள். ஹரிச்சந்திர நாடகம்போன்ற பெரிதும் நீண்ட கதைகளைப் பல பாகங்களாக வகுத்து அநேக நாட்கள் நடிப்பார்கள். ஹரிச்சந்திர நாடகத்தில் மயான காண்டம்

என்றால் வெகு பிரசித்தமானது. ஒரு இரவு முழுவதும் சந்திரமதி தன் மகனைத் தன் மடியிற் போட்டுக்கொண்டு புலம்புவாள். அதற்குக் கணக்கில்லாத ஜனக் கூட்டம் திரண்டு வரும். இப்படிப் புலம்புவதில் கியாதி பெற்ற சில நடிகர்களை அந்த மயான காண்டத்தன்று நடிக்கப் பிரத்யேகமாக ஏற்பாடு செய்வதுண்டு. இக்காலத்தில் இந்த ரீதிகளை நினைத்தாலே ஆச்சரியகரமாக இருக்கும்.

அக்காலத்து நாடகங்களில் சங்கீதத்திற்கு முக்கிய ஸ்தானம் கொடுக்கப்பட்டு வந்தது. நாடகங்கள் எல்லாமே சங்கீத நாடகங்கள்தான். சமயோசித மென்பதைக்கூடக் கவனிக்காமல் பாட்டுப் பாடுவார்கள். மேடையில் பிரவேசிக்கும் போது ஒரு பெரிய பாட்டு, மேடையை விட்டுப் போகும்போது ஒரு பாட்டு. இவைகள் பெரிய புராதன கீர்த்தனைகளாகவும் இருக்கும். இவைகளுக்கு எண்ட்ரன்ஸ் ஸாங்கு (entrance song) எக்ஸிட் ஸாங்கு (exit song) என்று பெயர்கள் கூட வழங்கி வந்தன. அமெச்சூர் நாடகங்களில்கூட இந்தப் பழக்கம் கொஞ்சகாலம் இருந்து வந்தது. இப்போது ஸினிமாவில் வழங்கி வருகிற துக்கடா மெட்டுகள் அந்தக் காலத்தில் அபூர்வம். நல்ல உயர்தரமான சங்கீதமே உபயோகத்திலிருந்தது. விருத்தங்களைப் பல ராகங்களில் சாவதானமாகப் பாடுவது சகஜம். $4\frac{1}{2}$ கட்டை 5 கட்டை ச்ருதியில் கணீரென்று பாடுவார்கள். "இந்திர சபை" முதலிய நாடகங்களில் கூடப் பாட்டுகள் உயர்தரமாக இருக்கும். நாடகத்துக்குச் சம்பந்தமில்லாமல் பல பாட்டுக்களைப் பாடுவதுமுண்டு. ஜனங்கள் இதைக் கோருவது முண்டு. அவர்களுக்குப் பிடித்தமான பாட்டைத் திரும்பத் திரும்பப் பாடச் சொல்லுவார்கள். நடிகர்கள் பாடவும் பாடுவார்கள். நாடகத்தில் ஏதாவதுஒரு காட்சியில் ஒரு பாத்திரம் இறக்க நேர்ந்தாலும், அந்தப்பாத்திரம் நடிப்பவன் நல்ல பாடகனுயிருந்தால், அந்தக் காட்சிமுடியும்போது அவன் எழுந்திருந்து நின்று, ஏதாவது "எக்ஸிட் ஸாங்கு" (exit song) பாடிவிட்டுத்தான் போக வேண்டுமென்று சில சமயங்களில் சபையோர்கள் (அதிலும் தரை மகா ஜனங்கள்) கட்டாயப் படுத்துவார்கள், அந்த நடிகனும் பாடிவிட்டுத்தான் போவான்! இல்லாதுபோனால் கொட்டகையில் அமர்க்களம்தான்!

எவ்வளவோ குற்றங் குறைகளிலிருந்தும் மொத்தத்தில் அந்த நாடகங்களை அந்தக் காலத்தில் ஜனங்கள் ரசித்துவந்தார்கள். அப்போதுள்ள சௌகரியங்களுக்குத் தக்கபடி ஏற்பாடுகள் நடந்து வந்தன. ஆனால் நடிப்பில் நல்ல திறம் வாய்ந்த அநேக நடிகள் நடித்ததினால் குற்றங் குறைகள் அவ்வளவுதூரம் பாதிக்கவில்லை. மேலும் அந்த நடிகர்களுடைய பேச்சுத் திறம் மிகவும் பாராட்டத் தக்கதாக இருந்தது. அக்காலத்தில் தொழில்முறை நாடகக் கம்பெனிகளில் முன்கூட்டி ஒத்திகை (rehearsal) என்பது அபூர்வம். ஒரு நாடகத்தில் வரும் பிரதான பாத்திரங்களாக நடிக்கும் பிரமுகர்கள் நாடகமேடையில்தான் சந்திப்பார்கள். சுமாராக நாடகத்தின் போக்கு எல்லாக் கம்பெனிகளிலும் ஒன்றுகத்தான் இருக்குமாதலால் எந்த எந்தக் காட்சியில் என்ன என்ன பாகங்கள் நிகழுமென்று அனுபவமுள்ள நடிகர்களுக்குத் தெரியும். ஆனால் சம்பாஷணைகளும் பாட்டுகளும் நடிகர்களுடைய மனோதர்மப்படிதான் இருக்கும். சில சமயங்களில் சம்பாஷணையில் போட்டி ஏற்படுவதுண்டு. அப்படி ஏற்பட்டுவிட்டால் அந்தக் காட்சி எப்போது முடியுமென்றே சொல்ல முடியாது. அதேமாதிரி பாட்டிலும் போட்டி வரலாம். மாறி மாறிப் பாடித்தள்ளிவிடுவார்கள். வாக்குவாதங்கள் பேச்சிலிருப்பதுபோய் பாட்டிலேயே நடக்கும். சபையோரும் ரசிப்பார்கள்.

மேலும் நாடகமேடை நடை என்று ஒருவித நடை நடிகர்களுக்குள் பழக்கத்திலிருந்தது. முனிசாமி நாயுடு நடை, கோவிந்தசாமிப் பிள்ளை நடை, தர்மலிங்கம் பிள்ளை நடை என்றெல்லாம் பல ரக நடைகளுண்டு. முதன் முதலில் "அயன்" ராஜா பார்ட்டுக்காரர் மேடையில் நுழையும்போது தமக்குரிய மேடை நடையில் (Stage gait) மேடையின் குறுக்கே மூன்று நான்கு தடவைகள் அங்குமிங்கும் நடந்துவிட்டுத்தான் தம் நடிப்பைத் தொடங்குவார். இதைக் கேட்டால் நமக்கு ஆச்சரியமேற்படலாம். ஆனால் நாடகமேடையில் அழகாகப் பொருத்தமாக நடப்பது ஒரு கலையின் அம்சம். நமது ஸினிமாப் படங்களில் நடிக்கும் அநேக "நக்ஷத்திரங்களுக்கு" இந்த ரகசியம் இன்றும் புரியவில்லை. சிலர் நடப்பது விகாரமாகவே இருக்கிறது.

பெரும்பாலும் ஆண்கள்தான் பெண் வேஷத்தில் நடிப்பார்கள் என்று சொன்னேன் அல்லவா? ஆனால் சிலர் பெண் வேஷம் நடிப்பதைப் பார்த்தால் அதிசயப் படும்படியாயிருக்கும்; ஸ்திரீகளே கண்டு பிரமிக்கும்படி இருக்கும். பெண்மை தத்ரூபமாக விளங்கும்படி நடிப்பார்கள். பகலில் நேரில் பார்த்தால் ஒரு தினுசாகத் தோன்றும் நடிகர்கள்கூட இரவில் வேஷம் தரித்து ஸ்திரீயாக நடிப்பதைப் பார்த்தால் நமது கண்களை நம்ப முடியாதபடி அவ்வளவு உயர்தரமாக இருக்கும். காலம்சென்ற பரமகுடி அரங்கசாமி ஐயங்கார், பெண் வேஷத்தில் நடித்ததை நான் முதன் முதலில் பார்த்தபோது அவருக்குச் சுமார் 16 அல்லது 17 வயதுதானிருக்குமென்று நினைத்தேன். அவர் நடிப்பும், பேச்சும், வேஷமும், குரலினிமையும் மிக்க பொருத்தமாய் இருந்தன. சில நாட்களுக்குப் பிறகு பகலில் அவரை நேரில் பார்க்க நேர்ந்தது. என்னைத் தூக்கிவாரிப் போட்டது; அம்மைத் தழும்புள்ள முகம், நரைத்த தலைமயிர், ஒரு சிறிய கூனலும் கூட. ஆனால் காதில் வைரக் கம்மலும், கையில் தங்கவளையுமிருந்தன. சுமார் 35 வயதிற்குக் குறையாது என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். என்ன ஆச்சரியம்! அக்காலத்தில் வேஷம் போட்டுக்கொள்வதற்கு வேண்டிய ஸாதன சௌகரியங்கள் எவ்வளவோ குறைவாக இருந்தும் இது சாத்தியமாயிருந்தது. காரணம் நடிப்பின் திறமைதான். "வைத்தா" என்ற ஒரு ஸ்திரீவேஷ நடிகர் பகலில் பார்த்தால் இவரா பெண்வேஷம் தரிக்கப்போகிறார் என்று சொல்லும்படியாய் இருப்பார். ஆனால் அவர் நடிக்கும் போது நம்மையே மறந்து அவர் நடிப்பிலீடுபடும்படியாக இருக்கும். ஒரு தடவை அவர் ஸதார நாடகத்தில் ஸதாரமாக நடிக்கும்போது திருடர்கள் கையில் அகப்பட்டுத் தம் ஆபரணங்களை யெல்லாம் கழற்றிக்கொடுக்கவேண்டிய கட்டம் வந்தது. எல்லா ஆபரணங்களையும் கொடுத்துவிட்டார். கையில் ஒரு மோதிரம்தான் மீதி. அதையும் கொடுக்கும்படி திருடர்கள் அதட்டிக் கேட்டார்கள். அந்த மோதிரத்தை அவர் கழற்றும் போது நடித்த நடிப்பு நாற்பது வருஷங்கள் சென்றபிறகுகூட என் மனக் கண்ணில் அப்படியே நிற்கிறது. விரலில் பிகுவாகப்படிந்து சுலபமாகக் கழற்ற முடியாத ஒரு மோதிரத்தைக் கழற்றும்போது முகத்தில் தோன்றும் சுளித்தல், பல்லைக் கடித்தல், பெருமூச்சு விடுதல் முதலிய சகலவித சேஷ்டைகளையும் காட்டினார்.

ஆனால் இக்காலத்திலோ பெண்வேஷம் தரிக்கப் பெண்களே முன் வந்திருக்கிறார்கள். ஆண்கள் பெண் வேஷத்தில் நடிக்கக்கூடாது, பெண் பாத்திரம் நடிக்கப் பெண்கள்தான் வேண்டும் என்கிற அபிப்பிராயம் பலமாக இருக்கிறது. அது நியாயமாக இருக்கலாம். ஆனால் நமது வாழ்க்கையில் சில சமயங்களில் பெண் வேஷத்தில் ஆண்களையும் ஆண் வேஷத்தில் பெண்களையும் பார்க்கிறோம்! நாடகத்தில் நடிப்புத்தான் பிரதானம். நடிப்பு என்பது ஒன்றைக்கொண்டு அது இல்லாததைக் காட்டுவது. நமது வீடுகளில் தினசரி நடக்கும் சம்பவங்களை அப்படியே நாடக மேடையில் நடத்தினால் அது நடிப்பு ஆகாது. இந்த விஷயத்தின் உண்மையான தத்துவத்தை நன்கு ஆலோசித்துணர்வது நலம். இப்போது நாடக மேடைகளிலும் ஸினிமாப் படங்களிலும் நடிக்கும் சில ஸ்திரீகள் ஸ்திரீகளாக நடிப்பதைக் காட்டிலும் உயர்தரமாக ஸ்திரீ வேஷம் நடித்த ஆண் நடிகர்களை நான் கண்டிருக்கிறேன். அவர்கள் நடிப்பதைப் பார்த்து ஸ்திரீகளே ஆச்சரியப்பட்டு பெண்கள் இப்படியல்லவா இருக்க வேண்டும் என்று தங்களுக்குள் கூறிக்கொண்டதை நான் கேட்டுமிருக்கிறேன். ஆனால் எல்லாருக்கும் இந்தத் திறம் இருக்கும் என்று சொல்லமுடியாது.

அமெச்சூர் நாடகங்களிலேயும் அநேக மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தற்கால சௌகரியங்களை நன்குபயோகப்படுத்திக்கொள்கிறார்கள். ஆனால் இந்த ஸினிமா தலையெடுத்த பிறகு நாடகத்திற்கே கொஞ்சம் தலைவலி ஏற்பட்டுத்தானிருக்கிறது. இக்காலத்து நாடகங்கள் கூட ஸினிமா முறைகளைக் கையாளத் தொடங்கி யிருக்கின்றன. அது தடுக்கமாளாத ஒரு அவசியமாகவே நேர்ந்துவிட்டதுபோலும்.

நாடகத்தின் வருங்கால நிலை எப்படியோ, ஸினிமா வழிகளை விலக்கித் தனக்கேற்ற துறைகளிலேயே முன் செல்லப் போகிறதோ, அல்லது ஜீவ ஸினிமாக்களாக (life cinema)த் தீரப்போகிறதோ யார் கண்டார்கள்! * * *

சௌந்தரியவதி கண்ணும்பா

தன் சருமத்தை வசீகரமாக வைத்துக்கொள்ள ஏன்

லக்ஸ் டாய்லட் சோப்பை

விரும்புகிறார் என்று சொல்கிறார்!



"அழகு பராமரிப்புகளிடையே மிக சுலபமானதும், சிறிதளவே செலவுள்ளதும், திண்ணமாக பலனளிப்பதும் இதுவே. நான் முகம் கழுவும்போதெல்லாம் இதை உபயோகிக்கிறேன். இது வதனத்தை மிக மிருதுவாகவும், தொடுவதற்கு மழமழப்பாகவும் இருக்கச் செய்கிறது. லக்ஸ் டாய்லட் சோப்பின் ரமமியமான பரிமளத்தை நான் மிகவும் விரும்புகிறேன்."

இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தையும் வசீகரமாக செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 238-172 TM

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான தழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளைதெரு,
தெப்பக்குளம் போஸ்ட்.

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்கரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண் கோ., பம்பாய்-4.

புண்ணியமும் பாவமும்

ஆர். எஸ்.

பேப்பரைப் பிரித்தேன். கல்கத்தா மெயில் கவிழ்ந்துப்போன செய்தியும் அதைப் பற்றிய புகைப்படங்களுமே எங்கும் காணப்பட்டன.

சிறிய புஷ்பமானாலும்கூட அதற்கு வாசனை உண்டு. அதைப்போல சிறிய விஷயங்கள் கூட நம் நினைவுத் திரையிலிருந்து அழிந்து போவதில்லை. அப்படியிருக்கும்போது என்னால் அந்தச் சம்பவத்தை, அவ்வளவு முக்யமான அதை, எப்படி மறக்க முடியும்?

* * *

மூன்று வருஷங்களுக்கு முன்னால் உத்தியோகத்தில் நான் சேர்ந்த புதிதில், அரசாங்கத்தார் என்னைப் பம்பாய் எல்லையில் அகதிகளுக்கென்று பிரத்தியேக டாக்டராகப் போட்டிருந்தார்கள். தினந்தோறும் காலையிலிருந்து மாலை வரை பரிதாபம் நிறைந்த அவர்கள் முகத்தைப்பார்த்து, அவர்கள் சொல்லும் சோகக் கதைகளைக் கேட்டு மருந்து கொடுத்து வருவதற்கே எனக்குப் பொழுது சரியாக இருந்தது.

ஒருநாள் இரவு மணி பத்து இருக்கலாம். வழக்கமாக எட்டரை மணிக்கே வரவேண்டிய மெயில் பத்தாகியும் வரவில்லை. என் மனம் எண்ணாததெல்லாம் எண்ணத் தொடங்கியது. பத்தரைமணி இருக்கும். அரைத்தூக்கம். டெலிபோன் மணி அடித்தது.

ஸ்டேஷன் மாஸ்டர் பேசினார்.

“ஸார்! மெயில் நேரம் கழித்து வருகிறது. இருபதுமைலுக்கு முந்திய ஸ்டேஷனில் ரஸாக்கர்கள் தாக்குதலாம். காயம்பட்ட பிரயாணிகள் குற்றுயிராக வந்து சேருகிறார்கள். உடனே ஸ்டேஷனுக்கு வரவும்.”

தகுந்த உதவியுடன் உடனே போனேன். நாங்கள் போவதற்கும் மெயில் வருவதற்கும் சரியாக இருந்தது.

அந்த விபத்தில் சிக்குண்டவர்கள் சுமார் இருபது பேர் இருக்கலாம்.

ஒவ்வொருவராகப் பார்த்துக் கொண்டே வந்தேன். பக்கத்திலிருந்தவன் விளக்கைத் தூக்கிப் பிடித்தான். அவள் முகத்தில் ஒளி பரவியது. அவளுக்குச் சுமார் பதினெட்டு வயது இருக்கலாம். அழகும் இளமையும் அவள் உடலை மெருகிட்டன. கண்கள் திறந்து திறந்து மூடியபோது எனக்குக் கண் சிமிட்டும் தாரகைகளின் ஞாபகம் வந்தது.

“டாக்டர்...... குழந்தை......”

திரும்பினேன். ஒரு சிறுகுழந்தை, ஒரு வயது கூட நிரம்பாதது, விபத்துக்குள்ளாகி இருந்தது.

“நான் கவனித்துக் கொள்ளுகிறேன். உன்... உன்காலை நீட்டு.”

அவள் முழங்காலில் பலமான அடி. சரியாக கவனிக்காமற் போனால் கால் முடமாகிவிடும். அழகுத் தேவதை போன்ற இவள் கால் நொண்டியாகி விட்டால் இவள் வாழ்க்கை என்ன கதியாகும்?

“இது கொஞ்சம் முக்கியமான கேஸ். இந்தப் பெண்ணையும் குழந்தையையும் ஸ்பெஷல் வார்டுக்குக் கொண்டு போங்கள்” என்று சொன்னேன்.

அவள் நிமிர்ந்து என்னை ஒருதடவை நோக்கினாள். என்னை ஊடுருவிப் பார்த்த அந்த ஒரு கணப் பார்வையில் சொல்ல முடியாத நன்றியறிதல் ததும்பியது.

நான் பெருமூச்செறிந்தேன்.

2

மறு நாள் காலை. விடிந்து அதிக நேரம் ஆகவில்லை. காலைக் கதிரவனின் பொற்கதிர்கள் அறைக்குள் புகுந்து விளையாடின. என் மனம் சுழன்று சுழன்று வந்தது. கைப்பிடியில் சிக்காத புகையைப் போல உருவம் கொடுக்க இயலாத நினைவு என் மனதிற்குள் குமுறியது.

நர்ஸ் உள்ளே வந்தாள். “டாக்டர்! அக் குழந்தை இறந்து விட்டது!”

ஒரு கணம் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. எதிர் பாராதது ஒன்றும் நிகழ்ந்து விடவில்லை. அதுவும் ஒரு டாக்டரின் வாழ்க்கையில் சாவும் பிறப்பும் சகஜமானது. துயரப்படுபவர்களைப் பார்த்துப் பார்த்து அலுத்

துப்போன அவர்களுக்கு உணர்ச்சி ததும்புவது கூட ஆச்சரியமான விஷயந்தான்.

என் மனதை அரித்த கவலை வேறு. அவளுக்கு—அந்தப் பெண்ணுக்கு—என்ன பதில் சொல்வது?

"இதை அந்தப் பெண்ணுக்குத் தெரிவிக்க வேண்டாம்" என்று சொல்லிவிட்டு வார்டுக்குப் புறப்பட்டேன்.

அவள் படுத்துக் கொண்டிருந்தாள். உள்ளே நுழையும் போது என் கால்கள் சிறிது தயங்கின. நான் வரும் சப்தத்தைக் கேட்டு அவள் கண் விழித்தாள். அவளுடைய பார்வையைச் சந்திக்கும் துணிவில்லாமல் என் பார்வையைத் தாழ்த்திக் கொண்டேன்.

அவள் கூந்தல் கலைந்து நெற்றியின் மேல்படிந்து கிடந்தது. பலவீனமான அந்த நிலைமையிலும் அவளுடைய பூரணமான அழகு யாரையும் கவர்ந்து இழுப்பதாக இருந்தது.

"குழந்தைக்கு உடம்பு எப்படி இருக்கிறது டாக்டர்?"

"தே...தேவலை."

பொய் சொல்லும்போது என் நாவு கூசிற்று.

நான் அவள் அருகே போய் நின்றேன். அவளை நோக்கி,

"உன் பெயர் என்ன?" என்று கேட்டேன்.

"அருணா"

"உன்னை ஒன்று கேட்கிறேன். தப்பாக நினைத்துக் கொள்ளாதே. அந்தக் குழந்தை யாருடையது?"

ஒரு கணம் அவள் முகம் மாறியது. எத்தனையோ எண்ணங்கள் அந்த நேரத்தில் அவள் முகத்தில் நிழலிடுவதை நான் கண்டேன். கலங்கிய அவள் மன நிலை எனக்கு விளங்கியது.

"யாருடையதானால் என்ன டாக்டர்?"

"அருணா! உன்னுடைய பிரத்தியேகமான விஷயங்களில் தலையிட நான் யார்? அதைப் பற்றிக் கேட்க எனக்கு உரிமை ஏது? என்னை மன்னித்து விடு."

"இல்லை. இல்லை. அப்படிச் சொல்லாதீர்கள். உங்களுக்கு வேண்டியதை நீங்கள் கேட்கக் கூடாதா?"

"அப்படியானால் இன்னும் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன் அருணா! உன் கணவர் எங்கே இருக்கிறார்? அவர் விலாசம் என்ன?"

"என்ன? என் கணவரா? எங்கே இருக்கி... ரு...ரா?" பேசும்போதே அவள் குரல் தழுதழுத்தது. படுக்கையில் தலையைப் புதைத்துக் கொண்டு அவள் விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

இந்தக் கேள்வியை நான் ஏன் எதற்காக அவளைப் பார்த்துக் கேட்டேன்? என் மனதில் அதுகாறும் அனுபவித்திராத வேதனை உண்டாயிற்று.

"அருணா! என்னுடைய கேள்வி உன் மனதைப் புண்படுத்தி யிருந்தால் என்னை மன்னித்து விடு. நான் என்னுடைய கடமையைச் செய்தேன். அது உன்னுடைய மன நிம்மதியைக் கெடுப்பதாக இருந்தால் அப்படி நடந்துகொள்ள வேண்டிய அவசியம் எனக்குக் கிடையாது."

சட்டென்று அவள் கண்ணீர் நின்றது. படுக்கையில் எழுந்து உட்கார்ந்த வண்ணம் என்னை ஒரு முறை பார்த்தாள். சிரமத்துடன் உதடுகளில் புன்னகையை வருவித்தவாறே. "டாக்டர்! நான் மணமாகாதவள்." என்றாள்.

என் உடல் புல்லரித்தது.

3

அருணாவின் கால் குணமடைந்து வந்தது. வார்டிலிருந்து அவள் போக வேண்டிய நாள் வந்ததும், அவளைக் கொஞ்ச நாள் என் வீட்டில் தங்கியிருந்து பூரணமாகக் குணமடைந்த பின் போகலா மென்று சொன்னேன். அவளும் ஒப்புக்கொண்டாள்.

குழந்தையை இழந்த துக்கம் அவளால் தாங்க முடியாததாக இருந்தது. அடிக்கடி அவள் கண்கள் கலங்கின. யாரோ ஒருவருடைய குழந்தைக்காக அவளுக்கு ஏன் இவ்வளவு துக்கம்?

அவளுடைய வாழ்க்கையே எனக்குப் புரியாத புதிராக இருந்தது. "அவள் யார்? அவளுக்கு மணமாகவில்லை யென்றால் அவள் பெற்றோர்கள் எங்கே? அந்தக் குழந்தை யார்?"

இதை யெல்லாம் பற்றி நான் ஏன் கவலைப் படவேண்டும்? என்னைப் பொறுத்த வரையில் அவள் என்னிடம் சிகிச்சைக்கு வந்தவள். நான் அவளுக்கு வைத்தியம் செய்ய வேண்டியவன். அவ்வளவுதான். ஆனால் என் மனம் அந்த வரம்புக்கு அடங்கவில்லை. என்னை மீறியது.

அவளுக்கும் இந்தப் புது வாழ்க்கையில் கொஞ்சம் சந்தோஷம் ஏற்பட்டிருக்க வேண்டும். நான் செய்ய வேண்டாமென்று சொன்னாலும் அவளே சில சமயம் சமையல் செய்வாள். என் அறையின் அலங்காரம் நாளுக்கு ஒரு விதமாக இருக்கும்.

ஒரு சாதாரண அறையில் யாராவது ஒரு அழகிய படத்தைக் கொண்டுவந்து மாட்டி வைப்பது போல அருணா என் வாழ்க்கையில் பிரவேசித்திருந்தாள். வைத்தியத்தைத்தவிர மற்ற எதையும் கடமை என்று செய்து கொண்டிருந்த எனக்கு வீட்டுக்கு வருவதிலும் ஒரு ஆர்வம் ஏற்பட்டது.

அவளைக் கொஞ்சம் சீண்டி விட்டால் போதும். ஆவேசத்தோடு பேச ஆரம்பித்து விடுவாள். அத்தகைய சந்தர்ப்பங்களில் அவள் வாதங்கள் சரியா இல்லையா என்பதைக் கவனிப்பதைவிட அவள் அழகைப் பார்ப்பதுதான் எனக்கு ஆனந்தமாக இருக்கும். காதுகளின் மேல் வளைந்து செல்லும் அவளுடைய வாரிய கூந்தல் என் நெஞ்சை அள்ளும். அதோடு அவள் கோபத்தோடு பேச ஆரம்பித்து விட்டால் வலது கையால் தன் நீண்ட பின்னலை எடுத்து இடது கையில் அடித்துக் கொண்டே பேசுவாள். அதைக் கண்டு என் நெஞ்சம் மகிழ்ந்து பொங்கும்.

மகுடியின் முன்னல் சீறும் ஸர்ப்பத்தின் ஞாபகம் வரும்.

இருந்தும் அவள் மனதில் ஏதோ குறை இருந்தது. அவளுடைய உறுப்பிலிருந்த குறையைத்தான் என்னல்போக்க முடிந்ததே தவிர அவள் மன நோயை அறிந்து சிகிச்சை செய்ய என்னல் முடியவில்லை.

சில சமயங்களில் அவளுக்குத் தெரியாமல் அறைக்குள் நுழையும் போது அவள் ஜன்னலுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு எதையோ நினைத்துக் கண்ணீர் பெருக்கு வதை பார்ப்பேன். என்னைக் கண்டதும் அவள் சட்டென்று முகபாவத்தை மாற்றிக்கொண்டு "எத்தனை நாழியாக இப்படி நின்று கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்பாள்.

அவளிடம் எல்லாவற்றையும் கேட்டுவிடுவது என்று துணிவாக வந்த நான் எல்லாவற்றையும் மறந்து "இப்போது தான் வந்தேன்" என்று எப்படியோ சொல்லி முடித்து விடுவேன்.

கால் சரிப்பட்டு வருவதற்காக அவள் நடந்து பழகவேண்டியிருந்தது. அதற்காக சாயந்திர வேளைகளில் அவளை அழைத்துக் கொண்டு உலாவப்போவேன். சாதாரணமாக பேசிக் கொண்டே வருபவள், திடீரென்று மௌனியாகிவிடுவாள். நான் ஏதாவது கேட்டால் சேலைத் தலைப்பை விரலில் சுற்றிக்கொண்டே ஏதாவது பதில் சொல்வாள்.

"என்ன அருணு, எங்கே ஞாபகம்?" என்று கேட்டால் கனவிலிருந்து விழித்தவளைப்போல் கால் நகத்தால் தரையைக் கீறியவண்ணம், "உம்! என்ன கேட்டீர்கள்?" என்று திருப்பிக் கேட்பாள்.

அவள் சுபாவம் எனக்கு மர்மமாக இருந்தது. அவளைப்பற்றிய எதுவும் எனக்கு அறிந்துகொள்ளக்கூடியதாக இல்லை. இதனுல் என் ஆவல் அடங்கவில்லை. பின்னும் அதிகமாயிற்று.

இரவில் படுக்கையில் படுத்ததும் என்னவெல்லாமோ எண்ணுவேன். இத்தனைநாள் என் வாழ்க்கை எப்படி இருந்தது? இப்போது எப்படி ஆகிவிட்டது? குளத்தில் எவ்வளவு தண்ணீர் இருந்தாலும் அது தேங்கித் தான் இருக்கும்; ஆற்றுநீரின் சோபை அது முழங்காலளவுக்கு இருந்தாலும்கூட அதற்கு வராது. இத்தனைநாள் என் வாழ்க்கை வெறும் தேங்கிய நீராகத்தான் இருந்தது. ஆற்று நீரின் சோபை இப்போதுதான்.........

மனம் கட்டற்று ஓடும். சிற்சில சமயங்களில் ஒரு விஷயத்தை நினைத்துநான் தூங்க முடியாமல் திண்டாடியதுண்டு. அருணு என்னேடு எத்தனை நாளைக்கு இருக்க முடியும்? கொஞ்சம் நாளில் அவள் என்னைப் பிரிந்து போக வேண்டியவளல்லவா?

அதை என்னல் நினைக்கவே முடியவில்லை. அப்படி நினைக்க மனம் மறுத்தது. அப்படி மீறி நான் நினைத்தால் என் நெஞ்சில் விவரிக்க இயலாத வேதனை உண்டாயிற்று. வெறும் பாலைவனமாகி யிருந்த வாழ்க்கை அப்படியே இருந்துவிட்டிருந்தால் யார் அதைப்பற்றிக் கவலைப்படப்போகிருர்கள்? ஆனல் அதுவே பூஞ்சோலையாக மாறின பிறகு மறுபடியும் பாலைவனமாகிவிடுவதை என்னல் எப்படிச் சகித்துக்கொள்ள முடியும்?

4

சாயந்திரம் வீட்டுக்கு வந்தேன். தேநீர் அருந்திவிட்டு மேஜையருகில் போனேன். மேஜையின் வலது பக்கத்தில் கிழிந்த கடுதாசித் துண்டுகள் நிறைந்த கூடை என் கண்ணில் தென்பட்டது. காலையில் தான் நான் அதைக் காலிசெய்தேன். அதில் மறுபடியும் அவ்வளவு குப்பை எப்படி வந்தது?

அகப்பட்ட சில துண்டுகளைத் தனியாகப் பொருத்திப் பார்த்தேன். அருணுவின் எழுத்துத்தான் அது!

"அன்புள்ள—" "புண்பட்ட..." "மனமாரக் காதலிக்..." "தவறிவிட்..." "மன்னியுங்கள்." எல்லாத் துண்டுகளையும் சேர்த்து வைத்துப் படிக்கவேண்டிய அவசியம்கூட ஏற்படவில்லை. என்னல் என்னை நம்பமுடியவில்லை.

அன்று வெளியே உலாவப் போனபோது அவள் என்கூடச் சரியாகப் பேசவில்லை. அடிக்கடி அவள் நினைவு கலைந்து போயிற்று. காற்றுவாக்கில் மிதந்து போகும் பட்டத்தைச் சொடுக்கி இழுக்கும் சிறுவனைப் போல அடிக்கடி நான் அவளது கவனத்தைத் திருப்ப வேண்டியிருந்தது.

ஆற்று மணல் ஓரமாக உட்கார்ந்தோம். அவள் என்னுடன் பேசவில்லை, நான் எங்கேயோ பார்த்துக்கொண்டிருந்தேன். அவள் மணலில் எதையோ கிறுக்கிக் கொண்டிருந்தாள். "ஏதாவது ஒன்றில் மனத்தைச் செலுத்தினல்தான் துன்பத்தை மறக்க முடியும். அவளும் அப்படித்தான் செய்கிருள்" என்று எனக்குத் தோன்றியது. அவள் எதையோ எழுதி அழித்துக் கொண்டிருந்தாள். அது என்னவென்று பார்க்கவேண்டுமென்ற ஆசை என்னைத் தூண்டியது. அவ

ளுக்குத் தெரியாமல் நான் பார்க்கும்போதே அவள் அதைச் சட்டென்று அழித்தாள். இருந்தபோதிலும் அதை நான் பார்த்துவிட்டேன். அது என் பெயர்!

சட்டென்று அவள் பேச்சை மாற்ற விரும்பினுள். ஆனுள் அவள் வாயிலிருந்து தெறித்து விழுந்த வார்த்தைகள் அவ்வளவு சாதாரணமானதாக இருந்துவிட வில்லை, அவள் மனப்புண் நான் உணரக் கூடியதாக இருந்தது.

"இதோ பார்த்தீர்களா? மஞ்சள் வெய்யில் பொன்னிறமாக எவ்வளவு அழகாக இருக்கிறது. ஆனுல் எவ்வளவு நாழிகைக்கு? இதோ இருள்வந்து சூழ்ந்ததும் ஒரே அந்தகாரம்தான். அநேகமாக எல்லோருடைய வாழ்க்கையும் இப்படித்தானே இருக்கிறது?"

"அருணா!"

குனிந்த தலையை நிமிர்த்த அவளுக்குத் துணிவு இல்லை.

கொஞ்ச நேரம் கழித்து அவள் தலை நிமிர்ந்தபோது பார்த்தேன். அவள் கண்கள் கலங்கி இருந்தன. அவள் எழுந்து நடந்தாள். நானும் பேசாமல் நடந்தேன். இருவரும் வெகுதூரம் நடந்துவிட்டோம். நடுவில் இரண்டொரு தடவை நான், "இனிமேல் திரும்புவோமே!" என்றேன். ஆனால் அது காதில் விழாததுபோல் அவள் மேலும் போய்க் கொண்டே இருந்தாள்.

வீட்டுக்குத் திருப்பிய போது நன்றாக இருட்டி விட்டது. இருட்டில் வாசற்படியில் அவள் கால் தடுக்கியது. கீழே விழுந்துவிடப் போகிறாளே என்று அவளைப் பிடித்துக் கொண்டேன்.

அவளை ஸ்பரித்த அந்த முதல் க்ஷணம்! அவள் விழவில்லை; அவளுக்குக் காயம் ஒன்றும் படவில்லை என்று என் மனம் சந்தோஷம் அடைந்தது. அதற்கு அடுத்த க்ஷணம்! அப்போது ஏற்பட்ட அநுபவம் என்னுள் அலை மோதியது. சாப்பிடும் போதும், சாப்பாட்டுக்குப் பிறகு பேசிக் கொண்டிருந்த போதும், அவள் தன் அறைக்குப் போன பிறகு பத்திரிக்கை படிக்கும்போதும்–படிக்க முயலும் போதும் - ஒவ்வொரு கணமும் அதில் நான் மிதந்து கொண்டிருந்தேன். மயக்க மருந்துக்கு வசப்படுமுன் ஏற்படும் கிறுகிறுப்பைப் போன்ற ஒரு உணர்ச்சி என்னை ஆட்டி வைத்தது.

மனதுக்குள்ளேயே எரிந்து சாம்புகிறவர்களுக்கு இரவு சத்துரு. பகலில் அமுங்கி மங்கிக்கிடக்கும் உணர்ச்சிகள் இரவில் சூருவளியாக சீறத் தொடங்கிவிடும். பக்கத்து அறையில் அவள் பெரு மூச்சுகளும் குறுக்கும் நெடுக்குமாக நடப்பதும் என் காதில் விழுந்தது.

என் மனம் தவி தவித்தது, தூங்க முயன்று கொண்டிருந்தேன். சுற்றுப்புறத்து அமைதியான இயற்கையின் சாயை கொந்தளிக்கும் என் மனதில் படிய மறுத்தது. மரங்கள் அசையவில்லை. இலைகள் ஆடவில்லை. பறவைகளின் படபடப்பொலி கூட இல்லை. ஆகாயத்திலிருந்த நட்சத்திரங்கள் கூட கர்ப்பக்கிருகத்து வாடா விளக்குகளைப் போல நின்றன. என் மனம் மட்டும் அமைதியின்றி தவித்தது.

அமைதியை இழந்த அவளுடைய தவிப்பு என் தூக்கத்தைப் பறக்கடித்து என் மனத்தில் சிந்தனைப் புயல்களைக் கிளப்பியது.

தூங்க முயன்றேன். சட்டென்று என் தூக்கம் கலைந்தது. பக்கத்து அறையில் விக்கல் சப்தம் கேட்டது. படுக்கையிலிருந்து எழுந்து வெளியே வந்தேன். கதவினருகில் சென்று, "அருணா!" என்று கூப்பிட்டேன்.

"ஓ!" என்று பதில் வந்தது. அவள் காலடிச் சப்தம் என் காதுகளில் ஒலித்தது. சங்கிலிகளை நீக்கும் அவள் வளைக் கைகளின் ஒலி என் காதில் விழுந்தது.

கதவைத் திறந்தவள் என்னைப் பார்க்கவில்லை. வேறு புறமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். நடுங்கிக் கொண்டிருந்த அவள் கரத்தை நான் என் கையில் தாங்கினேன். என் கையும் நடுங்கியது,

அவளைக் கட்டிலருகே அழைத்துச் சென்றேன். அவள் தடாலென்று கட்டிலில் சாய்ந்து என் மடியில் முகத்தைப் புதைத்து கொண்டு தேம்பித் தேம்பி அழலானாள். அவள் பக்கத்தில் உட்கார்ந்து அவளைத் தேற்றலானேன். அவள் கூந்தலைத் தொட்டு, "ஏன் அழுகிறாய் அருணா? சுத்த அசடாக இருக்கிறாயே? அழுவதனால் எங்கேயாவது மனக்குறைகள் தீர்ந்து விடுமா?" என்றேன்.

அவளை மெதுவாக வெளி வராந்தாவிற்கு அழைத்து வந்தேன். இன்னும் அவள் அழுகை நிற்க வில்லை. விக்கல்களுக்கிடையே அவள் சொன்னாள், "டாக்டர்!... நான்... நாளைக்...கு ஊருக்குப் போக விரும்புகிறேன்."

ஒருகணம் என்னை என்னவோ செய்தது. "அதற்குள்ளாகவா?" என்றேன் என்னை அறியாமல்.

அவள் திரும்பி என்னை நோக்கினாள். அந்தப் பார்வையில் எடுத்துக் கூறமுடியாத எத்தனையோ செய்திகள் தேங்கி இருந்தன. அதிலிருந்த கனிவு என்னை நிலைதவறச் செய்தது. அவள் கரங்களைப் பிடித்தவாறே சொன்னேன். "அருணா! உன்னை மறக்க என்னால் முடியாது!"

"முடியாது என்பதில்லை. நீங்கள் என்னை மறந்துவிடுங்கள். எனக்காக மறக்கத்தான் வேண்டும். நான்..நான்...உங்களை...அடையத் தகுதியற்றவள்...உங்களைப் பூஜிக்கக்கூட..."

நான் அவள் வாயை மூடினேன். என் கை விலகியதும் அவள் சொன்னாள்:

"டாக்டர்! இறந்துபோனது.........என் குழந்தை!"

என் உடல் நடுங்கியது.

"பஞ்சாபிலிருந்து தப்பி வரும்போது கலகத்தில் அகப்பட்டுக்கொண்ட எங்கள் குடும்

பத்தில் நான் மட்டும் அகதியாய் உயிர் தப்பினேன். உயிரோடு அவர்கள் கையில் அகப்பட்டதன் விளைவு........."

மேலே பேசமுடியாமல் அவள் விம்மத் தொடங்கினாள். அதுவரை என்னால் அறியக்கூடாததாக இருந்த அவள் வாழ்க்கையின் ரகசியம் இப்போது எனக்குப் புரிந்தது. பனி விலகிப் பார்வை தெளிந்ததுபோல இருந்தது. மதத் துவேஷத்தினால் எழுந்த வெறியில் மண்ணோடு மண்ணான எவ்வளவோ நகரங்களைப்பற்றிய செய்தியை நான் படித்ததுண்டு. ஆனால் உயிரோடு உருக்குலைந்த ஒரு ஜீவனை அப்போதுதான் கண்ணால் கண்டேன். புழுதியிலெறிந்த புஷ்பத்தைப்போல வாடி மடிந்துபோய்க் கொண்டிருந்த அவள் வாழ்க்கை என்னைத் திகைக்க வைத்தது.

அந்தத் திகைப்பிலிருந்து நீங்கியதும் அவள் கையைப் பற்றியவாறு சொன்னேன். "அருணா! உன்னை நான் ஏற்றுக்கொள்கிறேன்."

அன்றுவரை காணாத அமைதியை அன்று என் மனம் அடைந்தது.

* * *

அருணாவை மணந்து கொண்டதற்காக எனக்கு வந்த வாழ்த்துச் செய்திகளை விடக் காரசாரமான கடிதங்களே அதிகமாக இருந்தன.

வாழ்க்கையில் நாம் செய்யும் எவ்வளவோ காரியங்களில் சில புண்ணியமாக இருக்கலாம், அநேகம் பாபமாக இருக்கலாம். என்னுடைய இந்தச் செய்கை எல்லோருடைய கண்களுக்கும் பாவமாகத் தென்படலாம். ஆனால் நான்மட்டும் என்னைப் புண்ணியம் செய்தவனாகவே கருதுகிறேன். உயிரற்ற வாழ்க்கை நடத்திய ஒரு பெண்ணின் உள்ளம் என் மகிழ்வினால் நனைந்து போயிருக்கிறது. ஒவ்வொரு கணமும் அவள் என்னை இதற்காக வாழ்த்துகிறாள். அந்த ஒன்று எனக்குப் போதுமானது. அதுவே எனக்கு என்றும் ஆறுதலைக் கொடுக்கும். * * *

DON'T WORRY !!

Try "**KUMARI**" (Tablets) to remove your anxieties over difficult days and fear of periodical delays at any stage, under any circumstances and prevent future troubles! Speedy and harmless !! Thousands satisfied !!! Normal potency Rs. 3. Special Rs. 5. Extra Special Rs. 8. (V. P. Extra)

"**RASAYAN**" (Tabs.) Gives youthful vigour, increases energy, purifies the blood and valuable in nervous debility and premature old-age. On the whole, it is a BOON to married couples. Each tube Rs. 4/-. 3 tubes Rs. 10-8. (V. P. Extra.)

Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)

TOLLYGUNGE, CALCUTTA - 33.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும் :—

1. இண்டோ மெடிகல் ஸப்ளைஸ், 29, வைத்யநாத முதலித் தெரு, சென்னை—1.
2. ராகவன் & கோ., ஸ்ரீ நரஸிம்ஹராஜா ரோட், பங்களூர் ஸிடி.
3. ஸிந்தி, 172—A, பிரின்ஸெஸ் தெரு, (ஹனுமான்மந்திர் மேல்புறம்) பம்பாய்—2.
4. எல். எம். முகர்ஜி & ஸன்ஸ் லிமிடெட், 167, தரம்தாலா தெரு, கல்கத்தா
5. இங்க்லீஷ் கம்பெனி, ஆலப்புழை. (திருவாங்கூர்)
6. பயனீர் பார்மஸி, 183, மெயின் தெரு, பேட்டை, கொழும்பு (ஸிலோன்)

மூலதனம்

அதிகாரம்பெற்றது	ரூ. 1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்டது	,, 72,00,000
செலுத்தப்பட்டது	,, 53,00,000
ரிஸர்வ் நிதி	,, 62,00,000

எல்லாவித பாங்கு அலுவல்களும்
நடத்தப்படும்.

N. கோபால அய்யர்,
ஸெக்ரெடரி.



NPB

தி இந்தியன் பாங்க் லிட்.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

தீக்ஷிதரின் பிரவேசம்

கி. ஸந்தானம்

நான் எப்பொழுதும் முன் ஜாக்கிரதையுள்ளவன். ஆனால் அன்று பல காரணங்களால் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டுவிட்டது. ஆகவே நான் ஸ்டேஷன் செல்வதற்கும், கார்டு பச்சைக்கொடி காட்டி, பிகில் ஊதுவதற்கும் சரியாயிருந்தது. இடம்தேடி ஏறுவதற்கு அவகாசமில்லாததால் எனக்கு நேராக இருந்த வண்டியில் ஏறப்போனேன்.

அது ஒரு இரண்டாவது வகுப்பு வண்டி, அதில் இருவர் இருந்தனர். நான் படியில் கால் வைத்து உள்ளே நுழைவதற்குள் வண்டிக்குள் இருந்தவர்களில் ஒருவர் வேகமாக எழுந்துவந்து என்னை வழிமறித்தார்.

"என்ன ஐயா! கண் தெரியவில்லையா? இது ரிஸர்வ் செய்யப்பட்டிருக்கிறது. பெயர் எழுதி ஒட்டியிருக்கிறதே தெரியவில்லையா" என்று சீறினார் அவர்.

அவசரமாக ஏறினபோதிலும் "மிஸ்டர் சண்டமாருதம், மிஸ்டர் ஷண்முகதாஸர்" என்ற பெயர்கள் எழுதியிருந்ததை நான் கவனிக்காமலில்லை. இருந்தபோதிலும் குறும்புக்காகவே அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தேன். அடர்த்தியாக இருந்த அவர் கறுப்புத்தாடி என் கவனத்தைக் கவர்ந்தது.

"என்ன ஐயா! வெறித்துப் பார்க்கிறீர்...?" என்றார் அவர். நான் அமைதியாகவே பதிலிறுத்தேன்.

"பெயர் எங்கே எழுதி ஒட்டியிருக்கிறது என்று பார்த்தேன்.........மன்னித்துக்கொள்ளுங்கள். வண்டி புறப்பட்டுவிட்டது. அடுத்த ஸ்டேஷனில்......"

இப்படி நான் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே—பட்டணத்துப் பஸ்ஸில் முண்டியடித்து ஏறிப் பழக்கமுள்ளவர்களுக்கு நான் கூறுவதில் வியப்பு ஒன்றுமிராது—வேறு ஒருவர் அவசரமாக வந்து சூட்கேசும் தாமுமாக எங்களுக்கிடையே எப்படியோ புகுந்து உள்ளே போய் உட்கார்ந்து விட்டார்!

அந்தக் கறுப்புத் தாடிக்காரர் நரஸிம்மாவதாரம் எடுத்து எகிறிக் குதித்தார். கட்டைக் குட்டையான அவர் தேகம் ஆடிய ஆட்டத்திலும் கோபத்தில் கொட்டிய பேச்சுக்களிலும் அகப்பட்டுக் கொண்டு கொந்தளித்துக் கூத்தாடிய அவர் தாடியைக் காண எனக்குச் சிரிப்பு வந்தது. கடைசியாக ஏறியவர் சாவதானமாக, "உஸ், அப்பாடா, என்ன வெயில், என்ன வெயில்" என்று சொல்லிக் கொண்டிருந்தார். இதற்கிடையில் ஏற்கனவே நகர்ந்து விட்ட வண்டி இப்பொழுது வேகம் பிடிக்கத் தொடங்கி விட்டது.

கறுப்புத்தாடிக்காரர் விடுவதாயில்லை. வண்டியை நிறுத்த சங்கிலியைப் பிடித்து இழுத்தார். நற நறவென்று சத்தம் செய்து கொண்டு வண்டி நின்றது. இதர கம்பார்டுமெண்டுகளில் சாளரங்களின் வழியே பலர் எட்டிப் பார்த்தனர். கதவைத் திறந்து வைத்துக்கொண்டு வழியில் நிற்கும் கோஷ்டியைச் சேர்ந்த மகா ஜனங்களில் சிலர் வண்டியை விட்டுக் கீழே இறங்கி வரத் தொடங்கினர். கார்டும் எங்கள் வண்டியை நோக்கி வந்தார். கறுப்புத்தாடிக்காரர் எங்களைச் சுட்டிக் காட்டி நாங்கள் கலாட்டா செய்வதாகவும், அந்தக் கம்பார்டுமெண்டு அவர்களுக்காக ரிஸர்வ் செய்யப்பட்டிருப்பதால் எங்களை அப்புறப்படுத்த வேண்டுமென்றும் அதிகார தோரணையில் பேசினார்.

வண்டியின்மேல் பெயர் வைக்கப்பட்டிருக்கும் சீட்டைப் பார்த்துவிட்டு, "யார் டாக்டர் ராமராவ்?" என்று கார்டு எங்களை நோக்கிக் கேட்டார்.

"அந்தப் பெயர் தாங்குபவன் நான்தான்" என்றேன் நான். எதிர் பாராத இந்த ஆச்சரியத்தால் நான் ஒரு கணம் திகைத்த போதிலும் எப்படியோ சமாளித்துக் கொண்டேன். கார்டும் என் கையிலிருந்த தோல் பெட்டியின் மேல் வரையப் பட்டிருந்த என் பெயரைப் பார்த்துவிட்டு தலையசைத்தார். தாடிக்காரர் அப்படியே அசந்து விட்டார்.

"இதென்ன வேடிக்கை! பெயர் மாற்றம் எப்படி வந்தது? வண்டி புறப்படுவதற்கு சற்று முன்பே நாங்கள் இந்த வண்டியில் ஏறிக் கொண்டோம். வண்டியின் மேலிருந்த சீட்டில் எங்கள் பெயர்களைப் பார்த்துவிட்டுத்தான் ஏறினோம். இந்த மனிதரிடம் கூட (என்னைச் சுட்டிக் காட்டி) அதைத்தான் நான் சொல்லி அவருக்கு இதில் இடமில்லை என்று கூறித் தடுத்தேன். அவரையே கேளுங்கள்" என்றார் அவர். கார்டு என்னை நோக்கினார்.

"ஆமாம்! ஆமாம்! அவர் சொல்வது உண்மை. நானும் பார்த்து விட்டுத்தான் ஏறினேன்— என் பெயரை" என்று ஒரு போடு போட்டு வைத்தேன் நான். கார்டு இன்னது செய்வது என்று தெரியாமல் தயங்கினார்.

"சண்டைமாருததாஸர் என்ற பெயர் எனக்கு ஞாபகமிருக்கிறது; ஆனால் ஒரு டாக்டரும் ரிஸர்வ் செய்திருக்கிறார். எதற்கும் என் ரிஜிஸ்தரை எடுத்துப் பார்க்கவேண்டும். வண்டி லேட் ஆகிக்கொண்டிருக்கிறது" என்று அவர் இழுத்தாற்போல் கூறினார்.

இந்தக் கலாட்டாவினால் கொஞ்சமேனும் கலவரமடையாமல் சாவதானமாய்த் தம் கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொள்வதும் விசிறிக்கொள்வதுமாயிருந்த அந்தப் பேர்வழி கார்டைநோக்கிக் கூறினார்:

"பிசகு ஏதோ நேர்ந்திருக்கிறது என்பது வெளிப்படை. நான்தான் கடைசியாக ஏறியவன். நான் பார்த்த பெயர் டாக்டர் உமா சண்டிதாஸர் என்பதுதான். ஆனால் என்னைப் பற்றியவரையில் மற்றவர்கள் என்னோடு பிரயாணம் செய்வதில் எனக்கு ஆக்ஷேபணையில்லை. மிஸ்டர் உங்கள் பெயர் என்ன? சண்டமாருதமா?—இந்தக் குற்றச்சாட்டை நீங்கள் மற்றவர்மேல் ஆரம்பித்ததுபோக அது உங்களிடமே திரும்பிவிட்டது. எதற்கும் நான் சொல்லும் யோசனையைக் கேட்பதானால் நமக்குமட்டுமல்ல, மற்றப் பிரயாணிகளுக்கும் சௌகரியமுண்டு. வண்டிபோகட்டும். கார்டும் சாவகாசமாக அவர் ரிஜிஸ்தரைப் புரட்டிப் பார்க்கட்டும். இன்னும் அரைமணி அவகாசத்தில் அடுத்த ஸ்டேஷன் வந்தவுடன் நாம் நால்வரும் அவரவர்கள் இருக்கவேண்டிய இடம் எங்கே என்பது தீர்மானமாகிவிடும்" என்றார். இந்தச் சமரசத்திற்குப் பின் வண்டி நகர்ந்தது. சண்டமாருதம் தம் நண்பர் பக்கம்போய் உட்கார்ந்தார். இவ்வளவு சண்டை சச்சரவுகளிலும் தாடி நரைத்த அவர் வாய் திறவா மௌனியாகவே உட்கார்ந்திருந்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் அவர் அமைதியாயில்லை. ஆங்காரம், கோபம், வெறுப்பு எல்லாம் அவர் முகத்தில் தாண்டவமாடின.

நானும் எனக்குப்பின் வந்தவர் பக்கலில் போய் அமர்ந்தேன். அவர் நெட்டையாய் ஒல்லியாய் இருந்தார். அவர் கண்களில் அபூர்வமான ஒரு ஜ்வலிப்பு இருந்தது. ஆனால் அவர் தாடியைக் காண எனக்கு அருவருப்பாயிருந்தது. காரணம் அதற்குச் சாயம் ஏற்றப் பட்டிருந்ததோடு கூட அவர் முகத்தில் வீசிய தேஜஸை அது குறைப்பதாயிருந்தது. வண்டியிலிருந்த மூவரையும் பார்த்து விட்டு நான் என் மோவாயைத் தடவிக் கொண்டேன். என் பக்கத்திலிருந்தவர் என் செய்கையைக் கவனித்து இலேசாக நகைத்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு "டாக்டர் உமா சண்டி தாஸர் நீங்கள்தானா?" என்று கேட்டேன்.

"நாம் எல்லோரும் தான்" என்றார் அவர்.

"அதெப்படி? "என்றேன் நான் வியப்போடு.

"நீங்கள் டாக்டர். நான் உமா. அதோ அவர் சண்டமாருதம். மற்றவர் தாஸர்."

நான் வாய்விட்டுச் சிரித்தேன். இதில் அந்தக் கறுப்புத் தாடிக்காரரும் கலந்து கொண்டார்.

"என்னடா இது என்றல்லவா பார்த்தேன்? நல்ல ஹாஸ்யம் நல்ல ஹாஸ்யம்!" என்று அவர் மறுபடியும் இடியிடி என்று சிரித்தார்.

வாய்பேசா மௌனியார் முகத்திலும் கலவரம் நீங்கிக் கலகலப்புக்கீற்றுத் தென்பட்டது.

இப்படி எங்களிடையே விரோத நிலை மாறி, சமரசபாவம் ஏற்படவே, என் பக்கத்திலிருந்த நண்பர் தம் சூட்கேசை எடுத்தார். அதன்மேல் உமா மகேசுவர தீக்ஷிதர் என்று எழுதப்பட்டிருந்த பெயரை நான் பார்த்தேன். தாடிக்காரரும் பார்த்தார். அவர் முகம் திடீரென்று பயங்கரமாக மாறியது அவர் தம் நண்பரை நோக்கினார். அவர் முகத்தில் தோன்றிய பீதியை வர்ணிக்க முடியாது. இதை ஒன்றும் கவனிக்காதவர்போலத் தீக்ஷிதர் தம் பெட்டியைத் திறந்து சாக்கலேட்டுகள் அடங்கிய பெட்டி ஒன்றை எடுத்து என்னிடம் நீட்டிக்கொண்டே "நீங்கள் டாக்டர். உங்கள் அபிப்பிராயம் எங்கள் வியாபாரத்திற்கு மிகவும் உதவியாயிருக்கும்" என்றார். மற்றொன்றை எடுத்து, கறுப்புத் தாடிக்காரரிடம் நீட்டினார். ஆனால் அவர் ஏதோ திகைப்பூண்டை மிதித்துவிட்டவர் போலப் பிரமித்துத் தம் கையை உள்ளுக்கு இழுத்துக் கொண்டார்.

"என் பெயருக்கும் நான் செய்யும் உத்தியோகத்திற்கும் அப்படியே வேஷத்திற்கும் [முஸல்மானைப்போலச் சாயம் ஏற்றப்பட்ட தாடி] குலாம் காதருக்கும் கோகுலாஷ்டமிக்கும் உள்ள பொருத்தம்கூட இல்லையே என்று யோசிக்கிறீர்களா? உங்கள் தாடி எப்படி உங்களுக்குச் சொந்தமில்லையோ அப்படித்தான் என் பெயரும் உத்தியோகமும்" என்

றேன். எங்கள் தகப்பனார் வைத்தியம், ஜ்யோதிஷம் முதலிய சாஸ்திரங்களில் நிபுணர். எங்கள் இருவரையும் வைத்தியத்தில் பழக்கி யிருந்தார். என் தமையனைவிட எனக்கு வைத்தியப் பயிற்சி அதிகம். ஆனால் அவர் மந்திர சாஸ்திரத்தில் கரைகண்டவர். எங்கள் தகப்பனார் காலத்திற்குப் பின் நாங்களிருவரும் தனித்தனியே தொழில் நடத்தி வந்தோம். என் சகோதரர் அந்திய காலத்திற் கூட நான் அந்த இரகசிய ஒளஷதத்தின் முறையை எனக்குக் கற்பிக்கும்படி மன்றாடிக் கேட்டேன். பாத்திரமறிந்துதான் தானம் செய்ய வேண்டுமென்றும் நான் அதைப் பெற்றுக் கொள்ள அருகனில்லையென்றும் சொல்லிவிட்டார். தம் புத்திரனுக்கு வயது வந்தவுடன் உரியகாலத்தில் அதைக் கொடுக்கும்படி, இரகசிய மருந்தின் விவரங்களை ஒரு ஓலைச் சுவடியில் எழுதி, அவர் சம்சாரம் ஸ்ரீமதி ஸரஸ்வதி அம்மாளிடம் கொடுத்திருந்தார்.

இந்தக் காலத்தில் எந்தத் தொழிலிலும் போட்டி அதிகம். வைத்தியர்களுக்கும் வக்கீல்களுக்கும் கணக்கில்லை. இந்த இரகசிய மருந்தைத் தெரிந்துகொண்டு என் தொழிலை விருத்திசெய்ய வேண்டுமென்று நான் எண்ணியதில் வியப்பொன்றுமில்லை. என் சகோதரர் மனைவியைக்கூட நான் இந்த ஓலையை எனக்குக் கொடுக்கும்படி கேட்டிருக்கிறேன். கடைசியாகப் பயமுறுத்திக்கூட ஒரு கடிதம் எழுதினேன். ஒன்றும் பயனில்லை.

ஒருநாள் என்னிடம் ஒருவர் வந்தார். சாக்கலேட்டுகள் அடங்கிய பெட்டி ஒன்றை என்னிடம் நீட்டி அதற்கு ஒரு நற்சாட்சிப் பத்திரம் கொடுக்கும்படி கேட்டார். என்போன்ற பிரபல வைத்யருடைய அபிப்பிராயம் வியாபாரம் வலுக்க உதவியாயிருக்கும் என்றும், வைத்யநாதன் கம்பெனியில் தான் ஒரு விளம்பர ஏஜண்டு என்றும் தெரிவித்தார். கல்கத்தாவில் மிகவும் பிரபலமான இந்தக் கம்பெனியில் முக்கியமாய் ஆயுர்வேத மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன என்று எனக்குத் தெரியும். வந்திருந்தவர் பேசியதிலிருந்து அவர் என்னை என் தமையனாராகக் கருதியிருந்ததாகத் தெரியவந்தது. நான் அவருடைய பிசகை எடுத்துக் காட்டினேன். அவர் சிரித்துக்கொண்டே ஒன்றிற்கு இரண்டாகக் கிடைக்கும்படி நேர்ந்தது தெய்வ சங்கல்பம் என்றும், நான் ஒரு சர்டிபிகேட் கொடுப்பதோடு என் சகோதரர் ஒளஷத சாலையிலிருந்தும் ஒன்று என்னையே வாங்கிக் கொடுக்கும்படிக்கும் வேண்டிக் கொண்டார். நான் யோசித்தேன்.

"என்ன யோசிக்கிறீர்கள்? இதன்மூலம் உங்கள் குடும்பங்கள் இரண்டிற்கும் மனஸ்தாபம் நீங்கிச் சமரசம் ஏற்படும் என்று நம்ப இடமிருக்கிறது" என்றார் அவர்.

என்னையே தெரியாதிருந்த அவருக்கு எங்கள் குடும்ப விவகாரங்கள் எப்படித் தெரியும் என்று கேட்டேன். அவர் தமக்கு நிமித்தக்குறி சாஸ்திரம் தெரியும் என்றும், சமீபத்தில் ஒரு கடிதத்தினால் எங்கள் குடும்பங்களுக்கிடையே மனஸ்தாபம் வலுப்பட்டிருக்கிறதென்றும், நான் நேரில் சென்றால் சமரசம் ஏற்படுவதோடு என் உத்தேச காரியம் நிறைவேற ஹேது உண்டு என்றும் பல பல பேசினார். முடிவில் நான் போகச் சம்மதித்தேன்.

அப்படியே மறுநாள் சென்றேன். என் மன்னியோடு லோகாபிராமமாகச் சில விஷயங்கள் பேசிவிட்டுச் சாக்கலேட் பெட்டியைக் கொடுத்தேன். அவர் அதை வாங்கி வடிவாம்பாளிடம் கொடுத்து வைத்தியசாலை அதிகாரியிடம் கொடுக்கும்படி சொன்னார். நான் அந்த இரகசிய ஒளஷத விஷயமாகப் பேச்செடுத்தேன். பக்கத்து நடைபாதையில் "ஐயோ அம்மா! என்னமோ செய்கிறதே" என்று வடிவாம்பாள் கூச்சலிட்டாள். நாங்கள் இருவரும் அவசரமாய் எழுந்து சென்றோம். ஏதோ விஷ சம்பந்தமான வஸ்து உட்கொண்டிருக்க வேண்டும் என்று தெரிந்ததால் தகுந்த மருந்துகள் உடனே கொடுத்தோம். இந்த அமளி அடங்க, சுமார் அரை மணி ஒரு மணி பிடித்திருக்கலாம். நாங்கள் மறுபடி பழைய ஆபீஸ் அறைக்கு வந்து பேசத் தொடங்கினோம். மேஜைமேலிருந்த ஒரு கவரை எடுத்துப் பார்த்துவிட்டு "அடராமா! அந்த இரகசியச்சுவடியை இதில்தான் வைததிருந்தேன், காணோமே, மோசம் போய்விட்டேனே" என்று சொல்லிக்கொண்டே என் சகோதரர் மனைவி டெலிபோனை எடுத்துப் போலீசுக்குத் தெரிவித்தாள். இன்ஸ்பெக்டர் வந்து எங்கும் தேடி எங்களையும் சோதனை செய்தார். எதிர்பாராவிதமாய் என்மேல் இப்படி அபவாதம் விழுந்ததும் நான் மனமிடிந்து வீடுவந்து சேர்ந்தேன். போலீசார் என்னை விட்டபாடில்லை. ஸரஸ்வதியம்மாளை நான் கொலைசெய்ய எண்ணியே விஷமிட்ட சாக்கலேட்டுகள் கொடுத்தேன் என்பது போலீசார் அபிப்பிராயம். இதற்கிடையில் இன்ஸ்பெக்டர் குறுக்கே பேசினார்.

"வேறு எப்படி நினைக்கமுடியும்? நீங்களே சொல்லுங்கள் தீக்ஷிதர்வாள், வைத்யநாதன் கம்பெனிப்பெயர் அச்சிட்ட காகிதத்தில் சாக்கலேட் பெட்டி சுற்றப்பட்டிருந்ததால் அங்கு விசாரித்தோம். அங்கு மருந்துகள் தான் தயாரிக்கப்படுகின்றன, பெப்ர

மிண்டோ சாக்கலேட்டோ செய்யப்படவில்லை. விளம்பர ஏஜண்டும் அவர்களுக்கில்லை. அப்புறம் என்ன செய்வது?" சந்திரசூடர் மேலே கூறினார். "என்வீடு காவலில் வைக்கப்பட்டுவிட்டது. நான் எங்கும் வெளி போக முடியவில்லை. நேற்று, போலீஸ் உடை தரித்த ஒருவர் வந்தார். இன்னும் என்ன தொந்தரவு ஏற்படுமோ என்று நான் கலங்கிக்கொண்டிருக்கும்பொழுது அவர் என்னைத் தெரியவில்லையா? என்று கேட்டுக்கொண்டே உடைகளைக் கழற்றினார். கறுப்புத் தாடி உள்பட அவ்வுடைகளை எனக்கு அணிவித்தார். என் தாடிக்குள்ளிருந்த ஓலைச் சுவடியையும் காட்டினார். அதிகம் பேச அவகாசமில்லாததால் உடனே புறப்பட்டு, திருத்தணி போனால் பேசிக் கொள்ளலாம் என்றும் சொன்னார். விளம்பர ஏஜெண்டு என்று சொல்லிக் கொண்டு வந்தவர் அவர்தான் என்று தெரிந்து கொண்டேன். போலீசாசாருக்குப் பயப்பட வேண்டியதில்லையென்றும் துப்பறியும் நிபுணன் ஸ்ரீ ராமஸ்வாமி தீக்ஷிதருக்குத்தான் பயப்பட வேண்டும் என்றும் ஜாக்கிரதையாயிருக்கும்படிக்கும் அவர் என்னை உஷார் படுத்தினார். திருத்தணிப் பெருமானையாவது இந்த இக்கட்டிலிருந்து விடுவிக்கும்படி வேண்டிக் கொண்டு வரலாம் என்று புறப்பட்டேன். மற்றவை உங்களுக்குத் தெரிந்ததே."

இதற்கு மேல் இன்ஸ்பெக்டர் தீக்ஷிதர் முகத்தை நோக்கினார். "சரி. நானே கூறிவிடுகிறேன் சுருக்கமாக" என்று பீடிகையோடு தீக்ஷிதர் சொல்லத் தொடங்கினார். 'இன்ஸ்பெக்டர் அபிப்பிராயப்படி இது ஒரு சிக்கலான கேஸ்தான். விஷம் வைத்துக் கொல்லவோ மயக்கம் கொடுக்கவோ முயற்சித்ததற்கும் ஓலையைத் திருடியதற்கும் சம்பந்தம் கண்டு பிடிப்பது சுலபமாயில்லை. சந்திரசூடருடைய கூற்றை நம்பினால் அவரையே யாரோ கொல்ல முயற்சித்ததாக ஏற்படும். நம்பாவிட்டால் ஸரஸ்வதியம்மாளைக் கொல்ல முயற்சித்ததாகத்தான் ஏற்படும். வடிவாம்பாளுக்கு ஏற்படவிருந்த அபாயம் ஏதோ அகஸ்மாத்தாய் நேர்ந்ததாகத்தான் கருதப்படும். உண்மை அதுவல்ல. இது மாதிரி நம்மைப் போக்குக் காட்டினது தான் ஷண்முகத்தாஸர் என்ற வேலப்பனுடைய வேலைத் திறம். உண்மை வடிவாம்பாள் உயிருக்கு உலை வைப்பதுதான் நோக்கம். ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க உத்தேசம். வடிவாம்பாள் அந்த ஔஷத சாலையில் பத்துவருஷத்திற்குமேல் வேலை பார்த்துவந்திருக்கிறாள். மிகவும் நம்பகமான ஸ்திரீ. சர்மாவின் உயிரையே ஒரு தரம் காப்பாற்றியிருக்கிறாள், தம் நன்றியைக் காட்டுவதற்காகச் சர்மா அவளுக்கு ஐயாயிரம்ரூபாய் கொடுத்திருந்தார். சுமார் இரண்டு வருஷத்திற்கு முன்புதான் அவள் கணவன் தன் அண்ணன் மகன் ஒருவனைத் தன் வீட்டில் கொண்டுவைத்துக்கொண்டு ஔஷத சாலையிலும் அவனுக்கு ஒரு வேலை சம்பாதித்துக் கொடுத்தான். அவன் நாடகப் பிரியன். வடிவாம்பாளுக்கு அவன் பிடிக்கவில்லை இருந்தாலும் கணவனுக்கு விரோதமாக நடக்க அவள் இஷ்டப்படவில்லை. சென்ற வருஷம் அவள் கணவன் திடீரென்று இறந்து போனபின்பும், தனக்கு ஆதரவு வேறு ஒருவருமில்லாததால் வேலப்பன் வீட்டிலேயே இருந்து வருவதற்கு அவள் இசைந்தாள். இந்தச் சம்பவங்கள் நடந்த தினத்திற்கு முதல் நாள்தான் வடிவாம்பாளைத் தொந்தரவு செய்து தபாலாபீசில் போட்டிருந்த ஐயாயிரரூபாய் பணத்தையும் வேறு பாங்கில் ஜாஸ்தி வட்டிக்குப் போடலாம் என்று ஆசைகாட்டி அவன் வாங்கச் செய்தான். ஆனால் மறுநாளும் அதற்கு அடுத்த இரண்டு நாட்களும் பாங்குகளுக்கு விடுமுறை நாட்கள். ஆகவே பணம் வீட்டிலேயே இருந்தது. அதைச் சுலபமாய் எடுத்துக்கொண்டு கம்பி நீட்டினான் பேர்வழி.........

"ஓலைச்சுவடி......" என்று ஆரம்பித்தார் இன்ஸ்பெக்டர்.

"இதோ வந்துவிட்டேன் அதற்கு" என்று தீக்ஷிதர் தொடர்ந்தார். நான் ஸரஸ்வதியம்மாளைக் கண்டு விசாரித்ததில் சில முக்கிய விஷயங்கள் தெரியவந்தன. சம்பவங்கள் நடந்த தினத்திற்கு மறுநாள் வருஷாந்தரக் கொண்டாட்டம். அன்று ஒரு நாடகம் நடக்க ஏற்பாடாகியிருந்தது. களவுபோன அன்று உடைகள் அணிந்து ஒத்திகை நடக்கவிருந்தது. வேலப்பனுக்கு அந்நாடகத்தில் கறுப்புத்தாடி மீசையணிந்து ஒரு பாத்திரமாக நடிக்கிறான். வடிவாம்பாள் கூச்சல்போட்டதும் ஸரஸ்வதியம்மாளும் சந்திரசூடரும் எழுந்து நடைப்பாதைப்பக்கம் ஓடியபோது வேலப்பன் நாடகஉடை அணிந்து ஒத்திகை நடக்கிறது அதற்கு வரவேண்டும் என்று எஜமானியைக் கூப்பிடவந்தவன்போல் வந்திருக்கிறான். மேஜைமேலிருந்த கவரை அவசரமாய் எடுத்து அதிலிருந்த ஓலையைத் தன் தாடியில் பக்குவமாய்ப் பதுக்கிக்கொண்டான்.

"முக்கியமான தஸ்தாவேஜை மேஜைமேல் வைத்தது பிசகு" என்றார் இன்ஸ்பெக்டர் இடைமறித்து. தீக்ஷிதர் மேலே கூறினார்.

"நான் விசாரித்தேன், அம்மாள் சூக்ஷ்ம புத்தி உடையவர். முக்கியம் வாய்ந்த வஸ்து

ரூர் அவர். தாடிக்காரர் முகத்தில் மறுபடியும் கலவரம் தோன்றிற்று. மௌனியார் தீக்ஷிதரைச் சுட்டுவிடுவதைப் போலப் பார்த்தார். தீக்ஷிதர் அலக்ஷியமாகவே தொடர்ந்து கூறினார்.

"அல்லது நீங்கள்தான் உங்கள் பற்கள் உங்களுக்குச் சொந்தம் என்று கூறிக்கொள்ள முடியுமா? (இது மௌனியாரைப் பார்த்து). போகட்டும். டாக்டர்தான் அவரிடம் இருக்கும் டிக்கெட்டும் தம்முடையதுதான் என்று சாதிப்பாரா?"

மௌனியாரின் சீற்றம் உச்சநிலை அடைந்தது. கொலை விழுந்து விடுமோ என்று அஞ்சும்படியான நிலைமைதான். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித உணர்ச்சி. எனக்குப் பின் வந்தவரால்தான் வண்டியின் மேலிருந்த சீட்டு மாற்றப்பட்டிருக்க வேண்டும் என்று நான் முன்பே ஊகித்து விட்டேன்.



ஆனால் அங்கே என் பெயர் எப்படி வந்தது என்பதுதான் எனக்கு விளங்கவில்லை. தாடிக்காரருக்குப் பயமும் மௌனியாருக்குக் சினமும் வரக் காரணமும் புலப்படவில்லை. டிக்கட்டின் பிரஸ்தாவம் வரவே, நான் என் பைக்

குள் கைவிட்டு டிக்கட்டை எடுத்தேன். மற்ற இருவருக்கும் சந்தேகம் தோன்றியிருக்கவேண்டும்; அவர்களும் டிக்கட்டை எடுக்கப் பிரயத்தனப்பட்டனர். தீக்ஷிதரும் தம் பைக்குள் கைவிட்டார். திடீரென்று 'கிளிக்' என்று ஒரு சத்தம் கேட்டது. கண் மூடிக் கண் திறப்பதற்குள் தீக்ஷிதர் மௌனியார் கைகளில் ஒரு விலங்கை மாட்டிவிட்டார்!

வண்டி நின்றது, கார்டும் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் வந்தனர்.

"வடிவாம்பாளைக் கொலை செய்ய யத்தனித்ததோடு ஒரு முக்கிய தஸ்தாவேஜைத் திருடிய குற்றத்திற்காக நீங்கள் தேடிக் கொண்டிருந்த ஆசாமி இதோ இருக்கிறார் அழைத்துப்போங்கள்" என்றார் தீக்ஷிதர் இன்ஸ்பெக்டரைப் பார்த்து.

"ஏன் யோசிக்கிறீர்கள்? சாக்ஷி இல்லையே என்றா? அது மௌனியாரின் பல் வரிசைகளிலும் நண்பர் சண்டமாருதத்தின் தாடியிலும் இருக்கிறது. அவைகள் ஜாக்கிரதையாக இருக்கட்டும்" என்று சொல்லிக் கொண்டே கறுப்புத் தாடிக்காரரிடம் சென்று அவர் காதுகளின் பின்னே தம் கைகளைக்கொடுத்து அவர் தாடியை அப்படியே உரித்து எடுத்து இன்ஸ்பெக்டர் கையில் கொடுத்தார்.

நான் தீக்ஷிதர். வைதீகர். மௌனியாரின் பல்லை நான் தொடமாட்டேன்" என்றார் அவர் தொடர்ந்து. இன்ஸ்பெக்டர் சிரித்துக் கொண்டே மௌனியாரின் பொய்ப் பற்களை எடுத்துக் கொண்டார். "டாக்டர்வாள்! உங்களுக்கு அருவருப்பை யளிக்கும் இந்தத் தாடி எனக்குத் தேவையில்லை. இதோ எடுத்து விடுகிறேன். என்னை நன்றாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். இந்தக் கேசின் மர்மங்களை அறியத் தங்களுக்கு மிக்க ஆவல் இருப்பதாய்த் தெரிகிறது. இதோ என் கார்டு. நாளை என் வீட்டிற்குக் காலை எட்டு மணிக்கு வரக் கூடு மானால்...... ஆம், இன்ஸ்பெக்டரும் வருவார். நண்பர் சண்டமாருதமும் வருவார். உங்கள் திருப்பதிப் பிரயாணத்தை நான் தடுக்கவில்லை. ஒருநாள் ஒத்திப் போடும்படி தான் வேண்டிக் கொள்ளுகிறேன்." என் முகத்தில் தோன்றிய வியப்பை அவர் கவனித்துவிட்டுச் சிரித்துக் கொண்டே கூறினார். "இதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை. நீங்கள் டிக்கட் வாங்குவதற்காக உங்கள் பர்ஸைத் திறந்தபோது அதில் ஓர் மஞ்சள் துணி முடிப்பு இருப்பதைப் பார்த்தேன். அது ஒன்றே போதாதா நீங்கள் போகும் ஊரை நிர்ணயிக்க? இருந்தாலும் இன்னம் சில குறிகளும் இருந்தன......ஆனால் உங்கள் டிக்கட் மாற்றப்பட்டதற்கு நண்பர் சண்டமாருதத்தைத்தான் கேட்கவேண்டும்" என்றார் அவர்.

"இருக்கட்டும்; வண்டியின்மேல் என் பெயர் எப்படி வந்தது?" என்று கேட்டேன் நான்.

"பெயர் மாற்றப்படவில்லை. கார்டின் சமயோசித புத்தியை நான் மெச்சுகிறேன். உங்கள் பெட்டியின்மேல் வரையப்பட்டிருக்கும் பெயரைப் பார்த்துவிட்டுத்தான் அவர் கேட்டிருக்கிறார்...சரி. நேரமாகிறது எனக்கு வேறு ஒரு அலுவல் இருக்கிறது. இன்ஸ்பெக்டர் சார்! நாளைக் காலை எட்டுமணி ஞாபகமிருககட்டும்."

* * *

மறுநாள் காலை நான் தீக்ஷிதர் வீட்டிற்குச் சென்றேன். சுமுகமாகவும் மிகுந்த பிரியத்தோடும் அவர் என்னை வரவேற்றார்.

"வாருங்கள் டாக்டர் வாட்ஸன்! உங்களுக்காகத்தான் நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம். மேஜை மேலிருக்கும் காப்பியும் உங்களுக்காக இரண்டு நிமிஷமாய்க் காத்துக்கொண்டிருக்கிறது" என்றார் அவர்.

நான் சிரித்துக்கொண்டே பிரதி வந்தனம் செய்துவிட்டு என் கைக்கடியாரத்தைப் பார்த்தேன். அது ஏழு மணி காட்டிற்று!

ஒளி வீசிய அவர் முகத்தில் ஒரு மோகனப் புன்னகை தவழ்ந்தது.

இன்ஸ்பெக்டர் இந்தக் கேசு விஷயமாய் ஆவலாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார். உங்களுக்கும் இதில் மிகுந்த சிரத்தை இருக்கிறது என்பது நீங்கள் திருப்பதிப் பிரயாணத்தைக் கூட ஒத்திப் போட்டுவிட்டு வந்திருப்பதிலிருந்து தெரிகிறது. ஆகையால் மிஸ்டர் சண்டமாருதம்! உங்கள் கதையைச் சொல்லுங்கள்."

* * *

சண்டமாருதம் என்ற மறுபெயர் பூண்ட சந்திரசூடர் சொல்லத் தொடங்கினார்:-

ஆயுர்வேத பூஷண பண்டித தன்வந்திரி சர்மாவைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அவரிடம் ஓர் அபூர்வமான ஔஷதம் இருந்தது. இனி நம்பிக்கைக்கு இடமில்லை என்று வைத்தியர்களால் கைவிடப்பட்டவர்கள் பலர் இந்த ஔஷதப்பிரயோகத்தால் குண மடைந்திருக்கின்றனர். இதை அவர் சில நியமங்களுக்குட்பட்டுத்தான் பிரயோகிப்பார். முக்கியமாக இதற்கு அவர் பணம் வாங்க மாட்டார்.

இதன் இரகசியத்தை எனக்குச் சொல்லும்படி நான் அவரைப் பலமுறை கேட்டிருக்கி

என்றால் அது ஜாக்கிரதையாய் இரும்புப் பெட்டியிலோ மேஜையின் கள்ள அறையிலோ வைக்கப்பட்டிருக்கும் என்று யாரும் எண்ணுவது சகஜம். மேஜையின் மேல் அலக்ஷியமாகக் கிடக்கும் வஸ்துவை யாரும் கவனிக்க மாட்டார்கள். ஆதலால்தான் அந்த அம்மாள் அதை ஒரு கவரில் போட்டுப் பல பழைய கடிதங்களுக்கு நடுவில், ஆனால் நன்றாய்த் திருஷ்டியில் படும்படியாய் மேஜைமேல் போட்டிருந்தாள்.

அன்று எல்லோரையும் சோதனை செய்த போது ஒருவருக்கும் வேலப்பனின் தாடியைப் பிடித்துப்பார்க்கத் தோன்றவில்லை! அதோடு அன்று தன் சிற்றன்னைக்கு உடம்பு அசௌக்கியத்தால் வீடு சென்று விட்டதால் தன் வேஷத்தை அவளுக்குக் காண்பிக்க வேண்டுமென்றும் சாக்குச் சொல்லிவிட்டு வேலப்பன் தாடியை எடுக்காமலே வீடு சென்றிருக்கிறான். நேர்ந்த சம்பவங்களால் வருஷாந்தரக் கொண்டாட்டம் ஒத்திப் போடப்பட்டு விட்டது. வேலப்பன் மற்ற உடைகளைக் கொண்டு வந்தானேயொழிய தாடியைக் கொண்டு வரவில்லை. இது முக்கியமாய்க் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். சந்திரசூடர் ஸரஸ்வதி யம்மாளைப் பயமுறுத்தி எழுதியிருந்ததை அவன் பார்த்திருக்கிறான்.

பழியை அவர்மேல் சுலபமாய்ச் சுமத்திவிடலாம், ஸரஸ்வதியம்மாள் வைதீகமனப்பான்மை உடையவள். சாக்லேட், பெப்பர்மிண்டு, பிஸ்கோத்து முதலியவை சாப்பிட மாட்டாள், வடிவாம்பாளுக்குச் சாக்கலேட் என்றால் பிராணன். ஸரஸ்வதியம்மாள் கட்டாயம் பெட்டியை வடிவாம்பாளிடம்தான் கொடுப்பாள் என்றும் அவளும் ஆசைவசப்பட்டு அதைத்திறந்து சாக்கலேட்டுகளைத் தின்பாள் என்றும் வேலப்பன் எதிர்பார்த்திருக்கிறான். அப்படியே தான் நடந்தது. ஆனால் அவள் அதிகம் தின்னாததால் உயிருக்கு ஆபத்து நேரவில்லை. அதோடு உடனே சிகிச்சையும் செய்யப்பட்டுவிட்டது. இன்ஸ்பெக்டர் சந்திரசூடரைச் சுற்றிக்கொண்டிருந்த போது நான் வேலப்பன்மேல் கண்வைத்திருந்தேன். வடிவாம்பாளையும் கண்டு பல விஷயங்கள் அறிந்துகொண்டேன். அப்புறம் அந்த ஆள்மேல் மோசூல் இருந்து அவனை வளைத்துக்கொள்வது ஒரு பெரிய காரியமல்ல. நேற்று அந்த வண்டிக்கு அவன் புறப்படப் போகிறான் என்று தெரிந்ததே நான் உங்களுக்குச் சொல்லியனுப்பி அதே வண்டியில் மறைவாய்ப் பிரயாணம் செய்யும்படி உங்களுக்குச் சொன்னேன். கார்டுக்கும் நீங்கள் விஷயம் அறிவித்திருப்பீர்கள் என்று ஊகிக்கிறேன்.

'ஆமாம், மௌனியாரின் பல்வரிசைகளில் ஏதோ உளவு இருப்பதாகச் சொன்னீர்களே. ஒன்றுமில்லையே. தாடியில் ஓலைச் சுவடி இருந்தது என்னவோ வாஸ்தவம்தான்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

தீக்ஷிதர் கூறினார். ''மூந்தா நாள் இரவு என் ஆள்களில் ஒருவனை அனுப்பி வேலப்பனின் தாடியைக் கொண்டு வரச் சொன்னேன். ஆனால் அவன் அவனுடைய முப்பத்திரண்டு பற்களையும் தட்டிக்கொண்டு வந்துவிட்டான். பாவம்! வேலப்பன் பொய்ப் பற்கள் வைத்துக் கொண்டு அவைகள் சரியாய்ப் பொருந்தாததினால் வாயை மூடிக்கொண்டே இருக்க வேண்டி யிருந்தது! இதைத்தான் அப்படி சூசகமாய்த் தெரிவித்தேன்.''

''ஆமாம்! இந்தச் சிக்கலான நூலின் நுனி எது?'' என்றேன் நான்.

தீக்ஷிதர் சிரித்துக் கொண்டே இயம்பினார். ''சாக்கலேட் பெட்டியின் மேல் சுற்றியிருந்த வைத்யநாதன் கம்பெனிப் பெயர் தாங்கிய காகிதம் எங்கிருந்து கிடைத்தது? இதற்காக ஒருவர் கல்கத்தா போக மாட்டார். ஔஷத சாலையில் வைத்யநாதன் கம்பெனியிலிருந்து மருந்துகள் வாங்குவதால் அவைகள் சுற்றி வரும் காகிதங்களில் ஒன்றாகத்தான் அது இருக்க வேண்டும். ஆதலால் பேர்வழியை ஔஷத சாலையிலேயேதான் தேடவேண்டும் என்று ஏற்படுகிறதல்லவா? இதுதான் ஆரம்பம் என்று'' அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே வாசலில் ஒரு கார் வந்து நின்றது. ஸ்ரீமதி ஸரஸ்வதி அம்மாள் உள்ளே வந்தார். தீக்ஷிதர் ''வாருங்கள், நல்ல சமயத்தில் வந்தீர்கள்'' என்று உபசரித்தார். இன்ஸ்பெக்டரிடமிருந்த ஓலைச்சுருளை வாங்கி அவர் அந்த அம்மாளிடம் கொடுக்கப்போனார் ஆனால் அதை வாங்கிக்கொள்ளாமலே, ''இதற்குள் இரகஸ்யம் பலபேருக்குத் தெரிந்திருக்கும். அதில் என்னதான் எழுதியிருக்கிறது வாசியுங்கள் கேட்கலாம்'' என்றார் அந்த அம்மாள். தீக்ஷிதர் வாசித்தார்.

ஹரிணாபி ஹரேணாபி பிரம்மணாபி சுரைரபி,

லலாட லிகிதா ரேகா பரிமார்ஷ்டும் நசக்யதே.

அதாவது, தலையெழுத்தை ஒருவராலும் மாற்ற முடியாது என்று அர்த்தம். இதுதான் அதில் எழுதியிருந்தது! எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தனர். இன்ஸ்பெக்டர் முகம் சுருங்கிற்று. தீக்ஷிதர் கூறினார்: ஓலையின் விஷயம் நமக்குப் பெரிதல்ல. ஓலைதான் நமக்குப் பெரிது என்றார். இன்ஸ்பெக்டரும் சந்திரசூடரும் விடைபெற்றுச் சென்றபின் தீக்ஷிதர் ஸரஸ்வதி அம்

மாளை நோக்கினார். அவர் கூறினார்! "உங்களுக்குச் சிரமம் கொடுத்ததற்கு மன்னிக்கவேண்டும். என் புருஷர் இரண்டு ஓலைச்சுருள்கள் கொடுத்திருந்தார். இந்த சம்பவங்கள் நடந்ததற்கு முதல் தினம்தான் என் குமாரனிடம் இவைகளை ஒப்படைக்கக் குறிப்பிட்டிருந்த தினம். அப்படியே நான் அவைகளைக் கொடுத்தேன். ஓலைகளில் ஒன்றில் எழுதியிருந்த இரகசிய விஷயங்களை அவன் மனத்தில் வாங்கிக்கொண்டு அந்த ஓலையை நெருப்பில் இட்டு விட்டான். இன்னொரு ஓலையில் எழுதியிருந்ததைத்தான் நீங்கள் வாசித்தீர்கள். அது அடிக்கடி ஞாபகத்தில் இருக்கட்டும் என்பதற்காக அதை என் மேஜை மீதே வைத்திருந்தேன்."

"அப்படியானால் போலீசாரை ஏவினது.........?"

"திருடனைக் கண்டு பிடிக்க வேண்டியே ஒழிய வேறில்லை."

"பேஷ்!" என்றார் தீக்ஷிதர்.

* * *

தெளிவு

கே. வி. கே.

"எங்கேயப்பா போகிறாய்......?"

ஒரு கணம் என்னை உலுக்கியது அக்குரல்! முள்ளந்தண்டு ஜில்லிட்டு உறைந்தே போய் விட்டது என்றுகூடக் கூறலாம்! அசட்டுத்தனத்தால் கிராமத்தார் கூறிய புத்திமதியைக் கேட்காமல் வந்து விட்டோமா என்று மனம் இடிக்கத் தொடங்கியது.

"தம்பி! நாங்களெல்லாம் வயதானவர்கள். படிப்பில்லா விட்டாலும் அனுபவம் இருக்கிறதப்பா! இரவு பத்து நாழிக்கு மேல் நாங்களே அந்தப் பக்கமெல்லாம் போகமாட்டோம்! நாங்க சொல்றபடி பேசாமே ராத்திரி இங்கேயே இருந்துட்டு நாளைக்குப் போ...! இத்தனை நாள் இருந்தவனுக்கு இன்னும் ஒரு ராத்திரி தங்கறதுலே என்ன நஷ்டமாயிடும்......!"

நஷ்டம்! அவர்களுக்கு என்ன தெரியும் என் நஷ்டம்! பொருள் இழந்தால்தான் நஷ்டமா! உள்ளம் முறியும் அவ்விடத்தில் ஓர் இரவென்ன, ஒரு நிமிடம்கூட தங்க இயலாதபடி தானே அதை விட்டு ஓடி வருகிறது இம் மனம்.

ஆனால் நிசி வேளையில் பூரண நிலவிருந்தாலும் ஊரை விட்டு நான்கு மைல்கள் தூரம் வந்து விட்டு, வறண்ட ஆற்றின் வெண் மணலைக் கடக்கும்போதல்லவா இந் நிலவொளியே பயங்கர அமைதியைத் தோற்றுவிக்கிறது! திட்டமாக எதையும் பார்க்கவொட்டாதபடி கண்களுக்கு மாயவொளியைக் காட்டி மயக்குகிறதே!

இதைத்தான் கிராமத்தார் கூறினார்களா!

"இரவில் இவ்வூர் ஆற்றைக் கடந்து யாருமே இதுவரை உயிருடன் போனதில்லையப்பா! அநேகமாய் அப்படிச் செல்பவர்கள் யாவருமே முதலில் கண் பார்வையை இழந்து விட்டு அங்கேயே விழுந்து கிடக்கிறார்கள்! அதற்குப் பின் ஒரே நாளில் இறந்தும் விடுகிறார்கள் சுய உணர்வு பெறுமலேயே...!"

ஹூம்! இதெல்லாம் கவனிக்கவா அப்போது அவகாசம் இருந்தது! எப்படியும் ரயிலடியை அடைந்துவிட்டால் இக் கிராமத்தையே மறந்துவிட்டு வெகுதூரம் சென்று விடலாம் என்றுதானே மனம் துடித்தது—துடிக்கிறது! அக் கிராமத்தில் தங்குவதை விட இவ்வாற்றைக் கடப்பது அவ்வளவு பயங்கரமாய் இருக்கப்போவதில்லையே!

ஆயினும் நான்கு புறமும் மணல் பரவி இருந்த அவ்விடத்தில், அத்தனை அருகே அக்குரல் கேட்டபோது ஏனோ உடலதிர்ச்சி எல்லை கடந்துவிட்டது! அறிவு, ஆற்றல், வைராக்கியம் எல்லாவற்றிற்கும் மீறியல்லவா நிற்கிறது இப் பயம்—மரண பயம்—உயிர் பயம்!

"எங்கேயப்பா போகிறாய்?"

மறுபடியும் அதே குரலா! ஐம்புலன்களில் நான்கு புலன்களுக்கு எட்டாமல் செவியினால் மட்டும் உணரக்கூடிய ஜீவனா என்னுடன் பேசுகிறது! ஏகபுலன் உணர்வு மாத்திரம் அளித்து மனித உள்ளத்தின் நங்கூரத்தை இவ்வளவு தூரம் அசைத்தாட்டிவிடும் இந்த ஜீவனை ஐம்புலனாலும் ஒரே காலத்தில் உணரும்படி நேரிட்டுவிட்டால்.........! அப்பப்பா! இவ்வாபத்தைத் தவிர்க்கத்தானே இவைகள் உடலும் உயிரும் அற்ற தன்மையில் எல்லாப் புலன்களுக்கும் எட்டாமல் படைக்கப்பட்டிருக்கின்றன!

பேரின்பத்தைப்பற்றி விளக்க முயன்ற பெரியார் ஒருவர் சிற்றின்பத்தைப் பற்றியும் ஒரு சமயம் கூறக்கேட்டது என் நினைவுக்கு வந்தது அப்போது.

"ஸ்தூல சரீர இன்பத்தின் சிகரம் சிற்றின்பம்! ஐம்புலன்களும் ஏக காலத்தில் உணர்ச்சியடையும் சந்தர்ப்பம் அப்போதுதான் உண்டாகிறது! அதைக்கண்டு மனம் புளகாங்கித்து விம்மி எழுகிறது......!"

வேடிக்கையாகத்தான் இருக்கிறது! ஐம்புல ஏக கால உணர்ச்சி ஒரு சமயத்தில் இன்பத்தின் சிகரமாய்த் தோன்றும்போது, அதே ஐம்புலன்களுள் ஒன்றின் உணர்ச்சியே இச் சமயத்தில் உடல் நடுங்கும் அளவுக்கு மரண பயமாய்த் தோன்றுகிறதே! இதில் எதுதான் உண்மை! இன்ப உணர்ச்சியில் சம்பந்தப்பட்டிருப்பது உடல் படைத்த பெண்ணாகவும் பய உணர்ச்சியில் சம்பந்தப்பட்டிருப்பது உடலற்ற பேயாகவும் இருப்பதினாலா......!

ஆனால் பயத்தை யளிக்கும் பேய்கூட மோகினியாய் வந்து இன்பமளிக்கிறதாமே! அப்படி



யானல் இன்பத்தை யளிக்கும் பெண்கூடப் பேயாய் மாறிப் பயமுறுத்தலாமல்லவா!

ஏன் கூடாது! பெண் இன்பம் தேடிச் சென்றவர்கள் எத்தனை பேர் பேயாகத்

திரும்பவில்லை! பேய் பிடித்துத் திரும்ப வில்லை!

"எங்கேயப்பா போகிருய்......?"

மறுமுறை அதே குரல்! முள்ளந்தண்டில் அதே ஜிலுஜிலுப்பு!

எங்கே போகிறேன்...! எனக்கே தெரிந் தால்தானே இக் குரலுக்கு நான் பதிலளிக்க! வாழ்வில் எல்லோரும் போகிருர்களே தவிர எங்கே போகிருர்கள் என்று யாருக்காவது தெரிகிறதா!

ஆனல் அன்று சாரு கேட்டபோது மட்டும் இப்படியா இம் மனம் தயங்கிற்று! இதே போல்தானே அன்றும் பூரண நிலவொளி எங் களிருவரையும் வெள்ளி முலாம் தோய்த்தது போல் தோற்றுவித்தது! இப்போது தோன் றும் இச் சந்திரிகையின் மௌன பயம் அப் போது இருந்ததா? கிராமத்துக் கோவிலின் வெளிப் பிராகாரத்தில் அமர்ந்திருந்த எங்கள் கண்களின் ஒளி, நட்சத்திரங்களுடன் போட்டி இட வில்லையா......!

அவள் குரலொலி வெறும் வாயொலியா கவா இருந்தது! ஒவ்வொரு சொல்லும் அங் கத்தைப் புல்லரிக்கச் செய்து முள்ளந் தண் டைக் கூசவைத்ததே!

"சாரு! சீக்கிரத்திலேயே நான் போகி றேன்......!"

"எங்கே போகிருய்...?"

"இதென்ன கேள்வி! ஏன்! ஊருக்குத் தான்...!"

"மல்லி...!"

"ஹூம்...!"

"என்னை விட்டுட்டு போகமாட்டேன்னு நெனச்சேன்...!"

"பைத்தியம்! உன்னை விட்டுட்டு போறேன்னு சொன்னேன்......!"

"அப்படீன்னு......!"

"உன்னை விட்டுட்டு என்னலே பிரிஞ்சு இருக்க முடியாதுன்னு அர்த்தம்!"

"என்னையும் அழைச்சுண்டா போகப் போறே, மல்லி...!"

"ஏன் கூடாது, சாரு! நீயும் நானும் ஒன்று தானே...!"

"ஊஹூம்! நான் வரல்லே......! எனக் கும்......!"

"உனக்கு......?"

"ரெண்டு பேருக்கும் இன்னும் கல்யாணம் ஆகல்லே......!"

"கல்யாணம் ஆயிட்டா......?"

'பகிரங்கமாய் உன்னேடு வரலாம்......!'

"சரி! இன்னொரு தடவை நான் வரும் போது நீ கல்யாணமானவளாய் இரு! நானும் கல்யாணத்தைப் பண்ணிண்டு வரேன்! அப்போ, பகிரங்கமா என்னேடு வரலாம்...!"

அவள் முகத்தில் ஒரு கணம் வியப்பும் திகி லும் தோன்றினவே! உண்மையிலேயே அவள் கலங்கிவிட்டாளா.........! பிறகு இந்த ஹாஸ்ய வார்த்தையைப் புரிந்துகொண்ட வுடன் குதூகலத்துடன் அவள் குலுங்க நகைத்ததும்கூட உண்மைதானு! என் னவோ, யார் கண்டார்கள்! பெண்க ளின் சிரிப்புக்கும் அழுகைக்கும் அவர்கள் உணர்ச்சி மட்டும்தானு காரணம் என்று இன்றுவரை யாருக்குத்தான் புரிந்தது! அச் சிரிப்பையும் அழுகையையும், குயவனின் சக் கரமும் கைப் பலகையும் போல் கொண்டு, மனித பாண்டத்தின் உருவத்தையும் — உள் ளத்தையும் கூட — தம் எண்ணப்படிதானே சமைத்து விடுகிருர்கள், கல் உளி மங்கன் களைப் போல!

சாரு சொல்லுவாள் அவ்வப்போது:

"மல்லி! நீ ஏன் கல்யாணம் பண்ணிக்காமே இருக்கேன்னு எனக்குத் தெரியும்......!"

"ஏன், சாரு?"

"நீ ஒருத்தியெ காதலிக்கறே......!"

"காதலிக்கிறேனு...! யாரை...! அப்படிக் காதலிச்சா அவளைக் கல்யாணம் பண்ணிண் டிருப்பேனே, இதுக்குள்ளே......!"

"அவ உன்னைக் காதலிக்கிருளான்னு இன் னும் உன்னலே கண்டுக்க முடியல்லே...!"

"ஓகோ! நீதான் கொஞ்சம் சொல் லேன்......!"

"எனக்குத் தெரியாது! உனக்கு தைரியம் இருந்தா நீயே கேட்டு தெரிஞ்சுக்கோ...!"

"அவ யாருன்னவது சொல்லேன்...!"

"அடாடா! அதுவே இன்னும் தெரிஞ்சுக் கல்லியா...! பலே, மல்லி! உன்னைப்போல கொழந்தையை நான் பார்த்ததே யில்லை...!"

சாரு எவ்வளவு கைக்காரி என்பது அப்போ தெல்லாம் எனக்கு எங்கு தெரிந்தது! கதை களிலும் காவியங்களிலும் தோன்றும் பெண் தெய்வமாகத்தானே அவள் விளங்கினுள்...

கதைகளாவது, காவியங்களாவது! மனித னைத் தலையெடுக்க வொட்டாமல்தானே அவைகள் அடித்து விடுகின்றன! வாழ்க்கை லக்ஷியத்தை மறைத்து, கற்பனை லக்ஷணத் தைக் காட்டி ஏமாற்றிவிட வில்லையா—பெண் களைப் போல! நூறாண்டு லக்ஷிய வாழ்வு அடைந்தாலும் அதைப் புறக்கணித்து, ஓராண்டு கற்பனை லக்ஷண வாழ்வில் அபார திருப்தி கொள்ளுகிறதே இச் சித்தம்! இச் சித்தத்திற்குப் புத்தியே வராதா! வந்தாலும் அதை வரவொட்டாமல் வேறு துரத்தியடிக் கிறதே, அதைத் தவிர்க்கவும் மார்க்கமில் லையா......!

"எங்கேயப்பா போகிறாய்......?"

துரித காலத்தில் துடித்துக்கொண்டிருந்த இருதயம் ஒரு நிமிடம் நின்றுவிட்டுத்தான் ஓடத்தொடங்கிற்று! மூன்றாம் முறையாக இக் குரலொலி அதே கேள்வியுடன் தொடருகிறதே!

"எங்கே போகிறாய்?" யாருக்குத் தெரி யும் இதற்கு விடை! என்னைக் கேட்கும் இப் பேய்க்குத்தான் தெரியுமா! தெரிந்தால் என்னையேன் கேட்கிறது......? ஒருவேளை தெரிந்துதான் கேட்கிறதா......!

இதே கேள்வியைத்தானே முன்பொரு நாள் சாருவின் தாயார் கேட்டாள், புன்சிரிப் புடனே!

"எங்கே யப்பா போகிறாய்......?"

அஸ்தமன சமயம் அது. வாயிற்படியில் அவள் அமர்ந்திருந்தாள். கடையில் சாரு ஏதோ புஸ்தகம் வாசித்துக்கொண்டிருந் தாள். என்னைப் பார்த்ததும் கண்களைச் சிமிட்டியவாறே அம்மாவின் பக்கம் தலை யசைத்தாளே! அம்மா கேள்விக்கு என்னைப் பதிலளிக்கும்படியா கூறினாள்! என்னையவள் அஸ்தமன சமயத்தில் கோவிலுக்கு வரும்படி கூறி இருந்ததையும் அங்கு நான் அப்போது தான் சென்றுகொண்டிருந்ததையும் அவள் தாயாரிடம் எப்படிக் கூறுவது!

ஏதோ ஒரு பதிலைத்தான் கூறவேண்டி இருந்தது சாருவை உத்தேசித்து! ஆனால் அவள் அதைப் பாராட்டினாளா! அக்கணமே அம்மாவைப் பார்த்து,

"இல்லை அம்மா! மல்லி தினமும் சாயங் காலம் கோவிலுக்குப் போவது வழக்கம்!" என்றுகூறி என்னைப் பார்த்துப் பரிகாசமாய்ச் சிரித்தாளே அதன் அர்த்தம்! விளையாட்டுப் புத்தியினாலா? அல்லது அம்மாவுக்கும் தெரியவேண்டும் என்ற எண்ணத்தினாலா? என்ன அவஸ்தையோ! இந்தப் பெண்களின் கடல் உள்ளத்தின் ஆழம் கடைசிவரை முழு கினால் ஒழிய எங்கே தெரிகிறது...!

அவள் தாயார் மறுபடியும் கேட்டாள் என்னமோ!

"ஏன் மல்லி, இன்னும் கல்யாணம் பண் ணிக்கல்லே...?"

இதற்கு நான் என்ன பதில் அளிக்கமுடி யும்! எனக்கே தெரிந்தால்தானே! கல்யாண மும், மரணமும், நம்மைக் கேட்டா வருகின் றன! வாழ்வில் அடைய முடியாத ஒன்றை அடையப்பெறப் போவதாகக் கனவு கண்டு, உள்ளதையும், உள்ளத்தையும் துறக்கச் சுலப மார்க்கமாய்த் திகழ்வதுதானே விவாகம்!

பிராரப்தத்தின் தலையில் பழியைப்போட்டு ஒருவாறு பதிலளிக்கத்தான் முடிந்தது.

"என்னவோ! பிராரப்தம் வரவில்லை இன் னும்......!"

"ஹூம்! சாருவைக் கொடுத்துடுவேன்...! ஆனா அதுக்கும் எல்லாம் சரியா இருக்க வேண்டாமா...?"

பாவம்! தாய் மனம்! எல்லாம் சரியாகப் பார்த்துத்தான் பெண்ணைக் கொடுக்கிறாள்! ஆனால் அந்தப் பெண் எல்லாவற்றையும் 'சரியாகப்' பாழடிக்கிறாளே, அவள் தாய் செய்ததுபோலவே......!

எப்படியோ அவளிடமிருந்து விடுபட்டுக் கொண்டு கோவிலை அடைந்தபோது, பிராகா ரத்தில் எனக்குமுன் சாரு வந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள்! மாயப்பிறவிகளா இவர் கள்!

"மல்லி! நீ மோசம்!"

"ஏன், சாரு?"

"அம்மா கேட்டதற்கு ஏன் பளிச்சுனு பதில் சொல்லல்லே?"

"அவ என்ன கேட்டா? நான் என்ன சொல்லல்லே?"

"ஏன் கல்யாணம் பண்ணிக்கல்லேன்னு' கேட்டதுக்கு சரியா பதில் சொன்னையா....?"

"என்ன சொல்லணும்......!"

"நீ ஒரு பொண்ணைக் காதலிக்கிறே, அவளைத்தான் பண்ணிப்பேன்னு சொல்றதுக் கென்ன......!"

"அப்படி யெல்லாம் ஒண்ணுமில்லையே, சாரு......!"

அவளுக்கு ஏனோ விவரிக்க முடியாத கோபமும் துக்கமும் பீறிட்டுக்கொண்டு வந்துவிட்டனவே! முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு என்னென்னவோ சொன்னாள்......!

"இந்த ஆண்களே அப்படித்தான்......!"

"எப்படி. சாரு......?"

"சரிதான் போ! என்னோடு பேசாதே! பிராரப்தம் வரவரைக்கும் காத்திண்டிரு..."

"இதெல்லாம் என்ன பேத்தல்......?"

"ஆமாம்! உனக்குப் பேத்தலாகத்தான் தெரியும்! 'சாருவைக் கொடுத்துடுவேன்னு' அம்மா சொல்லறச்சே ஏன் பேசாமே இருந்தே...? என்மேலே உனக்கு நிச்சயமா அன்பு இருந்தா அப்படி இருப்பாயா......?"

என்னவோ, இதெல்லாம் எனக்கு அப்போது வேதனையாகத்தான் இருந்தது. ஒருவேளை சாருவின் மனதைப் புண் படுத்தி விட்டோமோ என்ற ஐயம்கூட ஏற்பட்டது. பாவம்! அவளிடம் அபார பாசமிருந்தும், ஏனோ அவள் முன் எப்போதும் நான் குற்றவாளியாகத்தான் நின்றேன் — நிற்க முடிந்தது! அவள் என்ன நினைக்கிறாள் என்று நான் ஊகிப்பதற்குள் அவள் எண்ணம் பத்துப் படி தாண்டிச் சென்றுகொண்டல்லவா இருந்தது! அந்த எண்ண வேகத்துடன் போட்டியிட எங்கு முடிகிறது...... !

"இன்னொரு தரம் அம்மா கேட்டால் 'சரி'ன்னு பதில் சொல்லு, மல்லி......!"

உண்மையில் நான் அசந்துவிட்டேன்! சாருவுக்குப் பைத்தியமா பிடித்துவிட்டது! என் அன்பைக்கொண்டே என்னை—என் உள்ளத்தை—அடிமைப் படுத்துகிறாளா !

எப்படியோ என் வாக்குறுதியைப்பெற்றுக் கொண்டுதான் கோவிலை விட்டுச் சென்றாள்! பாவம் அன்பினால்தானே என்னைக் கெஞ்சுகிறாள்...! அப்படித்தானே அப்போது தோன்றிற்று! ஒருவேளை கெஞ்சுவதெல்லாமே வீண் நடிப்புத்தானா...? சே! எதற்காக நடிக்க வேண்டும்...? என்னால் அவளுக்கு என்ன லாபம்...!

"எங்கேயப்பா போகிறாய்...? நீ யார்....?"

இம் முறை இரண்டு கேள்விகளை அதே அக் குரல் வீசியபோதும் ஏனோ எனக்கு அவ்வளவாக உடல் அதிரவில்லை! நான் பதிலளிக்காதவரை அது என் உயிரை விட்டு வைக்கும்போல் தோன்றியதினாலோ என்னவோ!

"நீ யார்?"

சபாஷ்! நான் யார் என்று கூறினால் இதற்கென்ன தெரியப்போகிறது! என் பெயரைக் கூறினால் அதற்குப் புரியுமா? என் பெயர் தான் நான் என்று அதற்கு எப்படித் தெரியும்? எனக்கே தெரியவில்லையே! இப்பெயர் இச் சரீரத்திற்கா அல்லது அதனுள் இருப்பவைகளுக்கா? இல்லை, மனத்திற்கு மட்டுமா! எவ்வளவு யோசித்தாலும்தான் இவையெல்லாம் ஒன்றும் புரியமாட்டேன் என்கிறதே! எனக்கே புரியாததை அதற்கு எப்படிக் கூறுவது...?

ஆனால் சாரு ஒருசமயம் நான் யார் என்பதைக் கூறினாளே! ஊரிலிருந்து வந்திருந்த அவள் அத்தானும், அவளும் உலாவச் சென்றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த சமயம் வழியில் என்னைச் சந்தித்தபோது அவள் தன் அத்தானிடம் கூறவில்லையா!

"அத்தான், இவர் யார் தெரியுமா......?"

"தெரியவில்லையே......!"

"நன்றாகப் பாரேன்......!"

"இல்லை சாரு! அடையாளம் புரியவில்லை...!"

"போ, அத்தான்! உனக்கு ஒன்றும் புரியாது! போன ஜன்மத்தில் இவர் அரசமரமாய் இருந்திருக்கார்......!"

வியப்படைந்துவிட்ட அவள் அத்தான் எங்களிருவரையும் மாறிமாறி வெறித்து நோக்கியதைக் கண்ட அவள், உரக்கச் சிரித்துவிடவில்லையா...... !

"இதென்ன பரிகாசம் சாரு......?"

"பரிகாசம், இல்லை, அத்தான்! அவரையே கேட்டுப்பாரேன்! அவர் அரசமரமாய் இருந்ததினால்தான் இந்த ஜன்மத்திலே இப்படி இருக்காராம்—உணர்ச்சியே இல்லாமே...!"

அவள் எந்த அர்த்தத்தில் கூறினாளோ இதெல்லாம்! அவள் நீலக் கண்களில்மட்டும் இரு துளிநீர் கசிந்ததின் காரணம் இப்போதும் எனக்கு விளங்கவில்லை!

ஜன்மம்! இந்த ஜன்மத்தின் நிலைமையே தெரியாதபோது போன ஜன்மத்தின் விவரத்தைப்பற்றிக் கூறுகிறாள்! இதற்கெல்லாம் பொருள் இருக்கிறதா? எனக்கு உணர்ச்சியே இல்லையாமே! அவளுக்கு நிச்சயமாய்த் தெரியுமா? அவளுக்காக என் ஆவி துடித்ததை அவள் நம்பப் போவதேயில்லையா......? ஒருவேளை அறிந்துதான் இப்படியெல்லாம் பேசி என் உணர்ச்சி வெள்ளப்பெருக்கெடுக்குமுன்

அணியிடுகிருளா! அப்படியானல் அவள் ஆதியில் கூறியவை யாவும் அர்த்தமற்றவை களா! அப்போதிருந்த மனம் இப்போது மாறியாவிட்டது! என் மனமும் மாறவேண்டு மென்று இப்படியெல்லாம் கூறி என் உள்ளத்தில் கசப்பேற்படுத்த முயலுகிருள்! இவைகளும் ஸ்திரீ சாகசங்களில் சேர்ந்தவைதாமா......!

ஏன்? இவ்வளவுக்கும் காரணம் என்ன? பொங்கிப் பூரித்திருந்த அவள் மனம் அதற்கு மேல் செல்ல மறுத்துவிட்டதா, சுயநலத்தை எதிர்த்து! அல்லது காத்துக் காத்து அலுத்துவிட்ட அச்சித்தம் வெகுண்டு பழிவாங்கத் துடித்ததா!

ஊரில் அடுத்தவீட்டுக் கிழவர் ஒருவர் அடிக்கடி கூறுவார். எனக்கு அப்போது பதினலு வயதுகூட இருக்காது.

"அப்பா! நீ பெரியவனுய் ஆனப்புறம் இந்தப் பொம்மனாட்டிகளை மட்டும் நம்பாதே! பேயையாவது நம்பு, பெண்கள் கிட்டே அகப்பட்டுண்டுடாதே!"

அவர் கூறியதில் பார்க்கப்போனல் உண்மை இருந்தது போலத்தானே தோன்றுகிறது! பேய்கள் அறைந்து கொன்றுவிடுகின்றன; பெண்கள் பலமற்றவர்களாய் இருப்பதால் அறையாமல் கொன்றுவிடுகிருர்களா!

மறுமுறை பேய்க்குரல் கேட்டது! "உன் கையில் என்ன வைத்திருக்கிருய்? அதைக் கொடேன்......!"

ஏது! இந்தப் பேய் உரிமை வேறு எடுத்துக்கொள்கிறதே! என்னையும் அறியாமல் என் பயம்கூடச் சற்றுத் தெளிந்துவிட்டது போலல்லவா தோன்றுகிறது இப்போது! நிதானித்துப் பார்த்தால் பேய்களிடம்கூட உறவு கொள்ளலாம்போல் இருக்கிறதே—பெண்களிடம் கொள்வதைப்போல!

என் கையிலிருப்பது இதற்கு எதற்கு? பை ஒன்றில் ஏதோ சில்லறைச் சாமான்களைப் போட்டு அதைத்தானே வைத்திருந்தேன்! அதையா கேட்கிறது! தனக்குப் பயன் இருக்கிறதோ இல்லையோ கேட்டு வைக்கலாம் என்று நினைக்கிறது. என் மனதைச் சோதிப்பதுபோல!

சாருகூட அப்படித்தானே கேட்டாள்:

"மல்லி, நான் உன்னை ஒன்று கேட்கட்டுமா?"

"கேளேன், சாரு!"

"நிச்சயமா தருவாயா......?"

"ஏன் இந்தச் சந்தேகம், சாரு! நீ கேட்டு நான் மறுக்கமாட்டேன் என்று தெரிந்துதானே இப்படியெல்லாம் வதைக்கிருய்...!"

"சரி மல்லி! எனக்கு வேண்டியது உன் உள்ளம்......!"

"என்ன! என் உள்ளமா......?"

"ஆமாம், மல்லி! ஏன் யோசிக்கறே...!"

"யோசிக்கவில்லை, சாரு! என் உள்ளத்தினல் உனக்கு என்ன பயன்...!"

"இருக்கு, மல்லி! அதைக் கொடுத்தயானு எவ்வளவு ஆனந்தப்படுவேன் தெரியுமா....!"

"நிச்சயமாகவா......!"

அவள் மாயக் கண்கள் நர்த்தனம் புரிந்தன.

"கொடுக்காட்டா என்ன செய்வே, சாரு!"

"செய்யறது என்ன! நானே எடுத்துண்டுடுவேன்...!"

அடாடா! எவ்வளவு தன்னம்பிக்கை! இப்படியெல்லாம் பேசியது அன்பினலா! அல்லது என்னை அடிமைப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தினலா.........! முடிவில் என் வாழ்வையே அவளுக்கு அர்ப்பணித்திருந்ததைத் தெரிந்து கொண்டுதானே அவள் சித்திரவதை செய்ய ஆரம்பித்துவிட்டாள்! இதில் அவளுக்கு என்ன இன்பம்? அவளுக்குள் மறைந்துகிடந்த அசுரசக்தி வீறுகொண்டு எழுந்துவிட்டதா தன் கோர வஞ்சகத்தைப் பூர்த்தி செய்துகொள்ள!

அதேபோல்த்தான் இப்பேயின் மறைந்த உடலினுள் மறைந்து கிடந்த பெண் சக்தி கிளம்பிவிட்டதா என் கையிலுள்ளதைப் பறிக்க! ஒருகால் இப்பேயும் பெண் பேய் தானு! பேயே பயங்கரம் என்றால் பெண் பேய் இன்னும் எப்படி இருக்குமோ!

"சாரு! வரவர நீ மாறிப்போயிட்டே! முன்னேமாதிரி பேசறதே இல்லையே......!"

"பேசறதுக்கு ஒண்ணும் இல்லாததினல் தான்.......!"

"அப்போதெல்லாம் பேசறதுக்கு என்ன இருந்தது......?"

"அதுதான் எனக்கும் புரியலை......!"

பேஷ்! புரியவில்லை! எப்படிப் புரியும்! தானே நொறுக்கிய ஓர் உள்ளத்துடன் மறுபடியும் பழைய உறவு வேண்டாமல்லவா!

மென்று உறிஞ்சிவிட்ட கரும்புச் சக்கையை எவ்வளவு நேரம்தான் மென்றுகொண்டிருக்க முடியும்! பார்ப்பவர்கள் பரிகசிக்கமாட்டார்களா......!

இந்தப் 'பார்ப்போரும்' அவர்கள் பரிகாசங்களும் ஒவ்வொரு சமயம் எவ்வளவு உதவியாய் இருக்கின்றன!

"மல்லி! ஒரு விஷயம் சொல்லமறந்துட்டேனே! என் அத்தான் மறுபடியும் வரான், என்னைப் பார்க்க...!"

அத்தான்! கொஞ்சகாலமாய் இச்சொல் பலமுறை அவளிடமிருந்து வெளிப் போந்தது கூட என்னை—என் உணர்ச்சிக் கொந்தளிப்பை—அடக்கத்தானு! விம்மி முன்னேக்கிச்சென்ற என் உள்ளப் பூரிப்பை இழுத்துப் புதைக்கவா...! ஆணிடம் ஆணைப்பற்றிக் கூறி அவன் ஆணவத்தை அடக்க முயலுவது கூட 'ஸ்திரீ வித்தை'தானே...! யானையைக் கொண்டு யானையை அடக்குவதைப் போல!

"அப்பா! பசி தாளவில்லை! ஏதேனும் கொடேன்......!"

அட ஈச்வரா! இப் பேய்க் குரல் கெஞ்சவல்லவா ஆரம்பிக்கிறது! அதிகாரத்தில் மிரட்டி, பிறகு உரிமையுடன் பேசி, கடைசியில் பணிந்தல்லவா கேட்கிறது. பசி வந்துவிட்டால் பேய்க்குக்கூடப் பத்தும் பறந்துவிடுமா? ஆனல் சாரு, முதலில் கெஞ்ச ஆரம்பித்து, பிறகு உரிமை கொண்டாடி, கடைசியில் ஆணவத்துடனல்லவா தாண்டவமாடத் தொடங்கினள். பெண்ணுக்கும் பேய்க்கும் இதில்தான் வித்தியாசம்போல் இருக்கிறது......

"மல்லி, இனிமே நீ இந்த ஊரிலே இருக்கக் கூடாது...."

"ஏம்மா அப்படி...?"

"என் அத்தான் வந்துட்டான்..."

"வந்தா என்ன...?"

"நீ இங்கிருந்தயானு, உன்னேடு நான் பேசும்படியா இருக்கும். அத்தானுக்குக் கோபம் வரும்......"

"கோபமா... எதற்கு...?"

"எதற்கோ, எனக்குத் தெரியாது. ஆனு நீ இங்கிருக்கக் கூடாது......"

"எனக்கு இங்கே இன்னும் கொஞ்ச நாளைக்கு வேலையிருக்கே, சாரு......"

"வேலையை விட்டுட்டுப் போ......"

"உம், அது சாத்தியப் படாட்டா...?"

"சாத்தியமாகணும், மல்லி. இல்லாட்டா நானே அத்தான் கிட்டே சொல்லி ஒன்னைப் போகச் செய்யும்படியா இருக்கும்..."

"சாரு......"

ஆனல் அவள் காதில் இது விழவேயில்லை. 'விர்' என்று திரும்பிப் போய்விட்டாள்.

ஹூம், இதைவிடப் பெண்களிடம் வேறென்ன எதிர்பார்க்க முடியும். இயற்கையின் மாயப்பிறவிகளாகிய அவர்கள் எதைத்தான் செய்யமாட்டார்கள். அன்பை விதைத்து, அன்பை வளர்த்து, அன்பை முறிப்பதில்தானே அவர்கள் வாழ்க்கை லக்ஷியம் பூத்து, காய்த்து, பழுக்கிறது—எட்டியைப்போல.

ஐயோ, பின்னல் குரல் ஒலி நெருங்கிக் கொண்டே இருக்கிறதே. எந்தச் சமயத்தில் இது கழுத்தைத் திருகிவிடுமோ தெரியவில்லையே.

கண்மண் தெரியாமல் ஓடிவந்தும் ஆற்றின் எதிர்கரை இன்னும் சற்று தூரத்திலேதான் காணப்படுகிறது. அக்கரையை நான் அடையப்போவதே இல்லையா இந்த ஜன்மத்தில்?

"அப்பா, அந்தக் கையில் என்ன வைத்திருக்கிருய்......?"

துவண்டுவிட்ட சரீரத்துடன் சற்றுத் தயங்கினேன். இப்பேய், நான் பதிலளித்தால் ஒழிய விடாதுபோல் இருக்கிறதே........... பேய்க்குப் பதில் கூறலாமா.........? பாட்டி சொல்லுவாள், பின்னலிருந்து பேய் கூப்பிட்டால் திரும்பிப் பார்க்கக் கூடாதென்று, இப்போது இந்தப் பேயை என்ன செய்வது? திரும்பிப் பதிலளிக்கலாமா......?

அளித்து விட்டால்தான் என்ன? அப்படி அறைந்து கொன்றுவிட்டாலும், யாருக்கென்ன நஷ்டம்?

"சொல்லமாட்டாயா, கையில் என்னவென்று..."

கடைசியில் நின்றேவிட்டேன். வியர்வை வெள்ளத்தில் படபடத்த மார்புடனிருந்த என்னை ஆசுவாசப் படுத்திக்கொண்டே துணிந்து திரும்பிப் பார்த்தேன், நடுங்கும் அங்கத்துடன்!

ஆனல் அங்கொருவரையும் காணேம்? பரந்துகிடந்த வெண்மணலில் என் காலடிச் சுவடுகள் சந்திர வொளியில் தெற்றெனத் தெரிந்தன.

அப்பாடா, இதற்குத்தானு......

நிதானித்துப் பெருமூச்சுடன் திரும்பும் போது மறுமுறை அக் குரலொலி கேட்டது.

"அது என்ன...?"

ஒருவாறு சமாளித்துக்கொண்டு பதிலளித்தேன்.

"ஒன்றுமில்லே, வெறும் பைதான்..."

"அந்தக் கையில்...?"

"கல்யாணப் பத்திரிகை..."

"யாருடைய கல்யாணம்...? உன்னுடையதா...?"

"இல்லே, சாருவுடையது... சரி, நீ போ."

"ஓ சாருவை எனக்குத் தெரியுமே, அவள் அத்தானே மணக்கிருளாக்கும்...?"

"................!"

"எப்போ கல்யாணம்...?"

"நாளைக்கு...!"

அதற்குள் எதிர் கரையை எப்படியடைந்தேன் என்று எனக்கே தெரியாது. பதறிய என் உடல் தானகவே ஓடிவந்து விட்டதா, அல்லது இப்பேய்தான் என்னைத் தள்ளிக் கொண்டு வந்துவிட்டதா......?

"ஏம்பா, இவ்வளவு வேகம். நாளைக்குக் கல்யாணம்னுட்டு இப்போ இத்தனை அவசரமா எங்கே போறே......?"

"தெரியாது......"

"தெரியாதா......?"

"ஆமாம். சரி, நீ போயேன்......"

"நான் எங்கே போறது? இதுதான் என் இருப்பிடம்......"

"சரி, என்னை விட்டுட்டு போ......"

"என் சாரு போன மாதிரியாவா......"

என் உடல் சிலிர்த்தது. பதிலொன்றும் கூருமல் கரையை அடைந்துவிட்டவன், அக் களிமண் பூமியைக் கவனிக்காமல் அதன் மேல் ஏறினேன். முன்னுளிரவு மழையில் நனைந்து விட்டிருந்த அவ்விடம், கால் வைத்தவுடன் சறுக்கு மரத்தைப்போல் காலே வழுக்கிவிடவே, அவ்விடத்திலேயே அடிமரம்போல் சாய்ந்தேன்.

கோடையிடி போன்ற சிரிப்பொலி பின்னுலிருந்து கேட்டது.

"அப்பனே, இந்தச் சறுக்கலேப் பார்க்கவே இவ்வளவு இன்பமாய் இருக்கும்போது, வாழ்க்கைச் சறுக்கலேப் பார்ப்பது இன்னும் எவ்வளவு ஆனந்தமாய் இருக்கும்......"

பேயின் சொற்களைவிட அதன் குரலில், இவ்வளவு கோரமாய் இல்லாத ஒருபுதிய காதசுகம் தொனித்ததுதானே என்னைத் தூண்டி அக்குரல் வந்த திசையைச் சற்றே தைரியமாய் உற்று நோக்கும்படிச் செய்தது.

உச்சியைத் தாண்டி விட்டிருந்த சந்திரனின் பளிச்சென்ற கிரணங்களில் ஏதோ ஓர் உருவம் மெல்லத் தெளிய ஆரம்பிக்கிறதே? கண்களைச் சிமிட்டிக்கொண்ட வண்ணம் நன்ருய் உற்றுப்பார்த்தேன்.

சாரு நின்றுகொண்டிருந்தாள் கலகலத்த சிரிப்பொலியுடன்.

அதற்குப்பின் என்ன நடந்ததென்று எனக்கெங்கு தெரிந்தது. மறுபடியும் கண் திறந்து பார்த்தபோது நன்ருகச் சூரியன் உதயமாகி விட்டிருந்து தகித்துக் கொண்டல்லவா இருந்தான்.

நூற்றுநான்கு டிகிரி ஜ்வரத்துடன் தள்ளாடியவாறே எழுந்து ஸ்டேஷனை நோக்கி நடந்தேன்.

* * * *

ஒரு வரம் கோருக!

இனி நீங்கள் சிறிதும் ஏமாற்றமடையவேண்டியதில்லை. பெரு முயற்சியால் தயாரிக்கப்பட்ட "வசீகரன் கைக்குட்டை மூலம்" நீங்கள் விரும்பிய பெண் கிடைக்கக்கூடும்; சிரிப்பு தவழும் குழந்தைகள் உங்கள் மடியில் கொஞ்சலாம். கடின சித்தம்படைத்தவர்கள்கூட உங்கள் காலடியில் விழுவர். உங்களுடைய சக்தி வாய்ந்த ஆதிக்கத்திற்கு கட்டுப்பட்டு நிற்பர். வேலை கிடைப்பது இனி கனவாக இருக்காது. மலடியாக இருக்கும் மனைவிக்குக்கூட குழந்தைகள் பிறக்கும். இறந்தவர்களின் ஆத்மாவுடன் தொடர்பு ஏற்படும். உங்களுடைய மூதாதைகளின் புதையல்கள் எங்கிருக்கின்றனவென்பது உங்களுக்கு கனவில் அறிவிக்கப்படும்

கோர்ட் தாவாக்களில் வெற்றி, லாட்டரியிலும், பேரம், ஹேஷ்யங்களிலும் வெற்றிமேல் வெற்றி, பரீட்சையில் சுலபமாக தேர்ச்சி பெறுவீர்கள். தொழிலில் லாபம் கிட்டும். உங்களுடைய துரதிர்ஷ்டங்கள் நீங்கிவிடும். அதிர்ஷ்டம் உங்களுக்குப் பாதசேவை செய்யும். சுருங்கக்கூறுமிடத்து, உங்களுடைய விருப்பங்கள் அனைத்தும் பூர்த்தியாகிவிடும். உத்தரவாதம்: உங்கள் மனம் விரும்பியதை நீங்கள் அடையாவிடில் கைக்குட்டையை 6 மாதங்களுக்குள் திருப்பிக் கொடுத்துவிடலாம், வசீகரன் கைக்குட்டை நெ. 1, ரூ 1-15-0. விசேஷ சக்தி வாய்ந்த கைக்குட்டை ரூ. 3-15-0. 24 மணி நேரத்திற்குள் இதன் மகிமையைக் காணலாம். நமது "வசீகரன்" கைக்குட்டையால் இக்கலியுகத்தில் இந்த ஸ்வாமி உண்மையை ஸ்தாபிக்கிறார். இதன் உதவியால் கணக்கற்றவர்கள் தங்களுடைய ஆசைகளைப்பூர்த்திசெய்துகொண்டுள்ளனர். இந்த அரிய தருணத்தை தயவுசெய்து இழக்காதீர்கள்.

PROF. BENGAL MESMERISM HOUSE (C. K.)
Hoshiarpur. Pb,

காம சாஸ்திரம்

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்—பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசியக் குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிற போட்டோ படங்கள், தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் துய்ப்பது போன்ற நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களை யெல்லாம் இப்புத்தகம் வெளிப்படுத்துகிறது. கல்யாணமாகாதவர்கள் இப்புத்தகத்திற்கு எழுதற்க. I புத்தகம் விலை ரூ. 2-12-0. ரகசிய போட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2—12—0. 50 கார்டுகள் சேர்ந்திருப்பது விலை ரூ. 5—0—0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

M/s. French Photo Supply Company

(C. K.) JULLUNDUR CITY

ஹாலிவுட் ஹேர் கர்லிங் லோஷன்

மிகவும் கவர்ச்சிகரமானதும், நிரந்தரமானதுமான, சுருள் சுருளாக, அழகிய கேச வளர்ச்சி ஏற்படும். பலன் உடனே தெரியும்.

உங்களுடைய கேசத்தின் இயற்கை வனப்பைப் பன்மடங் அதிகரிக்கச்செய்து நீடித்த, எழிலுடைய கேச அபிவிருத்தி உண்டாக்கும். வாருவதாலோ, மழை, ஸ்நானம் இவற்றாலோ பாதிக்கப் படாதது. ஒரு பாட்டில் விலை ரூ. 3—8—0. தபாற் செலவு தனி.

முழு விற்பனையாளர்கள்:

American Trading Co. Regd.

(C. K.) JULLUNDUR. Pb.

பியூரிடி பார்லி எட்டு
மடங்கு அதிக வேலை புரியும்

பியூரிடி பார்லியில், அரிசிபார்லியின் நற்குணம் பூராவும் சத்து மிகுந்த வகையில் அடங்கியுள்ளது. ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி, எட்டு ஸ்பூன் அரிசி பார்லிக்கு சமமானது. தவிர அது எப்பொழுது வாங்கினாலும் புத்தம் புதிய நிலையில் இருக்கும். ஏனெனில் அது சுகாதார முறைப்படி ஸீலிடப்பட்ட டின்களில் கிடைக்கின்றது. இருபதே நிமிஷங்களில் ருசிமிகுந்த கஞ்சி தயாரிக்கலாம். சீக்கிரமாக பார்லி வாட்டர் தயாரிப்பதற்கு. இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு பியூரிடி பார்லியை சிறிது ஜலத்துடன் மாவாக கரைத்து, இரு டம்ளர் ஜலத்துடன் ஐந்து நிமிஷம் கொதிக்கவைக்க வேண்டியதுதான். ருசிக்கு ஏற்றபடி உப்பு, சர்க்கரை அல்லது எலுமிச்சை ரஸம் சேர்த்துக்கொள்ளலாம்.

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

APBX 6TM

ரூ. 300 இனாம்

இந்த மகாகாளி இயந்திரத் தகட்டை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கைவசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத்தவை கைகூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்களைத் தேடி வரும். இந்தத் தகட்டைக் கைவசம் வைத்துக்கொண்டு தியானம்பண்ணும்போது, இந்த மகாகாளிதோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1—4—0. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3—2—0. உடனே பலன் தெரியக்கூடிய யந்திரத் தகடு ஒன்று ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. சக்தி இல்லை யென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனாம்.

THE BENGAL MESMERISM HOUSE (C. K.)
HOSHIARPUR.

உங்கள் ஒவ்வொரு கேள்விக்கும் பதில் அளிக்கப்படும்

உங்கள் பெயர், விலாசத்துடன் ஓர் புஷ்பத்தின் பெயரையும் எழுதி ஒரு கார்டில் அனுப்புங்கள். ரூ. 1—4—0 க்கு V. P. P. மூலம் வருகிற 12 மாதங்களில் உங்களுக்கு ஏற்படவிருக்கும் லாப நஷ்டங்கள், உத்தியோக அபிவிருத்தி அல்லது மாற்றம், கலியாண விஷயங்கள், உடற் கோளாறுகள் முதலியன பற்றி விபரமாக எழுதுவதுடன் உங்களைப் பாதுகாத்துக் கொள்ள வழிகளும் கூறப்படும். (தபாற் செலவு வேறு)

Pt. Dev Dutta Shastri, Raj Jyotishi (C. K.)
Kartarpur. (E. P.)

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானும் உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டது. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்... தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்... சொன்னார்... மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ... அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகி... மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்தும் வருகின்றே... புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்... அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செ... திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு ... 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்... செலவு தனி.

இந்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

Shrimati. BIBI CHARAN PIARI

Sant Nagar (C. K.) Jullundur City.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.